# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை:30/= பக்கங்கள்: 56 | சுடர் 32 | கதிர் 325 | வள்ளுவர் ஆண்டு 2047 | புரட்டாதி 30 ஞாயிற்றுக்கிழமை 16.10.2016



மகாராஜா பொதிகள் சேவை

உங்கள் வீட்டுக்கே சென்று கையளிக்கப்படும் சேவை

11kg க்கு மேல் 01kg க்கான கட்டணம்

ஜெர்மன் 700/= | லண்டன் 600/= | பிரான்ஸ் 700/=

ஏனைய நாடுகளுக்கும் மிகக் குறைந்த செலவில் பொதிகளை அனுப்பிக்கொள்ளலாம்

GTV Express

இல 225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 - 2224338 / 021-4925024

இல 25 கந்தசாமி கோவில் வீதி வவுனியா
024 - 4930200 / 076 - 6908961




## முல்லைத்தீவில் நேற்று திரண்டனர் சிறுவர்கள்

### வன்முறைகளை நிறுத்தக் கோரி

யாழ்ப்பாணம், ஒக். 16
தமக்கெதிரான வன்முறைகள், முறைகேடுகள், துர்நடத்தைகள் ஆகியவற்றை நிறுத்துமாறு கோரி முல்லைத்தீவு நகரில் நேற்றுத் திரண்டனர் பெரும் எண்ணிக்கையான சிறுவர்கள்.
தமது கோரிக்கைகளை வலியுறுத்தி அவர் கள் அமைதியான கவன வீர்ப்புப் போராட்டத்தில் >> 53ஆம் பக்கம்

## இராவணனே முதல் தீவிரவாதி; மோடியின் கருத்துக்கு எதிர்ப்பு

கொழும்பு, ஒக். 16
இராமாயண காவியத்தின் வில்லனான இராவணனை இந்தியப் பிரதமர் மோடி தீவிர்வாதிக்கு ஒப்பிட்டுப் பேசியிருப்பது இலங்கையில் உள்ள இராவண அபிமானி >> 53ஆம் பக்கம்



## தமிழ் மாணவர் கல்வியை முன்னேற்ற 'அகரம்' ஆரம்பம்

### நேற்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக்: 16
வடக்கு-கிழக்குப் பகுதிகளில் தமிழ் மாணவர்களின் எதிர்காலக் கல்விச் செயற்பாடுகளை முன்னேற்றும் வகையில் அகரம் என்ற அமைப்பு யாழ்ப்பாணத்தில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது. >> 53ஆம் பக்கம்

## பயங்கரவாத வழக்குகளை இழுத்தடிக்கவேண்டாம்

### வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், ஒக். 16
பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான வழக்குகளைத் துரிதமாக விசாரணை செய்யுமாறு நீதிச் சேவை ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது. >> 53ஆம் பக்கம்

## அநுராதபுரத்தில் நேற்றுப் பதற்றம்

### அம்மன் ஆலயத் தாக்குதலுக்கு நீதி கோரி பொலிஸ் நிலையம் மக்களால் முற்றுகை

யாழ்ப்பாணம், ஒக்.16
அநுராதபுரம் சிறி முத்துமாரி அம்மன் ஆலயத்தின் மீதான தாக்குதல் மற்றும் இளைஞன் மீதான வாள் வெட்டுச் சம்பவத்துக்கு நீதி கோரி, >> 53ஆம் பக்கம்

## இந்தியாவில் இருந்து குடாநாட்டுக்கு வயகராவும் கடத்தல்

### ஊர்காவற்றுறைக் கடற்பரப்பில் மூவர் கைது



யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 16
இந்தியாவிலிருந்து பெருந்தொகையான கஞ்சா யாழ்ப்பாணத்துக்குக் கடத்தப்பட்டு வரும் நிலையில், பாலியல் இச்சை தூண்டல் மாத்திரையான வயகரா போன்ற மாத்திரைகளும் இப்போது கடத்தப்படுகின்றன.
ஊர்காவற்றுறையில் நேற்றுச் சிக்கிய கடத்தல் பொருள்கள் மூலம் இந்த விடயம் அம்பலத்துக்கு வந்துள்ளது. கஞ்சாவுடன் சேர்த்து இந்த மாத்திரைகளும் கடத்தி வரப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
மேற்கு நாடுகளில் இத்தகைய பாலியல் மாத்தி >> 53ஆம் பக்கம்

## எமக்காக யாருமில்லை

### அ'புரம் தமிழர்கள் அங்கலாய்ப்பு

யாழ்ப்பாணம், ஒக். 16
அநுராதபுரம் சிறி முத்துமாரி அம்மன் கோயில் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்குக் கண்டனம் தெரிவித்துப் பலரும் அறிக்கை வெளியிட்டனர். >> 53ஆம் பக்கம்

## மின்சாரக் கட்டமைப்பில் கோளாறு

கொழும்பு, ஒக். 16
அநுராதபுரம் மின்மாற்றி இணைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக நுரைச்சோலை மின் நிலையத்தின் மின் விநியோகத்துக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.
இதனால் சில பகுதிகளில் மின் விநியோகம் துண்டிக்கப்படும். மின் விநி >> 53ஆம் பக்கம்



## 106 கிலோ கஞ்சா நேற்றும் சிக்கியது

### மாதகலில் மூவர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 16
மாதகலில் 106 கிலோகிராம் கஞ்சா போதைப் பொருள் நேற்று மீட்கப்பட்டது. >> 53ஆம் பக்கம்



## யாழ்.மண்ணில் கால் பதித்தால் சொர்க்கம் நிச்சயம்

### சொல்கிறார் துணைத் தூதுவர்

யாழ்ப்பாணம், ஒக். 16
எந்த ஒரு மனிதனுடைய காலும் யாழ்ப்பாண மண்ணில் பதிந்தால் அவர்கள் மறைந்த பின்னர் நிச்சயமாகச் சொர்க்கத்துக்குத்தான் போவார்கள் என்று தான் நம்பு >> 53ஆம் பக்கம்

### தேசிய அரசுக்குள் முறுகலைத் தீர்க்க

## சமாதானப் புறாவாக சந்திரிகா அம்மையார்

கொழும்பு, ஒக். 16
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சர்ச்சைக்குரிய பேச்சினால் கொழும்பு அரசியல் வட்டாரத்தில் ஏற்பட்ட அதிர்வு இன்னமும் முடிவுக்கு வரவில்லை.
தேசிய அரசுக்குள் பெரும் முரண்பாட்டை இந்த உரை ஏற்படுத்தி >> 53ஆம் பக்கம்




அடகுக்கான அதிகூடிய பெறுமதியுடன் பெறுமதி மிக்க பரிசில்களைப் பெற்றிடுங்கள்...

24 கெரட் இற்கு ரூ.36,000

22 கெரட் இற்கு ரூ.33,000

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்.
011 5 411 411

011 5 411 411

ஸ்வர்ணகிரண
தங்க நகை அடகுச் சேவை

SDB வங்கி

# ஐ.தே.க.-சு.க. இணைந்த புதிய தலைமைக் குழு

## கொள்கை முடிவுகளை எடுப்பதற்காக நியமிக்க முடிவு





கொழும்பு, ஒக். 16
ஆட்சியில் இருக்கும் கூட்டுஅரசின்கொள்கை முடிவுகளை எடுப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சுதந்திரக் கட்சியின் தலைவர்களை உள்ளடக்கிய குழுஒன்று உருவாக்கப் படப் போகின்றது என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச மற்றும் இராணுவப் புலனாய்வு அதிகாரிகளைப் பொலிஸார் நடத்திய விதம் குறித்து ஜனாதிபதி அண்மையில்அதிருப்தி வெளியிட்டிருந்தார்.
அத்துடன், நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் அரசியல் பக்கச் சார்புடன் நடந்து கொள்கிறார்கள் என்ற ரீதியிலும் அவர் கருத்துத் தெரிவித்திருந்தார். கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இந்தக் கருத்துக்கள் புயலைக் கிளப்பியிருந்தன. இந்த நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால இந்தியாவுக்குப் புறப்பட்டுச் செல்வதற்கு முன்னதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்னாயக்க ஆகியோரைச் சந்தித்துப் பேசியிருந்தார்.
அதன் பின்னர், அரசின் கொள்கை விடயங்களில் தீர்மானம் எடுப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சுதந்திரக் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களை இணைத்து புதிய குழு ஒன்றை நியமிப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆங்கிலப் பத்திரிகையான 'டெய்லி மிரர்' இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.
இரு கட்சிகளின் தலைவர்களையும் இணைத்த இரு போன்ற ஒரு குழு தற்போதும் இயங்கி வருகின்றபோதும் அதில் ஜனாதிபதியும்பிரதமரும் அதில் அங்கம் வகிக்கவில்லை. புதிதாக நியமிக்கப்படவுள்ள குழு, அமைச்சரவைக்குப் புறம்பாக அரசின் கொள்கை விடயங்கள் குறித்த முக்கிய முடிவுகளை எடுக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.
அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம், போர்க் குற்ற விசாரணைகள், புதிய அரசமைப்பு உருவாக்கம் போன்ற விடயங்களில் இந்தக் குழு ஆராய்ந்து முடிவெடுக்கும் என்றும் கூறப்படுகிறது. (உ)

### லசந்த படுகொலை;

# புலனாய்வுப் பணிப்பாளரிடம் 6 மணித்தியாலம் விசாரணை



கொழும்பு, ஒக். 16
சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை தொடர்பாக, முன்னாள் இராணுவப் புலனாய்வுப் பணிப்பாளர்மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரண நீண்ட நேரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.
குற்றப் புலனாய்வுப் பிரிவுத் தலைமையகத்துக்கு அழைக்கப்பட்ட, மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரணவிடம் லசந்த விக்கிரமதுங்க படுகொலை தொடர்பாக தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.
சுமார் ஆறு மணிநேரம் அவரிடம் விசாரணைகள் நடத்தப்பட்டதாகத் தகவல்கள் தெரிவித்தன.
லசந்த விக்கிரமதுங்க படுகொலைச் சம்பவத்தின் பின்னணியில் இலங்கை இராணுவப் புலனாய்வுப் பிரிவே இருந்ததாகக் கருதப்படுகிறது.
இந்தச் சம்பவம் தொடர்பாக இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் சிலர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# ஐ.நா. புதிய செயலருக்கு மைத்திரிபால வாழ்த்து

கொழும்பு, ஒக் 16
ஐக்கிய நாடுகள் சபையின் புதிய பொதுச் செயலாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ள அன்டோனியோ குட்டரெஸுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.
போர்த்துக்கல் பிரதமர் மற்றும் ஐ.நாவின் அகதிகளுக்கான தூதுவராக அவர் செயற்பட்ட காலத்தில் பெற்ற அறிவுசார் வளம், 21ஆம் நூற்றாண்டில் உலகம் எதிர்நோக்கியுள்ள சவால்களை எதிர்கொள்வதற்கு உதவியாக அமையும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.
ஐக்கிய நாடுகள் சபையை வழிகாட்டுவதற்கான திறமை மற்றும் தலைமைத்துவத்தில் நம்பிக்கை வைத்து அன்டோனியோ குட்டரெஸுக்குச் சர்வதேச சமூகம் வழங்கும் ஆதரவை வழங்கியுள்ளதாக ஜனாதிபதி கூறியுள்ளார்.
ஐக்கிய நாடுகள் சபையில் கடந்த ஆறு தசாப்தங்களுக்கும் அதிக காலம் செயற்றிறன்மிக்க உறுப்பு நாடாக இலங்கை உள்ளதாகவும் சிறிசேன தெரிவித்துள்ளார். (த)

# கொஸ்கொடவில் வெடிபொருள் மீட்பு

கொழும்பு, ஒக் 16
கொஸ்கொட பகுதியிலுள்ள பாழடைந்த காணியொன்றிலிருந்து, 1.75 கிலோகிராம் நிறையுடைய சி4 ரக வெடிமருந்து மற்றும் ரி - 56 ரக துப்பாக்கிக்குப் பயன்படுத்தும் 17 ரவைகள் என்பவற்றை மீட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
தங்களுக்கு வழங்கப்பட்ட தகவலுக்கு அமையவே வெடி பொருள்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும், சில டெட்டனேட்டர்களையும் மீட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர். (த)

# திருமலைத் தாங்கிகளை கைப்பற்ற சீனாவும் முயற்சி

## ஆயினும் அவற்றைக் கைப்பற்ற சீனாவும் முயற்சி என்கிறார் சுனில் ஹந்துன்நெத்தி



கொழும்பு, ஒக். 16
திருகோணமலை யில் இருக்கின்ற 103 எண்ணெய்த் தாங்கிகளுள் 85 வீதமான வற்றை இந்தியாவுக்கு வழங்கு வதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்றும், அவற்றைக் கைப்பற்றும் முயற்சியில் சீனாவும் களமிறங்கியுள்ளது என்றும் ஜே.விபியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
எமது நாட்டின் எரிபொருள் தேவையைப் முழுமை செய்யக் கூடிய வகையில்சப்புகஸ்கந்தையில் இருக்கின்ற எரிபொருள் கொள்ளளவு தாங்கிகள் போதுமானவையல்ல. அதற்கு மாற்று வழி திருகோணமலையில் இருக்கின்ற எண்ணெய்த் தாங்கிகள்தான். அங்கு இருக்கின்ற 105 தாங்கிகளில் 103 தாங்கிகளை எந்தவித சிக்கலும் இன்றிப் பாவிக்க முடியும். இந்த 103 தாங்கிகளில் ஒரே தடவையில் சேமித்து வைக்கப்படும் எரிபொருள் நாடு முழுவதும் ஆறு மாதங்களுக்குப் பாவிப்பதற்குப் போதுமானதாகும்.
இரண்டாம் உலகப் போரின்போது முழு ஆசியாவிலும் போரை நடத்திச் செல்வதற்குப் போதுமான எரிபொருளை பிரிட்டன் இங்குதான் சேமித்து வைத்தது. அந்தத் தாங்கிகளில் ஒன்றைத்தான் ஜப்பான் குண்டு போட்டு அழித்தது. ஆனால் அரசு இந்தத் தாங்கிகளை இந்த நாட்டின் தேவைக்காகப் பயன்படுத்தாது அவற்றை இந்தியாவுக்கு வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது. இதைக் கைப்பற்றுவதற்கு சீனாவும் முயற்சி செய்கின்றது. இந்தியா இதற்கான கேள்வி மனுப் பாத்திரத்தை நேரடியாகத் தாக்கல் செய்துள்ள அதேவேளை, பங்களாதேஷ் நிறுவனம் ஒன்றின் ஊடாக சீனாவும் கேள்வி மனுப் பாத்திரத்தைத் தாக்கல் செய்துள்ளது. இந்தத் தாங்கிகளுள் 85 வீதம் வழங்கப்படவுள்ளது. இவை நாட்டின் தேவைக்காகப் பயன்படுத்தப்படவேண்டும். இதுதான் தேசிய பாதுகாப்பது. இதைவிட்டு இனவாதத்தைப் பாதுகாப்பதற்குத்தான் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. இது உண்மையில் நாட்டுக்குச் செய்கின்ற துரோகம். இது நிறுத்தப்பட வேண்டும்- என்றார். (த-4)

# தற்கொலை செய்த அதிகாரி குறித்து விசாரணை ஆரம்பம்

## லசந்த கொலையாளி உண்மையிலேயே அவர்தானா என துருவுகிறது பொலிஸ்

கொழும்பு, ஒக். 16
தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்ட இராணுவப் புலனாய்வு பிரிவுப் முன்னாள் அதிகாரி லசந்த விக்ரமதுங்கவின் உண்மையான கொலையாளியா என்பது தொடர்பில் விரிவான விசாரணை நடத்தப்படவுள்ளதாகப் பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. சண்டே லீடர் பத்திரிகையின் தலைமை ஆசிரியர் லசந்த விக்ரமதுங்கவைக் கொலை செய்தது தானே என்று கடிதம் எழுதி வைத்துவிட்டு, இராணுவப் புலனாய்வு முன்னாள் அதிகாரி நேற்று முன்தினம் தற்கொலை செய்து கொண்டார்.
புலனாய்வு உத்தியோகத்தர் தற்கொலை செய்து கொள்ள.நியாயமான காரணங்கள் இருந்தனவா என்பது குறித்து ஆரம்ப விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளன.
இராணுவ உத்தியோகத்தர் எழுதிய கடிதம் தொடர்பிலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கடிதத்தின் கையெழுத்து தமது தந்தையின் கையெழுத்துக்கு நிகரானது என்று அவரது மகன் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (த-5)

# சுவிஸ் தமிழ் அகதிகள் குறித்து முக்கிய சந்திப்பு அடுத்த மாதம்

கொழும்பு, ஒக். 16
சுவிஸில் தஞ்சம்டைந்துள்ள இலங்கை அகதிகள் தொடர்பில் அந்த நாட்டின் உப ஜனாதிபதியும் நீதியமைச்சருமான சைமனேட்டா சொமாருகாவின் பிரதிநிதி மற்றும் அரசியல் பிரமுகர்களுடன் முக்கிய சந்திப்பு இடம்பெறவுள்ளதாக சோஷலிஸ ஜனநாயகக் கட்சி உறுப்பினரும் தூன் நகரசபை உறுப்பினருமான தர்சிகா கிருஷ்ணானந்தம் தெரிவித்ததார்.
அடுத்த மாதம் இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தாவது:-
சுவிஸில் வசிக்கும் இலங்கைத் தமிழ் மக்களின் பிரதிநிதி என்ற வகையில் நான் இந்தச் சந்திப்புக்கு அழைக்கப்பட்டுள்ளேன். என் மீது நல்லதொரு நம்பிக்கை சுவிஸ் அரசுக்கு ஏற்பட்டுள்ளது. முக்கிய சந்திப்பின் போது எமது மக்களின் பிரச்சினைகளைத் தெளிவாக அவர்களுக்கு எடுத்துத்துரைப்பேன். சுவிஸில் தற்போது அகதித் தஞ்சம் நிராகரிக்கப்பட்டுள்ள நிலையில் வாழும் இலங்கையர்களின் இருப்பு இன்று கேள்விக்குறியாகியுள்ளது.
இது குறித்து சுவிஸ் மற்றும் இலங்கை அரசுகளுக்கு இடையில் உடன்படிக்கை அண்மையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது. சுவிஸ் அரசின் இந்த முடிவில் எப்படியான மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன அல்லது இதற்கான மாற்றங்களை எவ்வாறு ஏற்படுத்த முடியும். அகதி தஞ்சம் கோரியுள்ளவர்களின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்கள் சுவிஸில் எப்படியான நடைமுறைகளை முன்னெடுக்க வேண்டும் என்று சந்திப்பின் போது கலந்துரையாடவுள்ளேன் - என்றார்.
இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த சுவிஸின் உப ஜனாதிபதியும் நீதி அமைச்சருமான சைமனேட்டா சொமாருகா, புகலிடக்கோரிக்கையாளர்கள் தொடர்பில் மிக முக்கிய ஒப்பந்தத்தில் இலங்கை அரசுடன் கைச்சாத்திட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

# வேற்றுமையில் நாம் ஒற்றுமை காண்போம்

## யாழ்ப்பாணத்தில் கூறினார் அமைச்சர் ரவி கருணாநாயக்க

யாழ்ப்பாணம், ஒக். 16
எமது நாட்டில் இன்றும் பிரிவினை-வேற்றுமைகள் பற்றியே சிந்திக்கின்றனர். வடக்கு-தெற்கு என்றும், இந்துக்கள்-பௌத்தர்கள் என்றும் வேற்றுமைகள் தொடர்பிலேயே பேசுகின்றனர். வேற்றுமையில் ஒற்றுமை காண்போம் என்று டி.எஸ்.சேனநாயக்காக தெரிவித்ததைப் போன்று நாம் செயற்பட எத்தனிக்கின்றோம். இவ்வாறு நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார்.
தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் 200ஆவது ஆண்டுநிறைவின் இரண்டாம் நாள் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதில் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது:
உங்கள் குறைகளையும் தேவைகளையும் நிவர்த்தி செய்யவே நாம் முயற்சிக்கின்றோம். இந்த நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்தபோது டி.எஸ்.சேனாநாயக்க, வேற்றுமையில் ஒற்றுமை காண்போம் என்று தெரிவித்தார். ஆனால் நாம் அதில் சித்தியடையவில்லை. இன்றும் இந்துக்கள், பௌத்தர்கள் எனவும் தெற்கு, வடக்கு என்றே இன்றும் சிந்திக்கின்றோம். இதை மாற்றவே கடந்த தேர்தலில் மைத்திரி-ரணில் கூட்டு மூலம் முயற்சித்தோம்.
இந்த நாட்டின் முழு வளர்ச்சிக்காக அரசு வேற்றுமையில் ஒற்றுமை காணும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றது. இதனை இளையோர் முதல் அனைவரும் முன்னெடுக்கவேண்டும் என்று விரும்புகின்றோம். கடந்த காலத்தில் இதனை வெற்றி கொள்ளாத நிலையில் இன்று இதனை வெற்றி கொள்ள நாம் முயல்கின்றோம்.
சிங்கப்பூர் மற்றும் மலேசியா நாடுகளிலும் பல மொழி மக்களே வாழ்கின்றனர். இருப்பினும் அவர்கள் முன்னேறியுள்ளனர் என்றால் அதற்குக் காரணம் கல்வியே. இதன் காரணத்தினாலேயே நாமும் கல்வியால் முன்னேற வரவு- செலவுத் திட்டத்தில் 5 வீதத்தை கல்விக்கு ஒதுக்கீடு செய்கின்றோம்.
கல்லூரியின் புதிய அதிபர், கல்லூரியின் தேவையைப் பட்டியல் இட்டார். அதனை உடன் பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு சென்றேன். பிரதமர் அதனை வழங்க உத்தரவிட்டுள்ளார். அதற்கான நிதிகள் உங்களுக்குக் கிடைக்கும். நான் அரசியல் பேசவில்லை. நிதி அமைச்சர் என்ற வகையிலேயே இதனைக் கூறுகின்றேன்.
எல்லோரும் ஒற்றுமையாக வேலை செய்து நாட்டை வளர்க்க வேண்டும் என்று இதற்காகவே கேட்கின்றோம். அவ்வாறு ஒன்று சேர்ந்தாலே இலங்கையர்கள் என்ற முறையில் வளர முடியும். உங்கள் தேவைகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா உள்ளிட்டோர் எமக்குத் தினமும் வலியுறுத்துவர். அதனை நிறைவேற்ற நாம் முயற் சிக்கின்றோம்.
இங்கு நடந்த இழப்பையும் குறைகளையும் நிவர்த்திக்கவே முயற்சிக்கின்றோம். இந்த நாடு சுதந்திரம் பெற்றபோது எமது நாட்டின் தனி மனித வருமானமும், ஜப்பானின் வருமானமும் சமனாகவே இருந்தது. ஆனால் இன்று எமது தனி வருமானம் ஆண்டுக்கு 4 ஆயிரம் டொலராக உள்ளது. ஜப்பானியர்களின் தனி வருமானம் 48 ஆயிரம் டொலராகவுள்ளது. இந்தக் காலப் பகுதியில் நாட்டில் ஏதோ ஒரு பிழை நடந்திருக்கின்றது என்பதை உணர்த்துகின்றது.
புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டு வருகின்றது. உங்களின் நல்ல எதிர்காலத்துக்காக அதனைச் சிறப்பாக உருவாக்கித் தருவோம் - என்றார். (த-5-101)



# நகரில் நேற்று இரவு பதற்றம் இரு குழுக்களிடையே மோதல்

யாழ்ப்பாணம், ஒக். 16
யாழ். நகரில் இரு குழுக்களிடையே! ஏற்பட்ட மோதலால் நேற்று நள்ளிரவு வரை பதற்றமான சூழ்நிலை காணப்பட்டது. மோதலில் வாகனத்தின் கண்ணாடி அடித்து நொறுக்கப்பட்டது. மோதலுக்கான காரணம் உடனடியாகத் தெரியவரவில்லை.
யாழ். நகரில் தண்ணீர் தாங்கியடிப் பகுதிக்கு அண்மையாகவுள்ள முலவைச் சந்தியிலேயே இரு குழுக்களிடையே மோதல் ஏற்பட்டது. இரு குழுக்களைச் சேர்ந்தவர்களும் முகத்தைக் கறுப்புத் துணியால் மூடிக் கொண்டு, யாழ். நகர வீதிகளில் வாள்களுடன் மோட்டார் சைக்கிள்களில் சுற்றித் திரிந்ததால் பதற்றமான நிலை காணப்பட்டது.
நாவலர் வீதியில் நாவலர் கலாசார மண்டபம் முன்பாக, வாள்களுடன் இந்தக் குழுவினர் நடமாடினர். பின்னர இலுப்பையடிச் சந்தியில் வாகனத்தின் கண்ணாடியை அடித்து நொறுக்கினர். அங்கிருந்து மீண்டும் முலவைச் சந்திக்கு அந்தக் குழுக்கள் நகர்ந்தன. நேற்று நள்ளிரவு வரையும் அந்தப் பகுதியில் பதற்றமான சூழ்நிலை நிலவியது. (த-5-101)

## மைத்திரி—ரணில் விவாகரத்து பகல் கனவு

கூறுகிறார் சஜித் பிரேமதாஸ

ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக் கிடையில் நடந்துள்ள அரசியல் திருமண ஒப்பந்தம் பலமானது. இவர்களை விவாகரத்துக்கு இட் டுச் செல்ல கூட்டு எதிர்க்கட்சி எடுக் கும் முயற்சி பகல் கனவாகும்.
இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் அமைச்சருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.
அம்பாந்தோட்டையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அமைச்சர் இதனைக் கூறினார்.
ஜனாதிபதியையும், பிரதமரையும் மூட்டிவிட்டு, இருவரையும் பிரித்து, இருவருக்கிடையில் கருத்து முரண்பாட்டைத் தோற்றுவித்து, விரிசலை ஏற்படுத்தி நல்லாட்சி அரசைக் குழப்புவதற்கு முடியும் என்று கூட்டு எதிர்க் கட்சியினர் பகல் கனவு காண்கின்றனர். இது ஒருபோதும் நடைபெற மாட்டாது என்றார். (த-5)

# ஒத்த கருத்தில் மைத்திரி-ரணில்

## வேறுபாடு இல்லை என்கிறார் கபீர் காசிம்

கொழும்பு, ஒக்.16
ஜனாதிபதி தெரிவித்த கருத்தையே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கொண்டிருக்கின்றார்.
இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான கபீர் காசிம் தெரிவித்தார்.
கேகாலை, வட்டாரம பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது:
ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் சிறப்புச் சந்திப்பொன்று இடம்பெற்றது. அந்தக் கலந்துரையாடலில் நாமும் கலந்து கொண்டோம். ஜனாதிபதி தெரிவித்த கருத்துக் குறித்து பல்வேறுவிதமான கருத்துக் கள் தெரிவிக்கப்படுவதனால் ஜனாதிபதி அதனைத் தெளிவு படுத்தினார்.
நாம் அமைத்த நல்லாட்சி அரசுக்காக தனது முழுமையான பங்களிப்பு உண்டு என்று ஜனாதிபதி தெரிவித்தார். நல்லாட் சியைத் தொடர்ந்து கொண்டு செல்வதற்கும் நாட்டின் சட்டம் இறைமையை நூற்றுக்கு நூறு வீதம் பாதுகாப்



பதற்கும் ஜனாதிபதியும் எமது அரசும் கடமைப்பட்டுள்ளதாகவும் பிரதமர் இதன்போது எடுத்துக் கூறினார்.
ஜனாதிபதியினால் நிகழ்த்தப்பட்ட உரையில் பிரச்சினைக்குரிய இடம் காணப்பட்டது. முன்னாள் இராணுவத் தளபதி அல்லது இராணுவத்திலிருந்த அதிகாரிகள் ஆகியோரில் யாரையாவது நீதிமன்றத்துக்கு அழைக்கும்போது, அது தொடர்பில் சம்பந்தப்பட்ட அமைச்சுக்கும், ஜனாதிபதி அல்லது பிரதமர் ஆகியோருக்கும் அறிவுறுத்தல் வழங்கவேண்டும் என்பதுவே அதுவாகும்.
ஜனாதிபதியின் இந்த நிலைப்பாட்டில் தான் பிரதமரும் காணப்படுகின்றார். இந்த இருவருக்கும் அறிவிக்கப்படாமல் மூத்த இராணுவ அதிகாரிகள் நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர். இதுவே ஜனாதிபதி அன்று விடுத்துள்ள செய்தியாகும் - என்றார். (த-5)

## காலியில் கிளைமோர் மீட்பு

காலி - கொஸ்கொட பிரதேசத்தில் உள்ள காணியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த வெடிபொருள்களைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.
கிளைமோர் குண்டு, ரி 56 ரக துப்பாக்கிக்குப் பயன்படுத்தும் 18 தோட்டாக்கள், 122 கிராம் வெடிமருந்து என்பன அங்கிருந்து மீட் கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து ஹெகல்ல பிரதேசத்தில் கைவிடப்பட்ட இடத்தில் தேடுதல் நடத்தியபோது இந்த வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. (த)


## அடுத்த ஆண்டு முதல் பாலியல் கல்வித் திட்டம்

அடுத்த ஆண்டு முதல் பாலியல் கல்வியைப் பாடசாலைப் பாடத் திட்டத்தின் ஒரு பகுதியாக முன்னெடுப்பதற்குத் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது.
அடுத்த ஆண்டு 2 ஆம் தர மாணவர்களுக்கான பாடத்திட்டத்தில் இதனை உள்ளடக்குவதற்குத் திட்டமிட்டுள்ளதாகத் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் நடாஷா பாலேந்திரன் தெரிவித்துள்ளார்.
மாணவர்களுக்கு இந்தப் பாடத்தைக் கற்பிப்பது தொடர்பில் ஆசிரியர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.
இலங்கையில் சிறார்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்களைத் தடுக்கும் ஒரு முயற்சியாக, உடற்கூறு மற்றும் வாழ்க்கை குறித்த அடிப்படை அம்சங்களைப் புரிந்துகொள்ளும் வகையில் இந்தப் பாடத் திட்டம்வடிவமைக்கப் பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (த)

# மைத்திரியின் உரை போகப்போகப் புரியும்

## சு.க. பொதுச் செயலர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.16
ஜனாதிபதியின் உரையின் விளக்கத்தைப் போகப் போகத்தான் புரிந்து கொள்ள முடியும்.
இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான துமிந்த திஸநாயக்க தெரிவித்தார்.



"ஜனாதிபதியின் உரையின் நோக்கத்தை எதிர் வரும் நாள்களில் நாட்டு மக்கள் புரிந்து கொள்ள முடியும்" என்று துமிந்த குறிப்பிட்டார்.
கண்டியில் நேற்றுச் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
அவர் தெரிவித்ததாவது:
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பேச்சுத் தொடர்பாக நாட்டு மக்கள் எதிர்காலத்தில் புரிந்து கொள்ள முடியும். ஒரு காரணத் துக்காகவே ஜனாதிபதி அவ்வாறு கூறி யிருக்கின்றார். எதிர்காலத்தில் அந்தக் காரணத்தை மக்களே அறிந்து கொள்வார்கள். இந்தப் பேச்சைத் தவறான வகையில் புரிந்து கொள்ளக் கூடாது.
திருடர்களைப் பிடிக்க வேண்டாம் என்றோ அல்லது விசாரணைகளை நிறுத்தும்படியோ ஜனாதிபதி கூறவில்லை. ஜனாதிபதி ஒரு விடயத்துக்காகவே அவ்வாறு தெரிவித்தார். எனவே எதிர் காலத்தில் அந்த விடயம் என்ன என்பதை அறிந்து கொள்ள முடியும்.
கடந்த அரசில் இருந்த திருடர்களைப் பிடிப்பதல்ல இந்த அரசின் கடமை.
நல்லாட்சிக்குள் எவரும் திருட முடியாத அளவில் சட்ட திட்டங்கள் காணப்பட வேண்டும்.
விசாரணைகள் நியாயமானதாகவும், முறையானதாகவும் இருக்கவேண்டும். அவற்றை நேர்த்திப்படுத்துகின்ற கடமை ஜனாதிபதிக்கு உள்ளது - என்றார். (த-5)

# மரண அறிவித்தல்கள்



## திருமதி கனகம்மா இரத்தினசபாபதி


நயினாதீவு. 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும். நீர்கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா இரத்தினசபாபதி நேற்றுமுன்தினம் (14.10.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினசபாபதியின் (உரிமையாளர் - கணேசன் ஸ்ரோர்ஸ் பாலத் துறை) பாசமிகு மனைவியும். காலஞ்சென்றவர்களான கதிரித்தம்பி - யோகம்மா தம்பதிகளின் பாசமிகு மகளும். காலஞ்சென்றவர்களான தம்பையா - இராமாசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும். கருணாநிதி. கமலபூஷணி. கமலவேணி. கமலவதனி. சத்தியவாணி ஆகியோரின் பாசமிகு தாயாரும். மஞ்சுளாதேவி. சதானந்தன். காலஞ்சென்ற உதயசூரியன் மற்றும் சுந்தர்ராஜ். ஏகாம்பரம் ஆகியோரின் மாமியாரும். காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் சரஸ்வதி. சௌந்தரம். பெரியநாயகி. ஆறுமுகம். குணபூஷணி. கதிரேசபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும். காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம். கிருஸ்ணசாமி. சோமசுந்தரம். நாகம்மா. தம்பிமுத்து. சொர்ணலிங்கம். நடராசா மற்றும் மயில்வாகனம். திலகவதி. வரதலெட்சுமி ஆகியோரின் மைத்துனியும். காலஞ்சென்றவர்களான கனகம்மா. மனோன்மணி. உத்தமிப்பிள்ளை. விஸ்வலிங்கம். சொர்ணம்மா ஆகியோரின் சகலியும். புரந்தரி. சுதந்தரி. மேகலன். வசிதா. தனேஸ்குமார். கோபிகா. வர்ஷனா. சாம்பவி. விகாசன். அட்சாயினி. அஜென்சியா. செல்வகுமார். சஜீபன். ரஜீவ். பவித்திரா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும். ஷரண். அன்சியா.அகன் ஆகியோரின் அருமைப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.10.2016) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நயினாதீவு சல்லிபரவை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

7ஆம் வட்டாரம்,நயினாதீவு. (J/5423) (11.17.18) தகவல்: **குடும்பத்தினர்**

**077 884 4894, 077 801 3130**



## தம்பிஜயா வேலுப்பிள்ளை (துங்கராசா -J.P)

முல்லைத்தீவு - முள்ளிவாய்க்காலைப் பிறப்பிடமாகவும் புதுக்குடியிருப்பு 4 ஆம் வட்டாரத்தை வதிவிடமாகவும் கொண்ட தம்பிஜயா வேலுப்பிள்ளை (துங்கராசா -J.P) 11.10.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஜயா - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகனும். காலஞ்சென்றவர்களான யோசேப் - சிதம்பரம் தம்பதியரின் மருமகனும். வியாளம்மாவின் அன்புக் கணவரும். ரவிச்சந்திரன் (லண்டன்). ரவீந்திரன் (லண்டன்). ஸ்ரீவதனி (சுவிஸ்). ஸ்ரீ நிறஞ்சன் (லண்டன்). காலஞ்சென்ற ஸ்ரீறமணன் ஆகியோரின் பாசமிகு தந்தையும். பார்த்தீபன் (சுவிஸ். முன்னாள் மேலதிக அரசாங்க அதிபர் மாவட்ட செயலகம் - முல்லைத்தீவு). நிறஞ்சனா (லண்டன்). புஸ்பகுமாரி (லண்டன்). றம்மி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமானும். மோகன். டினோத். அஸ்வினி. டக்சியா. காயத்திரி. அஸ்வின். ஆர்த்திகா. அக்சனா ஆகியோரின் பேரனும். சிவசிதம்பரம். செல்லம்மா. காசிபதி. சிவசிவா (ல்ண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும். நடராஜா. கந்தையா. தாமோதரம்பிள்ளை. காலஞ்சென்ற நற்குணம் மற்றும் சேவியர்செல்வராசா. காலஞ்சென்ற தம்பிஜயா மற்றும் அன்னலக்சுமி. பாலராசா. யோகநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புதுக்குடியிருப்பு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**4 ஆம் வட்டாரம்,**
**புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 740 2914** (ஜே.25799) (13.18.17)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அன்னமுத்து கதிர்காமர்



சாவகச்சேரி. நுணாவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமரகவும் கொண்ட திருமதி அன்னமுத்து கதிர்காமர் நேற்று (15.10.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - தங்கமுத்து தம்பதியின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கதிர்காமரின் (PWD ஓவசியர்) அன்பு மனைவியும் மதுரேஸ்வரி காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் கணேசமூர்த்தி (நில அளவையாளர் - கனடா). ரஞ்சினி (ஆசிரியை. யா/ சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆனந்தசிவம் (ஓய்வுநிலை தொழில்நுட்ப அலுவலர் ). இந்துமதி (ஆசிரியை - கனடா). நரேந்திரன் (முகாமைத்துவ உதவியாளர் பிரதேச செயலகம் - சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களனே கந்தவனம். வைத்திலிங்கம். செல்லம்மா. ஆச்சிமுத்து மற்றும் கமலாதேவி ஆகியோரின் சகோதரியும் சிவரூபன்(நீதிமன்ற அலுவலர்- மன்னார்). அஜந்தி(யா/ சாவகச்சேரி சக்தியம்மன் தமிழ் கலவன் பாடசாலை). சிந்துஜா(ஆசிரியை வவு/ இறம்மைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்). டனுசியா. நிரோஜா. நிவேதிகா (கனடா). கீர்த்திகா (கனடா). சரண்ஜா (யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி). திலீபன்(யா/ சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் டிசானியின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2016) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் கல்லடி வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல. 5. கல்லடி வீதி.**
**சாவகச்சேரி.**
(ஏ.(25798)(12.18)

**தகவல் :**
**பிள்ளைகள், மருமக்கள்.**
**பேரப்பிள்ளைகள்.**

## கணேசதாஸ் சுகந்தன்
### (ஊழியர்- மக்கள் வங்கி யாழ்ப்பாணம்)



ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணேசதாஸ் சுகந்தன் நேற்று (15.10.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணேசதாஸ் மற்றும் கமலவேணி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசசிங்கம். நல்லம்மா. சங்கரப்பிள்ளை. விசாலாட்சி ஆகியோரின் அன்புப் பேரனும் சுபத்தினியின் (கனடா) அன்புச் சகோதரனும் ஜனத்குமாரின் (கனடா) அன்பு மைத்து னனும் கஜானன். அபிராமி. விக்னேஸ் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2016) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**"சுபகிரி"**
**ஏழாலை மேற்கு. ஏழாலை** (ஜே 4832)(12.18)

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

**077 465 9833**

## கதிரவேலு சின்னையா



ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் காரைக்கால்வீதி இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு சின்னையா 12.10.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - பொன்னி தம்பதியரின் அன்பு மருமகனும் இராசம்மா. கண்மணி. வல்லிபுரம். குலமணி. பிள்ளையம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் நாகதேவி. லங்காதேவி காலஞ்சென்ற பாலதேவன் மற்றும் ஜெயதேவன். நிர்மலாதேவி. இந்திராதேவி. ரவீந்திர தேவன். கொங்காதேவி. அமரதேவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் தனதாசன். தருமர். சந்திரபோஸ். ரவிச்சந்திரன். அருள்கனராஜா. சாந்தி. கலா. சுதா. நிலா ஆகியோரின் மாமனாரும் ரமேஸ். கிரிதரன். கலைமதி. சுபாகரன். சுகனியா. சிந்துஜா. சுரேஸ். சுதன். கவி. ஜெனி. நிலானி. டக்சியா. டனுசன். ருபின்சன். ஜெசி. மதுஷா. அபிஷன். அஸ்வின். தினோசன். வினோசன். மாதங்கி. அனுசியன். அஜய் ஆகியோரின் பேரனும் கிஷான். ஏஞ்சல். அஜய். கெபின். உகுவஸ்னா. உவேசன். மிதுஷா. யதுஷன். நித்தீஸ். லகீஷன். கரிஸ். ஜோன் ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(16.10.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**காரைக்கால் வீதி,**
**இணுவில் கிழக்கு.**
(J/5427) (14.17.18)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# அ'புரம் ஆலய உடைப்புக்கு இந்துமாமன்றம் கண்டனம்

கொழும்பு, ஒக். 16

அநுராதபுரம், தேவநம்பியதிஸ் ஸபுர, நீராவியடி ஸ்ரீ முத்து மாரியம்மன் கோயிலுக்குள் நுழைந்த காடையர் குழுவொன்று அங்கு ஒருவரை வாளால் வெட்டி, இரும்புக் கம்பியால் தாக்கியதுடன், மூலஸ் தானத்திலிருந்த நாகதம்பிரான் சிலையையும் அடித்து உடைத்துள்ள குரூரமான சம்ப வத்துக்கு அகில இலங்கை இந்துமாமன்றம் தனது ஆழ்ந்த வேதனையையும், கண்டனத்தையும் தெரிவித் துள்ளது.

தலைவர் கந்தையா நீலகண்டன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ள தாவது:

இந்து மக்களின் வழிபாட்டுத் தலங்களுக்குள் அத்துமீறி நுழைவதையும், புனித விக்கிரகங் களை அடித்து உடைப்பதையும் பொறுக்கமுடியாது. இவ்வாறான மதகுரோதமான நடவடிக்கைகள் தற்போதுள்ள நல்லாட்சியி லும் தொடர்வதையிட்டு எமது வன்மையான கண்டனத்தை மீண்டும் தெரிவிக்க விரும்புகின்றோம்.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பாக கடந்த காலங்களில் பல தட வைகள் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்கள் ஆகியோரின் கவனத் துக்குக் கொண்டு வந்துள்ளோம். எனினும், இவ் வாறான நடவடிக்கைகள் தொடர்ந்த வண்ண மேயுள்ளமை இந்து மக்களின் மனதைப் புண்படுத்தும் செயலாகும். சகல மதங்களும் இந்த நாட்டில் பாதுகாக்கப்படவேண்டும் என்றும், இப்படியான சம்பவங்கள் தொடர்பாக மேலும் தாமதியாது நடவடிக்கை எடுப்பதன் மூலம், இவ் வாறான மத அழிப்பு நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துமாறும் ஜனாதிபதி, பிரதமர் மற் றும் அரச தலைவர்களை மீண்டும் வலியுறுத்திக் கேட் டுக் கொள்கின்றோம்.

இந்தச் சம்பவத்தால் சேதமடைந்த விக்கிர கங்களுக்குப் பதிலாக, புதிய விக்கிரகங்களை வழங்கவும், இதனால் ஆலயத்துக்கு ஏற்பட்ட வேறு சேதங்களைச் சீரமைக்கவும் அகில இலங்கை இந்து மாமன்றம் தயாராகவுள்ளது. இதுபற்றி ஆலய நிர்வாகத்தைத் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்போம்.

இப்படியான மத குரோதச் செயல்களைத் தடுப்பதற் குப் பொருத்தமான குறை கேள்அதிகாரி மூலம் நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியைப் பகி ரங்கமாக மீண்டும் கேட்டுக் கொள்கின்றோம்– என் றுள்ளது. (கு)

# தோட்டத் தொழிலாளருக்காக மட்டக்களப்பிலும் போராட்டம்

காத்தான்குடி, ஒக். 16

தமது சம்பளத்தை 1,000 ரூபா வாக உயர்த்தக்கோரி மலையகத் தொழிலாளர்கள் முன்னெடுத்து வரும் போராட் டத்துக்கு ஆதரவு வழங்கும் வகையில் மட்டக் களப்பு நகரில் நேற்று முன் தினம் கவனயீர்பு போராட்டம் ஒன்று இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட உழைக் கும் மக்கள் கூட்டமைப்பு மற் றும் தொழிற் சங்கங்கள் இணைந்து மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாக இந்தப் போராட்டத்தை நடத்தின.

போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் எஸ்.வியாழேந்திரன், கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஞா.கிருஷ்ணபிள்ளை ஆகியோ ரும் கலந்துகொண்டனர். (கு)

# கிராம அலுவலர்களை மன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவு

வழக்குகள் மற்றும் பரா மரிப்புவழக்குகளில்எதிரி கள் முன்னிலையாகா விடின்அவர்கள்வசிக்கும் பகுதி கிராம சேவையாளர் கள் மன்றில் சாட்சிய மளிக்க வேண்டும் என மட்டக்களப்பு நீதிமன்ற நீதிவான் மாவட்டத்தின் சகல பிரதேச செயலா ளர்களுக்கும் உத்தர விட்டார்.

எதிரிகள் மற்றும் பிரதி வாதிகளின் விவரங் களை வெறும் அறிக்கை மூலம் நீதிமன்றுக்கு அனுப் பாது, உரிய கிராம சேவையாளர்கள் நேரடியாக நீதிமன்றத்தில் முன்னிலையாகிச் சாட் சியமளிக்கவேண்டும் எனவும் நீதிவான் குறிப்பிட்டார். (கு)

கலர் பிரதியாக்கம்

- விசிற்றிங் காட்
- சான்றிதழ்கள்
- அழைப்பிதழ்கள்
- CD கவர், ஸ்ரிக்கர்

போன்ற அனைத்து வகையான கலர் பிரதியாக்கங்களையும் உலகத்தரத்தில் உடனுக்குடன் பிரதியாக்கம் செய்து தரப்படும்.

A4 - 20/=

MOORTHY DIGITAL COLOUR LAB
62/20, STANLY ROAD,
JAFFNA.
021 222 1358

# குளவி கலைந்து தாக்கியதால் 30 பேர் வைத்தியசாலையில்

நுவரெலியா, ஒக். 16

பொகவந்தலாவை கீழ்ப்பிரிவு தேயிலைத் தோட்டத்தில் கொழுந்து பறித்துக்கொண்டிருந்த தொழிலாளர்களைக் குளவிகள் கொட்டி யதால் 30 பேர் பொகவந்தலாவ மருத்துவமனையில் சேர்க் கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற் றது. மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருப்பவர்களில் சிலர் சிகிச்சைகளின் பின் வீடு திரும்பியுள்ளதாகவும், மேலும் சிலர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட் டது. (கு)

வேலைவாய்ப்பு

யாழ். நகரில் வெற்றிகரமாக இயங்கிக் கொண்டிருக்கும் Golden Group Advertising Marketting நிறுவனத்தில் 4 வகையான பதவி வெற்றிடங்கள்

- விற்பனைப் பிரதிநிதிகள்
- மேற்பார்வையாளர்
- அலுவலகப் பெண்
- வாகனத்துடன் சாரதி (Buddy)

குறிப்பு: வயதெல்லை 18-38
தகைமை:குறைந்தபட்சம் G.C.E O/L

அடிப்படைச் சம்பளம் 18500+ கொமிசன் + உணவுப்படி வழங்கப்படும். அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

077 998 7699, 077 621 9536

வாழ்க்கையைக் கட்டியெழுப்பும் இடம்

British Way® English Academy

எந்த மாற்று வழியுமில்லை British Way

இலங்கையின் முதலாவது ஆங்கிலத்துக்கான பயிற்சிப்பட்டறை

நிட்டம்புவ 033 302 19 19
யாழ்ப்பாணம் 033 33 40 600
காலி 033 302 11 11
மாத்தறை 033 302 12 12
அநுராதபுரம் 033 302 13 13
நுகேகொட 033 302 14 14
கம்பஹா 033 302 15 15
நீர்கொழும்பு 033 302 16 16
கண்டி 033 302 17 17
குருநாகல் 033 302 18 18
கிரிபத்கொட 077 325 77 67
இரத்தினபுரி 0333 555 315

DAkkS Deutsche Akkreditierungsstelle D-ZM-18590-01-00
ISO 9001:2008 CERTIFIED

இவ் இரண்டு மாத காலப் பயிற்சியின் பின்னர் 180 நாடுகளில் அங்கீகரிக்கப்பட்ட ETS TOEFL Junior மற்றும் ETS TOEIC USA தரத்திலான சர்வதேச சான்றிதழ்கள் வழங்கப்படும்

UNIVERSITY of CAMBRIDGE ESOL Examinations
ICDL
bcs
abe Accredited College
SQA

இரண்டு மாத காலப் பயிற்சி 02 Months

காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை திங்கள் முதல் வெள்ளி வரை இரண்டு மாத காலப் பயிற்சி வழங்கப்படும்.

இப்பயிற்சியானது பிரித்தானியா மற்றும் அனேக நாடுகளில் கையாளும் விதத்தில் இரண்டு மாதத்திற்குள் ஆங்கில அறிவே இல்லாத ஒருவருக்கு கற்பிக்கும் முறைமைக்கேற்ப இலங்கையிலும் விசேடமாக யாழ் மண்ணிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியின் மூலம் 100% ஆங்கிலத்தை சரளமாக பேச வைக்க முடியுமென இக்கல்வியகம் உத்தரவாதம் அளிக்கின்றது.

01, November, 2016 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

வார இறுதி வகுப்புகள் 04 Months

காலை 8.30 முதல் 4.00 மணி வரை பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில்

வார இறுதி வகுப்புகள் ஞாயிறு காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை நான்கு மாத காலம் நடைபெறும். தொழில் செய்பவர்களுக்கு இப்பயிற்சிநெறி மிகவும் உகந்ததாகும்.

23, October, 2016 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

IELTS சனிக்கிழமைகளில் மாலை 1.30 முதல் 5.30 வரை

22, October, 2016 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

KIDS' Class Grade 1-10

சனிக்கிழமைகளில் காலை 8.30 முதல் 12.30 வரையும் மாலை 1.00 முதல் 4.00 வரையும்

சிறுவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த பாடநெறியானது மாணவர்களின் ஆங்கிலம் தொடர்பாக காணப்படும் பயத்தை நீக்கி அவர்களின் சிறந்த எதிர்காலத்திற்கான சரியான வழியை காண்பிப்பதற்காக விசேடமாக தயாரிக்கப்பட்டுள்ளது

29, October, 2016 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

British Way® English Academy

Contact (Jaffna Branch) : 033 33 40 600

நிட்டம்புவ | Tel: 033 302 19 19 | Fax: 033 2297912 | E-mail: info.britishway@gmail.com | Web: www.britishway.lk

No.15, Kannathiddy, Jaffna. (In front of the Shivan Kovil)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.மாவட்டச் செயலக அரசாங்க அதிபரின் பிரத்தியேக உதவியாளராகக் கடமையாற்றும் திருமதி ரேவதி பாலேந்திரன் அவர்களின் அன்புக் கணவர்

**தம்பிராசா பாலேந்திரன்**

14.10.2016 வெள்ளிக்கிழமை அகாலமரணம் அடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியினைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது குடும்பத்தினருக்கு மாவட்டச் செயலகத்தின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**யாழ்.மாவட்டச் செயலக நலன்புரி கழகம்.**

**JENNY CABS**
**CALL TAXI**
ALTO Up & Down - 50/=
Nano up & Down - 40/=




வாடிக்கையாளர் கவனத்திற்கு
குறுந்தூர, நெடுந்தூர
பயணங்களுக்கு இன்றே
அழையுங்கள்.
100 km க்கு மேல் போய்வர 10
ரூபாயினால் குறைக்கப்படும்
என்பதை தங்களுக்கு
தெரிவித்துக்கொள்கின்றோம்.
அழைப்புக்களுக்கு :
077 4949555, 077 5998255,
077 6741127, 077 8589987

## மரண அறிவித்தல்

### றூபி அரியரத்தினம்

யாழ்ப்பாணம் YWCA யின் முன்னாள் தலைவரும், CMS பாடசாலைகளின் ஆட்சிக்குழு முன்னாள் உறுப்பினருமான றூபி அரியரத்தினம் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற B.V அரியரத்தினத்தின் (ஓய்வுபெற்ற பொறியியலாளர் CGR) அன்புத் துணைவியாரும், ராஜன் (பொறியியலாளர் - சிங்கப்பூர்), செல்வம் (ஓய்வுபெற்ற CTC / CBA), காலஞ்சென்ற குலம் (நீர்ப்பாசனத் திணைக்களம்), ஞானோ (CEO Sika Ltd.Papua New Guinea ) ஆகியோரின் அருமைத் தாயாரும், விமலினி (சிங்கப்பூர்), Dr. பிறேமினி ( Oasis Hospital), சந்திராணி (ஓய்வுபெற்ற ஆசிரியை), மேரி (பணிப்பாளர் - Sika Ltd.Papua New Guinea ) ஆகியோரின் மாமியாரும், கிறிஷா (சிங்கப்பூர்), ரஜீவ் (Pharm Evo )- பிரியான்ஜலி, ஷர்மிளா-பிரசங்கா (ஆஸ்திரேலியா), சஞ்ஜீவ் (Metro Politan) - டாவினா, அனோஜா - யொஹான் (ஆஸ்திரேலியா), வினித்தா (மக்கள் வங்கி)-டினேஸ் ஆகியோரின் பாட்டியும், அலெக்ஸ், ஹனா, யசிந்து, டினன்யா, ஷெனுரா, கேஷிகா, ஜேடன், நத்தானியா, ஜோசுவா, அவினேஷ், டிவினேஸ் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 13.10.2016 வியாழக்கிழமை பிற்பகல் 5.00-9.00 மணிவரையும், வெள்ளிக்கிழமை 14.10.2016 காலை 9 மணி தொடக்கம் மாலை 9 மணிவரையும் அஞ்சலிக்காக பொரளை ஜயரத்ன மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு நேற்று (15.10.2016) சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்ற நல்லடக்க ஆராதனையின் பின்னர் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு 4ஆம் குறுக்குத் தெரு, இல.139 இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (16.10.2016) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சுண்டுக்குளி சென்.ஜோன்ஸ் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

(C/25532)
(11,18)

**தகவல்: குடும்பத்தினர்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



கடந்த 15.09.2016
வியாழக்கிழமை
சிவபதமடைந்த எங்கள்
குடும்பத் தலைவர்

அமரர்
**சின்னையா**
**திருஞானசம்பந்தன்**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (16.10.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கே.கே.எஸ்.வீதி,
மஞ்சத்தடி, இனுவில்.

**குடும்பத்தினர்.**

## நீங்கா நினைவில் ஒன்பதாண்டுகள்



அமரர்
**கோபாலப்பிள்ளை**
**சுபாஸ்கரன்**
(சுபாஸ்)

திதி: பிரதமை
(16.10.2016)

கண்மகிழ
03.04.1978

கண்நெகிழ
27.09.2007

**மறைந்தும் மறவாத மும்மூன்று வருடங்கள்**
**மனதை வருடும் மறையாத காயங்கள்**
**ஆற்றொணா பிரிவுத்துயர் தந்த காலங்கள்**
**ஆறாது தவிக்குது உந்தன் உதிரங்கள்.**

என்றும் உந்தன் நினைவுகளுடன்-
**குடும்பத்தினர்.**
(வேலணை மேற்கு)

கந்தர்மடம் ,
யாழ்ப்பாணம்.

### வீடு வாடகைக்கு

சித்தன்கேணியில் இருந்து
பண்டத்தரிப்புக்குச் செல்லும் பிரதான
வீதிக்கு இடையில் சகல வசதிகளுடன்
கூடிய வீடு வாடகைக்குக்
கொடுக்கப்படும்.
அலுவலக தேவையுடையோர்களும்
தொடர்பு கொள்ளலாம்.
077 287 3312

### Intelligent Incubator
### விற்பனைக்கு

கோழி முட்டையில் குஞ்சு பொரிக்க வைக்கும் கருவி விற்பனைக்குண்டு. காடைமுட்டை, தாராமுட்டை, காக்கா முட்டை, போன்ற ஏனைய முட்டைகளையும் பொரிக்க வைக்க முடியும்.
தொடர்புகளுக்கு:-
Steevanraj - 077 529 1732,
Pakeerathan - 077 529 6642
மேலதிக தகவல் படங்களுக்கு:
www.facebook.com/Jaffnaelectronics

### மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம்
34 வயது, பூசம் 4ஆம் பாதம், செவ்வாய்க்
குற்றமற்ற, தனியார் நிறுவனத்தில் வேலை
புரிகின்ற மணமகனுக்கு தகுந்த
மணமகள் தேவை.
தொடர்பு: 078 9147660
email: jaffna2011@hotmail.co.uk

### Personal Class

உயர்தர மாணவர்களுக்கான
இணைந்த கணித வகுப்புகள்
தனியாகவோ குழுவாகவோ
கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 077 6692132

### வேலையாள்கள் தேவை

வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்கு
உட்பட்ட பகுதியில் இயங்கும்
அச்சகத்துக்கு கணினி வேலைக்கு
பெண்கள் தேவை.
தொடர்பு: 077 310 4899

### பணியாளர் தேவை (யாழ்நகர்)

களஞ்சியசாலை ஒன்றிற்கு பெண் பணியாளர் தேவை (சிட்டை எழுதுனர், கணக்கு பதிவாளர்) 18-30 வயது வரையான யாழ் நகரில் இருந்து 3Km உட்பட்ட பிரதேசத்தில் வசிப்பவர்கள் மட்டும். A/L வர்த்தகம் படித்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
தொடர்பு: 077 5164928

### வேலையாள் தேவை

மின் பொருள் விற்பனை நிலையத்திற்கு
வேலையாள் தேவை. யாழ் மாநகர
எல்லைக்குள் உள்ளவர்கள்
விரும்பத்தக்கது. வயது 18 - 25
Ogesta
075 590 4041

## 44 ஆவது நாள் நினைவு நாளும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



தோற்றம்
15.10.1932

மறைவு
03.09.2016

### இராமலிங்கம் வடிவேலு

இராசம்மா இராமலிங்கம் பெற்றமுத்து குஞ்சியப்புவே!
உதிர்ந்து விட்ட எங்கள் உதிரிப் பூவே!
எட்டாத தொலைக்குப் போய்விட்ட எம் அருமை செல்வமே!
கொஞ்சம் கூட நினைக்கவில்லை
உங்கள் வாழ்க்கை இடையில் முடியுமென்று!
எங்கள் கடைசி சொத்தாக இருந்து
ஆற்ற முடியாத சோகத்தைத் தந்து வித்தாக வீழ்ந்து
விண்ணேறி சென்றவா!
ஆண்டு பல போனாலும் ஆறாதையா உங்கள் நினைவு!

ஆத்ம சாந்திப் பிரார்த்தனை சங்கானை காளிஅம்மன் தேவஸ்தானத்தில் இன்று நடைபெறுகிறது.

க.பரமநாதன்
(பிரான்ஸ்)

## சரவணா ரெக்ஸ்
நல்லூர்



(வேறு கிளைகள் இல்லை)
இச்சலுகைகள்
14.10.2016 தொடக்கம்
28.10.2016 வரை
மட்டுமே
**தித்திக்கும் தீபாவளியை முன்னிட்டு**
**புத்தம் புதிய சாறிகள், சல்வார்கள்**
**அனைத்தும் மலிவு விலையில்**
526, 529 பருத்தித்துறை வீதி, நல்லூர் (பின்வீதி)
(சிவன் கோயில் அருகில்) யாழ்ப்பாணம்.

# வவுனியாவில் நேற்று இரண்டு பொலிஸ் நிலையங்கள் திறப்பு

வவுனியா, ஒக். 16

வவுனியாவில் நேற்று இரு பொலிஸ் நிலையங்கள் திறக்கப்பட்டன. பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர அவற்றை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார்.

வவுனியாவில் 2011ஆம் ஆண்டு முதல் பொலிஸ் அரணாகச் செயற்பட்ட ஈச்சங்குளம், வவுனியா பொகஸ்வாவே ஆகிய இரு பொலிஸ் நிலையங்களே இவ்வாறு திறக்கப்பட்டன.

நிகழ்வில் பொலிஸ் அணிவகுப்பு மரியாதைகள் நடைபெற்றன. பொலிஸ் நிலையங்களைத் திறந்த பொலிஸ்மா அதிபர் புதிதாக அமைக்கப்பட்ட பொலிஸ் நிலைய கட்டடங்களைப் பார்வையிட்டார்.




ஈச்சங்குளம் பொலிஸ் நிலையத் திறப்பு நிகழ்வில் வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபா ஏ. சரத்குமார, வவுனியா, மன்னார் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன், விமானப்படையின் உயர் அதிகாரிகள், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ம.தியாகராசா, இ. இந்திரராசா, செ. மயூரன், ஜெயதிலகா மற்றும் அரச உத்தியோகத்தர்கள், வன்னி மாவட்ட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், கிராம சேவையாளர்கள், பாடசாலை மாணவர்கள் பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

பிற்பகல் இடம்பெற்ற பொகஸ்வாவே பொலிஸ் நிலையத் திறப்பு நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் ஜெயதிலகா, சமயத்தலைவர்கள், வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர், மன்னார், வவுனியா பிரதிப் பெரிஸ்மா அதிபர், வன்னி மாவட்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், அரச அதிகாரிகள், பொது மக்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(ந-21)

## முன்னாள் போராளிகளுக்காக துணுக்காயில் பப்பாளி தோட்டம்

### 25 பேருக்கு வேலைவாய்ப்பு

முல்லைத்தீவு, ஒக்.16

முன்னாள் போராளிகளுக்கு வேலைவாய்ப்பை வழங்கும் வகையில் துணுக்காயில் பப்பாளிச் செய்கையை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம். இவ்வாறு துணுக்காய் பிரதேச செயலாளர் இ.பிரதாபன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் மட்டும் முன்னாள் போராளிகள் 220 பேர் உள்ளனர். அவர்களில் 90 சதவீதத்தினர் தொழில் வாய்ப்பின்றி உள்ளனர். அவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்துவது தொடர்பில், வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் அண்மையில் அவர்களை அழைத்துக் கலந்துரையாடினார்.

உடனடியாக உருவாக்கக் கூடிய வேலை வாய்ப்புத் தொடர்பில் ஆராயப் பட்டது. துணுக்காய், உயிலங்குளத்தில் உள்ள 50 வீட்டுத் திட்டப் பிரதேசத்தில் 5 ஏக்கர் நிலத்தில் பப்பாளிச் செய்கைத் திட்டத்தை உடன் ஆரம்பிக்கத் தீர்மானிக்கப் பட்டது. அதற்கான இடத்தைப் பிரதேச செயலகம் இனங்கண்டுள்ளது. அதை உடனடியாகச் சீரமைத்து பயிர்ச் செய்கையாளருக்கு ஏற்ற வகையில் மாற்றுவதற்கு அமைச்சர் ஓர் முதலீட்டாளரை அறிமுகப்படுத்தியுள்ளார்.

உற்பத்தி செய்யப்படும் பப்பாளிகளை முதலீட்டாளரே கொள்வனவு செய்வார். அனைத்து ஆளணியையும் முன்னாள் போராளிகளில் இருந்து தெரிவு செய்யத் தீர்மானிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் மூலம் முதற்கட்டமாக முன்னாள் போராளிகள் 25 பேருக்கு வேலை வாய்ப்பை உருவாக்க முடியும். இதே போன்று மேலும் இரு பண்ணைகள் அமைக்க ஆலோசிக்கப்படுகின்றது.

இந்தத் திட்டத்தின் இரு நன்மைகளைப் பெறத் திட்டமிட்டுள்ளோம். முன்னாள் போராளிகளின் வேலைவாய்ப்பு ஒரு நன்மை. அழிந்து வரும் கிராமத்தை கட்டியெழுப்புவது இரண்டாவது நன்மை. உயிலங்குளம் 50 வீட்டு வசதிகளைக் கொண்ட கிராமம். தொழில்வாய்ப்பின்மை காரணமாக 25 குடும்பங்கள் கிராமத்தை விட்டு வெளியேறியுள்ளன. இவ்வாறான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதால் மக்கள் மீண்டும் குடியமர்வார்கள் என்று எதிர்பார்க்கின்றோம் - என்றார்.

(ந-101)

## பரீட்சை விண்ணப்பம் பெறலாம்

யாழ்ப்பாணம், ஒக். 16

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில், தேசிய தொழில் தகைமை மட்டம் - 5 க்கான முதலாம் அரையாண்டு பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்று கல்லூரியின் பணிப்பாளர் எஸ். முகுந்தன் தெரிவித்தார்.

பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் கல்லூரியின் பரீட்சைப் பகுதியில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று, முழுமைப்படுத்தி எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னதாக அலுவலக நேரத்தில் பரீட்சைப் பகுதியில் ஒப்படைக்குமாறும் அவர் தெரிவித்தார்.

(ந-ரி)





கிளிநொச்சி மாவட்ட முதியோர்களுக்கான மாவட்ட நிலை விளையாட்டுப் போட்டிகள் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெற்றது. கவேரி கலாமன்ற அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தால் போட்டிகள் நடத்தப்பட்டன. பலூன் உடைத்தல், வேக நடை என்பன - ஆண்களுக்கு கிடுகு பின்னுதல், போத்தல்களில் நீர் நிரப்புதல் பெண்களுக்கும், இருபாலாருக்குமான சங்கீதக் கதிரைப் போட்டி என்பனவும் நடத்தப்பட்டன. (ந-9)

## பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 16

ஆயுள் வேத பேணு பாதுகாத்தல் சபை தொடர்பான பொதுக் கூட்டம் எதிர்வரும் 31 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப. 3 மணிக்கு யாழ். பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது என யாழ். பிரதேச செயலர் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் புதிய நிர்வாக சபைத் தெரிவு நடைபெறவுள்ளதால் யாழ். பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள ஆயுள்வேத வைத்தியர்கள் மற்றும் ஆர்வலர்களையும் கலந்து கொள்ளுமாறு அவர் தெரிவித்தார்.

(ந-ரி)

## ஞாலத்தில் புதுமை புகும் தாலம்

வடக்கின் மூலவளம் என எல்லோராலும் இலச்சினையில் பொறிக்கப்பட்டு, அடையாளப்படுத்தப்பட்டுள்ளது பனை. இதன் பயனின் பெருமையை பொய்யாமொழிப் புலவர் திருக்குறளின் முப்பாலிலும் மூன்று குறள்களினால் வெளிப்படுத்தி உள்ளார். மரங்களில் உயரிய பயன்களை உருவத்தில் உயர்ந்த பனைகள் வழங்குகின்றன.

நம்பிக்கை நம் சொத்து. அதை நமக்குத் தருவது நாட்டுப் பற்று. ஒவ்வொரு நாட்டிலும் இறையருளால் பல விருட்சங்கள் படைக்கப்பட்டுள்ளன. (தாலம்) என மறுபெயர் பூண்ட பனை, தனது முழுமையையும் மனிதன் மற்றும் உயிரினங்களின் வாழ்வுக்கு அர்ப்பணிக்கும் வகையில் படைக்கப்பட்டுள்ளது. இந்தப் படைப்பு ஊட்டம் மிக்க சத்துக்கள் உள்ள உணவுகளாகவும், பாதுகாப்புத் தரும் தண்டாகவும், நோய்களுக்கு மருந்தாகவும், விலங்கு தீவனமாகவும், சுய தொழில் ஊடான வருமானத்தை பெறக் கூடியதாகவும் உள்ளது.

தற்போது எமது பிரதேசத்தில் உற்பத்தியாகும் தானியங்களை விடுத்து இறக்குமதி செய்யப்படும் வெள்ளை மா அனைத்துப் பண்டங்களிலும் சேர்க்கப்பட்டு, மக்கள் அதிகம் விரும்பி உண்ணும் வகையில் ஆக்கிரமித்துள்ளது.

பாவனைப் பொருள்கள் வரிசையில் பிளாஸ்ரிக் பொருள்கள் உலகை ஆக்கிரமித்து, சூழலை மாசடையச் செய்கின்றது. ஒப்பிட்டு நோக்குகையில் இன்றைய மனிதர்கள் நோயுற்று அவதிப்படு பவர்களாகவும் உள்ளனர். முன்னாள் பிரதமர் கலாநிதி தஹநாயக்கா தமது உண வில் வெள்ளைச் சீனி, வெள்ளை மா, வெள்ளை அரிசி என்பவற்றை வெளியேற்றியதே, 83 வயது வரை வாழ்வதற்கு முக்கிய காரணம் என்று அன்று கூறியிருந்தார்.

இன்றைய காலத்தின் தேவை கருதி, பனை அபிவிருத்திச் சபை எமது மண்ணின் அரிய பொக்கிசமான இந்த வளத்தின் பயன்பாட்டை மக்களின் தேவைக்கேற்ப ஊட்டமிகு உணவுகளாகவும் (யோக்கட், ஐஸ்கிறீம், தொதல், பாம்போசா) பாதிப்பற்ற பாவனைக்குரிய பொருள்களாகவும் (பைகள், கூடைகள், அலங்காரப் பொருள்கள், விளையாட்டுப் பொருள்கள்) புதிய வடிவங்களில், புதிய உத்திகளின் வெளிப்பாடாகவும், கண்கவர் வண்ணங்கள் இணைத்து யாழ். மத்திய கல்லூரி அரங்கில் காட்சிப்படுத்தல் ஊடாக அறிமுகப்படுத்தப் படுகின்றது. எதிர்வரும் 21, 22, 23 ஆம் திகதிகளில் இந்தக் காட்சிப்படுத்தல் நடைபெறுகின்றது.




பனை ஊடாகப் பெறப்படும் செயற்பாடுகள் தொடர்பான ஆய்வரங்கு கண்காட்சியின் போது நடைபெறும். பனை தொடர்பான ஆராய்ச்சிகள் மக்களுக்கு தெளிவுபடுத்தப் படும். மக்கள் பார்த்தும், கேட்டும் அறிந்தவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு கற்பக விற்பனை நிலையங்கள் உள்ளன.

தாமதம் ஏன்? உங்கள் பிள்ளைகளுக்கு நல்வழிகாட்ட புறப்பட்டு வாருங்கள்! வள உற்பத்திகளைப் பாருங்கள், தாலத் தாயவள் எம் மண்ணில் கோலம் போடும் விந்தையை அறியுங்கள். உங்களை நீங்கள் உணருங்கள்! வாருங்கள் வந்து பாருங்கள்!

*கா.கோபாலகிருஷ்ணன்,*
*ஊடக அனுசரணை:*
*உதயன்*

## கஞ்சாவுடன் மூவர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 16

36 கிலோ கேரளா கஞ்சாவுடன் மூவர் விசேட அதிரடிப் படையாரால் கைது செய்யப்பட்டு, ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

காரைநகரில் நேற்று விசேட அதிரடிப்படை ரோந்தில் ஈடுபட்டபோது 3 பேரும் சந்தேகத்துக்கிடமான முறையில் நின்றுள்ளனர். அவர்களைச் சோதனையிட்டபோது 36 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தி யாவைச் சேர்ந்த ஒருவரும், காரைநகரைச் சேர்ந்த இருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் மன்றில் முற்படுத்தப் படவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ந-4,106)

# பொலிஸாரால் தாக்கப்பட்ட சாரதியை மன்றில் முற்படுத்த உத்தரவு

கிளிநொச்சி, ஒக். 16

கிளிநொச்சி ஏ-9 வீதியில் பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தார் என்று தாக்கல் செய்யப்பட்ட வழக்குடன் தொடர்புபட்ட நபரை நாளை நீதிமன்றில் முற்படுத்துமாறு கிளிநொச்சி நீதிமன்றம் உத்தரவிட்டது.

கிளிநொச்சி ஏ-9 வீதியில் கடந்த மாதம் இரு வாகன சாரதிகளுக்கு இடையே வாய்த் தகராறு ஏற்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற கிளிநொச்சி வீதி போக்குவரத்துப் பொலிஸார் குறித்த டிராக்டர் சாரதியை இரும்புச் சங்கிலியால் மூர்க்கத்தனமாக தாக்குவது போன்ற காணொலிகள், புகைப்படங்கள் வெளியாகியிருந்தன.

தாக்குதலில் காயமடைந்த சாரதி கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். பாதிக்கப்பட்டவர் மற்றும் அவரது மனைவியால் மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் மனித உரிமை அமைப்புக்களிடமும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பொலிஸாரால் தாக்கப்பட்டு காயமடைந்த நபர் மீது பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தார் என்ற குற்றச் சாட்டில் வழக்குப் பதிவு செய்துள்ளனர் பொலிஸார்.

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்றில் வழக்கு விசாரிக்கப்படுகிறது.

கடந்த வாரம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்றில் குறித்த வழக்கு விளக்கத்துக்கு எடுக்கப்பட்டது.

அதன்போது உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் முன்னிலையாகியிருந்தார். குறித்த சம்பவத்துடன் தொடர்புபட்டவரை - காயமடைந்தவரை மன்றில் முற்படுத்துமாறு நீதிமன்று அப்போது உத்தரவிட்டது.

(ற-4,21)

மாபெரும்
பெற்றோல் மற்றும் டீசல் மோட்டார் வாகனங்கள்
ஏல விற்பனை
ஒக்டோபர் 19ஆம் திகதி
LOLC வாகன வளாகத்தில்
ஸ்டேசன் வீதி, வைரவபுளியங்குளம்,
வவுனியா
ப்ளோரா - 0245 11 81 81
திமோதி - 0766 58 23 29
அஜித் - 0773 13 64 04
பார்வையிடல் ஒக்டோபர் 16, 17 மற்றும் 18ஆம் திகதிகளில்
(வாகனங்கள் தொடர்பான முழு விபரங்களை 15.10.2016 திகதிய வீரகேசரியில் பார்க்கலாம்.)
LOLC MICRO CREDIT
LOLC FINANCE
சொக்மன் & சமரவிக்கிரம
ஒரே தேசம் ஒரே ஏலவிற்பனையாளர்.
124 வருட மகோன்னத சேவையின் கொண்டாட்டம்
D.ads
பிரதான அலுவலகமும் காட்சியறையும்
இல.24, டொரிங்டன் வீதி, கண்டி.
தொ.பே: 081 2227593,
பெக்ஸ்: 081 2224371
ஈமெயில்: schokmankandy@sltnet.lk
நகர கிளையும் காட்சியறையும்:
இல.290, ஹெவ்லொக் வீதி, கொழும்பு-05.
தொ.பே: 2502680, 2585408
பெக்ஸ்: 011-2588176
ஈமெயில்: schokman@samera1892.com
இணையதளம்: www.sandslanka.com

# விவசாயிகளுக்கு அனைத்திலும் முன்னுரிமை வழங்க வேண்டும்

## சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பொறுப்பதிகாரி சுட்டிக்காட்டு

தென்மராட்சி, ஒக். 16

ஜனாதிபதி விவசாயக் குடும்பத்தில் பிறந்தார் என கூட்டங்களில் கூறுகிறார். சுகாதார அமைச்சராகவும் இருந்துள்ளார். ஆயினும் விவசாயக் குடும்பங்களுக்கு வைத்தியசாலைகளில் முன்னுரிமை வழங்கப்படுவதில்லை. முப்படையினருக்கு அனைத்து விடயங்களிலும் முன்னுரிமை அளிக்கப்படுவது போல நாட்டின் முதுகெலும்பு எனக் கணிக்கப்படும் விவசாயிகளுக்கும் அனைத்து நடவடிக்கைகளிலும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பொறுப்பதிகாரி மருத்துவர் த.குகதாசன் தெரிவித்தார்.

மீசாலை கமநல சேவைகள் நிலைய மண்டபத்தில் நேற்று தென்மராட்சி பிரதேச கமக்கார அமைப்புக்களின் கமத் தொழில் வார நிகழ்வு நடைபெற்றது. அதில் பாலூட்டும் தாய்மாருக்கு போசாக்கு உணவுகளின் அத்தியாவசியம் என்னும் தலைப்பில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

பெண்களின் வாழ்வில் இடைக்காலப் பகுதியில் 3 கட்டங்கள் உள்ளன. பருவமடைதல், கர்ப்பிணியாதல், பாலூட்டும் காலம் போன்றவையாகும். இந்தக் காலப் பகுதியில் இவர்களுக்கு அதிகளவு சக்தி தேவைப்படுவதால் நிறைய போசாக்குள்ள உணவு வகைகள் அவசியம் வழங்க வேண்டும். பெண்கள் பாலூட்டும் காலத்தில் முதல் ஆறு மாத காலத்தில் தாய்ப்பால் வழங்குவது அவசியம் என்பதால் இரு உயிர்களுக்கும் போசாக்கு உணவு அத்தியாவசியமாக உள்ளது. இந்த ஆறு மாத காலத்தில் குழந்தையின் நிறை கட்டாயம் 3 கிலோ அதிகரிக்க வேண்டும். பாலூட்டும் தாய் மாருக்கு அதிகளவு போசாக்கு உணவு கள் வழங்க வேண்டும். பெரும்பாலும் விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்த பாலூட்டும் தாய்மார் கவலையீனம் காரணமாக போசாக்குள்ள உணவுகளை உட்கொள்ளாததால் குழந்தைகளுக்கு இரத்தச் சோகை போன்ற பாதிப்பு ஏற்படுவதைக் காணமுடிகிறது. முன்னர் மகள் அல்லது மருமகள் கர்ப்பிணியானால் வீட்டில் பிரசவம் நடைபெறுவதற்கு முன்னர் போசாக்கு இலை வகைகளான அகத்தி, வல்லாரை, கீரை வகைகள் போன்றவற்றை வீட்டுத் தோட்டப் பயிர்களாகவும் முட்டைக்காக கோழிகளையும், பாலுக்காக ஆடு, மாடுகளையும் வளர்த்து பாலூட்டும் தாய்மாருக்கு வழங்கினர். தற்போது அனைத்தும் கடைகளில் வாங்கிக் கொடுக்கப்படுவதால் பாலூட்டும் தாய்மாரும், பிள்ளையும் போதிய அளவு போசாக்குத் தன்மை குறைந்த நிலையில் உள்ளனர். விவசாயிகளுக்கும் அனைத்து நடவடிக்கைகளிலும் முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும். விவசாய அடையாள அட்டை வைத்திருக்கும் விவசாயக் குடும்பங்களின் நலனில் அனைத்துத் திணைக்கள நடவடிக்கைகளிலும் முன்னுரிமை கொடுக்க வேண்டும். வைத்தியசாலைகளில் வெளி நோயாளர் பிரிவுகளில் முன்னுரிமை வழங்கவேண்டும். விவசாயிகளுக்கென சுகவாழ்வு சிகிச்சை நிலையங்கள் வைத்தியசாலைகளில் ஆரம்பிக்கப்பட்டு மாதாந்தம் அவர்களுக்கு பரிசோதனைகளுடன் கூடிய சிகிச்சைகள் வழங்கப்படல் வேண்டும்- என்றார்.

கமநல அபிவிருத்தி அலுவலர் கே.சத்தியேந்திரா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன், யாழ்ப்பாணம் கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் கே.நிஷாந்தன், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை அத்தியட்சகர் மருத்துவர் த.குகதாசன், மற்றும் விவசாயிகள் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் பாலூட்டும் தாய்மாருக்கு போசாக்கு உணவுப் பொதிகளும் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வங்கிக் கணக்குப் புத்தகங்களும் மகளிர் கமக்கார அமைப்புக்களுக்கான பதிவுச் சான்றிதழ்களும், பழமரக் கன்றுகளும் வழங்கப்பட்டன.

(ற-9)

# மாட்டியது கள்ள மணல் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக்.16

களவாக மணல் ஏற்றினார் என்ற குற்றச்சாட்டில் வற்றாப்பளையில் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார்.

முல்லைத்தீவு மாவட்ட போதைப் பொருள் தடுப்புப் பிரிவுப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரின் வழிநடத்தலில் மாவட்ட போதைப் பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் க.ஜெசிந்தன் தலைமையிலான பொலிஸ் அணியே குறித்த நபரைக் கைது செய்தது.

சந்தேகநபர் விசாரணைகளின் பின்னர் சட்ட நடவடிக்கைகளுக்காக முள்ளியவளைப் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டார். சான்றுப் பொருள்களும் முள்ளிய வளைப் பொலிஸாரிடம் பாரப்படுத்துப்பட்டன- என்று முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம் தெரிவித்தது.

(ற-ரி7)




# வவு. நகர சபை பூங்காவின் கட்டுமானம் மந்த கதியில்

## பிரதேச மக்கள் குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம், ஒக்.16

வடக்கு மகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சால் வடக்கு, கிழக்கு உள்ளூர் சேவைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 7 மில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்ட வவுனியா நகர சபை பொதுப்பூங்கா கட்டுமானங்கள் ஒப்பந்த காலம் முடிவடைந்தும் நிறைவடையவில்லை.

இவ்வாறு பொதுமக்கள் குற்றஞ்சாட்டினர். சிறுவர்களுக்காக அமைக்கப்பட்ட இரு பொதுப் பூங்காக்கள் வவுனியாவில் உள்ளன. அவற்றில் ஒன்று குடியிருப்பு சிறுவர் பூங்கா. மற்றையது நகர சபையின் பொதுப் பூங்கா. பெருமளவு விளையாட்டுச் சாதனங்கள், இடவசதி கொண்டதாக நகர சபையின் பொதுப் பூங்காவே காணப்படுகின்றது. இந்தப் பூங்காவின் சீரமைப்புப் பணிகள் உலக வங்கியின் நிதியுதவியுடன் 78 லட்சத்து 87 ஆயிரத்து 252 ரூபா செலவில் கடந்த மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டன. ஓகஸ்ட் மாதத்துடன் இந்தப் பணிகள் நிறைவடைய வேண்டும் என்று ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது வரை நிறைவுபெறவில்லை- என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

நவீன வசதிகளுடன் பூங்கா சீரமைக்கப்படுகின்றது. சிறிது தாமதம் ஏற்பட்டாலும் இந்த ஆண்டு இறுதிக்குள் நேர்த்தியான முறையில் சீரமைப்பு பூர்த்தி செய்யப்படும்- என்று வவுனியா நகர சபையினர் தெரிவித்தனர்.

(ற-21,402)

## யானைகள் அட்டகாசத்தால் சங்கங்குள மக்கள் அவதி

### தீர்வு பெற்றுத் தருமாறு கோரிக்கை

வவுனியா, ஒக்.16

வவுனியா, செட்டிக்குளம் பிரதேச செயலாளர் பிரிவில் சங்கங்குளத்தை அண்டிய பகுதிகளில் யானைகளின் அட்டகாசம் அதிரித்துள்ளது. அதிகாரிகள் இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அந்தக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

தினமும் தொடரும் யானைகளின் அட்டகாசத்தால் இரவில் உறங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சிறுவர்கள் இதனால் பெரும் அச்ச நிலையில் உள்ளனர். அதிகாரிகளிடம் இதுகுறித்து பல தடவைகள் கூறிவிட்டோம். நடவடிக்கை எடுக்கப்படவில்லை.- என்று கிராம மக்கள் தெரிவித்தனர்.

பிரதேசமக்கள் இதுகுறித்து எனது கவனத்துக்குக் கொண்டுவந்தனர். வன ஜீவராசிகள் திணைக்களத்துக்கும், வனவளத்திணைக்களத்துக்கும் இது குறித்து தகவல் வழங்கப்பட்டுள்ளது. உடனடித் தீர்வாக யானை வெடிகளும் வழங்கப்பட்டுள்ளன.

இதற்குரிய நிரந்தரத் தீர்வாக பாதுகாப்பு வேலி அமைப்பதற்கான கோரிக்கைகளையும் முன்வைத்துள்ளோம். பாதுகாப்பு வேலி அமைக்க அனுமதி கிட்டும் சந்தர்ப்பத்திலேயே நிரந்தத் தீர்வை எட்ட முடியும்.- என்று பிரதேச செயலாளர் பாபாஜோன் தெரிவித்தார். (ற-101)

## வரி அறவிடும் பச்சிலைப் பள்ளி பிரதேச சபை பளை சந்தைக்கு மின் வழங்குவதில்லை

### குற்றஞ்சாட்டுகின்றனர் பளை பொதுச் சந்தை வர்த்தகர்கள்

கிளிநொச்சி, ஒக்.16

வரி அறவிடுவதில் காட்டும் ஆர்வத்தை பளை பிரதேச சபையினர் பொதுச் சந்தைக்கு மின்சாரம் வழங்குவதில் காட்டுகிறார்கள் இல்லை. மின்சாரம் இல்லாது நாம் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றோம்.

இவ்வாறு குற்றஞ்சாட்டினர் பளை பொதுச் சந்தையில் வியா பாரத்தில் ஈடுபடும் வர்த்தகர்கள்.

கிளிநொச்சி மாவட்டம், பச்சிலைப் பள்ளி பிரதேசத்துக்குட்பட்டது பளை பொதுச்சந்தை. இங்குள்ள பழக் கடைகள், மரக்கறிக் கடைகள், தேங்காய்க் கடைகள் என்பவற்றுக்கு இதுவரை மின் இணைப்புகள் வழங்கப்படவில்லை. இதனால் வர்த்தகர்கள் மட்டுமல்லாது நுகர்வோரும் பெரும் பாதிப்புகளை எதிர்கொள்கின்றனர்.

''மாலையானதும் வியாபாரம் செய்யமுடியாதுள்ளது. இலத்திரனியல் தராசுகளுக்கு மின்னேற்ற முடியாதுள்ளது. குளிர் சாதனப் பெட்டிகளைப் பயன் படுத்த முடியாதுள்ளது. பெரும் தொகைப் பணத்தை முதலீடு செய்து வர்த்தக நிலையங்களை அமைத்துள்ள நாம் இதனால் இலாபத்தை ஈட்ட முடியாத நிலையில் உள்ளோம். வர்த்தகர்களிடம் இருந்து வரி அறவிடுவதில் ஆர்வமாக உள்ள பளை பிரதேச சபை யினர் எமக்கான வசதிகளைச் செய்து தருகிறார்கள் இல்லை”- என்று வர்த்தகர்கள் குற்றஞ்சாட்டினர்.

“தற்போது மின் இணைப்பு வழங்குவதற்கான நிதி ஒதுக்கீடு இல்லை. அடுத்த ஆண்டு அதற்கான நிதி ஒதுக்கப்பட்டு வர்த்தக நிலையங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்படும்” - என்று பளை பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்தார்.

(ற-21,ரி3)

## நெடுந்தீவில் பஸ் சேவையை அதிகரிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.16

நெடுந்தீவில் இடம்பெறும் பஸ் சேவையை அதிகரிக்க வேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டத்திலேயே அவர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.

நெடுந்தீவிலுள்ள சுமார் 5 ஆயிரம்மக்களின்தேவையைப் பூர்த்தி செய்ய ஒரே ஒரு பஸ் சேவையை நடத்தப்படுகின்றது. இரு பிரதான வீதிகள் இங்குள்ள போதும், ஒரு பிரதான வீதியில் மட்டுமே பஸ் சேவை நடத்தப்படுகின்றது. அதுவும் போதுமானதாக இல்லை. இங்கு மேலதிகமாக இன்னொரு பஸ் சேவை நடத்தப்பட வேண்டும். தற்போதுள்ள பஸ் சேவையை அதிகரிக்க வேண்டும் - என்று மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

நெடுந்தீவில் உள்ள ஒரேயொரு இ.போ.ச. பஸ்ஸே சேவையில் ஈடுபடுகின்றது. இரண்டாவது மார்க்க வீதி முழுமையாகச் சேதமடைந்துள்ளது. வீதியைச் சீரமைத்தாலே பஸ் சேவை நடத்த முடியும். சேவையில் ஈடு படும் தடத்தில் சேவையை அதிகரிப்பதற்கு மேலதிக பணியாளர்களை ஈடுபடுத்த வேண்டும். தற்போது ஒரு சாரதியும், நடத்துநருமே பணியிலுள்ளனர். இரவு, பகல் சேவை நடத்தப்படும் போது அவர்களுக்கான ஓய்வையும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது- என்று போக்கு வரத்துச் சபையின் பிரதிநிதி கூட்டத்தில் சுட்டிக் காட்டினார். (ற-101)

## விசேட தேவையுடையோர் விவரம் கணினிமயமாகும்

### வடக்கு சுகாதார அமைச்சர் தகவல்

யாழ்ப்பாணம், ஒக்.16

வடக்கு மாகாணத்தில் உள்ள விசேட தேவையுடையோரின் விவரங்கள் திரட்டப்பட்டு கணினிமயப்படுத்தப்படவுள்ளது.

இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களுக்கான வீடு தரிசிப்பு முறையிலான நடமாடும் சேவை கிளிநொச்சியில் நேற்று முன்தினம் ஆரம்பமானது. ஆரம்ப நிகழ்வில் கருத்துத் தெரிவித்த போதே வடக்கு சுகாதார அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

முதற்கட்டமாகக் கிளிநொச்சி மாவட்டத்தில் மருத்துவ மாதுக்களின் உதவியுடன் விசேட தேவையுடையோர் விவரங்கள் திரட்டப்பட்டு கணினிமயப்படுத்தப்படவுள்ளன. ஏனைய மாவட்டங்களில் விரைவில் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்படும். ஆரம்பிக்கப்பட்டுள்ள நடமாடும் சேவை கனடாவில் புலம் பெயர்ந்து வாழும் உறவுகளின் உதவியுடன் செயற்படுத்தப்படுகின்றது. தாதிகள், உளநல சுகாதார உத்தி யோகத்தர்கள், உதவியாளர்கள், சாரதி அடங்கிய நால்வர் கொண்ட குழு சேவையில் ஈடுபடும். பாதிக்கப்பட்ட நபர் அழைக்கும் சந்தர்ப்பத்தில் இந்தக் குழு குறித்த நபரின் வீட்டுக்குச் சென்று சேவை வழங்குவதே திட்டத்தின் நோக்கம். கிளிநொச்சி மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தத் திட்டம் அடுத்து முல்லைத்தீவு மாவட்டத்திலும், ஏனைய மாவட்டங்களிலும் செயற்படுத்தப்படும். விசேட தேவைக்குட்பட்டோருக்கான விசேட வைத்தியசாலை ஒன்றை மாங்குளத்தில் விரைவில் அமைக்கவுள்ளோம் - என்றார்.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் ஆரம்பமான இந்த நிகழ்வு பழைய மாவட்ட வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

(ற-21,ரி3,34)

## வாய்க்கால் திருத்தப்பணி இடைநிறுத்தம்:

கிளிநொச்சி, ஒக்.16

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் பின்புறமாகவுள்ள கழிவு வாய்க்கால் சீர் திருத்தப்.பணி இடை நிறுத்தப்பட்டுள்ளது என்று பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டினர்.

“கிராமத்துக்கு ஒரு மில்லியன் நிதி ஒதுக்கீட்டின் கீழ் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் பின்புறமாகவுள்ள கழிவு வாய்க்கால் திருத்தப்பணி கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது எந்த அறிவித்தலும் இன்றி குறித்த பணி இடைநிறுத்தப்பட்டுள்ளது. அதனால் இந்தத் திட்டம் கைவிடப்பட்டுள்ளதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. ஒதுக்கப்பட்ட நிதிக்கு என்ன நடந்தது என்றும் தெரியவில்லை” - என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

“திருத்தப் பணிகள் இடை நிறுத்தப்படவில்லை. இந்தத் திட்டமானது பகிரங்க விளம்பரத்தின் மூலமே வழங்கப்பட்டது. திருத்தப் பணிக்காக ஒருவர் 8 லட்சம் ரூபா கோரலில் எடுத்திருந்தார். அவ்வாறு ஒப்பந்தத்தை எம்மிடம் பெற்றவர் உப ஒப்பந்தத்தின் கீழ் அதனை 6 லட்சம் ரூபாவுக்கு பிறிதொருவருக்கு வழங்கியுள்ளார் என்று தற்போது தெரிய வருகின்றது.

அவை அனைத்தும் உரிய முறையில் பரிசீலிக்கப்படும். பணிக்கான எந்த கொடுப்பனவும் இடம்பெறாதமையினால் எந்த விதமான நிதிமோசடிகளும் இடம்பெற சந்தர்ப்பம் இல்லை” - என்று பிரதேச செயலாளர் கோ.நாகேஸ்வரன் தெரிவித்தார்.(ற-10)

## வடக்கில் மாணவிகளே அதிகமானோர்

யாழ்ப்பாணம், ஒக்.16

வடக்கு மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களிலும் மாணவன்கள் எண்ணிக்கையைவிட மாணவிகளின் எண்ணிக்கை அதிகம் காணப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் 58 ஆயிரத்து 432 மாணவன்களும், 60 ஆயிரத்து 847 மாணவிகளும் உள்ளனர். கிளிநொச்சியில் 16 ஆயிரத்து 92 மாணவன்களும், 16 ஆயிரத்து 301 மாணவிகளும் உள்ளனர்.

மன்னாரில் 13 ஆயிரத்து 241 மாணவன்களும், 13 ஆயிரத்து 316 மாணவிகளும் உள்ளனர். முல்லைத்தீவில் 13 ஆயிரத்து 82 மாணவன்களும், 13 ஆயிரத்து 438 மாணவிகளும் உள்ளனர். வவுனியாவில் 16 ஆயிரத்து 906 மாணவன்களும், 17 ஆயிரத்து 33 மாணவிகளும் உள்ளனர்.

வடக்கு மாகாணத்தின் 12 கல்வி வலயங்களை உள்ளடக்கிய 5 நிர்வாக மாவட்டங்களில் 1 லட்சத்து 17 ஆயிரத்து 752 மாணவன்களும், 1லட்சத்து 20 ஆயிரத்து 935 மாணவிகளும் உள்ளனர்.

கல்வி அமைச்சின் 2015ஆம் ஆண்டு புள்ளிவிவரங்களில் இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. (ற-101)

## பேரினவாத சக்தியின் முகவராக செயற்படுகின்றார் விமல தேரர்

### வடக்கு உறுப்பினர் சிவநேசன் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, ஒக்.16

தமிழரின் நியாயமான கோரிக்கைகளைத் திரிபுபடுத்தி பௌத்த மத வெறியை நியாயப்படுத்த முனைகின்ற விமல தேரர் போன்ற அனைத்துப் பிக்குகளும் கண்டிக்கப்பட வேண்டியவர்களே.

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.சிவநேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மறைக் கல்வி நிலையத்தில் கடந்த வியாழக் கிழமை செய்தியாளர் சந்திப்பு நடத்தப்பட்டது. அதில் யாழ்.மாவட்ட அனைத்து மதப் பேரவையின் பௌத்த மதப் பிரதிநிதியான விமல தேரர் தெரிவித்த கருத்து என்று வெளியான செய்திகள் குறித்து மாகாண சபை உறுப்பினர் அறிக்கை வெளியிட்டுள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தென்னிலங்கை சிங்கள பௌத்த பேரினவாத சக்திகளின் முகவராக விமல தேரர் செயற்படுவதை அவர் கூறியுள்ள கருத்துக்கள் எடுத்துக் காட்டுகின்றன. தமிழர்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தும் விடயங்களைப் புரிந்து கொள்ளாதவர் போலவே தேரர் இயங்குகிறார். தமிழர் தாயகமான வடக்கில் சிங்களவர் வாழுகின்ற பகுதிகளில் விகாரைகள் சிறப்பாக இயங்குகின்றன. பாதுகாப்புத் தரப்பினரின் முகாம்களில் அவர்களினது வழிபாட்டுக்காக சிறிதும் பெரிதுமாக விகாரைகள் உள்ளன. அவற்றைத் தமிழர்கள் யாரும் எதிர்க்கவில்லை. தமிழர்கள் எதிர்ப்பது பாதுகாப்பு தரப்பால்அடாத்தாக கைப்பற்றப்பட்ட நிலங்கள் விடுவிக்கப்படும்போது எச்சங்களாக வழிபாட்டுத் தலங்களை விட்டுச் செல்வதையும், சிங்களவர்களே இல்லாத கிராமங்களில் பாதுகாப்புத் தரப்பினரின் ஆளுகைக்குட்படாத நிலங்களில் அதுவும் தமிழர்களுக்கு சொந்தமான நிலங்களில் அத்துமீறிய நிலையில்விகாரைகள் அமைப்பதையுமே.

விமல தேரர் என்பவர் உண்மையில் நல்லிணக்கத்தை விரும்புகின்ற, ஏற்படுத்த முயற்சிக்கின்ற ஒருவராக இருப்பாரானால், தமிழர்களின் கிராமமான கொக்கிளாயில் அத்துமீறி சிங்களப் படையினரின் உதவியுடன் பௌத்த தேரர் ஒருவரால் அமைக்கப்படும் விகாரையின் நடவடிக்கைகளை நிறுத்தி இலங்கையில் உள்ள பௌத்த மத தலைவர்கள் தங்களுடைய அரசின் சட்டத்தை தாங்கள் மதிப்பவர்கள் என்பதை முதலில் நிரூபிக்கட்டும். அப்போது தான் அவரின் கருத்துப் பெறுமதியானதாக அமையும் - என்றுள்ளது. (ற-21)

# வெங்காயப் பொரியல்



## எந்தவொரு உணவையும் சிறப்பாக்கும் சுவையின் ரகசியம்!

எமது வேலைப்பளு மிக்க வாழ்க்கையினால் நாம் சில விடயங்களை கைவிடுகின்றோம். ஆனால் இந்த வேலைப்பளுவினால் குடும்பத்தின் இனிமையான எதிர்பார்ப்புக்களை இல்லாமல் செய்ய எமது பெண்கள் தயாராக இல்லை. எனவேதான் எமது பெண்களின் பணிகளை இலகுவாக்கும் அதேவேளை, சமைக்கும் உணவின் சுவையை தினமும் அதிகரிக்க Knorr மாசி பவுடர் கலவை உங்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

எமது பெண்களில் பலர் மாசியை ஒரு சுவையூட்டியாக உணவுகளில் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். இருந்தும் கடையிலிருந்து மாசியை பெரிய துண்டுகளாக கொண்டு வந்து சிறு துண்டுகளாக வெட்டிக்கொள்வதற்கு அதிக வேலைப்பளு காரணமாக பலருக்கு நேரம் இல்லை. சில கடைகளில் மாசி துண்டுகளாக கிடைத்தாலும் அவற்றை தூளாக்குவதில் உள்ள சிரமம் காரணமாக நாம் மாசியை சம்பல் அல்லது கறிக்கு மட்டுமே பயன்படுத்தப் பழகியுள்ளோம்.

ஒரே மாதிரியான உணவை எவரும் தினமும் உண்ண விரும்புவதில்லை. ஒரு நாளைக்கு பொறித்து, இன்னொரு நாளைக்கு சமைத்து, இல்லாவிடின் சுண்டி, தாளித்து, அதுபோலவே பெட்டர் செய்து சாப்பிடத்தான் நாம் அனைவரும் விரும்புகின்றோம். பல்வேறு வகையிலான உணவுகளுக்கு மாசி கலக்கப்பட்டதும் அதன் சுவை அதிகரிக்கின்றது. அதனால்தான் உண்மையான மாசி மற்றும் தரம் மிக்க மசாலாத் தூள்களைக் கலந்து Knorr மாசி கலவை, பவுடர் வடிவில் உங்களுக்குக் கிடைக்கின்றது. எனவே பல்வேறு வகையான உணவுகளை இலகுவாகவும், சுவையாகவும் தயாரிக்க விரும்பும் நீங்கள், சமைக்க, பொரிக்க, சுண்ட, தாளிக்க மற்றும் பெட்டர் செய்யவும் Knorr மாசி பவுடர் கலவையை இலகுவாக பயன்படுத்தலாம்.

உங்கள் குடும்பத்தின் அன்புக்குரியவர்கள் விரும்பும் எந்தவொரு உணவையும் அவர்கள் விரும்பும் விதமாக சுவையாகவும், குணமுள்ளதாகவும் தயாரித்துக்கொண்டால் உங்களுக்குக் கிடைக்கும் மகிழ்ச்சியைப்போலவே அன்புக்குரியவர்களும் மகிழ்வது Knorr குடும்பத்தினராகிய எமக்கு மிகவும் பெருமையாகும். எனவே நீங்களும் இன்றே Knorr மாசிப் பவுடர் கலவையை பயன்படுத்தி அருமையான சுவையை அனுபவியுங்கள்.

**சத்துரிகா அனுராதா**
*Knorr Chef*



### தேவையான பொருட்கள்

| | |
|---|---|
| மெல்லியதாக நறுக்கிய வெங்காயம் | 500g |
| நோர் மாசிப் பவுடர் கலவை | 2 பெக்கட் |
| அஸ்ட்ரா | 3 மே.கரண்டி |
| நிலக்கடலை | 200g |
| வெள்ளைப்பூடு | 3 துண்டுகள் |
| நசித்த இஞ்சி | 1 தே.கரண்டி |
| கருவேப்பிலை | 1 கோப்பை |
| மிளகாய்த் துண்டுகள் | 10g |
| உப்பு சுவைக்கேற்ப | |
| எண்ணெய் பொரிப்பதற்கு | |

### செய்முறை

வெங்காயம் மற்றும் நிலக்கடலையை ஆழமான எண்ணெயில் பொரித்தெடுக்கவும். கறிவேப்பிலையை எண்ணெயில் போட்டவுடனேயே (நிறம் மாறுமுன்) எடுக்கவும். ஒரு பாத்திரத்தில் அஸ்ட்ராவை இட்டு அது கரைந்ததும், இஞ்சி மற்றும் வெள்ளைப்பூடை இட்டு வாசனை வரும்வரை தாளிக்கவும்.

இதனோடு பொரித்தெடுத்த வெங்காயம், நிலக்கடலை மற்றும் மிளகாய்த் துண்டுகளைச் சேர்த்து நன்றாகக் கலக்கவும். இப்பொழுது மாசிப் பவுடர் கலவையை மேலே தூவி லேசாகக் கலந்தபின் பரிமாறவும்.



# சிறுவிளம்பரங்கள்

## விற்பனைக்கு

### காணி விற்பனைக்குண்டு
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு மிக அண்மையில் 1 ¼ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தரகர்கள் தேவையில்லை.
தொடர்பு: 077 613 9307

### காணி வீடு விற்பனைக்கு
திருநெல்வேலி, பரமேஸ்வராச் சந்தியில் 1¼ பரப்புக் காணியோடு நான்கு(04) அறைகள் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.
076 975 4410 , 076 977 0175

### காணி விற்பனைக்கு
உபயகதிர்காமம் முருகன் கோயிலுக்கு அண்மையில் 4 பரப்பு வெற்றுக் காணி விற்பனைக்கு உண்டு.
077 712 4688

### காணி விற்பனைக்குண்டு
இல.19, முருகேசர் லேன், நல்லூரில் 9 குளி கொண்ட காணி விற்பனைக்குண்டு.
077 147 6932, 077 617 9114

### காணி விற்பனைக்கு
ஊர்காவற்றுறை, நாரந்தனை, பண்ணை பிரதான வீதியில் 11 பரப் புக் காணி விற்பனைக்குண்டு. மொத்தமாகவோ அல்லது பகுதியா கவோ விற்கப்படும். (ஒரு பரப்பு ஒரு இலட்சம்)
011 233 4507

### காணி விற்பனைக்கு
இல.15 வில்லூன்றிப் பிள்ளையார் கோயில் வீதியில் 1 ½ பரப்பு காணியுடன் சேர்ந்த வீடு விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை பேசித்தீர்க்கலாம்.
077 160 4004

### காணி விற்பனைக்கு
பண்டத்தரிப்பு அம்மன் வீதியில் 4¾ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
077 935 6066,077 994 1731

### கார் விற்பனைக்கு
Morris Minor (1000) 8 SRI கறுப்பு நிறமுடைய கார் நல்ல Condition விற்பனைக்குண்டு.
078 301 4280

### காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம், புன்னாலைக்கட்டுவன் தெற்குச் சந்தியில் 19¼ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. வியாபார நிலையம் அமைப்பதற்கு, தொழிற்சாலை அமைப் பதற்கு அல்லது விவசாயம் செய்வதற்குப் பொருத்தமான காணி ஆகும்.
071 410 2174

### காணி விற்பனைக்கு
உரும்பிராய் மேற்கு சிவகுல வீதியில் 5பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
077 324 8821/ 077 035 8196

## தேவை

### காணி தேவை
நல்லூர் சுற்றுவட்டத்தில் 02 பரப்பு வீட்டுடன் அல்லது வெறுக்காணி தேவை.
077 951 5721

### தேவை
தச்சு வேலை செய்ய அனுபவம் உடைய நபர் தேவை. நிரந்தரமான வேலை வாய்ப்பு
076 821 9413 யாழ்ப்பாணம்

### வீடு / காணி தேவை
நல்லூர், கந்தர்மடம், திருநெல்வேலி, கொக்குவில் ஆகிய பிரதேசங்களில் வீடு / காணி தேவை.
077 217 4038

### சிறுநீரகம் தேவை
**சிறுநீரகம் ஒன்றை வழங்கி உயிரைக் காப்பாற்றுங்கள்**
46 வயதான பெண் நோயாளி ஒருவருக்கு B⁺ சிறுநீரகம் அல்லது O⁺ சிறுநீரகம்தேவைப்படுகின்றது. சிறுநீரகமொன்றை வழங்கக் கூடிய நல்லெண்ணம் கொண்டவர்கள் கீழ்வரும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
071 104 1619

### தேவை
வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள சிமெந்து வேலைத்தளத்திற்கு ஆள்கள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
076 826 7703

### வீடு வாடகைக்குத் தேவை
K.K.S. வீதியை அண்டிய கொக்குவில், கோண்டாவில், தாவடிச்சந்தி, இணுவில் பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை. வீட்டுத்தளபாடங்களும் விற்பனைக்கு உண்டு.
077 336 2984

### வேலையாள்கள் தேவை
கொழும்பில் கேபிள் டி.வி மற்றும் டிஸ் அன்ரெனா விற்பனை செய்யும் நிறுவனத்திற்கு விற்பனை யாளர்கள் மற்றும் டிஸ் அன்ரெனா பொருத்துநர் எலக்ட்ரோனிக்ஸ் டெக்னீசியர், எக்கவுண்ட் கிளார்க் உடன்தேவை. உணவு, தங்குமிடம் இலவசம் சம்பளம் பேசிக் கொள்ளலாம். உடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: T.Kumar
077 771 0785
SATS - TECH - ENGINEERS
A51/102, Wolfendhal Street,
Colombo - 13

## ஏனையவை

### வீடு வாடகைக்கு
யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அண்மையில் தளபாடங்களுடன் கூடிய சகல வசதிகளும் உள்ள வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 076 962 2256

### வாடகைக்கு
யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரும் யாழ் தேவி A/C ரயில் தரித்து நிற்கும் வெள்ளவத்தை ரயில் நிலையத்துக்கு முன்பாக இல. 8 புகையிரத வீதி, வெள்ளவத்தையில் அமைந்துள்ள லொட்ஜில் தனி அறைகள் இணைந்த குளியலறையுடன் கூடிய அறைகள் நாள், கிழமை, மாத வாடகைக்குண்டு.
011 250 4281 , 071 299 1256

### வீடு வாடகைக்கு
யாழ்நகரை அண்மித்து திருநெல்வேலி, பலாலி வீதியில் விவசாயப்பண்ணைக்கு (Farm School) அருகில் மூன்று அறைகளுடன் சகல வசதிகளையும் கொண்ட மேல்மாடிப் பகுதி உடனடியாக வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு: 077 378 7380

### வாடகைக்கு
யாழ்ப்பாணம் திருநெல்வேலி கிழக்கில் 5அறைகளுடனான பிரதான சாலையை முகப்பாக கொண்ட பெரிய வீடு அலுவலக பாவனைக்கு வாடகைக்குண்டு.
077 547 2377

### மணமகள் தேவை
யாழ்.இந்து 1979 சதயம் மொத்த கிரக பாவம் 54. கொழும்பில் தனியார் தொழில் புரியும் மணமகனுக்கு பெற்றோர் மணமகளைத் தேடுகின்றனர். O/L, A/L வரை படித்தவர்கள் விரும்பத்தக்கது.
077 640 8772/ 011 243 6669

### வாடகைத்தாய் தேவை
யாழ். தம்பதியினர்க்கு IUF மூலம் செய்வதற்கு 30வயதிற்குக் குறைவான பெண் தேவை. சன்மானம் வழங்கப்படும். இரகசியம் பேணப்படும்.
தொடர்பு: 077 906 1406

### வீடு வாடகைக்கு உண்டு
திருநெல்வேலி கலாச்சார வீதியில் ஐந்து அறைகளுடன் 100 அடி நீளம் மற்றும் 50 அடி அகலமுடைய (களஞ்சியசாலைக்கு பயன்படுத்தக்கூடிய) வீடு ஒன்று வாடகைக்கு விடப்படும்.
071 157 5509, 077 445 1916

### Personal Class
உயிரியல், இரசாயனவியல் } A/L
கணிதம், விஞ்ஞானம் } O/L
37 வருட Past papers & theory கற்பிக்கப்படும்.
TP. No : 075 6295662

### வாடகைக்குண்டு
ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணத்தில் 3 மாடிக் கட்டடம் வாடகைக்குண்டு. அரச அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு உகந்தது.
076 575 5267

### VACANCY
"Demining NGO "SHARP" is looking for a dynamic & result oriented person for the post of Geographical Information Systems / Statistics Officer (GISO) to operate in Kilinochchi and Jaffna districts for immediate employment. Mail your CV to vithya.sharp2016@gmail. com or sumithrb@yahoo.com"

### வீடு, காணி விற்பனைக்கு உண்டு
யாழ் மாநகரசபை எல்லைக்குள் அரியாலை மத்தி பகுதியில் 03 பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. A-9 கண்டி வீதி, அரியாலை உதைபந்தாட்ட பயிற்சி மைதானத்திற்கு முன்பாக உள்ள வீதியின் 50m தொலைவில் ஆள்காட்டி வீதியில் அனைத்து வளங்களுடனும் அமைந்துள்ளது.
077 033 3910/ 077 778 2192
021 221 1195/ 021 221 1414

### கோழிக்குஞ்சு விநியோகம்
No-1 நெல்பாம் (Nel Farm) முட்டைக்கோழிக்குஞ்சு (வெள்ளை) 18.10.2016 விநியோகிக்கப்படும்.
சங்கரத்தை, வட்டுக்கோட்டை. தொடர்பு: ACCA Farm 077 3086721

### விஷேட பல் வைத்திய சேவை
- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

### வேலையாள்கள் தேவை
திருநெல்வேலியில் இயங்கும் கடை ஒன்றிற்கு பொதி கட்டுநரும், சிட்டை எழுதுநரும் தேவை.
தொடர்பு: 077 623 1295

### தேவை
வெள்ளவத்தைப் பகுதியில் வசிக்கும் குடும்பம் உன்றுக்கு முழுநேர வீட்டுப் பணிப்பெண் தேவையாகவுள்ளது. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். (வடமாகாணத்தைச் சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது)
H.P: 011 315 8839 M.P: 077 793 8477

STUDY + WORK IN
AUSTRALIA

SPOT ADMISSION
by RGIT Australia's Representative
Date: 23rd October 2016 Time: 10.00am to 3.00pm
Venue: Flex Institute - No. 4, IBC Road, Colombo 6.
TO BOOK YOUR TIME, CALL: 0777 761 346
BUSINESS STUDIES | INFORMATION TECHNOLOGY
HOSPITALITY MANAGEMENT (OPERATIONS / COOKERY / PATISSERIE) | HEALTH SCIENCE (EARLY CHILDHOOD EDUCATION & CARE)
Intakes: February, April, July, October 2017
RGIT australia | flex Institute | Hotline: 0777 761 346
PLEASE BRING YOUR EDUCATIONAL CERTIFICATES ALONG WITH YOU
STUDY & WORK IN
SINGAPORE
HOTEL MANAGEMENT
LEARN & EARN UP TO RS. 70,000/- A MONTH
UK, CANADA, USA, EUROPE
HOTLINE : 0777 761 346

# பல்கலை. மாணவர்கள் பிணையில் விடுவிப்பு

## அதிகாரிகளுக்கும் எச்சரிக்கை

கொழும்பு, ஒக்.16

பேராதனைப் பல்கலைக்கழகத்திலுள்ள சில மாணவர்களைத் தாக்கிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அந்தப் பல்கலைக் கழகத்தின் இணைச் சுகாதார மருத்துவ பீடத்தின் நான்காம் ஆண்டு மாணவர்கள் 12 பேரையும் தலா ஒரு இலட்ச ரூபா பெறுமதியான சரீரப் பிணைகளின் கீழ் விடுவிக்குமாறு கண்டி பிரதம நீதிவான் புத்திக்க சீ.ராகல உத்தரவிட்டார்.

அதே சமயம் பல்கலைக்கழக அதிகாரிகள் நீதிமன்றத்தின் செயற்பாடுகளில் தலையிட முடியாது எனவும், சந்தேக நபரொருவரை நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தும்போது அவரை நீதிமன்ற அடையாள அணி வகுப்பொன்றின்மூலம் அடையாளம் காணவேண்டியது நீதிமன்றத்தின் பொறுப்பேயன்றி அதிகாரிகளின் பொறுப்பல்ல எனவும் நீதிவான் கடுமையான எச்சரிக்கையை விடுத்தார்.

அன்றைய தினம் பேராதனைப் பல்கலைக்கழக இணைச் சுகாதார மருத்துவ பீடத்தின் பீடாதிபதி, சட்ட அதிகாரி, பிரதான ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டாளர் மற்றும் பிரதிக் கட்டுப்பாட்டாளர் ஆகியோர் நீதிமன்றத்தில் பிரசன்னமாகியிருந்தனர்.

பிணையில் விடுவிக்கப்பட்ட மாணவர்கள் அடுத்த வருடம் ஜனவரி மாதம் 22ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகவேண் டும் எனவும் நீதிவான் உத்தரவிட்டார். (த)


## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் தங்கநாயகம் நாகரத்தினம்

அன்னை மடியில்
28.11.1925

ஆண்டவன் அடியில்
20.10.2013

திதி: பிரதமை (16.10.2016)

விழிகள் மூன்றும் அலைகிறது
விலையில்லா தாயவள் உன் வதனம் தேடி!!!
நெஞ்சம் எங்கும் கனக்கிறது
நெருங்கிவிட முடியா உன் பயணம் எண்ணி
அம்மா என்றழைக்க இதயம் தவித்திருக்க
ஆறுதல் சொல்ல நீ இல்லையே தாயே
உன் மடி மீது தலைசாய்க்க எம் உள்ளம் துடித்திருக்க
உரு மறைந்து சென்றது தான் தகுமா அம்மா???
அலைகள் போல் உம் நினைவுகள் அலைமோத
அளவிட முடியா சோகம் எம் விழி மறைக்க
ஆண்டுச்சக்கரம் உருண்டோடிச் சென்று
ஆண்டுகள் மூன்று ஆனதம்மா எம்மை நீங்கி. நீங்கள் சென்று..
உங்கள் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பற்றிமா வீதி,
பண்டத்தரிப்பு.

குடும்பத்தினர்:
நா. தங்கராசா (N.T.R)
அருள்முருகன் ஹாட்வெயர் முருகன் கிரேசர்
N.T.R றான்ஸ்போர்ட்
077 731 4820, 077 731 0059

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அப்பாத்துரை பாலகிருஸ்ணன்

தோற்றம்
12.12.1942

மறைவு
28.09.2015

திதி: அபரபக்க பிரதமை
(புரட்டாதி 30) 16.10.2016

கடந்த வருடம் 28.09.2015 அன்று இறைபதம் அடைந்த எங்கள் குடும்ப ஒளி விளக்கு **அமரர் அப்பாத்துரை பாலகிருஸ்ணன்** அவர்களின் முதலாம் ஆண்டு சிரார்த்த தின நிகழ்வு இன்று (16.10.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.51, கோணாவில்,
கிளிநொச்சி.077 844 9866

குடும்பத்தினர்.

(J.5210) (13.18)

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு



### திருமதி பரமேஸ்வரி தர்மலிங்கம்
(நல்லூர்)

கடந்த (15.09.2016) வியாழக்கிழமை ஆஸ்திரேலியாவில் நல்லூர் முருகன் திருவடி அடைந்த எமது குடும்பத்தலைவி திருமதி பரமேஸ்வரி தர்மலிங்கம் அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (16.10.2016) ஞாயிற்றுக் கிழமை **"நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில்"** முற்பகல் 10 மணி 30 நிமிடம் முதல் பண்ணிசை பாராயணமும் நற்சிந்தனைப் பாடல்களும் இடம்பெறும்.

வழங்குபவர்: **அளவையூர் சங்கீத பூசணம் V.K. நடராஜா** அவர்கள் இந்நிகழ்வில் பங்குகொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.258, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

(J.5353) (13.18)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



### செல்வன் மகேந்திரன் கிருஷோபன்

(யா/சென் பற்றிக்ஸ் கல்லூரி ) தரம் - ll

அகம் மகிழ
07.02.2000

மனம் நெகிழ
02.09.2016

அள்ளி அரவணைத்து
ஆசையுடன் முத்தமிட்டு
அன்பாய் வளர்த்த அன்னையை
அரை நொடியில் மறந்தீரோ...
தோளில் உனை சுமந்து
தூக்கம் தனை மறந்து
பள்ளிப் பருவத்திலும்
பள்ளிவரை கொண்டு செல்லும் - தந்தையின்
பாசத்தை தான் மறந்தீரோ....
குட்டிச் சண்டை போட்டாலும்
தூக்கத்தில் அரவணைத்து
கட்டிலில் புரண்டு
கட்டியணைத்து தூங்கிடும்
அண்ணனைத் தான் மறந்தீரோ

இரட்டையராய் பிறந்து
இமைப்பொழுதும் பிரியாது
உணர்வாலே ஒன்றிணைந்து
பாச மொழி பேசி குதூகலித்திடும்
தங்கையைத் தான் மறந்தீரோ.....
எல்லோர்க்கும் இளையவனாய்
உறவுகளை அரவணைத்து
சொந்தங்களைத் தேடி
சின்னவனாய் நீ இருந்து
சிரித்த முகத்துடன் உலாவரும்
"சின்னத்தம்பி" நாம் உனை
எப்பிறப்பில் காண்போம் ஐயா....!
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

எமது அன்புச் செல்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (16.10.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணி யளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அந் நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம். மேலும் எமது அன்புச் செல்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வருகை தந்து அனுதாபங்களைத் தெரிவித்தோர்க்கும். தொலைபேசி யூடாகவும் மற்றும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் மூலமும் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பலவழிகளிலும் உதவிய அன்புள்ளங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின் றோம்.



குடும்பத்தினர்.
புதிய செம்மணி வீதி,
கல்வியங்காடு
077 181 4499

# மூத்தோருக்கான வட்டி வீதம் குறையும்

கொழும்பு, ஒக். 16

மூத்த குடிமக்களின் நிலையான வைப்புகளுக்கு இலங்கை வர்த்தக வங்கிகள் இதுவரை வழங்கி வந்த 15 சதவிகித வட்டி அடுத்த வருடம் முதல் நிறுத்தப் படக்கூடிய அறிகுறிகள் தென்படுவதாக வர்த்தக வங்கி வட்டாரங் கள் தெரிவித்துள்ளன.

2016ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தில் மூத்த பிரஜைகளின் நிலையான வைப்புகளுக்கு 15 வீதவட்டி வழங்கும் பிரேரணை முன்வைக்கப்பட் டது. இதில் 12 சத வீதத்தை வங்கிகளும் எஞ்சிய 3 சத வீதத்தைத் திறைசேரியும் பொறுப்பேற்றுக் கொண் டன.

எனினும், கடந்த சில மாதங் களாக வங்கிகளுக்குத் தனது பங்கான 3 வீதத்தை திறைசேரி செலுத்தாத தால் வங்கிகள் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத் துள்ளதாகவும், அதன் பிரதிபலிப்பாக 2017ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்டத்தில் தற்போதைய 15 வீதம் வட்டி குறைக்கப்படலாம் எனவும் அந்த வட்டாரங்கள் தெரி வித்துள்ளன. (த)

# ஆறரை லட்சம் பேர் வறட்சியால் பாதிப்பு

கொழும்பு, ஒக்.16

தற்போது நிலவிவரும் கடுமையான வறட்சியால் இது வரை நாட்டின் 20 மாவட்டங்களிலுள்ள ஒரு இலட்சத்து 76 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 6 இலட்சத்து 54 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் என்று இடர்முகாமைத்துவ நிலையம் தெரிவித்திருக்கிறது.

பொலன்னறுவை, அநுராதபுரம், திருகோணமலை, மட் டக்களப்பு, அம்பாறை, குருநாகல், புத்தளம், கிளி நொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, இரத்தினபுரி, கேகாலை, மொனராகலை, மாத்தளை, கண்டி, கம் பஹா, களுத்துறை, மாத்தறை, அம்பாந்தோட்டை, காலி ஆகிய இருபது மாவட்டங்களிலுள்ள மக்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், இவர்களுள் பொலன்னறுவை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களே பெரி தும் பாதிக்கப்பட்டிருக்கின் றனர் என்றும் அந்த நிலை யம் தெரிவித்தது. (த)

## ஆபாசப் படம் தயாரித்த இயக்குநருக்கு அபராதம்

ஆபாசப் படத் தயாரிப்பில் ஈடு பட்டிருந்த குற்றச்சாட்டில் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்த பட இயக்குநர், நடிகர், நடிகை மற்றும் உதவியாளர் ஆகிய நால்வரும் தங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து நேற்றுமுன்தினம் அவர்களுக்கு ஒத்திவைக் கப்பட்ட சிறைத் தண்டனையும் அபராதமும் விதித்து அத்தனகல பிரதான நீதிவான் தினேஷ் லக்மால் பெரேரா தீர்ப்பளித்திருக்கிறார்.

நால்வருக்கும் தலா ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனையை விதித்த நீதிவான், அந்தத் தண்டனை ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைத்ததுடன் ஒவ்வொரு வருக்கும் 15ஆயிரம்ரூபா வீதம் அபராதமும் விதித்தார்.

இயக்குநரான மனம்பேரிகே சுமித் குமார, நடிகரான பிரியந்த குமார, நடிகையான ஷர்மிளா ரத்னகுமாரி, உதவியாளரான திவங்க லக்ஸ்மன் ஆகிய நால்வருக்குமே தண்டனை விதிக்கப்பட்டது.

மீண்டும் ஒரு முறை இதே குற்றத்துக்காக அவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப் பட்டால் இப்போது ஒத்திவைக்கப் பட்டுள்ள சிறைத் தண்டனையுடன்மேலதிகசிறைத் தண்டனையும் விதிக்கப் படுமெனநீதிவான்அவர்களை எச்சரித்தார். (த)

## மரண அறிவித்தல்

தோற்றம்
29
.
05
.
1954



மறைவு
13
.
10
.
2016

### விசுவலிங்கம் விநாயகமூர்த்தி (மூர்த்தி அண்ணா)

(இந்து இளைஞர் சங்க உபதலைவர் - நீரு அரைக்கும் ஆலை உரிமையாளர்)

புளியங்கூடல் தெற்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாக வும் வசிப்பிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் விநாயகமூர்த்தி (மூர்த்தி அண்ணா) 13.10.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் - அன்ன முத்து தம்பதிகளின் பாசமிகு மகனும் செல்வக்குமாரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சண்முகம் - நாயகம் தம்பதிகளின் அன்பு மருமகனும் மருதடியான், கருணாகரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் நிருதரன், நிதர்சன் ஆகியோ ரின் பாசமிகு தந்தையும் சாரதா, வசந்தாதேவி, காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் பாலசிங்கம், சிவலிங்கராசா, நாகேஸ்வரி, செல்வரெத்தினம், இந்திரகுமார் ஆகியோரின் அன்பு மைத்துன ரும் பரமநாதன் அவர்களின் சகலனும் றஞ்சினிதேவி, சுசிலா தேவி, இந்திராதேவி, திலகநாயகி, விஜயகாந்தி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2016) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புளியங் கூடல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

புளியங்கூடல் தெற்கு,
ஊர்காவற்றுறை.


தகவல்:
குடும்பத்தினர்.

077 273 5428

## மரண அறிவித்தல்கள்

### தம்பு இறப்பியேல் பெனடிற்

(ஆங்கில ஆசிரியர்)



சோமசுந்தரம் வீதியைப் பிறப்பிட மாகவும், கோயில் வீதியை வசிப்பிட மாகவும் கொண்ட தம்பு இறப்பியேல் பெனடிற் நேற்று (15.10.2016) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு இறப்பியேல் - கனகமணி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான ஜேம்ஸ் செல்லையா - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், பிலோமினாவின் (வவி) பாசமிகு கணவ ரும்,ஜோய் நிறோஷன், ஆன் (UK ), ஜீன், எரிக் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மரியதிரேஸின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான மரியதாஸ், இம்மானுவல் (சூரிய ராசா) மற்றும் பொன்மலர், ஜெபம், டெலிக் (ஜேர்மனி) ஆகியோ ரின் மைத்துனரும், றெஜினோல்ட் (UK), அனிஸ், றாஜினி (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான றஞ்சன், றஜனி மற்றும் றஞ்சினி, நிலானி, நிஷானி, நிஷான், நிலோஜினி, றொக்ஷி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பிறிந்தினி, சிப்போறா, மேஷாக், பிறிசில்லா, அனுஜா, அனிஸ், ஜொய்ஸ், ஹவிஷன், வினோதன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்கத் திருப்பலி நாளை (17.10.2016) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்குப் புனித யுவானியார் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டு பூதவுடல் நல்லடக்கத்துக்காகப் புனித மரியன்னை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

13/1, கோயில்வீதி ஒழுங்கை,
சுண்டுக்குளி.

(J/5405)
(11,18)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

மண்ணில்
15
.
02
.
1961



விண்ணில்
14
.
10
.
2016

### தம்பிராசா பாலேந்திரன் (பாலுமாமா)

கொம்மந்தறையைப் பிறப்பிடமாகவும், உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா பாலேந்திரன் (பாலுமாமா) 14.10.2016 வெள்ளிக்கிழமை அகாலமரண மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசா மற்றும் செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - சிவஞானபதி தம்பதிகளின் பாசமிகு மருமகனும், ரேவதியின் அன்புக் கணவரும், இந்திராணி, ஞானேந்திரன், காலஞ்சென்ற தெய்வேந்திரன் மற்றும் தெய்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாலேஸ்வரன்,கணேஸ்வரி, ராஜகுலசிங்கம், மாலினி, வதனி, சாவித்திரி ஆகியோரின் மைத்துனரும், ரூபராணி, சிவராணி, காலஞ்சென்ற இன்பராணி, கேதீஸ்வரி, றஜிந்தா, றஜிந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும், வசிகரன்,சசிகரன் ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.10.2016)திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொம்மந்தறையிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரிக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொம்மந்தறை, உடுப்பிட்டி.

(N/58)
(11,18)

தகவல்:
குடும்பத்தினர்.



### சிவப்பிரகாசம் கருணாகரன் (ஓய்வுபெற்ற லிகிதர்)

வருஷப்புலம், சுன்னாகத்தைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவப் பிரகாசம் கருணாகரன் 11.10.2016 செவ் வாய்க்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவப் பிரகாசம் - சறோஜினிதேவி தம்பதியரின் செல்வப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - பூரணப் பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் நித்திய லட்சுமியின் அன்புக் கணவரும் சிவாஜினி, பிறே மாகரன், பகாகரன், சோகிகரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரவீந்திரன், முரளீதரன், யோகேந்திரன், காலஞ்சென்ற முருகசோதி ஆகியோரின் மைத் துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11.10.2016 செவ்வாய்க்கிழமை மாலை 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வருஷப்புலம்,
சுன்னாகம்.

(68232)(12.18)

தகவல்:
குடும்பத்தினர்.

071 286 8644

## தேவை

யாழ்.நகரில் ஆஸ்பத்திரி வீதியில் இயங்கிவரும் ஆர்.வி.ஜி மருந்தகத்துக்கு தராதரமுள்ள

1. முகாமையாளர்
2. மருந்தாளர் (Pharmacist Certificate உள்ளவர்கள்)

விண்ணப்பிக்கவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**ஆர்.வி.ஜி. மருந்தகம்**
**504, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

## தேவை

யாழ். நகர்மத்தியில் கே.கே.எஸ். வீதியில் அமைந்திருக்கும் அண்ணா மலையான் ஸ்ரீராகவேந்திரர் (ASR) கலாசார திருமண மண்ட பத்திற்கு முகாமையாளர் தேவை. வயதெல்லை 30 - 45 இற்கு இடைப்பட்டவராகவும் க.பொ.த உயர்தரத்தில் கணக்கியல் பாடத்தில் சித்தியடைந்தவராகவும் அனுபவம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும். சம்பளம் நேரில் பேசித்தீர்மானித்துக் கொள்ளலாம். உங்களது விண்ணப்பங்களை கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

முகவரி - வ.வ இராமசாமிப்பிள்ளை அன் சன்ஸ்
இல. 58, நல்லூர் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம் .

## பணியாளர்கள் தேவை

- ♣ பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் -03
- ♣ பாதுகாப்பு உத்தியோகத்தர் பொறுப்பதிகாரி - 01
- ♣ பார ஊர்தி ஓட்டுநர் -02
- ♣ கல் உடைக்கும் இயந்திர உதவியாளர்கள் -03

**தொடர்பு: 021 205 0999**

## அற்புதமான செய்தி

ஆண்,பெண் இருபாலாரும் அழகாகத் திகழ ஓர் அற்புதமான செய்தி!

**உடற்பருமன் கொண்டோருக்கு:**
உடல் எடை குறைத்தல், ஊளைச்சதை, மார்பு, கை,கால், வயிறு குறைத்தல், வயிற்றுக் கோளாறு நாட்பட்ட அஜீரணம், மலச்சிக்கல் நீக்கும் ஆயுள்வேத மருந்து
**விலை 3500, 9000, (27000/= 4 மாதத்துக்குரியது)**

**உடல் எடை குறைவானோருக்கு**
உடல் எடை கூட்டுதல், ஒட்டிய கன்னங்களைக் குண்டுக் கன்னங்களாக மாற்ற, பலவீனம், கணைச்சூடு, எதைச்சாப்பிட்டாலும் உடம்பு கூடுகிறது இல்லை என்கிறவர்கள் மார்பு கூட்டுதல் அனைத்திற்குமான ஆயுள்வேத மருந்து
**விலை - 3500, 5500, (24000/= 3 மாதத்திற்குரியது)**

**கருமைத் தோற்றம் உடையவர்களுக்கு**
கறுப்பு, நாட்பட்ட பருக்கள், உதட்டுக்கறுப்பு, கண்கருவளையம், கரும்புள்ளிகள் மாற்றும் கிறீம், குளிசை பெற்றுக்கொள்ளலாம். (கிறீம் 3500, 5500 குளிசை 12000/=)
காய்கள், ரோமம் அகற்றும் கிறீம் உண்டு.

**077 210 6155**
இல.221, நாவலர்றோட், (பிறவுண் றோட் சந்தி, அருள்கொமியூனிகேஷன் அருகில்), யாழ்.

## விற்பனைக்கு

முதிரை, தேக்கு, பாலை ஆகிய மரங்களினால் உற்பத்தி செய்யப்பட்ட பழைய கதவுகள், யன்னல்கள் நிலைகள் என்பன விற்பனைக்கு உள்ளன.

**இடம் : இலங்கை செஞ்சிலுவை சங்க யாழ் கிளை**
**முகவரி: இல - 67, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.**

17.10.2016(திங்கள்) தொடக்கம் - 21.10.2016 வெள்ளி வரை காலை 9.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை பொருள்களைப் பார்வையிட்டு மூடிய கேள்விப்பத்திரங்களை 21.10.2016 வரை சமர்ப்பிக்கலாம். (C 25793) (14,17,18)

**தொடர்புகளுக்கு:**
**கிளை நிறைவேற்று உத்தியோகத்தர்,**
**இலங்கை செஞ்சிலுவை சங்கம்.**
**021 222 2561**

## பதவி வெற்றிடங்கள்

**இலங்கையில் 20 வருடங்களுக்கு மேலாக இயங்கிவரும் Education நிறுவனத்தின் யாழ். கிளைக்கு கீழ்க்காணும் பதவி வெற்றிடங்கள் கோரப்படுகின்றன.**

Marketing Executive (School Leavers)
Senior Marketing Executive (within 1year Experience)

**Qualification**
* 30 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும்
* GCE (O/L, A/L)
* சிறந்த தொடர்பாடல் திறன் (தமிழ்/ஆங்கிலம்)

**Benefits**
- Basic Salary
  *Marketing Executive - 15,000/= +++
  *Senior Marketing Executive - 23,000/= +++
- Commision Payment
- Traveling Allowance
- Telephone Facilities
- Bike Allowance
- Incentives and over seas Trip
- Career Development (Managment Position within 6 months, After promotion salary package 42,500/=)

Contact : Branch Manager
Mr.G.Anthany
077 356 6835, 021 567 1130
www.pioneerhouselearning.com

Address:-
Pioneer house,
No.100,2nd Floor,
Manipay Road,Jaffna.

# மாணவிகளைவிட, மாணவர்களே அதிகம்

மட்டக்களப்பு, ஒக். 16
கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் மாண விகளை விடவும், மாணவன்களே எண்ணிக்கையில் அதிகமாக இருக்கின்றனர் என்று கல்வி அமைச்சின் 2015ஆம் ஆண்டு புள்ளிவிவரம் தெரிவிக்கின் றது. இதன்பிரகாரம் திருகோணமலை மாவட் டத்தில் 38,616 மாணவன்களும், 38,372 மாணவிகளும், அம்பாறை மாவட்டத்தில் 52,27 மாணவன்களும், 49,930 மாணவி களும் உள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 64,482 மாணவன்களும், 65,773 மாணவிகளும் உள்ளனர் என்று கண்டறியப்பட்டுள்ளது. இவற்றின் அடிப்படையில் கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் கீழ் உள்ள 3 நிர்வாக மாவட்டங்களில் 155, 225 மாணவர்கள் கற்கும் அதேநேரம் 154,75 மாணவிகளே கற்கின்றனர் எனவும் கண்டறியப்பட்டுள்ளது. இவற்றின் அடிப் படையில் கிழக்கு மாகாணத்தில் பெண்களை விடவும் 1,150 ஆண்கள் அதிகமான எண்ணிக்கையில் கற்கின்ற னர். (தி)

## பதவி வெற்றிடம்

கொழும்பிலுள்ள ஏற்றுமதி தொழிற்சாலைக்கு கீழ்க்குறிப்பிடப்படும் பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.

**முகாமையாளர் / உத்தியோகத்தர் - Exports ஏற்றுமதி ஆவணப்படுத்தல்**

அரச திணைக்களம் / வங்கி ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். வயது 40 உம் அதற்கு மேலும்.

உங்கள் தொடர்பான கல்வித் தராதரம், அனுபவ விவரங்களையும் உங்கள் பிரத்தி யேக விவரங்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய உறவினரல்லாத இருவரி னது விவரங்களையும் speedwk2@gmail.com என்னும் மின்னஞ்சலுக்கு அனுப்புங்கள்.

**072 733 2254**

## அட்டோர்னி தத்துவ அதிகாரத்தை இரத்துச் செய்தல்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரும் தற்போது சர்ரே, ஐக்கிய இராச்சியத்தில் வசிப்பவருமான புஷ்பமணி தம்பித்துரை ஆகிய நான் 16.04.2012 திகதியிடப்பட்ட ஹோன்ஸ்லோ, லண்டன், ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த சொலிசிற்றர் வை.விஜயபாலன் முன்னிலையில் என்னால் நிறைவேற்றப் பட்டு எனது அட்டோர்னி தத்துவக்காரராக 104/5 அத்தியடி குறுக்கு வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம் என்ற முகவரியைச் சேர்ந்த திரு.சுப்பிரமணியம் ஞானசேகரம் என்பவருக்கு வழங்கப்பட்ட அட்டோர்னி தத்துவத்தை மீளப்பெற்று இரத் துச் செய்கிறேன் என்பதையும் இதன்பின்னர் என் சார்பில் இவரால் மேற்கொள்ளப்படும் எந்த ஒரு நடவடிக்கைக்கும் நான் பொறுப்பாளி அல்ல என்பதையும் இத்தால் பொதுமக்க ளுக்கு அறியத் தருகின்றேன்.

- புஷ்பமணி தம்பித்துரை-

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நீர்வேலி புனித பரலோக அன்னை ஆலய பங்கைச் சேர்ந்த
**தயானந்தசீலன் டின்சிகன்**
**யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி**
மாணவன் 2016 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில்
**155 புள்ளிகளைப்**
பெற்று சித்தியடைந்ததையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**பாராட்டி வாழ்த்துவோர்:**
**பங்குத் தந்தையும் பங்கு மக்களும்.**
நீர்வேலி பரலோக மாதா ஆலயம்.
(C 25691) (14,17,18)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய**
மாணவி
**செல்வி ஜயபாலன் டபோதினி**
2016 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில்
**159 புள்ளிகளைப்**
பெற்று சித்தியடைந்ததையிட்டு அவரை மனதாரப் பாராட்டி வாழ்த்துவதோடு இன்று அவரது பத்தாவது பிறந்தநாளில் அவர் பல்கலையும் கற்றுப் பட்டங்கள் பல பெற்று மென்மேலும் சிறப்புற வாழ்த்துகிறோம்.

**பாராட்டி வாழ்த்துவோர்:**
அப்பா, அம்மா, சித்தப்பா, சித்தி,அத்தை, மாமா, மாமி பெரியப்பா, பெரியம்மா, அண்ணா, அக்கா, தம்பி, மச்சான், மச்சாள்.
சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி.

# இன்று மின் தடை

யாழ்ப்பாணம், ஒக்.16
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வடக்கு மாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்தார்.

யாழ். பிரதேசத்தில் தெல்லிப்பழை, மாதனை, வில்லூன்றி கேணியடி, நாவாந்துறை ஒருபகுதி, முத்தமிழ் வீதி, மீனாட்சி அம்மன் கோயிலடி, இளவாலை, வித்தகபுரம், பெரியவிளான், அளவெட்டியின் ஒருபகுதி, சேந்தாங் குளம், யாழ். சிறைச்சாலை, யாழ்.பொலிஸ் நிலையம், யாழ். துரையப்பா விளையாட் டரங்கு, யாழ்.பல் கலைக்கழக கலைப்பீடம், குஞ்சர்கடை யிலிருந்து மந் திகை வரைக்கும், மந்திகை ஆதார வைத்தி யசாலை, கரவெட்டி இலங்கைத் தொலைத் தொடர்பு கோபுரம், நெல்லியடி கார்கில்ஸ் பூட்சிற்றி, சுப்பர்மடம் ஐஸ் தொழிற்சாலை, நெல்லியடி இலங்கை வங்கி, நெல் லியடி றூபின்ஸ் (பிறைவேற் லிமிட்டெட்) வைத்தியசாலை ஆகிய இடங் களிலும்– மன் னார் பிரதேசத் தில் உமணகிரி, வன்னிச்சியங் குளம், நறு விலிக்குளம் ஆகிய பிர தேசங்களி லும் மின் விநி யோகம் தடைப் படும். (த-ரி)


# பத்தாவது அகவை

**இணை மருத்துவ விஞ்ஞான மாணவர் ஒன்றியம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணைமருத்துவ விஞ்ஞான பிரிவுக்கு

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற மூதுரைக்கமைய ஆரோக்கியமான வாழ்க்கையின் தொடர்ச்சிக்கு பங்களிக்கும் முக்கிய கற்கைகளில் மருத்துவத்துறை முக்கியமானது. நவீன விஞ்ஞானத்தின் துரித வளர்ச்சி மருத்துவத் துறையை மேலும் விரிவு செய்துள்ளதோடு துறை சார்ந்த நிபுணத்துவமிக்க புதிய கற்கைகளினதும் தொழில்வாண்மையினதும் தோற்றத்துக்கும் வழிவகை செய்துள்ளது. அவ்வாறான கற்கை நெறிகளின் வகைப்பாடே இணை மருத்துவ விஞ்ஞானமாகும்.

இணை மருத்துவ விஞ்ஞானக் கற்கைநெறிகள் தற்போது மருத்துவ சேவையில் துணைபுரிகின்ற பல்வேறு விடயங்களில் வியாபித்துள்ளன. இலங்கையின் மருத்துவ சேவைகளும் மருத்துவத்துறையும் மட்டுப்படுத்தப்பட்ட வசதிகளுடன் இருந்தாலும் தென்னாசிய நாடுகளுடன் ஒப்பிடும்போது இவை சிறப்பானவையாகவே இருக்கின்றன. ஆனால்இலங்கையின் இணைமருத்துவ விஞ்ஞானத்துறையில் அண்மைக் காலமாகவே வளர்ச்சி ஏற்பட்டு வருகின்றது. இணை மருத்துவ விஞ்ஞானக் கற்கைகளாக மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானம், தாதியியல், மருந்தகவியல், இயன் மருத்துவம், கதிரியக்கவியல், தொழில்வழிச் சிகிச்சை ஆகிய கற்கை நெறிகள் குறிப்பிடத்தக்கவைகளாகும்.



இலங்கையில் டிப்ளோமா கற்கை நெறிகளை தாதியியல் பயிற்சிப் பாடசாலைகள், மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞான பயிற்சிக் கலாசாலை, தேசிய சுகாதார சேவைகள் நிறுவனம் என்பவற்றினூடாக வழங்கப்பட்டு வருகின்ற இந்தக் கற்கைநெறிகள் கடந்த 2006ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கையில் பல்கலைக்கழகப் பட்டப்படிப்புகளாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், பேராதனைப் பல்கலைக் கழகம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் போன்றவற்றில் ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக செயற்படுத்தப் பட்டு வருகின்றன. யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில் இந்தப் பிரிவு 2006ஆம் ஆண்டு ஆவணி மாதம் ஏழாம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. தற்போது 264 மாணவர்களுடன் இயங்கி வருகின்றது.

இதுவரை 56 மாணவர்கள் தங்களது பட்டப்படிப்பை முழுமை செய்துள்ளனர். இவர்களில் பலர் அரச வைத்தியசாலைகளிலும், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல்வேறு மருத்துவத்துறை சார்ந்த நிறுவனங்களிலும் பணிபுரிகின்றனர். அத்துடன் மேற் படிப்புக்களை முழுமை செய்து பல்கலைக்கழக விரிவுரையாளர்களாகவும் பணியாற்றுகின்றனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இணை மருத்துவ விஞ்ஞான பிரிவானது தனது பத்தாவது ஆண்டு முழுமையை இந்த வருடம் (2016) வெகு விமரிசையாக கொண்டாடத் தீர்மானித்துள்ளது. அதன்படி நிகழ்வுகளும், மாணவர் கற்றல் மேம்பாட்டுப் பயிற்சிப் பட்டறைகளும் ஏற்பாடு செய்யப்பட் டுள்ளன. இந்த நிகழ்வுகள் கடந்த 3ஆம் திகதி ஆரம்பமாயின. இதன் முதலாவது அங்கமாக 3, 4 ஆம் திகதிகளில் தாதியியல் மற்றும் மருந்தாக்கவியல் மாணவர்களும், 10ஆம் திகதி மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞான மாணவர்களுக்கும் கல்விசார் பயிற்சிப்பட்டறைகள் நடைபெற்றன. அடுத்ததாக முல்லைத்தீவு, விசுவமடு பிரதேச மக்களின் மருத்துவ நலன்

(16 ஆம் பக்கம் பார்க்க...)






## பத்தாவது அகவையில்

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி..)

கருதி இணை மருத்துவ விஞ்ஞான மாணவர்கள் நிறை வாழ்வு மையத்துடன் இணைந்து நேற்று சனிக்கிழமை இலவச மருத்துவமுகாமொன் றையும் ஏற்பாடு செய்தனர்.

அடுத்த நிகழ்வாக யாழ்ப்பாணப் பல் கலைக்கழக அனைத்துப் பாடங்களுக்கு மிடை யிலான துடுப்பாட்ட போட்டித்தொடரொன்று 18ஆம் திகதி வரை இணை மருத்துவ விஞ்ஞான மாணவர் ஒன்றியத்தினால் யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் ஒழுங்கு செய் யப்பட்டுள்ளது.

சம்பிரதாயபூர்வ தொடக்க நிகழ்வுகளாக நாளை இணை மருத்துவ விஞ்ஞான பிரிவு வளாகத்தில் பலூன் பறக்க விடுதல், மரநடுகை ஆகிய நிகழ்வுகளும் இடம் பெறும். யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலிருந்து உடற்பயிற்சியை ஊக்கு விக்கும் முகமாக அண்ணளவாக 250 இணை மருத்துவ விஞ்ஞான மாணவர்கள் 30 கி.மீ மிதிவண்டிப்பயணத்தை மே ற்கொள்ளவுள்ளனர்.

இவர்கள் இறுதி நிகழ்வாக சுகாதார மேம் படுத்தல் நிகழ்ச்சியை மாலை 5 மணிக்கு யாழ். பண்ணை கடற்கரையில் நடத்தவுள்ள னர்.

இதில் வீதி நாடகம் மற்றும் சுகாதாரம் சார்ந்த உரையாடல்களும் பொது மக்க ளுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

பத்தாவது ஆண்டுநிறைவை முன்னிட்டு 10 இடங்களில் குருதிக் கொடை நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.






LG Life's Good

# LG K8 LTE edge

Design tells you everything



மாதாந்தம் ரூ.1,250/-

20 மாதங்களுக்கு வட்டியின்றிய தவணைமுறை கொடுப்பனவு

Nations TrustBank

Abans

துரித எண்: 011-5999000 Like us on / LG mobile - Abans

அபான்ஸ் காட்சியறைகள் மற்றும் அங்கீகாரம் கொண்ட முகவர்களிடம் பெற்றுக்கொள்ள முடியும்.

LG Life's Good

# 6 இலவச சர்விஸ்களுடன் 2 வருட உத்தரவாதம்



## அபான்ஸிடமிருந்து மட்டுமே கிடைக்கும் LG வளிச்சீராக்கிகள்

உங்கள் வீடுகளில் நீண்ட காலம் சுத்தமான காற்றை அனுபவிப்பதற்கு அபான்ஸ் இப்பொழுது உங்களுக்கு நிகரற்ற வாய்ப்பை தருகிறது. தூசு துகள்களைச் கட்டுப்படுத்தி காற்றினால் பரவும் நுண்ணுயிர்களை தடுத்து காற்று மாசடைவதால் ஏற்படும் தீங்குகளிலிருந்து உங்கள் குடும்பத்தை காப்பாற்றும் விசேட அம்சங்களைக் கொண்ட LG வளிச்சீராக்கிகளை 2 வருட உத்தரவாதத்துடனும் 6 சர்விஸ்களுடனும் பெற்றுக் கொள்ளுங்கள். LGயின் புரட்சிகரமான inverter compressor காரணமாக 60 சதவீதம் வரை மின்னை சேமிக்கிறது.

- அபான்ஸிடமிருந்து மட்டுமே கிடைக்கும் செப்பு மின் செறிவன அமைப்பு
- அபான்ஸின் வாடகை கொள்வனவிற்கு 15 மாதங்கள் வரை வட்டி தள்ளுபடி
- inverter compressorக்கு 10 வருட உத்தரவாதம்
- அரிப்பு எதிர்ப்பு சக்தி
- இலவச பொருத்துதல்



Split Type

| கொள்ளளவு | 9000btu | 12000btu | 18000btu | 24000btu |
|---|---|---|---|---|
| வழமையான விலை | ரூ.89,900 | ரூ.96,900 | ரூ.117,900 | ரூ.126,900 |
| விசேட விலை | ரூ.81,900 | ரூ.84,900 | ரூ.99,900 | ரூ.114,900 |
| ஊக்குவிப்பு | 9 மாதங்கள் வட்டி இல்லை | 12 மாதங்கள் வட்டி இல்லை | 15 மாதங்கள் வட்டி இல்லை | 15 மாதங்கள் வட்டி இல்லை |

Inverter Split Type

| கொள்ளளவு | 9000btu | 12000btu | 18000btu | 24000btu |
|---|---|---|---|---|
| வழமையான விலை | ரூ.109,900 | ரூ.124,900 | ரூ.204,900 | ரூ.214,900 |
| விசேட விலை | ரூ.99,900 | ரூ.107,900 | ரூ.186,900 | ரூ.204,900 |
| ஊக்குவிப்பு | 18 மாதங்கள் வட்டி இல்லை | 18 மாதங்கள் வட்டி இல்லை | 18 மாதங்கள் வட்டி இல்லை | 18 மாதங்கள் வட்டி இல்லை |

Mosquito Away

| கொள்ளளவு | 12000btu | 18000btu | 24000btu |
|---|---|---|---|
| வழமையான விலை | ரூ.127,900 | ரூ.210,500 | ரூ.220,900 |
| விசேட விலை | ரூ.119,900 | ரூ.192,900 | ரூ.210,900 |
| ஊக்குவிப்பு | 15 மாதங்கள் வட்டி இல்லை | 15 மாதங்கள் வட்டி இல்லை | 15 மாதங்கள் வட்டி இல்லை |

மட்டுப்படுத்தப்பட்ட வாய்ப்பு

1 இலவசம்

2 இலவசம்

3 இலவசம்

20 மாதங்களுக்கு வட்டியின்றிய தவணைமுறை கொடுப்பனவு

Nations TrustBank

Abans

us at www.facebook.com/abans

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# வடக்கு - கிழக்கு - மலையக ஒற்றுமையின் அவசியம்

மலையகத்தில் உள்ள தோட்டத் தொழிலாளர்கள் சம்பள உயர்வு கேட்டு நடத்திவரும் தொடர் போராட்டத்திற்கு வடக்கு கிழக்கிலும் ஆதரவுக் குரல்கள் எழுந்துள்ளமை வரவேற்புக்குரியது; பொருத்தமானது.

மலையகத் தொழிலாளர்களில் பெரும்பாலானவர்கள் தமிழர்களாகவே இருக்கின்ற நிலையில், அவர்களின் உரிமைக்காக வடக்கு கிழக்கிலிருந்தும் குரல் எழுப்பப்பட்டிருப்பது முன்னேற்றகரமான அரசியலை நோக்கி தமிழ் அரசியல் பயணப்பட ஆரம்பித்திருப்பதன் அறிகுறி.

நீண்ட காலமாகவே வடக்கு-கிழக்குத் தமிழர்களுக்கும் மலையகத் தமிழர்களுக்கும் இடையிலான அரசியல் உறவுகள் சரியாகப் பேணப்படவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கியபோது, மலையகத் தமிழர்களின் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ்ஸும் அதில் இணைந்தது. இலங்கையில் உள்ள ஒட்டுமொத்த தமிழர்களினதும் ஒற்றுமைக்கான அடித்தளம் ஒன்று அப்போது இடப்பட்டது. ஆனால், அந்த ஒற்றுமை நீடிக்கவில்லை. தொழிலாளர் காங்கிரஸ் கூட்டணியில் இருந்து விலகிக்கொண்டது.

வடக்கு - கிழக்குத் தமிழர்களின் விருப்பங்களும் வேணவாக்களும் வேறு, தோட்டத் தொழிலாளர்களின் தேவைகளும் உரிமைகளும் வேறு என்ற ஒரு வாதம் அதன் பின்னர் முன்வைக்கப்பட்டது. வடக்கு-கிழக்கு அரசியல் தலைமைகள் கொழும்பு அரசுகளை எதிர்த்துக் கொண்டு நின்றபோது, மலையக அரசியல் தலைமைகள், அதே அரசுகளுடன் சேர்ந்து நின்றன. எனவே தம்மை நியாயப்படுத்த இந்த வாதம் இரு தரப்புத் தலை மைகளுக்கும் தேவையாக இருந்தது.

எப்படியிருந்தாலும், மலையகத் தமிழர்கள் சிங்களவர்களின் மத்தியிலேயே வாழவேண்டியவர்கள், எனவே அவர்கள் வடக்கு-கிழக்குத் தமிழர்களுடன் ஒன்றிணைந்து செயற்பட முடியாது என்ற தடைக் கல்லும் போடப்பட்டது. ஆனால் அது பொய்.

இலங்கையில் கொழும்பு அரசினால் வஞ்சிக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, அரச பயங்கரவாத்தினால் கொடூரமாகச் சிதைக்கப்பட்டவர்களுள் வடக்கு-கிழக்குத் தமிழர்கள், மலையகத் தமிழர்கள் என்ற வேறுபாடுகள் இருக்கவில்லை. அனைவருமே சிறுபான்மைத் தமிழர்கள் என்ற ரீதியிலேயே அரசின் இத்தனை கொடுமைகளையும் அனுபவித்தார்கள்; அனுபவிக்கிறார்கள்.

போர் நடைபெற்ற இடங்களுக்குள் நேரடியாக வாழவில்லை என்பதைத் தவிர, மலையகத் தமிழர்களும் இலங்கையில் தமிழர்களின் விடுதலைக்காக சொல்லொணாத் துயரத்தைச் சுமந்தவர்களே!

அது தவிர, 10 லட்சம் மலையகத் தமிழர்களை நாடற்றவர்களாக்கி இங்கிருந்து இந்தியாவிற்குத் துரத்திவிட்ட கொடுமையில் பங்கெடுத்த (தற்போதைய தமிழ்க் காங்கிரஸ் தலைவர் கஜேந்திர குமார் பொன்னம்பலத்தின் பாட்டன் ஜி.ஜி.பொன்னம்பலம், மலையகத் தமிழர்களை விரட்டியடிக்க சிங்களத் தலைமைகள் முடிவு செய்தபோது அதனை எதிர்க்காது ஆதரித்தார்) பாவத்தையும் வரலாற்று ரீதியாக வடக்குத் தமிழர்கள் சுமக்கிறார்கள் என்பதையும் மறந்துவிட முடியாது. எனவே அதற்குப் பரிகாரம் தேட வேண்டிய அவசியமும் வடக்குத் தமிழர்களுக்கு உண்டு.

அதற்கான ஒரே வழி வடக்கு-கிழக்கு-மலையகத் தமிழர்களின் ஒற்றுமையே!

புதிய அரசமைப்பின் மூலம் இலங்கையில் இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு ஏற்பட்டால் அதாவது, வடக்கு-கிழக்கில் தமிழர்களுக்கு சுயாட்சி வழங்கப்பட்டால், மலையகப் பகுதிகளில் உள்ள தமிழர்களுக்கும் சுயாட்சிக்கான உரிமை - நிலத்தொடர்பற்ற தாயகத்தின் அடிப்படையில் - வழங்கப்படுவது அவசியம். இந்த அரசியல் உரிமையை வென்றெடுக்க வடக்கு-கிழக்கு-மலையகத் தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டும். அதற்கான அடித்தளம் இப்போது இடப்பட்டிருக்கிறது. அரசியல் தலைமைகள் இதை வளர்த்துச் செல்லவேண்டும்.



என்ன விலை கொடுத்தாவது, எத்தனை மக்களை அழித்தாவது சிரிய அரசைக் காப்பாற்றிட வேண்டும் என்பதில் ரஷ்யா உறுதியாக இருக்கின்றது. இதனால் மக்கள் அழிவு அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

எம்.ஐ.முபாறக்

அரபு நாடுகள் பலவற்றிலும் தொடங்கப்பட்ட அரபு வசந்தம் என்ற போர், குறுகிய காலத்துக்குள் முடிவுக்கு வந்துள்ள போதிலும், சிரியாவின் போர் மாத்திரம் தான் 5 வருடங்களைத் தாண்டியும் தொடர்கின்றது.

அங்கு இதுவரை 5 லட்சம் மக்கள் உயிரிழந்துள்ளனர். ஒரு கோடி 10 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் ஊனமுற்றுள்ளனர். பொருள் சேதங்கள் மற்றும் காயங்களுக்கு உள்ளானோர் எண்ணிக்கை கணக்கில் எடுக்கப்பட முடியாதவை. அந்நாட்டின் பொருளாதாரம் 30 வருடங்கள் பின் தங்கியுள்ளது.

சிரியாவின் அரசைக் கவிழ்ப்பதற்கான போரில், இத்தனை வருடங்களாக அரசையும் கவிழ்க்க முடியவில்லை;அரசை எதிர்த்துப் போராடும் ஆயுதக் குழுக்களையும் ஒழித்துக் கட்ட முடியவில்லை. இரண்டு அணிகளும் சமபலமாக நின்று மோதி வருகின்றன. இதனால் சேதங்கள் அதிகரித்ததுதான் மிச்சம்.

### பலம் பொருந்திய நாடுகள் பல இரு அணிகளாகிக் களத்தில்

இந்தப் போரில் பலம்பொருந்திய நாடுகள் எல்லாம் இரண்டு அணிகளாகப் பிரிந்து நின்று செயற்படுகின்றன. ரஷ்யா மற்றும் ஈரான் போன்ற நாடுகள் சிரிய ஜனாதிபதிக்கு ஆதரவாக அவருடன் கைகோர்த்துப் போராடி வருகின்றன. மறுபுறம், அமெரிக்கா தலைமையில் சவூதி, துருக்கி போன்ற நாடுகள் சிரிய ஜனாதிபதிக்கு எதிராகச் செயற்பட்டு வருகின்றன. சிரிய ஜனாதிபதிக்கு எதிராகக் களத்தில் நின்று போராடி வரும் ஆயுதக் குழுக்கள் பலவற்றுக்கு, அமெரிக்காவும் அதன் தலைமையிலான நாடுகளும், ஆயுத உதவி உள்ளிட்ட பலவகையான உதவிகளையும் செய்து வருகின்றன. அசாத்தைப் பதவி கவிழ்ப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றன.

அதேவேளை, சிரியாவின் பல பகுதிகளைக் கைப்பற்றி, ஐ.எஸ். பயங்கரவாத இயக்கமும் தொடர்ந்து போராடி வருகின்றது. இந்த அமைப்புக்கு அமெரிக்கா மறைமுகமான உதவிகளை வழங்கிக் கொண்டு, இதற்கு எதிராக வெளிப்படையாகப் போராடி வருகின்றது.

ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக ஈராக்கில் சண்டையிட்டு வரும் குர்திஸ் பேஷ்மக் ஆயுதக் குழுவுக்கும் சிரியாவில் சண்டையிட்டு வரும் குர்திஸ் ஆயுதக் குழுவுக்கும், அமெரிக்கா, ஆயுதங்கள் உள்ளிட்ட உதவிகளை வழங்கி, ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு எதிரான போரை நடத்தி வருகின்றது. இவ்வாறு சிரியப் போர் பல முனைத் தாக்குதல்களுடன் சென்று கொண்டிருக்கின்றது. மறுபுறம், இந்தப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் முயற்சிகள் இடம்பெறுகின்றன. பல தடவைகள் சமாதானப் பேச்சுக்கள் இடம்பெற்றபோதிலும் - போர் நிறுத்தங்கள் ஏற்படுத்தப்பட்ட போதிலும், இதுவரை எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை. போர் முடிவின்றித் தொடர்கின்றது.

### சிரியப் போர் தொடர ரஷ்யாவே காரணம்

இந்தப் போர் இவ்வாறு முடிவின்றித் தொடர்வதற்கும் மக்கள் தரப்பில் அதிக உயிரிழப்புகள் ஏற்படுவதற்கும் ரஷ்யாதான் பிரதான காரணமாகும். சிரிய ஜனாதிபதி பர் அல் அஸாத்தின் கோரிக்கையை ஏற்று, அவருக்கு ஆதரவாக-அவரது ஆட்சியைக் காப்பாற்றுவதற்காக, கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் சிரியாவுக்குள் நுழைந்த ரஷ்யா, அங்கு போரின் போக்கையே மாற்றி அமைந்துவிட்டது. போரை முடிவுக்குக் கொண்டு வர முடியாத ஒரு நிலைமையைத் தோற்றுவித்துள்ளது.


அசாத்துக்கு எதிராக அமெரிக்கா களமிறங்கியுள்ளதால், எந்த வகையிலும் அசாத்தைத் தோல்வியடையவிடக்கூடாது என்பதில் ரஷ்யா உறுதியாக இருக்கின்றது. ஆசாத்தின் தோல்வியானது ரஷ்யாவின் தோல்வியாகவும், ரஷ்யாவுக்கு எதிரான அமெரிக்காவின் வெற்றியாகவுமே அமையும். இதனால்தான் என்ன விலை கொடுத்தாவது, எத்தனை மக்களை அழித்தாவது சிரிய அரசைக் காப்பாற்றிட வேண்டும் என்பதில் ரஷ்யா உறுதியாக இருக்கின்றது. இதனால் மக்கள் அழிவு அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

சிரிய அரசுக்கு எதிராகப் போராடும் ஆயுதக் குழுக்களை அழித்தல் என்ற பெயரில் அப்பாவி மக்கள் தினமும் கொல்லப்படுகின்றனர். ரஷ்யாவின் தொடர்ச்சியான-கண்மூடித்தனமான விமானத் தாக்குதல்கள் மக்களின் நிலைகளைக் குறி வைத்தே நடத்தப்படுகின்றன.

இப்போது ரஷ்யாவின் கொலைக் களமாக மாறி இருப்பது சிரியாவின் அலெப்போ மாகாணம் தான். சிரிய அரசுக்கு எதிரான அதிகமான ஆயுதக் குழுக்கள் அங்கு நிலைகொண்டிருப்பதால், ரஷ்யாவின் விமானங்கள் அந்த மாகாணத்தைப் பதம் பார்த்து வருகின்றன. இதனால் அப்பாவி மக்களின் உரிழப்புகள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன.

இந்த நிலைமை ரஷ்யாவுக்கு எதிராக மேற்கு நாடுகள் குரல் எழுப்பும் நிலையை ஏற்படுத்தியுள்ளது. பிரான்ஸூம் பிரிட்டனும் ரஷ்யாவைப் போர்க் குற்றவாளியாக அறிவித்துள்ளன. ரஷ்யா சர்வதேச போர்க் குற்ற நீதிமன்றில் நிறுத்தப்பட வேண்டும் என பிரான்ஸ் ஜனாதிபதி ஹொலண்ட் அறிவித்துள்ளதுடன், பிரிட்டனின் வெளியிறவுச் செயலாளர் பொரிஸ் ஜோன்ஸன் அதை ஆமோதித்துள்ளார். அத்தோடு, ரஷ்யாவின் இந்த அட்டூழியத்துக்கு எதிராக லண்டனில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதனால் பிரான்ஸ் மற்றும் ரஷ்யாவின் இராஜதந்திர உறவு பாதிப்பை எதிர்நோக்கியுள்ளது. இந்தமாத இறுதியில், பிரான்ஸுக்கு உத்தியோகபூர்வப் பயணம் ஒன்றை மேற்கொள்ளவிருந்த ரஷ்ய ஜனாதிபதி விளாமீர் புட்டின், அதை ரத்துச் செய்து பிரான்ஸுக்கு ரஷ்யாவின் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளார். இப்போது இரு நாடுகளுக்கும் இடையில் இராஜதந்திரப் போர்



# ரஷ்யாவுக்கு எதிராகப் போர்க் குற்றச்சாட்டு;

# அமெரிக்காவின் காய் நகர்த்தும் தந்திரம்

ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. அந்தப் போரில் பிரிட்டனும் பிரான்ஸுக்கு ஆதரவாகக் களமிறங்கியுள்ளது. இதனால், சிரியப் போர் இப்போது சர்வதேச அரங்கில் மேலும் பலமாகப் பேசப்படும் ஒன்றாக மாறியுள்ளது.

பிரான்ஸின் இந்த நடவடிக்கையை மேலோட்டமாகப் பார்க்கும்போது, அது சிரியாவில் ஏற்பட்டுள்ள அவலத்துக்கு எதிரானதாகவும், மனிதக் கொலைகளுக்கு எதிரானதாகவும் தெரியலாம். ஆனால், உண்மை அதுவல்ல. சிரியப் போரில் ரஷ்யா பின்வாங்க வேண்டும், அமெரிக்கா வெற்றி பெற வேண்டும் என்ற அமெரிக்காவின் காய் நகர்த்தலின் விளைவே பிரான்ஸின் இந்த ரஷ்ய எதிர்ப்பு நடவடிக்கையாகும்.

ரஷ்யா, கடந்த ஆண்டின் செப்ரெம்பர் மாதம் சிரியாவின் போர்க்களத்துக்குள் நுழைந்தபோது, துருக்கியின் ஊடாக ரஷ்யாவை, அமெரிக்கா எதிர்த்தது. ரஷ்யாவின் போர் விமானம் ஒன்றைக்கூட துருக்கிய விமானப்படை சுட்டு வீழ்த்தியது.

இதனால் இரு நாடுகளுக்கும் இடையில் பெரும் இராஜதந்திரப் போரே இடம்பெற்றது.

துருக்கி மீது இறக்குமதித் தடையையும் ரஷ்யா விதித்தது. இதனைத் தொடர்ந்து இப்போது பிரான்ஸ் மற்றும் பிரிட்டனை வைத்து ரஷ்யாவுக்கு நெருக்கு தலைக் கொடுக்கத் தொடங்கியுள்ளது அமெரிக்கா.

**சிரிய விவகாரத்தில் ரஷ்யாவும், அமெரிக்காவும் கண்ணாமூஞ்சி விளையாட்டு**

சிரியா விவகாரத்தில் ஒரு சில விடயங்கள் தொடர்பில், அமெரிக்காவும், ரஷ்யாவும் இணைந்து செயற்படுவதையும் அவதானிக்க முடிகின்றது. இந்த வருடம் பெப்ரவரி மாதமும், கடந்த மாதமும் சிரியாவில் இந்த இரண்டு நாடுகளும் இணங்கியே போர் நிறுத்தத்தைக் கொண்டு வந்தன.

அந்த இரண்டு தடவைகளும் போர் நிறுத்த முயற்சிகள் தோல்வியில்தான் முடிந்தன. கடந்த மாதம் கொண்டுவரப் பட்ட போர் நிறுத்தம் ஒரு வாரத்திலேயே முறிவடைந்தது. இந்த முறிவுக்கு ரஷ்யாவே காரணம் என்று அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அதனைத் தொடர்ந்து தான் அலெப்போ மாகாணம் மீதான தாக்குதல்கள் தீவிரமடைந்துள்ளன.

ரஷ்யாவும்– அமெரிக்காவும் பரஸ்பரம் ஒன்றின் மீது, குற்றஞ்சாட்டிய நிலையில் சிரியாவை அழித்துக்கொண்டிருக்கின்றன என்பதுதான் யதார்த்தம்.



இருந்தாலும், சிரியாவில் இடம்பெற்றுவரும் மனிதப் பேரவலத்துக்கு– படுகொலைகளுக்கு ரஷ்யாவும் ரஷ்யாவுடன் இணைந்துள்ள ஏனைய தரப்புகளும் மாத்திரம் காரணம் அல்ல. அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும்கூடக் காரணமாக இருக்கின்றன.

ரஷ்யாவும் – அமெரிக்காவும் பரஸ்பரம் ஒன்றின் மீது, மற்றொன்று குற்றஞ்சாட்டிய நிலையில் இரண்டும் சேர்ந்தே சிரியாவை அழித்துக்கொண்டிருக்கின்றன என்பதுதான் யதார்த்தம்.

## விளாவெளி இந்து மயானம் எந்தப் பிரதேச சபையின் கீழ் வருகிறது

வலி.மேற்குப் பிரதேசசபையின் நீண்டகால ஆளுகைக்குட்பட்ட நிலாவெளி இந்து மயானம், இன்று வலி.தென்மேற்குப் பிரதேசசபையால் மெதுமெதுவாக நில அபகரிப்புக்கு உட்படுத்தப்பட்டுவிட்டுள்ளது. வலி.மேற்குப் பிரதேச சபையின் பொதுமக்கள் குடியிருப்புக்கள், வீதிகள், விளையாட்டு ்மைதானங்கள், மயானங்கள் என எல்லாவற்றையும் வலி.தென்மேற்குப் பிரதேசசபை, தனது ஆளுகைக்குள் கொண்டுவரும் விதத்தில் வலி.மேற்கின் எல்லைக்குள் ஊடுருவி, தனது வரைபடத்தை விஸ்தரித்துள்ளது. இது விடயமாக வலி.மேற்குப் பிரதேச சபையின் செயலாளரிடம் கேட்டபோது இந்த விடயம் சம்பந்தமாக முழுமையான விளக்கத்தை தம்மால் தர முடியாததற்கு வருத்தம் தெரிவித்துள்ளார்.

மேற்படி விடயம் தொடர்பாக பல வருடங்களாக எமது சபை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் கவனத்துக்குக் கொண்டுவந்து, தொண்டை நீர்வற்ற உரத்துப்பேசி விமர்சித்தும் பொதுமக்களின் விருப்பத்துக்கு மாறாக அதிகாரிகள் சிலர் விரும்பத்தகாத செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இது குறித்து இந்தப் பகுதிப் பொதுமக்கள் கவலை அடைந்துள்ளனர். அதிகாரம் வாய்த்த எவராயினும், பொதுமக்களின் விருப்பத்துக்கு மாறாக நடப்பது விரும்பத்தக்கது அல்ல. இது விடயமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எம் போன்ற பொது அமைப்புக்களை அழைத்து, இந்த விடயத்தில் உண்மைத் தன்மையை வெளிப்படுத்த வேண்டும் என வலி.மேற்குப் பிரதேசசபை மக்கள் சார்பாக வேண்டி நிற்கிறோம்.

கு.குணஸ்ரீ
தலைவர். சங்கானை பட்டினசபை அபிவிருத்திச்சபை.

## விபத்துக்களைத் தடுப்பதற்குப் பாதையை மூடுவதுதான் சரியான வழியா?

யாழ். குடாநாட்டில் விபத்துக்கள் அதிகரித்து வருவது சகலரும் அறிந்ததொரு விடயம்தான். யாழ். நகரப் பகுதியில் வாகனப் போக்குவரத்து அதிகரித்தமையும், பாதைகள் ஒடுக்கமானவையாக இருப்பதும் விபத்துக்களின் அதிகரிப்புக்கு முக்கிய காரணம் என்பது ஏற்றுக்கொள்ளப்படத்தக்கவையே. இருப்பினும், அண்மைக்காலமாக புல்லுக்குளத்துக்கு அண்மையாகவும் யாழ். நூல் நிலையத்துக்குப் பின்புறமாகவும் உள்ள வீதி மூடப்பட்டுள்ளது. இதனால் பாதசாரிகள், இருசில்லு வாகனங்கள் உட்பட அனைத்துமே வைத்தியசாலை வீதியாலேயே நகரத்துக்குள் உட்புகவும், வெளியேறவும் வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த வீதியிலேயே பெருமளவில் மொத்த விற்பனை நிலையங்களுக்கான பொருள்களை ஏற்றி இறக்கும் பாரவூர்திகள் நிறுத்தப்பட்டு, பொருள்கள் ஏற்றி இறக்கப்படுகின்றன.

ஆகவே வைத்தியசாலை வீதியைத் தவிர்த்து, புல்லுக்குளத்துக்கு அருகாக மேற்குறிப்பிடப்பட்ட வீதி ஒருவழி மார்க்கத்துக்கோ அல்லது இருசக்கர வாகனப் பாவனைக்கோ மட்டும் திறந்து விடப்படுமானால், வைத்தியசாலை வீதி, பேருந்து தரிப்பிட இடங்களின் வாகன நெரிசலைக் குறைக்கமுடியும் என்பது எமது கருத்து. இதனை உரியவர்கள் கவனத்தில் எடுத்து, செயற்படுவார்களானால், பெருமளவு விபத்துக்களையும் அசௌகரியமும் குறைக்க இயலும் என்பது எமது நம்பிக்கை.

அ.ந.தயாபரன். யாழ்ப்பாணம்.

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

## உலக உணர்வழியியல் தினம் ஒக்ரோபர் 16

# உணர்வழியியல் மருத்துவம் ஒரு பார்வை

■ மருத்துவர் வசுமதி தேவநேசன்

உணர்வழியியல் என்ற மருத்துவ அலகின் ஆங்கிலப்பதம் Anaenthesia (British English) அல்லது Anaen thesiolosy (A merican English) ஆகும். உணர்வழியியல் என்பது உணர்வை இழத்தல் அல்லது அழித்தல் ஆகும். அதாவது சத்திர சிகிச்சையின் போது வலி. வேதனை போன்ற இதர உணர்வுகளைப் போக்கி தேவையேற்படின் நினைவை தற்காலிகமாக இழக்கச் செய்து நோயாளியைப் பராமரித்தலாகும். இந்த வகையான உணர்வழித்தல் பொது மக்களின் மத்தியில் அறிமுகப்படுத்தப்பட்ட நாளே உலக உணர்வழியியல் நாளாக அனுஷ்டிக்கப்படுகிறது. (World Anesthesia day 1846 William Morton)

இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட இந்த உணர்வழியியல் துறையானது இன்று பலவழிகளிலும் முன்னேற்றமடைந்த பல சவால்மிக்க சத்திரசிகிச்சைகளை மிகவும் பாதகாப்பாக செய்யக் கூடியதாக வளர்ச்சி அடைந்துள் ளது.

உணர்வழியியலை பலவழிகளிலே மேற்கொள்ள முடியும். முக்கியமாக இது மூன்று பிரதான வழிகளில் வழங்கப்படுகின்றது.

01.Local Anaesthesia (பகுதி பிரிவு மயக்கமருந்து)
02.Regional Anaes thesia (பிராந்திய மயக்க மருந்து)
03.General Anaes thesia (பொது மயக்கமருந்து)

Local Anaesthesia கொடுத்து சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படும் பகுதி மட்டும் உணர்வழிக்கப்படும் அதாவது குறிப்பிட்ட பகுதிக்கு மட்டும் மயக்க மருந்தைப் பூசு



வதன் மூலமோ விசிறுவதன் மூலமோ அல்லது ஊசியினூடாக உட்செலுத்துவதன் மூலமோ விறைக்கவைத்து வலியின்றி சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. உதாரணமாக பல்பிடுங்கும் போது இந்த முறையே பலவேளைகளில் பின்பற்றப்படுகிறது. விரல்களின் தோல்களில் சிறுகாயங்கள் ஏற்படும்போது இந்த முறை இலகுவாக வலியகற்ற உபயோகிக்கப்படுகிறது.

இரண்டாவதாக Regional Anaesthesia என்பது உடலின் ஒரு பாகத்தை விறைக்க வைத்தல் ஆகும். இது பெரிய நரம்புகளுக்கோ அல்லது முள்ளந்தண்டுக்கு அண்மையாக மயக்கமருந்தை ஏற்றுவதன் மூலமாகவோ உணர்வழிக்கப்படுகிறது உதாரணமாக Spinal Anaesthesia என்னும் regianal Anaesthesa இன்று பெரும்பாலும் பல சத்திரசிகிச்சைகளுக்குக் கொடுக்கப்படுகிறது உதாரணமாக Caesarian Sectian எனப்படும் மகப்பேற்று சத்திரசிகிச்சையில் இதன் முறையே பெரும்பாலும் உபயோகிக்கப்படுகிறது இந்த முறையில் உடலின் வயிற்றுப் பாகமும் கால்களும் விறைத்த நிலையில் சத்திரசிகிச்சையை நோயின்றி மேற்கொள்ளும் போது நோயாளி உணர்வுடன் எம்முடன் உரையாடிக் கொண்டிருக்க முடியும். தன்குழந்தையையும் உடனடியாக பார்வையிடக் கூடியதாக இருக்கும்.

மூன்றாவதாக பொதுமயக்க மருந்து உணர்வழியியல் அல்லது General anaesthesiaஎனப்படுவது நோயாளியை ஒரு தற்காலிக தூக்கம் போன்ற நிலைக்கு உட்படுத்தி வலியின்றி சத்திரசிகிச்சையை மேற் கொள்வதாகும். இது நாளத்தினூடாக மருந்தை ஏற்றுவதன் மூலமாகவோ அல்லது மூச்சின் ஊடாக உள்ளி முப்பதன் மூலமாகவோ ஆரம்பிக்கப்படுகிறது.

பொதுமயக்க மருந்தின் போது உணர்வழிக்க வும் வலியகற்றவும் மருந்துகள் ஏற்றப்படும். சிலவேளைகளில் சில சத்திரசிகிச்சைகளை இலகுவாக்கும் பொருட்டு (Muscle Relaxants) தசையிழக்கிகளும் பாவிக்கப்படும். இதன் போது நோயாளிக்கு செயற்கைச் சுவாசம் அளிக்கப்படும். நோயாளியின் வாயினூடாகவோ மூக்கின் ஊடாகவோ ஒரு குழாய் போன்ற உபகரணம் (Endotrachel tube அல்லது Loryngeal Mark Arway) செலுத்தப்பட்டு அதனூடாக ஒட்சி சனும் இதர வாயுக்களும் அனுப் பப்படும். மேலும் சத்திரசிகிச்சையின் வகை (Type) நேரம் (Duratian) பொறுத்து மேலதிக மருந்துகள் நாளத்தினூடாகவோ சுவாசத்தினூடாகவோ தொடர்ந்து வழங்கப்பட்டுக் கொண்டிருக்கும். மேற்கூறிய பலவகைப்பட்ட உணர்வழியியலை மேற்கொள்ளும் மருத்துவரை நாம் Anaesthetist / Anaesthesiologist என அழைப்போம். இவர்களின் தரம் பலவழிகளில் வகைப்படுத்தப்படும். எந்த ஒரு மருத்துவரும் அவரது உள்ளகப்பயிற்சி (tnternship) முடிந்ததும் Anaesthetist ஆகவரமுடியும். அதற்கு அவர் Consultant Anaesthetist இடம் ஆறுமாதகால பயிற்சியைப் பெறவேண்டும். அதன்பின்பு அவரது அனுபவம் திறமை என்பவற்றைப் பொறுத்து மயக்கமருந்தை Consultant Anaestethist இன் வழிகாட்டலில் வழங்க முடியும் Consultant Anaesthetist ஆகவருவதற்கு மேலதிக பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அதற்கான போட்டிப்பரீட்சை மருத்துவப்பட்டப் பின் படிப்புக்கான மருத்துவ நிறுவனத்தினால் (Post Graduate of Institute of Medicen(PGIM) Colombo) நடத்தப்படுகிறது. இதில் தேர்வடைபவர் மேலதிக பயிற்சிகளை கொழும்பிலும் மேலும் பல்வேறு பொதுவைத்தியசாலைகளிலும் மேற்கொள்ள முடியும். மூன்று வருடகால பயிற்சி முடிந்ததும் மீண்டும் ஒரு பரீட்சையில் சித்தியடைந்து வெளிநாட்டு வேலை அனுபவத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இப்படியாக பயிற்சி பெற்ற மருத்துவ நிபுணரினதும் மருத்துவர்களதும் பிரதான நோக்கமாக இருப்பது நோயாளியின் பாதுகாப்பே ஆகும் (Patient Safety)

அதனால் எந்த ஒரு உணர்வழியியலும் மேற்கொள்ள முன்பும் (Pre op) உணர்வழியியலின் போது Intre op உணர்வழியியலின் பின்பும் (post op உணர்வழியியல் மருத்துவரின் கவனிப்பின் கீழ் நோயாளி இருப்பார். சத்திரசிகிச்சை ஆரம்பிக்க முன் அவர் உங்களை சத்திரசிகிச்சைக்குத் தகுதியானவர் தானா என பரிசோதிப்பார். இது அவசர மற்ற சத்திரசிகிச்சையாக இருக்கும்போது நீங்கள் உணர்வழியியல் Anaesthesio Clinicக்குப் போகும் படி அறிவுறுத்தப்படுவீர்கள் அங்குள்ள மருத்துவர் உங்கள் உடல்நிலையைப் பரிசோதித்துமேலதிக இரத்தசோதனைகளையோ இதர சோதனைகளையோ ECA, CXR, ECHO EX)செய்யும்படி அறிவுறுத்துவார். உங்களின் நீரிழிவுநோய் (Diabetics) உயர்குருதி அழுத்தம் (Blood Prcssure) இருதய வருத்தங்கள் கட்டுப்பாட்டில் இல்லாதவிடத்து அவ்விசேட வைத்தியரின் ஆலோசனையைப் பெறும்படி அறிவுறுத்தப்படுவீர்கள். உணர்வழியியல் நாளன்று கடைப்பிடிக்க வேண்டிய உணவுதவிர்ப்பு (Fasting) பற்றி உங்களுக்கு அறிவுறுத்தப்படும். சாதாரணமாக திண்ம உணவுகளுக்கு ஆறு மணித்தியாலங்களும், திரவ உணவுகளுக்கு இரண்டு மணித்தியாலங்களும் கட்டுப்பாடு இருக்கும் ஆனால் பாலோ சோடாவோ இந்த திரவ உணவுகளுக் குள் அடங்க மாட்டாது.

தற்செயலாக இந்த உணவுக்கட்டுப்பாடு மீறப்பட்டிருப்பின் உணவுக்கால்வாயினுள் தேங்கியிருக்கும் உணவு உணர்வழியியலின் போது சுவாசக்குழாயினுள் சென்று மூச்சுத்திணறல் ஏற்படும் பேராபத்து உள்ளது . இதைத் தவிர்ப்பதற்கு நீங்கள் உணவுக் கட்டுப்பாடு பற்றிய அறிவுறுத்தல்களை கவனமாகப் பின்பற்ற வேண்டும்.

இவ்வாறு ஒவ்வொருபடியிலும் பாதுகாப்பை அதிகரித்து கண்ணும் கருத்துமாய் கவனித்து உணர்வழியியலை மேற்கொள்ளும் போது உணர்வழியியல் ஆனது இன்று மிகவும் பாதுகாப்பான ஒன்றாகவே வளர்ச்சியடைந்துள் ளது. இதன் வளர்ச்சிக்கு மருத்துவர்களின் அர்ப்பணிப்பு மிக்க பயிற்சிகளும். ஆழமான அறிவாற்றலும் அயராத உழைப்பும் காரணமாக அமைகின்றன. இதனால் இன்றைய காலகட்டத்தில் உணர்வழியியல் அபரிதமான வளர்ச்சியால் பல சவால்மிக்க சத்திரசிகிச்சைகளை மிகப்பாதுப்பாக ஓர் இனிய அனுபவமாக செய்யக்கூடியதாக மாற்றியுள்ளது.




## சர்வதேச நீரிழிவு தினத்தை முன்னிட்டு

அகில இலங்கை
பாடசாலை
மாணவர்களுக்கு
இடையிலான

# சித்திர மற்றும் கவிதைப் போட்டி 2016

கீழே தரப்பட்டுள்ள விளக்க முறைகளுக்கேற்ப போட்டி சம்பந்தமான சகல ஆக்கப் பிரதிகளும் சமர்ப்பிக்கப்படவேண்டும். ஆக்கப்பிரதிகளை முழுமைப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் நீரிழிவு சிகிச்சை நிலையம், யாழ். போதனா வைத்தியசாலை எனும் முகவரிக்கு 04.11.2016 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கவும். பிந்தி வரும் ஆக்கப் பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது

**தலைப்பு**
நீரிழிவை வெற்றி கொள்வோம்

**பிரிவுகள்**
கனிஷ்ட பிரிவு - தரம் 01 தொடக்கழ் 5 வரை
இடைநிலைப்பிரிவு - தரம் 6 தொடக்கம் 10 வரை
சிரேஷ்ட பிரிவு - தரம் 11 தொடக்கம் க.பொ.த உயர்தரம் வரை

**பரிசில்கள்**
முதல் 3 இடங்களைப்பெறும் ஆக்கங்களுக்கு பரிசில் மற்றும் சான்றிதழ் வழங்கப்படும்.

### சித்திரப் போட்டி

**01. வயதுப் பிரிவு வகைகள்**
கனிஷ்ட பிரிவு, இடைநிலைப் பிரிவு மற்றும் சிரேஷ்ட பிரிவு

**02.சிறப்பு விவரம்**
தாளின் அளவு ஏ3 சித்திரத்தாள்
ஊடகம் ஏதாவது (சார்க்கோல், க்ரயோன்ஸ், நீர், எண்ணெய் வர்ணம் அல்லது வேறு)
சித்திரமானது எந்தவொரு வகையான திருட்டு மற்ற சுயமான படைப்பாக இருத்தல் அவசியம்.

**03.அனுப்பும் முறை**
சித்திரமானது முழுமைப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் பதிவுத் தபால் மூலமாக அல்லது நேரடியாக மேற் குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

### கவிதைப் போட்டி

**01. வயதுப்பிரிவு வகைகள்**
இடைநிலைப் பிரிவு மற்றும் சிரேஷ்ட பிரிவு

**02. சொற்களின் வரம்பு**
இடைநிலைப்பிரிவு ஆகக்குறைந்தது 100 சொற்கள்

சிரேஷ்ட பிரிவு ஆகக்குறைந்தது 100 சொற்கள்

**03. மொழி தமிழ்**
கவிதையானது எந்தவொரு வகையான திருட்டு மற்ற சுயமான படைப்பாக இருத்தல் அவசி யம்


**04.அனுப்பும் முறை**
கவிதையானது தெளிவான கையெழுத்தில் எழுதப்பட்டு அல்லது தட்டச்சு செய்யப்பட்டு முழுமைப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படி வத்துடன் பதிவுத்தபால்மூலமாக அல்லது நேரடியாகமேலே குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

சூரியகாந்தி
உதயன்
16.10.2016



# தாகம் தீர்க்கும் தமிழர் பண்பாடு

ஜெ.காயா



சிதறுண்ட கற்கள் நிறைந்த மேடு பள்ளமாயுள்ள வீதியில்அங்குமிங்குமாகச் சரிந்து நிமிர்ந்து ஊர்ந்து செல்கின்றது நான் செல்லும் பஸ் வண்டி. அனுங்கிக் குலுங்கிச் சென்றுகொண்டிருக்கும் அதிலுள்ள பயணிகள் அதற்குப் பழக்கப்பட்டுவிட்டவர்கள் போலும். எனக்கு மாத்திரம், தள்ளாடித் தள்ளாடி நகரும் இந்த பஸ் வண்டிப் பயணம் அடித்துப் போட்டது போன்ற உணர்வைத் தருகின்றது. எப்போதடா இந்த பஸ்ஸை விட்டு இறங்கப் போகிறேன் என்ற ஏக்கத்துடன், அது சென்று கொண்டிருக்கும் பாதையில் சந்திக்கப்போகும் முகவரி தெரியாத நண்பனின் வீட்டை அவன் கூறிய குறிப்பறிந்து நடத்துனருக்கு ''அம்மன் கோயிலடி இறக்கம்" என்றும் சொல்லிவிட்டேன்; நான் கூறியதைக் கவனித்திருக்காத நடத்துனர், இருக்கையை விட்டு நான் எழும்புவதைக் கண்டு நான் இறங்கப் போகின்றேன் என்பதை உணர்ந்தவராய், "தண்ணிப் பானை வீட்டடி இறக்கம்..." என்றிழுத்தார்.

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



அப்போதுதான் எனக்குப் புரிந்தது நான் இறங்க வேண்டிய அம்மன் கோவிலடியை விடுத்து அதற்கு அங்காலும் வந்து விட்டேன் என்று. நடத்துனரின் உத்தரவுக்கு அமைவாகத் தண்ணிப் பானை வீட்டுக்கு முன்னே பஸ் நிறுத்தப்பட்டது. ஒருவாறு அதிலிருந்து இறங்கி விட்டேன்.

அட என்ன ஆச்சரியம்! நடத்துனர் கூறியதுபோல எனக்கு நேராகத் தண்ணிப் பானை பானை ஒன்றுள்ளதே. பஸ்ஸிலிருந்து இறங்கியதும் மிகுந்த களைப்பு. இப்போது வந்த வழியே திரும்பி அம்மன்கோயிலடி நோக்கி வேறு நடக்கவேண்டும். நா வறண்டு தாகந் தீர்க்கத் தவிக்கின்றது. அதுகூட அந்த பஸ் ஏற்படுத்தியிருந்த சங்கடத்தால், பஸ்ஸை விட்டு இறங்கும் வரை தெரிந்திருக்கவில்லை. எனக்கு முன்னேயிருக்கின்ற இந்தத் மண்பானைக்குள் முதலில் தண்ணியிருக்கின்றதா? என்று பார்க்கவேண்டும். அந்தத் தண்ணிப் பானையை நெருங்கி அந்தத் தண்ணியை அள்ளிக் குடிப்பதற்கென அங்கே தொங்க விடப்பட்டிருந்த கோப்பையை எடுத்து மூடியிருந்த அந்த மண் பானைக்குள் பக்குவ மாகக் கையை விட்டு நீர் இருப்பதை உணர்ந்து கொண்டு, அதனை அள்ளிப் பருகினேன்.


## இயற்கை நீரமுதம்

அட...டா. என்ன ஒரு குளிர்மை. இயற்கை நீரின் கலப்படமற்ற சுவையல்லவா இது. இந்த மண்பானைக்குள்ளிருக்கின்ற சில்லென்றிருக்கும் நீரமுதத்தைச் சுவைக்கத் தெரியாமல் குளிர்சாதனப் பெட்டிகளை நாடி உடலைப் பாழாக்கும் மனிதர்களுக்கு இந்தச் சாதாரண விடயத்தில் ஏன் ஈடுபாடில்லாமல் போய்விட்டது. அது சரி இன்றைய தலைமுறையிருக்கு மண்பானைகூட அதிசயப் பொருளாகத்தானே தெரிகின்றது. மண்பானையிலிருந்த நீர் சுவையும் குளிர்மையுமாக இருந்ததால் வயிறு நிறைய அருந்தி விட்டேன். மனதுக்குள்இந்தத்தண்ணிப்பானையை வைத்தவருக்கு நன்றியைக் கூறிக்கொண்டு, இனி நண்பனைத் தேடவேண்டும். சற்றே தண்ணிப் பானையை அணைத்துள்ள நிழலின் கீழே இளைப்பாறுவோம் என்று ஒதுங்கினேன். அவ்வேளை அந்த வீட்டுக்குள்ளிருந்து கிட்டத்தட்ட 60வயது மதிக்கத்தக்க பெண்மணி ஒருவர் வாளி ஒன்று நிறையத் தூய்மையான நீரைக் கொண்டுவந்து வெளியே இருந்த அந்த மண்பானைக்குள் நிரப்பினார். ஓ...இவர் தானா இந்தத் தாகம் தீர்க்கும் புண்ணியவான்! பயனை எதிர்பார்க்காமல் நல்ல காரியம் செய்யும் இவருடன் சற்றே உரையாடலாம் என முற்பட்டேன்.

## தாகம் தீர்ப்பதில் மகிழ்ச்சி

"ஒவ்வொரு நாளும் இதில தண்ணி வைக்கிறனிங்களாம்மா?" என்றேன். "ஓமப்பன். நான் சின்ன வயசாயிருக்கும் போதே எங்கட ஐயா, ஆச்சி வைக்கிறவ. அவைக்குப் பிறகு இப்ப நான் ஒவ்வொரு நாளும் தண்ணி வைச்சுக் கொண்டு வாறன்" என்றவரிடம் "அவை ஏன் வைக்கத் தொடங்கினவ" என்றேன். "முன்னம் எங்கட வீட்டுக்கு மதில் இல்லை. வேலிதான் அடைச்சிருந்தனாங்கள். முன்னுக்குக் கிணறு இருக்குது. பள்ளிக்கூடப் பிள்ளைகள் பள்ளிக்கூடம் விட்டுப் போகேக்க தண்ணித் தாகத்தில முன்னுக்கு இருக்கிற கிணத்தைக் கண்டு தண்ணி அள்ளிக் குடிப்பினம். சின்னப் பிள்ளைகள் கிணத்துக்குள்ள தவறிக்கிவறி விழுந்திட்டாலும் எண்டு பள்ளிக்கூடம் விடுற நேரம் பார்த்துத் தண்ணியைக் கிள்ளி வெளியாலை வைக்கத் தொடங்கினம். தாகத்தில அந்தரப்பட்டு வந்து அந்தப் பிள்ளைகள் தண்ணி குடிச்சிற்றுப் போறதைப் பார்க்க ஒரு திருப்தி இருக்கும். தொடர்ந்தும் வைக்கத் தொடங்கினம். அதோட றோட்டு வீடேன்டுறதால வெயில் காலத்தில இதால போற, வாற ஆள்கள் எல்லாரும் இதிலயே தாகம் தீர்த்துப் போகத் தொடங்கிச்சினம். இண்டைக்கு வைக்கிற தண்ணி சில நேரங்களில கொஞ்சம் மிஞ்சியிருக்கும். ஆனால் தொடக்கத்தில தண்ணி வைக்கும்போது மிஞ்சியிருக்காது சனங்கள் தண்ணிக்கு அந்தரப்படுகுதுகள் என்டுறத உணர்ந்து கொண்டு தொடர்ந்தும் வைச்சுக்கெண்டு வாறன்" என்றார்.

> அதோட இந்த றோட்டும் சரியில்ல வாகனங்கள் ஏதாச்சும் போகேக்க கல்லுகள், கட்டைகள் சிதறி மண் பானையில பட்டால், பானை உடைஞ்சு போயிடும். ஒவ்வொரு நாளும் பார்த்துச் சிலவேளை பானையையும் மாத்த வேணும். என்னதான் பானை உடைஞ்சாலும் வேற பிளாஸ்ரிக் இசத்துகளுக்க நான் தண்ணி வைக்கிறதில்ல. இயற்கை யோட எப்பயும் சேர்ந்திருந்தாத்தான் வருத்தம், துன்பம் வராது என்றதால உடனயே புது மண்பானைய வாங்கித் தண்ணி நிரப்பி வைச்சிடுவன்.




## மண்பானையின் மகத்துவம்

"ஒவ்வொரு நாளும் தண்ணிய மாத்துவீங்களா?" என்றேன். "ஓமோம். ஒவ்வொரு நாளும். தண்ணி மிஞ்சியிருந்தாலும் அதை ஊத்திப் போட்டுப் புதுத் தண்ணி விட்டு வைப்பன். அதோட பானையையும் ஒவ்வேரு நாளும் கழுவ வேணும் இல்லாட்டிப் பாசி புடிச்சிடும். அதால ஒவ்வொரு நாளும் தண்ணிய மாத்திப் பானையையும் சுத்தம் செய்து வைப்பன். அதோட இந்த றோட்டும் சரியில்ல. வாகனங்கள் ஏதாச்சும் போகேக்க கல்லுகள், கட்டைகள் சிதறி மண்பானையில பட்டால், பானை உடைஞ்சு போயிரும். ஒவ்வொரு நாளும் பார்த்துச் சில வேளை பானையையும் மாத்த வேணும். என்னதான் பானை உடைஞ்சாலும் வேற பிளாஸ்ரிக் இசத்துகளுக்க நான் தண்ணி வைக்கிறதில்ல. இயற்கையோட எப்பயும் சேர்ந்திருந்தாத்தான் வருத்தம், துன்பம் வரரது என்றதால உடனயே புது மண்பானைய வாங்கித் தண்ணி நிரப்பி வைச்சிருவன். ஐயா! ஆச்சிக்குப் பிறகு நான் ஒரு பத்துப் பதினஞ்சு வருசமா வைச்சுக்கொண்டு வாறன். இடையில இந்தப் பிரச்சினையால ரெண்டு வருசத்துக்குக் கிட்ட இங்க இல்லாததால தண்ணி வைக்காம விட்டிருந்தன். பிறகு வந்ததும் வைக்கத் தொடங்கீற்றன். தண்ணிக்கு தவிச்சுவாறவைக்குத் தண்ணி குடுக்கிறதால கோடி புண்ணியம் கிடைக்கும். அதோட என்னால முடிஞ்சத நான் செய்யிறன். ஒரு நல்ல காரியத்தச் செய்யிறன் என்ற திருப்தியும் கிடைக்குது" என்றார்.

## தொடரும் தலைமுறை

"ராணி அக்கா" என்றழைக்கப்படும் நல்ல பண்பும், மனித அன்பும் நிறைந்த அந்த அம்மையாரிடம் எனது நண்பனின் வீட்டையும் விசாரித்து அறிந்து கொண்டு அவரிடமிருந்து விடைபெற்றேன். யாழ்ப்பாணத்தின் தென்மராட்சிப் பகுதித் தமிழர் பிரதேசங்களில் நிறைந்துள்ள தாகம் தீர்க்கும் இந்தப் பண்பாட்டை ராணி அக்கா போன்றுள்ள அனேக தமிழர்கள் செய்து வருகின்றனர். "கிட்டத்தட்ட 60 வருசங்களாக, எனக்கு நினைவு தெரிஞ்ச நாளில இருந்து இந்தத் தண்ணிப்பானைய வைச்சுக்கொண்டு வாறம். மூண்டு, நாலு சந்ததியா இதைச் செய்து வாறம். றோட்டால சைக்கிளில போறவையும் நடந்து போறவையும் பள்ளிக்கூடப் பிள்ளைகளும் அந்தரப்பட்டுக் குடிக்குங்கள்" என்கிறார் வீட்டு வாசலில நிற்கிற வேப்பமரத்துக்கு முன்னால் சிறு குடிலமைத்து, தான் வைத்துள்ள தண்ணிப் பானையைக் காட்டியவாறே நாகலிங்கம். அவர் வெயில் காலத்தில மட்டுமில்லாமல் மழைகாலத்திலயும் இரவு நேரத்திலயும் குறைந்தளவாவது தண்ணி வைத்து வருகிறார். இவர்கள் போன்றுதான் கிட்டத்தட்ட 10 வருடங்களாகத் திலகவதி அக்காவும் வழிப்போக்கர்க்ளுக்குத் தண்ணீர்த் தாகம் தீர்த்து வருகிறார். இவர்கள் மட்டுமன்றி இன்னும் ஏராளம் ஏராளமான பழந்தமிழர்கள் பலரும் அவர்களது வாரிசுகளும் என யாழ்ப்பாணத் தமிழர்களுக்கேயுரிய தாராளமனப் பண்பாட்டுடன் தொடர்கின்றது தவித்து வருவோரை நாடித் தாகம் தீர்க்கும் தமிழர் பண்பாடு.

# விடுதலைப் பெண்கள் தமிழர் உரித்து



தவபாரதி

கடந்த மூன்று தசாப்த காலமாகத் தமிழ் மக்களுக்குரிய உரிமைகளை வேண்டிப் போராடிய விடுதலைப் புலிகள், தமக்குள் ஆண், பெண் என்ற பாகுபாடு இன்றி தமிழர் என்ற ஒருமித்த உணர்வோடு அடக்குமுறைகளுக்கெதிராகப் போரிட்டு வந்தனர். தமிழ் மக்களுக்கெதிரான பேரினவாதச் செயற்பாடுகள் ஆண் மகனை மட்டுமன்றி அடக்கத்திலும் ஒழுக்கத்திலும் இல்லத்தை அணிசெய்யும் ஒவ்வொரு தமிழ்ப் பெண்களையும் போராட்ட உணர்வுக்குள் தள்ளியது. 1976களில் கருக்கொண்ட விடுதலைப் புலிகள் இயக்கம் ஆரம்பத்தில் ஆண் போராளிகளை மட்டுமே கொண்டிருந்தது. பின்னர் இணையத் தொடங்கிய பெண் போராளிகளையும் சேர்த்துக் கொண்டு ஒருமித்துப் போராட்டத்தில் ஈடுபட்டது. 1984களில் இருந்து பெண்கள் ஆயுதம் ஏந்திப் போராடிப் போர்க்களங்களில் வெற்றிவாகை சூடத் தொடங்கினர். சிறுதொகையாக இருந்தாலும் ஆட்கணக்கில் பெருந்தொகையைக் கொண்டுள்ள அரசபடைகளால் நெருங்கமுடியாத அளவுக்கு உணர்வு மிகுதி கொண்டு போராடி போர்க்களங்களை வென்றெடுத்தனர். பெண் போராளிகளின் போர் வலிமை காரணமாக இதுவரை போர்க்களங்களில் அவர்கள் ஆண் தளபதிகளால் வழி நடத்தப்பட்ட நிலைமாறித் தமக்குத் தாமே தளபதிகளாகவும் போராளிகளாகவும் உருப்பெற்றுத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தனியிடம் பிடித்தனர்.

தமிழர் தாயகத்தை அமைதிப்படை என்ற பெயரில் ஆக்கிரமித்திருந்த இந்திய இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான போரில் 1987ஒக்ரோபர் பத்தாம் திகதி அன்று நள்ளிரவு ஒரு மணியளவில் கோப்பாய்ப் பகுதியில் முதல் முதலில் பெண்போராளி ஒருவர் கொல்லப்பட்டார். மன்னார் மாவட்டைத்தைச் சேர்ந்த சகாயசீலி பேதுருப்பிள்ளை எனும் இயற்பெயர் கொண்ட மாலதியே விடுதலைப்போரில் கொல்லப்பட்ட முதற் பெண் போராளியாவார். அவரது வழிகாட்டலைப் பின்பற்றிய ஏனைய பெண்போராளிகளுடன் பல சமர்களை வெற்றி கண்டிருந்தது விடுதலைப்புலிகள் இயக்கம். தொடர்ந்தும் பெண்களின் முயற்சியும் இனப்பற்றும் அவர்களைப் போரளிகள் என்ற இராணுவ நிலையுடன் மட்டும் கட்டுப்படுத்தாமல் தொழில்நுட்பப் பிரிவு, பொறியியல் பிரிவு, மருத்துவப் பிரிவு, கடற்புலிப் பிரிவு, அரசியல் பிரிவு, நிர்வாகக் கட்டமைப்பு எனப் பரந்து விரிந்ததாய் கடப்பாடுகள் நிறைந்த விடுதலைப் புலிகள் அமைப்பில் நிலை கொள்ளச் செய்தது.

பெண் விடுதலைப் போராளிகளைப் பொறுத்தவரையில் தன்னுடைய இனத்தைக் காக்கும் சக்தியாகப் அவள் விளங்கினாள். அவளின் சக்திக்குக் கட்டுப்பட்டு பின்னால் செல்ல அவளது சமூகம் தயாராகவிருந்தது அன்று. தனது இனத்தைப் பாதுகாக்கத் தன்னைப் பலி கொடுத்தமை ஒரு உயர்ந்த தியாகமாகும். காட்டு விலங்குகளின் குணம் கொண்ட எதிரிகளிடமிருந்தும் தனது இனத்தைக் காக்க தானே தலைமை தாங்கி வழி நடத்தி எதிரிகளை நிலைகுலையச் செய்திருந்தாள்.

தமிழரது வாழ்வில் அடிமைத்தனம் என்பது பல ஆண்டுகளாக நீடித்துள்ளது. அந்நியப் படையெடுப்புகளால் தமிழரது கலாசாரம், பண்பாடு என்பன சிதையுண்டு போயின. ஆனாலும் தமிழர் வாழ்வில் பெண் மதிக்கப்பட்டு அவளுக்குரிய கௌரவம் வழங்கப்பட்டு வந்திருக்கிறது என்பதையே ஒழுக்கத்தில் சிறந்த விடுதலைப் புலிகள் வளர்த்தெடுத்த பெண்ணியம் தெளிவுபடுத்துகின்றது.

இந்திய ஆதிக்கம் ஈழத்திலும் நிலை கொண்டதாலயே ஆரம்பத்தில் ஈழப்பெண்கள் அடக்குமுறைக்கு ஆளாகினர். எனவே விடுதலைப் போராட்டத்தில் பெண்களையும் அணி சேர்ப்பதன் மூலம் படிப்படியாக சமூகமாற்றத்தை ஏற்படுத்தி பெண் விடுதலையையும், தேசவிடுதலையையும் சாத்தியமாக்க எண்ணி வெற்றியும் கண்டனர். இவ்வாறுதான் போராட்டத்தில் பெண் புலிகள் தோற்றம் பெற்று போரின் போக்கையே நிர்ணயிக்கின்ற பெரும் படையணிகளாக எழுந்து நின்றனர். 1984 முதல் பெண்கள் ஆயுதப் போராட்டத்திற்குள் தம்மை இணைத்துக் கொண்ட ஆரம்பத்தில் பெண்போராளிகள் ஆண்போராளித் தளபதிகளின் கீழ் செயற்பட்டாலும், 90களின் பிற்பகுதியில் தனித்துச் செயற்படும் வகையில் பெண்கள் படையணி புலிகளால் கட்டியெழுப்பப்பட்டது. பெண்போராளிகள் புலிகளின் அனைத்து விதமான கட்டமைப்புக்குள்ளும் உள்வாங்கப்பட்டனர். அவர்கள் இராணுவப் படையணியாக மட்டுமல்லாது, தொழில் நுட்பத்துறை, பொறியியல்துறை, மருத்துவம், கடற்படை, அரசியல், நிர்வாகக்கட்டமைப்பிலும் ஆண்போராளிகளுக்கு நிகராகவே இருந்தனர். தமிழீழ போராட்ட வரலாற்றில் இருந்து பிரிக்க முடியாத சக்தியாக பெண்போராளிகள் இருந்தனர்.

தமிழீழப் போராட்ட வரலாற்றிலே 1987 ல் முதன் முதல் களத்தில் கொல்லப்பட்ட பெண் போராளியான இரண்டாம் லெப். மாலதியின் நினைவு நாளை ஏராளம் ஏராளம் புலம் பெயர் சக உறவுகள் நினைவுகூர்ந்துள்ளனர். தன் இனத்துக்காக உயிர்த்தியாகம் செய்த வீரப்பெண்களை உள்ளம் மறவாமல் இருப்பது உண்மைத் தமிழர்க்கு உரித்தானதே.






மறதி மன்னன் மணியம் அவசர சிகிச்சைப் பிரிவில். இரு காதுகளும் கடுமையாகக் காயமுற்ற நிலையில் சேர்க்கப்பட்டார். அவரைப் பார்த்த மருத்துவர் "என்ன நடந்தது" என்றார். அதற்கு மறதி மணியம் "மருத்துவர் எனது சேட்டை அயர்ன் பண்ணிக் கொண்டு இருந்த போது போன் வந்தது அதைத் தவறுதலாக அயனில் ஆன்சர் பண்ணியதன் விளைவு...காது..." என்றார். மருத்துவர் "அப்போ மற்றக்காதுக்கு என்ன நடந்தது?" என்றார். மறதி மணியம் "அது அம்புலன்சை அழைக்க அவசரத்தில் மீண்டும் அயன்" என்றார்!!!

## ஹைக்கூ

## வெட்டிய துண்டுகள்



கைக்கு எட்டியது
வாய்க்கு எட்டவில்லை
தமிழ் ஈழம்.

...

சிவப்புச் சால்வைகளுக்கு
சிறிதும் வெட்கமில்லை
சிம்மாசனக் கனவு.

...

அரசாங்க உத்தியோகத்தருக்கு
ஆயுள் காலக் கொடுப்பனவு
சீதனப்பணம்.

...

பொடியனுக்குப் பின்னால்
பெட்டைக் கோழிகள் ஊர்வலம்
சிகை அலங்கரிப்பு.

....

கடைக்குள் தொங்குகிறது
கள்ளத்தராசு
நெற்றி நிறைய விபூதி.

*– அலெக்ஸ் பரந்தாமன்,*
*புதுக்குடியிருப்பு.*

■ ஸடோ ஸ்வாமி

# சட்டியிலிருந்து அடுப்பிற்கா?

ஐயோ! என்னும் தமிழ் வார்த்தைப் பிரயோகத்தை ஒக்ஸ்போட் ஆங்கில அகராதி உள்வாங்கி இருப்பதைத் தெரிவிக்கும் செய்தி கடந்த வாரத்தில் ஊடகங்களில் அதிகம் அடிபட்டிருந்தது. அதேபோன்று ஐயோ! போடவைக்கும் காரியமொன்றும் கடந்த வாரத்தில் நடந்தேறியிருக்கிறது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் என்னும் பெயரில் இயங்கி வந்த சட்டத்தை இல்லாதொழிப்பதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கை ஒன்று நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இந்தஎத்தனிப்பை, ஹையோ! போடவைக்கும் குஷியான விடயம் அல்லவா என்று குதூகலப்படுவீர்களேயானால் ஐயோ! என்று அவலப்படவைக்கும் அறிவிப்பொன்றும் அதனுடன் சேர்ந்து வெளிப்படுத்தப்பட்டிருப்பதை உணரமுடியாதவர்கள் என்பதே பொருத்தும். பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்திற்குப் பதிலாக புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஒன்றை அரசு அறிமுகப்படுத்த இருக்கிறது. அதற்குரிய ஏற்பாடாகக் குறித்த சட்டக்கொள்கை வரைவிற்கான அமைச்சரவை அங்கீகாரம் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டிருக்கிறது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்டுள்ளகுறித்தசட்டக்கொள்கை வரையின் சட்ட நடைமுறைகள் மற்றும்கொள்கைகள், சட்டம்மற்றும்ஒழுங்கு விவகாரத்துக்கான அமைச்சர் தலைமையிலான குழுவினால் தயாரிக்கப்பட்டு தேசியப்பாதுகாப்புத் தொடர்பான மேற்பார்வைக் குழுவிடம் கையளிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாற்றமடைந்து வரும் பயங்கரவாத நடைமுறைகளுக்கு மறுத்தான் விடுவதற்குத் தகுந்த வகையில் புதிய சட்டவரைவில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் பன்னாட்டுப் பயங்கரவாதத்திற்கான ஆள்சேர்ப்புத் தளமாகவோ அதற்கான திட்டமிடல் செயற்பாடுகளுக்கோ இலங்கையில் இடமளிக்காத வகையில் புதிய சட்டம் அமையும் என்று அறிவித்திருக்கிறார் அரசின்பேச்சாளர்அமைச்சர் கருணாரத்ன பரணவிதான.

உள்நாட்டுப் பயங்கரவாதத்திலிருந்து விடுதலைபெற்றுவிட்டதாகப்பறைசாற்றி வரும் நாடு, பன்னாட்டுப் பயங்கரவாதத்திலிருந்து தாம் தப்பித்துக் கொள்வதற்கான முன்னாயத்தம் என்றுவிளிக்கப்படும் புதிய சட்டம் இன்னும் சட்ட வரைவு என்னும் உருவை எடுக்காத போதிலும் குறித்த சட்டத்திற்கு வழங்கப்படக் கூடிய வலு தொடர்பில் அச்சம் வெளியிடப்பட்டிருக்கிறது. குறித்த அச்சம், முன்னர் பயங்கரவாதத் தடைச் சட்டத்திடம் அனுபவித்த தழும்புகளை அடிப்படையாகக் கொண்டே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை 'நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஊடகத்திற்குக் கருத்து தெரிவித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளரும் உச்ச நீதிமன்ற சட்டத்தரணியுமான ம.ஆ. சுமந்திரன், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை 'புதிய மொந்தையில் பழைய கள்'என்ற கருத்தில் வகைப்படுத்தியிருக்கிறார். அவரின் கருத்துப்படி பழைய பயங்கரவாதத் தடைச்சட்டம் கொண்டிருந்த சர்ச்சைக்குரிய உள்ளடக்கங்கள் புதிய சட்டத்திலும் தொடரப்படலாம் என்பதே. தவிரவும் சட்ட ஆணைக்குழு வழங்கிய யோசனைகள் கருத்தில் கொள்ளப்படவில்லை என்பதாகவும் சந்தேகம் வெளியிட்டிருக்கின்றார்.

இலங்கையில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு விட்டதாக மார்தட்டப்பட்டு ஏழு ஆண்டுகள் கடந்த நிலையிலும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இல்லாமல் செய்வதற்கான ஏற்பாடுகள் இதுவரை செய்யப்பட்டிருக்கவில்லை. எனினும் குறித்த சட்டத்தை நீக்குவதற்கான கோரிக்கைகள் தொடர்ச்சியாக விடுக்கப்பட்டே வந்தன. ஆட்சியாளர்கள் பணமோசடிச் சட்டம் தொடர்பில் சுறுசுறுப்பாக இருந்ததாலோ என்னவோ இந்த தடைச் சட்டத்தை நீக்குவதில் கரிசனை காண்பித்திருக்கவில்லை. மாறாக குறித்த சட்டத்தை இடைக்கிடையே பயன்படுத்தியும் வந்தார்கள்.

"1978 ஆம் இலக்க பயங்கரவாத தடைச் சட்டம் என்று நாமமிடப்பட்ட பழைய சட்டம் முதலில் 1979இல் தற்காலிக சட்டமாகவே நடைமுறைக்கு வந்தது பின்னர் 1982இல் இருந்து நிரந்தரமாக்கப்பட்டு நடைமுறைக்கு வந்தது. சந்தேகநபர்களைத் தேடுவதற்கு, கைது செய்வதற்கு மற்றும் தடுத்து வைப்பதற்கான பரந்துபட்ட அதிகாரங்களை பொலிஸாருக்கு வழங்கியிருக்கும் குறித்த சட்டவரைவு பல பிரிவுகளில் மனித உரிமைகள் தொடர்பான மதிப்பீடுகளைக் கணக்கில் எடுக்கவில்லை எனக் குற்றஞ்சாட்டப்பட்டு வந்தது.


விசாரணைக்கென தடுத்து வைக்கப்படுபவர்களுக்கு மருத்துவ மற்றும் சட்ட உதவி கிடைப்பதை உறுதி செய்தல், கைதிணைப்பதிவுசெய்தல், கைதாகியுள்ளவர் விரும்பிய மொழியைப் பயன்படுத்தல், சித்திரவதை மற்றும் மோசமான விசாரணை முறைகளிலிருந்து பாதுகாப்பளித்தல், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான விசேட பாதுகாப்பு போன்றவிடயங்களைக் கருத்தில் கொள்ளுமாறு இந்த ஆண்டில்கூட மனித உரிமை ஆர்வலர்களால் பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது.

மனிதஉரிமைகள்தொடர்பானஆர்வலர்கள் பலரும் இலங்கை அரசைக் கோரிவந்த பயங்கரவாதச்சட்டநீக்கம் தொடர்பான வேண்டுகோள்கள் புதிய சட்டம் தொடர்பாக வெளிவரும் கட்டியங்களால் 'பிச்சை வேண்டாம் நாயைப் பிடி' நிலையை ஞாபகப்படுத்தி நிற்கின்றன. சர்வதேச பயங்கரவாதம் தொடர்பாக நாடுகள் விழிப்படைந்துவருகின்றமை வரவேற்பிற்குரியதே ஆனாலும் அதனைச் சாட்டாக வைத்து புதிய சட்டத்தில் இறுக்கங்களைத் திணிக்க முயல்வது விவாதத்திற்கும் விசனத்திற்குமுரியது. புதிய சட்ட நடைமுறைக்கான அத்திபார ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாகக் கூறப்படும் வேளையில் பன்னாட்டு மற்றும் உள்நாட்டு மனித உரிமை அமைப்புகளின் அழுத்தமும் கவன வீர்ப்பும் எதிர்பார்க்கப்படுகிறது.

> "இலங்கையில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு விட்டதாக மார்தட்டப்பட்டு ஏழு ஆண்டுகள் கடந்த நிலையிலும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இல்லாமல் செய்வதற்கான ஏற்பாடுகள் இதுவரை செய்யப்பட்டிருக்கவில்லை. எனினும் குறித்த சட்டத்தை நீக்குவதற்கான கோரிக்கைகள் தொடர்ச்சியாக விடுக்கப் பட்டே வந்தன. ஆட்சியாளர்கள் பணமோசடிச் சட்டம் தொடர்பில் சுறுசுறுப்பாக இருந்ததாலோ என்னவோ இந்த தடைச்சட்டத்தை நீக்குவதில் கரிசனை காண்பித்திருக்கவில்லை.



# வேண்டாமே மணமுறிவு





எஸ்.மல்லிகா

திருமணமானபின் ஆணாயினும் சரி, பெண்ணாயினும் சரி உளவு வேலை பார்க்கத் தொடங்குகின்றனர். இந்த விடயத்தில் ஆயிரத்தில் ஒருவர் விதிவிலக்காக இருக்கலாம். இந்த உளவு வேலை அவசர திருமணத்தில் சற்றுக் கூடுதலாகக் காணப்படுகிறது. இருபாலாரும் தன் துணை எங்கே போகிறார்? யாருடன் பழகுகின்றார்? என்பன உள்ளிட்ட வினாக்களில் தொடங்கி, காலப்போக்கில் ஒருவருக்கொருவர் தெரியாமல் பின்தொடர்ந்து உளவு பார்க்கின்றனர். இது திருமண உறவுக்குச் சாவுமணி அடிக்கும் கைங்கரியம்.

அவசரமாக மணமுடித்த அவள் வாழ்க்கையிலும் இது நடந்தது. அதாவது. அவளது கணவன் அவளைச் சந்தேகப்பட்டான். உளவு வேலை பார்க்கத் தொடங்கினான். ஆனால், அவள் அப்படிப்பட்டவள் அல்ல. வெகுளித்தனத்துடன் அனைவருடனும் அன்பாகப் பழகுவது அவள் குணம். அதனை அவன் தவறான கண்ணோட்டத்துடன் பார்த்தான். ஆரம்பத்தில் எல்லோரும் சொல்வது போன்று அவர்கள் வாழ்க்கை நன்றாகத்தான் நகர்ந்தது. நாளாக நாளாக அவளது கணவனின் மனோநிலையில் மாற்றம் தென்பட்டது. அவனால் அவளது சுதந்திரம் பறிக்கப்பட்டது. தன்னைத் தவிர அவள் வேறு ஆணுடன் கதைப்பதைக்கூட அவன் விரும்பவில்லை. இத்தனைக்கும் அவர்கள் திருமணம் முடித்து, மூன்று மாதங்கள் கூட முழுவதுமாக முடிந்துவிடவில்லை. எதற்காக இப்படி இருக்கிறீர்கள்? நானும் படித்தவள். வேலைக்குப் போகின்றேன். நாலு பேருடன் கதைப்பதில் என்ன தவறு இருக்கப்போகிறது? என்று அவள் ஒருநாள் அவனிடம் கேட்டதற்கு, "இங்க பார், நான் எனக்கு மனைவியைத் தான் பார்த்தேன்- கல்யாணமும் செய்தேன். இப்படிக் கண்டவங்களுடன் கதைத்துத் திரிவதற்கு உன்னைக் கட்டவில்லை என்று பொருமினான். இவ்வாறான வார்த்தை முட்கள் அன்றாடம் வளர்ந்தன. அவர்களுக்குள் பெரும் விரிசலை ஏற்படுத்தின.


அப்போதுதான் அவளுக்குப் பிறந்த வீட்டின் அருமை தெரிய வந்தது. ஆசை அறுபது நாள், மோகம் முப்பது நாள் என்று எமது முன்னோர்கள் சொல்லி வைத்தது அவர்கள் வாழ்க்கையில் அப்படியே நடந்தது. வார்த்தை முட்களால் அவளைக் கொடுமைப் படுத்திய அவனை விவாகரத்துச் செய்வதே சிறந்தது என்ற முடிவுக்கு அவள் தன்னளவில் தயாரானாள். தன் தோழியிடம் அத்தனை விடயங்களையும் ஒளிவு மறைவற்றுக் கூறினாள்.

"இதோபார், விவாகரத்துச் செய்து கொள்வதற்காக யாரும் திருமணம் செய்து கொள்வதில்லை. சிறப்பாக மணவாழ்க்கை அமைய நாம் நேரத்தை ஒதுக்கி மனம் விட்டுப் பேச வேண்டும். திருமண வாழ்க்கையில் எல்லாவற்றிலும் ஏற்றத் தாழ்வுகள் இருக்கவே செய்கின்றன. வெளியிலிருந்து பார்த்தால், இருவரும் இணைபிரியாத் தம்பதிகளாகத் தான் தெரிவர்.

ஆனால், அவர்களுக்குள் எத்தனையோ கசப்புக்கள் இருக்கலாம். இவற்றைக் களைந்து உள்ளும் புறமும் இணைபிரியாமல் இருப்பதற்கு ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொள்ள வேண்டும் என்றாள்.

(தொடரும்)

> விவாகரத்துச் செய்து கொள்வதற்காக யாரும் திருமணம் செய்து கொள்வதில்லை. சிறப்பாக மணவாழ்க்கை அமைய நாம் நேரத்தை ஒதுக்கி மனம் விட்டுப் பேச வேண்டும். திருமண வாழ்க்கை எல்லாவற்றிலும் ஏற்றத் தாழ்வுகள் இருக்கவே செய்கின்றன.



## வாழ்வுரிமை கேட்டு...

பிறப்பதற்கு முன்னிருந்த
பயங்கரவாதத் தடைச்சட்டத்தில்
பலியிடப்பட்ட நான்
பூட்டிய சிறையிலிருந்து
பட்டினிப்போர் புரிகின்றேன்
பாச உறவுகளுடன் நேசமாய் வாழ...

எனக்கு இணையாக எனை
பெற்றவளும் புறப்பட்டு விட்டாள்
பாதையோரம் பதாகையுடன்...
பாசமகளும் தாயுடன்
தானுமொரு பங்காளியாக...

மூவருக்கும் வேண்டுதல் ஒன்றே
நல்லாட்சி அரசே நம்மை
நிம்மதியாய் வாழவிடு அன்றில்
நிரந்தரமாய் சாகவிடு....

விவேகானந்தனூர் சதீஸ்
கிளிநொச்சி

## பத்துச் சதமும் குட்டிப்பையனும்



பா.அபிராமி

அன்றைய நாளில் இனிய பொழுது ஒன்று எனக்காய்ப் புலர்ந்தது. அவசர அவசரமாக அம்மா எங்கோ ஆயத்தமாகிக் கொள்கிறாள். வழமை போன்று அப்பப்பாவிடம் ஒப்படைக்கப்படுகிறேன். அப்பப்பா மிகவும் அன்பானவர். என்னை அரவணைத்துக் கொண்டவர் தன் தோள் மீது தூக்கி நடைபழகாத என்னை வைத்து வட்டமடித்துக் கொள்கிறார். இப்போது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. குரும்பட்டிகளைப் பொறுக்கித் தேர் செய்து வடமிழுக்கின்றோம். அது ஓய்ந்துவிட ஊஞ்சலில் வைத்து உயரப் பறக்க விடுகிறார். இதமான காற்றின் வருடலும் உயர்ந்து சென்று பதிந்து வந்த மாற்றமும் மனதை மயக்கம்கொள்ள நான் உறங்கி விடுகின்றேன்.

முற்றத்து மணலில் தவழ்ந்து கொண்டிருக்கிறேன். வளைவு வளைவான மங்கிய வட்டவடிவப் பொருள் ஒன்று தென்படுகின்றது. கண்ட அதைக் கையில் எடுத்துக் கொண்டு நான் விழித்ததை அறியாமல் ஈச்சார்க் கட்டிலில் அயர்ந்து கொண்டிருக்கும் அப்பப்பாவை அரட்டுகிறேன். அரைகுறைத் தூக்கத்திலிருந்து எழும்பியவர் மறுபடியும் என்னை அரவணைத்துக்கொண்டு உறங்க முனைகிறார். நான் எடுத்த வட்டத்தை அவரது காதுக்குள் வைத்து விளையாட உறக்கம் கலைந்தவர் விழித்துக் கொள்கிறார். நான் அவரது காதுக்குள் வைத்து விளையாடியதைக் கையில் எடுத் துப் பார்த்தவர் "எடேய் பத்துச் சதக்குத்தி எடுத்து வைச்சிருக்கிறாய். சரி... வா... பிள்ளைக்குச் சொக்கா வாங்குவம்" என்று கூறி இருந்தவாறே அந்தக்குத்தியை காதுக்குள் சரியாகப் பொருந்தச் செருகியவர் என்னையும் தோளில் ஏந்தி கடைத் தெருவுக்குச் செல்கிறார். எனக்குத் தோடம்பழ இனிப்பு என்றால் கொள்ளைப் பிரியம். புளுட்டோ ரொபியும் நல்ல சுவைதான். சூப்புத்தடியும் பல்லிமுட்டையும் அதிலும் விருப்பம். கடைக்கு வரக்கிடையில் வாயூறி வாய் வழியே வீணி வேறு. வந்தவுடன் பத்துச் சதக்குத்திக்குக் கை நிறைய இனிப்பு இன்னும் நிறையப் பொக்கற்றுக்குள்ளும். போதாததற்கு அப்பப்பாவுக் குப் புகையிலையும், வெத்திலைக் கூறும் இன்னும் மிச்சம் இருக்குதெண்டு இதர பல சாமான்களும் வாங்கியந்து வீடு சேர்ந்து வைத்துவிட அம்மா வந்தாள். அருகே வந்து என்னைக் கண்டு திட்டித் தீர்த்து ஒட்டியுள்ள பாணி கண்டு மிச்சம் முழுதும் பறித்தெடுத்தாள். அழுத என்னை நன்றாய் அடித்து அப்புறமும் தூங்க வைத்தாள்.

இப்போது முற்றத்து மணலில் தவழ்ந்து கொண்டிருக்கிறேன். அம்மாவைக் காணோம். பத்துச் சதக் குத்தி கண்டால் அப்பப்பாவை எழுப்ப வேண்டும்.

# ரெமோ



ஒரு இளைஞன், ஒரு பெண்ணைத் துரத்தித் துரத்திக் காதலிக்கவைக்கும் அதே கதைதான். நாயகனின் பெண் வேடமும் காதலுக்கு உதவுகிறது என்பது ரெமோ காட்டும் வித்தியாசம்.

நாயகன் சிவா (சிவகார்த்திகேயன்), பெரிய நடிகனாகும் கனவுகளுடன் இருக்கும் வேலை வெட்டி அற்றவர். காவ்யா (கீர்த்தி சுரேஷ்) தனியார் மருத்துவமனையில் மருத்துவர். சிவாவுக்கு கீர்த்தியைப் பார்த்ததும் (வழக்கம்போல) காதல் பற்றிக்கொள்கிறது. ஆனால், கீர்த்திக்கு நிச்சயம் ஆகிவிட்டது தெரிந்ததும் நொந்துபோகிறார். நடிப்புக்கான தேர்வுக்காக சிவா பெண் வேடமிட வேண்டியிருக்கிறது. தாதியாக வேடமிட்டிருக்கையில் தற்செயலாகச் சந்திக்கும் கீர்த்தியுடன் நட்புக் கிடைக்கிறது. அந்த நட்பைப் பயன்படுத்திக்கொண்டு, அவர் மனதில் காதலை வரவழைக்க முயல்கிறார் சிவா. பெண்ணாகவும் ஆணாகவும் மாறிமாறிக் கீர்த்தியை வட்டமிடும் சிவாவின் காதல் வென்றதா? இந்த இரட்டை வேட நாடகத்தை எப்படி முடிவுக்குக் கொண்டுவருகிறார்? என்பதே கதை.

இன்னொருவருக்கு நிச்சயமான பெண்ணைக் காதலிப்பது, நாயகன் பெண் வேடம் போடுவது ஆகியவை பல படங்களில் பார்த்தவைதான். இருந்தாலும் அதைக் காதல், நகைச்சுவைக்கான படமாக மாற்றிக்கொள்ளும் இயக்குநர் பாக்கியராஜ் கண்ணனின் புத்திசாலித்தனம் பாராட்டுக்குரியது. அதே நேரம், அந்த புத்திசாலித்தனம் திரைக் கதையில் தொடரவில்லை.

காதல் காட்சிகளில் கவனம் செலுத்தாமல் ஆங்காங்கே சிரிக்க வாய்ப்புத் தந்திருக்கிறார். ஆனால், காதலின் வலிமையைச் சொல்லத் தவறியிருக்கிறார்.

மருத்துவராக இருக்கும் கீர்த்தி, தன்னைக் காதலிப்பவர் பற்றி எதுவும் தெரியாமலேயே பழகுவது எப்படி? தாதி சொல்லும் எல்லாவற்றையும் அப்படியே பின்பற்றுவாரா? தனியார் மருத்துவமனை மருத்துவர் ஏன் தினமும் பஸ்ஸில் பயணம் செய் கிறார்? தாதி வேலையே தெரியாமல் தனியார் மருத்துவமனையில் வேலை செய்ய முடியுமா? இப்படிப் பல கேள்விகள் எழுகின்றன. இதையெல்லாம் மறக்கடிக்கும் காட்சிகள் இல்லை. இரட்டை வேட நாடகத்தை முடித்துவைக்கக் கைகொடுக்கும் காட்சி இதுதான் என்பது முதலிலேயே தெரிந்துவிடுகிறது. 5 நிமிடங்களுக்குள் பெண் வேடத்தை மாற்றிக்கொண்டு 3 நாள் சவரம் செய்யப்படாத முகத்துடன் நாயகன் தோன்றுவதெல்லாம் மகா அராஜகம்.

நகைச்சுவை கலந்த காதல் படங்களில் நடித்த சிவகார்த்திகேயன், இதில் காதல் கலந்த நகைச்சுவயுடன் நடித்திருக்கிறார். காதலன், தாதி என இருவிதத் தோற்றங்களில் வித்தியாசம் காட்டுகிறார். பெண் வேட நடிப்பில் முத்திரை பதிக்கிறார். காதலன் பாத்திரத்தில் சறுக்குகிறார். கீர்த்தியிடம் காதலைச் சொல்லும் போது உதடுகள் மட்டுமே காதலைச் சொல்கின்றன. நகைச்சுவை, வெருளி வித்தை, நடனம் ஆகியவற்றைத் தாண்டி, ஒரு காதல் நாயகனுக்கான பன்முக அம்சங்களை வளர்த்துக்கொள்ள வேண்டாமா?

கீர்த்தி சுரேஷ் தனது திறமையை அழகுறக் காட்டிச் செல்கிறார். முகத்தில் நவரசங்களையும் காட்டி அழுத்தமான தடம் பதிக்கிறார்.

"மேய்க்கிறது எருமை, அதுல என்ன பெருமை" என்பது போன்ற சதீஷின் வசனங்களுக்குத் தியேட்டரில் கைதட்டல்கள் விழுகின்றன. வழக்கமான அப்பாவி அம்மாவாக சரண்யா பொன்வண்ணன். முழுக்க முழுக்க சிவமயமான படத்தில் ராஜேந்திரன், யோகி பாபு, நரேன், கல்யாணி நட்ராஜன் உள்ளிட்டோர் வந்து போகின்றனர்.

ரசூல் பூக்குட்டியின் ஒலி வடிவமைப்பு சிவகார்த்திகேயனின் ஆண் – பெண் குரல்களை நேர்த்தியாக வேறுபடுத்திக்காட்டுகிறது. பொண்ணுங்களை "கன்ட்ரோல் பண்றதுதான் கஷ்டம். கன்பியூஸ் பண்றது ஈஸி, ஆம்பளைங்க அழக்கூடாது. ஆனா, அவங்களை அழ வைக்கக் கூடாது என்று பொண்ணுங்ககிட்ட சொல்லுங்க, பார்த்தா லூஸு மாதிரி தெரியலை. ஆனா, பேசினாத் தெரியுது" போன்ற வசனங்கள் எதற்கு? கைதட்டல் பெற வேண்டும் என்பதற்காகப் பெண்களைச் சீண்டுவதில் என்ன நியாயம்? கதையின் மையமான காதல் வலுவாகச் சொல்லப்படவில்லை. நகைச்சுவையும் போதுமான அளவு இல்லை. சிவகார்த்திகேயனின் பெண் வேடம் என்பதைத் தவிர படத்தில் எந்தப் புதுமையும் இல்லை.





# தேவி



பேயிடம் ஒப்பந்தம் போட்டுத் தன் மனைவியை மீட்கப் போராடும் ஒரு கணவனின் கதைதான் தேவி. நாகரிகமான பெண்ணைத் தான் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்பது மும்பையில் வேலை பார்க்கும் கிருஷ்ணகுமாரின் (பிரபுதேவா) இலட்சியம். சிக்கலான சூழலில், மாடு மேய்க்கும் கிராமத்துப் பெண் தேவியை (தமன்னா) அவரால் திருமணம் செய்துகொள்ள நேரிடுகிறது. வேண்டா வெறுப்போடு மணம் முடித்துத் தமன்னாவுடன் மும்பை செல்லும் பிரபுதேவா, ஒரு வீட்டை வாடகைக்குப் பிடித்துக் குடியேறுகிறார். வீட்டில் நுழைந்ததும் தமன்னாவிடம் தலைகீழ் மாற்றங்கள் நடக்கின்றன. பிரபுதேவாவை அதிர வைக்கும் அந்த மாற்றங்களின் பின்னணியும், விளைவுகளும்தான் படம்.

பேய்ப் படங்களுக்கென்று ஆகிவந்த பதற்றம், திகில், இருள் ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்தாமல் கலகலப்பாகவே திரைக்கதையை நகர்த்திச் செல்கிறார் இயக்குநர் ஏ.எல்.விஜய். தான் எதிர்பார்த்த விதத்தில் பெண் கிடைக்காததால் பிரபுதேவாவுக்கு ஏற்படும் ஏமாற்றத்தையே சொல்லிக் கொண்டு போகும் கதை திடீரென்று வேறு வடிவம் எடுக்கிறது. அதன் பிறகு முழுக்க முழுக்க பேயுடனான போராட்டம் ஆக்கிரமித்துக்கொள்கிறது. தமன்னாவுக்குள் ஏற்படும் மாற்றங்களும், அதைப் பிரபுதேவா எதிர்கொள்ளும் விதமும் நன்றாகக் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. தமன்னாவின் புது அவதாரத்தை ஒட்டி வெளி உலகில் நடக்கும் நிகழ்வுகளும் அவற்றால் பிரபுதேவாவுக்கு ஏற்படும் அவஸ்தைகளும் கல கலப்பும் கவர்ச்சியுமாகச் சொல்லப்படுகின்றன. பேய் விடயத்தை இயக்குநர் நகைச்சுவை ஆக்கியிருக்கிறார். ஆனால் அதுவோ வலுவாக இல்லை.

எனவே படத்தோடு ஒன்ற முடியவில்லை. தேவி, ரூபியாக மாறும் இடங்கள் பெரும்பாலும் ஒரே மாதிரிக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. படப்பிடிப்புக் காட்சிகளும் ஒரே மாதிரியாக அமைந்து அலுப்பூட்டுகின்றன. பேயிடம் இருந்து தன் மனைவியை மீட்கத் தவிக்கும் பிரபுதேவா, மனைவி மீது ஒரு இடத்தில்கூட ஆழமான அன்பையோ, காதலையோ வெளிப்படுத்தவில்லை. பேயாகிவிட்ட ஒரு நடிகை வேறொருவர் உடலின் வழியே தன் நடிப்பைப் பார்க்க விரும்புவாரா என்ன? ரூபியின் தோற்றம், அவரது பின்னணி ஆகியவற்றிலும் கவனம் செலுத்தியிருந்தால் இந்த அம்சத்தை வலுவாக அமைத்திருக்கலாம்.

நடிப்பு, நடனம், நகைச்சுவை, பயம் ஆகிய இடங்களில் இயல்பு மீறாமல் நடித்துள்ளார் பிரபுதேவா. 'சல்மார்' பாடலில் அவரது நடனம் அட்டகாசம்!

அப்பாவிக் கிராமத்துப் பெண் – தன் குறிக்கோளில் உறுதியாக இருக்கும் பேய் ஆகிய 2 வேடங்களுக்கும் இடையே கணிசமான வித்தியாசத்தை உடைகளே காட்டிவிடுகின்றன. உடல்மொழி, முக பாவங்களில் அந்த வித்தியாசத்துக்கு மெருகு சேர்க்கிறார் தமன்னா. நடனத்திலும் கலக்குகிறார்.

நடிகராகவே வரும் சோனு சூட் அந்தக் கதாபாத்திரத்தின் தேவையைப் பூர்த்தி செய்கிறார். மற்றபடி அவருக்குப் படத்தில் பெரிதாக வேலை இல்லை. ஆர்.ஜே. பாலாஜி வரும் இடங்களில் புன்னகைக்கு உத்தரவாதம். பேயை விரட்ட வரும் நாசர், சதீஷ் காட்சிகள் தேவையற்றவை. சோனு சூட் முழுமையாளராக வரும் முரளி ஷர்மாவின் நடிப்புப் பரவாயில்லை. கிராமத்தையும், நகரத்தையும் இயல்பு மாறாமல் பிரதிபலித்துள்ளார்.

பேயை வைத்துப் பயம் காட்டுவதற்குப் பதில், பேயையும் இயல்பான பாத்திரமாக்கியிருப்பது வித்தியாசமான முயற்சி.





# கற்பூர வாசனை!

ந.ஜெயா

மனித வாழ்க்கை எவ்வளவு அற்புதமானது. தாய், தந்தை, சகோதரர்கள், கணவன், மனைவி, பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள் எனப் பரந்து விரிந்து வியாபித்துள்ள மனிதச் சூழலுக்குள் மகிழ்ச்சியான தருணங்களும் துயரமான தருணங்களும் மாறி மாறி நிகழ்வது தான் மனித வாழ்க்கை. உறவுகளுடன் இணைந்து அவற்றைப் பரிமாறிக் கொள்ளும் பக்குவம் பெற்றிருப்பதே சமூகத்துடன் கூடி வாழும் மனிதன் என்ற ஆறறிவு விலங்குக்குப் பொருத்தமானதும் பெருந்தன்மையுடையதுமாகும். ஒவ்வெருவரும் தாம் கடந்து வந்த காலங்களின் பழைமைகளை நினைக்கும் போது அவை அவர்களிடத்தே நகையை ஏற்படுத்துவதன்றி வேறேன்றும் எஞ்சியிருக்காததையும் உணர்த்தி நிற்கும். வாழுங்காலத்தில் தாமும் மகிழ்வாக இருந்து பிறரையும் மகிழ்வாக வைத்திருக்கும் மனிதன், மனிதன் என்ற உயிரிக்குரிய அந்தஸ்தைப் பெறுவதோடு பிற மனித உயிர்களை நேசிக்கும் மகத்துவத்தையும் பெற்றுப் பூரண மனிதனாகிவிடுகிறான்.

இவ்வாறான மனித வாழ்வில் இறப்பு என்பது தவிர்க்க முடியாத ஒன்று. அது அனைவருக்குமுரியது. மனித மகிழ்ச்சியால் வென்றேடுக்க முடியாத இதன் துயரத்தை எல்லோருமே என்றோ ஒரு நாள் அனுபவித்தேயாக வேண்டும். இயல்பாக ஏற்படும் இந்த இயற்கை எய்தலை செயற்கையாக உருவாக்கிக் கொள்ளும் அறிவற்ற, குறுகிய சிந்தனையுள்ள மனிதர்களின் வாழ்க்கை தனது பயணத்தை இடைநடுவே முடித்துக்கொள்வது மட்டுமன்றி தன்னைச் சார்ந்த பாசப்பிணைப்புக்களையும் பரிதாபத்துக்குள் தள்ளிவிடுகின்றது. இயற்கையாக ஏற்படும் நோய்களுக்கு மத்தியில் தாம் அனுபவிக்கும் சிற்றின்பங்களான குடிபோதைகள், புகைத்தல் பழக்கம் போன்றனவற்றால் உடலை நோய்வாய்ப்படுத்தித் தமது ஆயுள்காலத்தைக் குறைத்துக் கொள்வதுடன் நோயாளியாகி மற்றவர்களுக்குப் பாரமாக அமைவது, தம்மில் தங்கியுள்ளவர்களை நிர்க்கதியாக்கி விடுவது, தந்தை முகம் காணாத பிஞ்சுகளை உருவாக்கி விட்டு மடிவது போன்ற செயல்களின் பின் விளைவுகளால், தாம் இறந்த பின்னும் மற்றவர்களுக்குத் துயரத்தையும் துன்பத்தையும் ஏற்படுத்திச் செல்லப்போகும் நிலை அறிந்திருக்காதவர்களாய்த் தொடர்கின்றது தாம் தனியானவர்கள் என்ற உணர்வுடன் இன்றைய இளைஞர்கள் பலரின் போதைவாழ்வு. வருங்காலத்தில் தம்மால் பாதுகாக்கப்பட வேண்டிய உயிர்களுண்டு என்பதைச் சிந்திக்காமலும் அந்த வாழ்விலுள்ள இனிமையை அறியாமலும் அநியாயமாக மடியப்போகும் இவர்கள் கற்பூர வாசனை அறியாத கழுதைகளே.




# ஐயோ...!

ந.ஜெயதாஸ்

ஆங்கில மொழியின் அடிப்படைகளை அக்குவேறு ஆணிவேறாக ஆராய்ந்து அரிவரிப்படுத்தியுள்ள 'ஒக்ஸ்போட் அகராதி' அண்மையில் தமிழ்–சிங்கள மக்களிடையே வட்டார வழக்குச் சொல்லாகப் பயன்பாட்டில் இருந்து வரும் 'ஐயோ' என்ற சொல்லை வருடா வருடம் வெளியிடும் தனது புதிய பதிப்பில் இந்த வருடம் நான்கு சொற்களை இணைத்து இணைத்துள்ளது.

'ஐயோ' வைத் தென்னிந்திய மற்றும் இலங்கை மக்களின் வாழ்க்கைச் சூழலோடு இசைந்த பேச்சுமொழிச் சொல் எனவும் கவலையை அல்லது அழுத்தத்தை வெளிப்படுத்தப் பயன்படுத்தப்படுகின்றது என்றும் அது குறிப்பிட்டுள்ளது. இவ்வாறாக ஆங்கில அகராதியில் இடம்பிடித்துள்ள 'ஐயோ' அவலம் அல்லது துயரம், ஆச்சரியம் ஆகிய ம்னித உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் சொல்லாடலாகவே கொள்ளப்படுகின்றது. ஐயகோ, ஐயய்யோ, ஐயோ ஆகிய சொற்பதங்கள் 'ஐயகோ! சொந்த நாட்டிலயே அந்நியனாக வாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகிவிட்டேனே!', 'ஐயய்யோ ஜனநாயக நாட்டில் ,இப்படி ஓர் அக்கிரமமா?', 'ஐயோ! எங்களை அனாதையாக விட்டு விட்டுப் போய்விட்டீர்களோ' என்றவாறு பயம், சோகம், அதிர்ச்சி , வலி, ஆச்சரியம் ஆகிய உணர்வுகளை வெளிப்படுத்தி நிற்கின்றன. ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான கம்பராமாயணத்தில் 'மையோ! மரகதமோ! மறிகடலோ! மழை முகிலோ! ஐயோ! இவன் வடிவு என்பதோ? அழியா அழகுடையான்' என இராமனின் அழகை வர்ணிக்க இயலாத கம்பர் 'ஐயோ' என்ற சொல்லினூடாக ஏற்படுத்திவிட்ட ஆச்சரியமும் 'ஐயோ' வால் வெளிப்பட்டு நிற்பதைக்காண முடிகின்றது.

தமிழிலக்கணகாரர்களால் 'இடைச்சொல்' வகையினதாக நோக்கப்படும் 'ஐயோ' என்றுரைக்கும் சொல்லாடல் கிராம மற்றும் பண்டைத்தமிழ் மக்களால் காலனின்(எமன்) மனைவியைக் குறிப்பதாகவும் கருதப்படுகின்றது. இந்துக்களைப் பொறுத்தவரையில் 'ஐயோ' என்பது காலனது மனைவியின் நாமமும்கூட. எவ்வாறிருப்பினும் செம்மொழியான தமிழ்மொழி இவ்வாறு பலமொழிக்காரர்களிடேயும் புகழ்பெறுவது பெருமைக்குரிய ஒன்றே.

**அவள்:**
கடலில் தொழிலொடு போனீரே
கன்னி நினைவுடன் போவீரா?
நிலவின் ஒளியினில் போனீரே
என் நிலமை தெரிந்துமே போனீரா?
கடலின் கரையில் உருகுகிறேன்
உப்புக் காற்றில் உலர்ந்தே வாடுகிறேன்.

**அவன்:**
உடலும் உறுதொழிலும் தோணியும் தான் இங்கே
உசிரை விட்டு வந்தேன் உன்னோடு அங்கே
உன்னைக் கொண்டு வந்தேன் கண்ணோடு இங்கே

**அவள்:**
நிலவும் தான் உறங்கும் ஊர் உறங்கும்
என் விழிகள் உறங்காதே
உண்ணும் உணவும் இறங்காதே
என் உயிரே...
எப்போ நீ மீண்டு கரைக்கு வருவாய்?

**அவன்:**
வானில் வெள்ளியெல்லாம்
உன் விழியாய் மினுங்குதடி
இரையும் கடலோசை உன் பெயரே சொல்லுதடி
வாடை காற்றிலென் பாடல் கரையுதடி
கண்ணே நீயுறங்கு காலையிலே வந்திடுவேன்.


**அவள்:**
காற்றும் வலுக்குதையா கனத்த இடிகேட்குதையா
ஏழை இவள் மனசு கடற்கரையில் அலையுதையா

**அவன்:**
காற்றும் கனமழையும் கடலும் நம் நண்பரடி
கண்ணே கலங்காதே
விடியுமுன்னே நான் வருவன்.
வெள்ளி முளைத்து வரும் விரால் மீனால்
பறிநிறையும் தோணி கரையணைய,
என் தோளில்நீயணைவாய்...

**அவள்:**
காலை வருமளவும் கறங்காய் மனம்
சுற்றுமையா
கண்ணில் உனைக் கண்ட பின்னே
கன்னிமனம் ஆறுமையா...



# உசிரை விட்டு வந்தேன் உன்னோடு...



# கேள்விக்குறிக்குள் கல்விச் சமூகம்

ந.லோகதயாளன்

வெளியாகியுள்ள தரம்5 புலமைப் பரிசில் பரீட்சையை வட மாகாணத்தின் 892 பாடசாலைகள் எதிர்கொண்டபோதும் அதில் 538பாடசாலைகள் வெட்டுப் புள்ளியைத் தாண்டவில்லை. இந்தக் கவலைதரும் உண்மையைவெளிக்கொணர்ந்துள்ளது இந்த வருட புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள். இலங்கையில் 196கல்வி வலயங்கள் உள்ளன. இதில் 12கல்வி வலயங்களை மட்டும் கொண்ட வடமாகாணத்தில் மொத்தமாக 983பாடசாலைகள் இயங்குகின்றன. இதில் ஆரம்பப் பிரிவுகளை உடைய 892பாடசாலைகளைச் சேர்ந்த 19ஆயிரத்து 90 மாணவர்கள் 2016 ஆம் ஆண்டுக்கான தரம்5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றினர். இவ்வாறு தோற்றிய மாணவர்களில் 354 பாடசாலைகளைச் சேர்ந்த 2ஆயிரத்து 15மாணவர்களே வெட்டுப் புள்ளியைத் தாண்டியுள்ளனர். இதன் பிரகாரம் இந்த வருடப் பரீட்சையில் வடமாகாணக் கல்விச் சமூகம் பெரும் இழப்பை எதிர்கொண்டுள்ளமை உணரப்பட்டுள்ளது.

### யாழ்ப்பாணத்தில் வீழ்ச்சி

வட மாகாணத்தின் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் 92பாடசாலையை சேர்ந்த 3ஆயிரத்து 118மாணவர்கள் தோற்றிய நிலையில் 42 பாடசாலைகளைச் சேர்ந்த 574மாணவர்கள் வெட்டுப்புள்ளியைத் தாண்டியுள்ளனர். இதில் யாழ்ப்பாண நகரின் பிரபல பாடசாலைகளான பொஸ்கோ மற்றும் இந்து ஆரம்பப் பாடசாலை ஆகியவற்றில் மட்டும் 300மாணவர்கள் வெட்டுப் புள்ளியைத் தாண்டியிருந்தனர். இவ்வாறே வலிகாமம் கல்வி வலயத்தில் 131பாடசாலைகளைச் சேர்ந்த 2ஆயிரத்து 900 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றிய போதிலும் 51 பாடசாலைக்ளைச் சேர்ந்த 273மாணவர்களே வெட்டுப்புள்ளியைத்தாண்டியுள்ளனர். தீவகக் கல்வி வலயத்தில் இருந்து 54பாடசாலைகளைச் சேர்ந்த 720மாணவர்கள் பரீட்சை எழுதிய நிலையில் 21பாடசாலைகளின் 30மாணவர்களும், வடமராட்சி கல்வி வலயத்தில் 74 பாடசாலைகளின் 1830மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றிய நிலையில் 50பாடசாலைகளைச் சேர்ந்த 213மாணவர்கள் மட்டுமே வெட்டுப் புள்ளியைத் தாண்டியிருந்தனர்.

தென்மராட்சி கல்வி வலயத்தினைப் பொறுத்தமட்டில் இங்கு 54 பாடசாலைகளின் 986 சிறார்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றியும், 2பாடசாலைகளைச் சேர்ந்த 91மாணவர்களே வெட்டுப் புள்ளியைத் தாண்டியுள்ளனர் என்கின்றது கல்வித் திணைக்களத்தின் புள்ளி விவரத் தகவல்கள்.

இதன்பிரகாரம் யாழ்ப்பாண மாவட்டத்தில் 405பாடசாலைகளைச் சேர்ந்த 9ஆயிரத்து 554மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியிருந்தபோதும் 192 பாடசாலைகளைச் சேர்ந்த 1181மாணவர்கள் மட்டுமே வெட்டுப் புள்ளியைத் தாண்டியுள்ளனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் 213பாடசாலைகள் வெட்டுப் புள்ளியினைத் தாண்டியிருக்கவில்லை.

### கீழிறங்கிய கிளிநெச்சி

போரிலிருந்து மீண்டு கல்வித்தரத்தில் ஒருநிலை கண்டுவந்துகொண்டிருந்த கிளிநொச்சி மாவட்டமானது ஒரேயொரு வலயத்தினைக் கொண்டது. இங்குள்ள 104பாடசாலைகளில் ஆரம்ப நிலையிலுள்ள 9பாடசாலைகளில் இருந்து 2ஆயிரத்து 191மாணவர்கள் பரீட்சை எழுதிய நிலையில் 40 பாடசாலைகளைச் சேர்ந்த 196மாணவர்கள் மட்டுமே வெட்டுப் புள்ளியைத் தாண்டி யுள்ளனர். இங்கு 54பாடசாலை மாணவர்களில் ஒரு வரேனும் வெட்டுப் புள்ளி யைத் தாண்டி சித்தி எய்த வில்லை என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

### முல்லைத்தீவின் நிலை

இரண்டு கல்வி வலயங்களையுடைய முல்லைத்தீவு மாவட்டத்தில் 49பாடசாலைகளைச் சேர்ந்த 1470மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றிய நிலையில் 29பாடசாலைகளைச் சேர்ந்த 151 மாணவர்கள் மாத்திரமே வெட்டுப் புள்ளியினைத் தாண்டியுள்ளனர். இதேபோன்று துணுக்காய் கல்வி வலயத்தில் 54 பாடசாலைகளைச் சேர்ந்த 698மாணவர்கள் தோற்றிய நிலையில் 10 பாடசாலைகளின் 26மாணவர்கள் வெட்டுப் புள்ளியைத் தாண்டியுள்ளனர். அதாவது மொத்தமாக 103 பாடசாலைகளின் 2ஆயிரத்து 168மாணவர்களில் 39பாடசாலைகளின் 177மாணவர்கள் வெட்டுப்புள்ளியை தாண்டியும் ஏனைய 64பாடசாலைகள் எவையும் வெட்டுப் புள்ளியை அண்மிக்கவில்லை.

### மன்னார் மாவட்டம்

மன்னார் மாவட்டத்தினைப் பொறுத்தவரையில் மடுக் கல்வி வலயத்தில் உள்ள 39 பாடசாலைகளைச் சேர்ந்த 483 மாணவர்கள் பரீட்சைக் குத் தோற்றியிருந்தனர். அதில் 8பாடசாலைகளின் 17மாணவர்களும். மன்னார் கல்வி வலயத்தில் 83பாடசாலைகளைச் சேர்ந்த 1728மாணவர்களில் 30பாடசாலைகளின் 109 மாணவர்கள் வெட்டுப் புள்ளியைத் தாண்டியுள்ளனர். அதாவது மாவட்டத்தின் 122பாடசாலைகளின் 2ஆயிரத்து 211மாணவர்களில் 38பாடசாலைகளின் 126மாணவர்கள் மாத்திரமே வெட்டுப்புள்ளியைத் தாண்டிய நிலையில் 84பாடசாலைகளில் எவரும் வெட்டுப் புள்ளியை அடைய வில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

### வவுனியாவும் தடுமாற்றம்

வவுனியா மாவட்டத்தில் வவுனியா தெற்குக் கல்வி வலயத்தில் 96 பாடசாலைகளின் 2ஆயிரத்து 332மாணவர்கள் தோற்றியநிலையில், 26 பாடசாலைகளின் 283மாணவர்களும். வவுனியா வடக்கு கல்வி வலய 72பாடசாலைகளின் 634மாண வர்களில் 19பாடசாலைகளின் 58மாணவர்களும் வெட்டுப் புள்ளியைத் தாண்டியுள்ளனர். மாவட்டத்தின் 168 பாடசாலைகளின் 2ஆயிரத்து 966மாணவர்களில் 45பாடசாலைகளின் 341மாணவர்கள் வெட்டுப் புள்ளியைத் தாண்டிய நிலையில் 123பாடசாலைகளில் எவரும் வெட்டுப் புள்ளியைத் தாண்டவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

### வடமாகாணக் கல்விக் களம்

இவற்றின் அடிப்படையிலேயே வடமாகாணத்தில் 892பாடசாலைகளைச்சேர்ந்த 18ஆயிரத்து 990 பேரில் 354 பாடசாலைகளின் 2ஆயிரத்து 21மாணவர்கள் மாத்திரம் வெட்டுப் புள்ளியைத் தாண்ட 538 பாடசாலைகளிலிருந்து ஒருவரேனும் வெட்டுப் புள்ளியைத் தாண்டவில்லை. அதேபோன்று தோற்றியிருந்த 17ஆயிரத்து 69மாணவர்களாலும் வெட்டுப் புள்ளியைத் தாண்டமுடியாதிருந்த இந்தப் பரீட்சையானது மாணவர்களுக்கும் அப்பால் பெற்றோருக்கும்,கல்விச் சமூகத்தினருக்குமுரிய பரீட்சையாகவும் நடந்து முடிந்துள்ளது பெற்றோரின் கௌரவ நிலையாகப் பார்க்கும் தன்மையுடைய இதன் முடிவுகள் இம்முறை வீழ்ச்சியைக் கண்டுள்ளதால் மாணவர்களை அழுத்தங்களுக்குட்படுத்தும் இந்தப் பரீட்சை தொடர்ந்தும் வேண்டுமா? என்ற கேள்வியும் பலமாகவுள்ளது.

### பாராட்டப்பட வேண்டியவர்கள்

இந்தப் பரீட்சையில் வடக்கில் 14 சதவிகித மாணவர்கள் கூட வெட்டுப் புள்ளியைத் தாண்டியிருக்கவில்லை. அவ்வாறு வெட்டுப் புள்ளியைத் தாண்டிய மாணவர்களிலும் 50வீத மாணவர்கள் புலமைப்பரிசில் பெறும் சந்தர்ப்பத்தினை மறுவடிவத்திலும் இழக்கின்றனர். அதாவது அரச பணியாளர் குடும்பத்தினருக்குக் குறித்த கொடுப்பனவு கிடையாது. ஆயினும் குறைந்தளவு எண்ணிக்கையிலான வறுமைப்பட்ட குடும்பத்திலுள்ள மாணவர்கள் நன்மை அடைகின்றார்கள். பல ஆயிரம் மாணவர்களைப் பலஆண்டுகளாக வருத்தி இடம் பெற்றுமுடிந்த பரீட்சையின் முடிவுகளை எண்ணிக் கவலை கொள்ளாமல், தீராத வறுமை, போதிய வசதியின்மையிலும்வெட்டுப்புள்ளியைத்தாண்டிச் சாதனை புரியும் ஏழை மாணவர்களைப் பாராட்டுவோமாக.



ஜெ.காயா

# மிரட்டும் எரிமலைகள்





தொன்மத்தில் நெருப்புக் குழம்பாயிருந்து பின்னர் உறைந்து இன்றைய நிலையிலுள்ளதே நாம் வாழும் கோள வடிவான இந்தப்பூமி. நெருப்புக் குழம்பாயிருந்தபோது வளிமண்டலம், நீர் ஆகியவற்றால் குளிர்விக்கப்பட்ட பூமியின் மேற்பரப்பு, வெப்பம் தணிந்து இறுகிப் பாறை வடிவம் பெற்றது. இதனால் பூமியின் உட்பகுதியிலுள்ள நெருப்புக் குழம்பு வெப்பத்தை வெளிப்படுத்த முடியாமல் தடைப்பட்டு விட்டது. இறுகிவிட்ட மேற்பரப்பின் சில நொய்தலான பகுதிகளூடாக அமுக்கத்துக்குட்பட்டுள்ள உட்பகுதி வெப்பம் வெளிவருகின்றது. வெளிவந்த வெப்பம் தணிந்து இறுகிப் பாறையாகிப் பெரும் மலை வடிவில் காட்சியளிப்பதாலயே எரிமலை என்கின்றோம். இவற்றின் வாய்ப்பகுதி மூடப்படாமல் தொடர்ந்து திறந்தேயிருக்கும். பூமியினுட்புறத்தேயுள்ள இத்தகைய நெருப்புக்குழம்புகள் நிலப்பகுதிகள், கடல் படுக்கைகள், பனிஉறைந்துள்ள துருவப்பகுதிகள் எனப் பூமியின் எந்தப் பகுதிகளாலும் வெளிவரக்கூடியவை. இவ்வாறு எரிமலைகள் பூமியின் நொய்தலான பகுதிகளான 07கண்டங்களையும் ஒட்டியுள்ள 05கவசத் தகடுளின் எல்லை, விளிம்புப் பகுதிகளூடாக வெளிவரு வதைக் கண்டறிந்து குறித்த பகுதியை 'எரிமலை வலயம்'எனக் கணித்துள்ளனர். இவ்வாறாகத் தனது உட்புற அமுக்கத்தினால் பூமியின் மேற்பரப்பை உடைத் தெறிந்துகொண்டு வரும் உட்பகுதி நெருப்புக்குழம்பு தணிந்து ஆறியதும் இறுகிப் பாறைகளாகி விடுகின்றது. இவற்றில் சில எரிமலைகள் தொடர்ந்தும் உயிர்ப்பு நிலையில் இருந்த வண்ணம் நெருப்புக் குழம்பைக் கக்கியவாறே இருக்கும். சில புகையை மட்டும்வெளிப் படுத்தி சாம்பல் துகள்களை வெளித்தள்ளும். சில எரிமலைகள்நெருப்புக்குழம்பைவெளித் தள்ளிவிட்டு சிறிது ஓய்ந்து பின்னர் இடைவிட்டு மறுடியும் கக்குவதும் ஓய்வதுமாகக் காணப் படும்.

### உறங்கும் அரக்கன்

உயிர்ப்பு நிலையிலுள்ள எரிமலைகளைக் காட்டிலும் உலகில் உறங்கு நிலையிலுள்ள எரிமலைகளே அதிகம். இவை தாம் இடையிடையே நெருப்புக்குழம்பைக் கக்குவதும் பின்னர் உறங்கிக்கொள்வதுமாய் இருப்பன. நிலப்பகுதியிலுள்ள இவ்வாறான எரிமலைகள் திடீரெனத் தமது செயற்பாட்டை ஆரம்பித்துக் கொள்வதாலே அதனைச் சூழவுள்ள மக்களுக்குப் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. கடற்பரப்புக்களின் கீழேயுள்ள எரிமலைகளின் குமுறலால் கடற்கொந்தளிப்புக்களும் பேரலைகளும் கடல் வாழ் உயிரிழப்புக்களும் ஏற்படுகின்றன. எரிமலைகளூடாகப் பூமியின் உட்பகுதி நெருப்புக் குழம்பு வெளிவரும்போது அதன் வெப்பநிலை அதன் 700 செல்சிய சில் இருந்து 1200 செல்சியஸ் வரை காணப்படும். பசுபிக் சமுத்திரத் தகட்டின் விளிம்புகளிலும், அதன் கிழக்குக் கரையோரங்களிலும், வட-தென் அமெரிக்கக் கண்டத் தகட்டின் புறங்களிலும், ஜப்பான், இந்தோனேசியத் தீவுகள், பிலிப்பைன்ஸ் ஆகியவையே எரிமலைகள் நிறைந்த பகுதிகளாகக் காணப்படுகின்றன.

### உறங்கி விழித்தவை

இந்த மாதம் 2ஆம் திகதி வடஅமெரிக்க நாடான மெக்ஸிக்கோவின் ஜலிஸ்கோ மாகாணத்திலுள்ள 'கொலிமா' என்ற எரிமலை உறங்கு நிலையிலிருந்து விழித்து பேராபத்தைத் தரும் வகையில் வெடித்து நெருப்புக் குழம்பை வெளியேற்ற ஆரம்பித்துள்ளது. 1913ஆம் ஆண் டில் நெருப்பை வெளித் தள்ளி உறங்கிய இது இடையிடையே தனது சிறிய குமுறல் களை வெளிப்படுத்தியிருந்தாலும் சுமார் 103 வருடங்களின் பின்னர் தற்போது தான் முழு நிலையில் விழித்திருக்கின் றது. அத்தோடு கடந்த 09ஆம் திகதி ஜப்பானின்குமாமேட்போபகுதி



யிலுள்ள 'அஸோ' எரிமலை வெடித்து நெருப்புக் குழம்பை வெளித்தள்ள ஆரம்பித்துள்ளது. சுமார் 5ஆயி ரத்து 222அடி உயரமுள்ள இந்த எரிமலை கிட்டத்தட்ட 36 வருடங்களாக உறங்குநிலையில் இருந்து தற்போது விழித்துள்ளது. இவைபோன்ற எரிமலைகள் பல உலகில் இப்போதும் உறங்கியவாறே இருக்கின்றன.

### என்றும் அழிவற்றவை

எரிமலைகள் நெருப் புக் குழம்பை வெளிப்படுத்தும் கால அளவை வைத்தே உயிருடன் உள்ளவை, உறங்குகின்றவை, அழிந்தவை என்று ஆராய்ச்சியாளர்கள் வகைப்படுத்திக் கொள்கின்ற னர். எரிமலைகளின் ஆயுட்காலம் சில மாதங்களில் இருந்து மில்லியன் ஆண்டுகள் வரை நீடிக்கின்றது. சுமார் 10மில்லி யன் ஆண்டுகளுக்குள் ஒரு தடவையாயினும் குழம்பை வெளி யேற்றாதவை அழிந்தவை என்று கருதப்படினும் அந்தத் தீர்மானத்தைத் தற்காலிகமாகவே எடுக்கமுடியும். ஏனெனில் அவை எப்போதாவது உயிர்ப்படைந்து விடலாம் என்ற அச்சப்பாடும் இல்லாமலில்லை. அத்துடன் உறங்கும் எரிமலையிலிருந்து அழிந்துவிட்ட எரிமலையை வேறுபடுத் திப் பார்ப்பது சிரமம். அதன் செயலாற்றுத்தன்மைகள் குறித்து எரிமலைகள் அழிந்துவிட் டவை என்றே கருதப்படுகின்றன. இருந்த போதிலும், எரிமலைகள் நீண்ட காலத்திற்கு உறங்குகின்றவையா கவே இருக்கலாம். அலாஸ்காவில் உள்ள போர்பீக்டு எரிமலை கி.மு. 8000 க்கு முன்பிருந்து செயற்படாமலிருந்தது. இது 2006ஆம் ஆண்டில் உயிர்ப் படைந் தது. இதற்கு முன்னர் இது நெடுங்கால மாகச் செயற் படாததால் அழிந்துவிட்டதாகக் கருதப்பட்டிருந்தது. திடீரென உயிர் பெறும் இவற்றின் பயங் கரத்தால் மக்கள் பாதிப்படையாமல் இருப் பது சற்றுக்கடினமே.

## போதையும் இலட்சியமும்



கல்வியால் உயர்ந்துள்ள
எம் கலை கலாசாரம்,
கண் துஞ்சாது காத்துவந்த
தூயதமிழ்ப் பண்பாடு
பஞ்சாகப் பறக்கிறது
பாதகச் செயல்களினால்.
ஒழுக்கத்தை உயிரினும் மேலாய்
ஓம்பிய எம்மினம்
வெட்கித் தலைகுனிந்து
வேதனை அடைகின்றது.
போதையினால் இளையோர்
பிஞ்சிலே பழுக்கின்றனர்.

போதைப் பொருள்
விற்பவர், விநியோகிப்போர்
நஞ்சினும் கொடியவர்.
நாயிலுங் கீழ்வர்கள்.
கொடிய விசப் பாம்புகள்,
கொள்ளிவால் பேய்களிவர்.
கொஞ்சமும் இரங்கிடாதீர்.
ஏமாற்றுப் பேர்வழிகள்
பொல்லாரிவர்.
போக்கிடமற்றவர்.
இனமழிக்கும் காமுகரை
இனங்காண விழித்திடுங்கள்.

நாளையெம் பிள்ளைகள்
நாய்பேயாய் அலையாமல்
போதைக்கு அடிமையாகி
முடமாகிப் போகாமல்
இளையோரே வீழ்ந்தழியும்
விட்டிலாய் மாறிடாதீர்
நாளைய விடியலை
நம்பியுள்ள பெற்றோரே!
கருத்தாய் இலட்சியத்தை
கண்முன்னே வையுங்கள்
வருத்தும் தீமையகலும்
வசந்தம் வாழ்வில் மலரும்!

*அபீர்ராஜன் அன்ரனி பீற்றர்*

# 142 ஆவது அஞ்சல் தினம்






மு.ஈழத்தமிழ்மணி

'டிங்...டிங்...' மணியோசை கேட்டதும் ஓடிப்போய் வாசலைப் பார்க்க வைத்தும், காத்திருப்புக்களை ஏற்படுத்தியதுமான தபால், தனக்கான சேவையைத் திறம்படச் செய்துகொண்டிருக்கின்றது. ஒக்ரோபர் மாதம் 9ஆம் திகதி உலக அஞ்சல் தினமாக உலகம் முழுவதும் கடைப்பிடிக்கப்பட்டுவருகின்றது. 15.09.1874ஆம் ஆண்டு சுவிற்சர்லாந்தில் நடைபெற்ற மாநாட்டின் தீர்மானத்துக்கு அமைவாக ஒக்ரோபர் ஒன்பதாம் திகதி பொது அஞ்சல் சங்கம் உருவாக்கப்பட்டது. அதன் பின் அது 1878இல் அகிலதேச அஞ்சல் சங்கம் எனப்பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இதற்கானஉறுப்புரிமையை இலங்கை 1977ஆம் ஆண்டிலும், 1949ஆம் ஆண்டிலுமாக இரண்டு தடவைகள் பெற்றுக்கொண்டது.

அஞ்சல் சேவையானது 200வருடங்களுக்கு மேற்பட்டவரலாற்றைக் கொண்டது. 1870ஆம் ஆண்டு பிரேஸில்நாட்டுப்படைகள் பாரிஸ் நகரை முற்றுகையிட்டவேளை, புறாக்கள் மூலம் பிரேஸிலால் பாரிஸுக்குச் செய்திகள் அனுப்பப்பட்டன. அனுப்பப்பட்ட செய்திகள் யாவும் பாரிஸ் நகரை அச்சமடையச் செய்திருந்தன. புறாக்கள் மூலம் அனுப்பப்பட்ட செய்திகளில் பலவற்றை உரிய இடத்துக்குக் கொண்டு சேர்ப்பிப்பதற்குப் புறாக்களால் முடியவில்லை . உரிய இடத்தை அடையாது பாதை மாறிச்சென்றமையால், சில புறாக்கள் வழியில் தபால்களைத் தவறவிட்டிருந்தன.

காகிதத்தாள் கண்டுபிடிக்கப்பட்டதும், 15ஆம் நூற்றாண்டுப் பகுதியில் சாதாரண தபால் விநியோகம் ஆரம்பமானது. ஆகாய விமானம் கண்டுபிடிக்கப்பட்ட 11வருடங்களின் பின்னர் விமானம் ஊடாகத் தபால்களை நாட்டுக்கு நாடு வழங்கும் சேவைகள் ஆரம்பமாகின. நியூயோர்க்-மினோவா தபால் அதிபருக்குத் தபால் பொதியானது வானிலிருந்து, 23.09.1911ஆம் ஆண்டு விமானம் மூலம் போடப்பட்டது. குறித்த தபால் அதிபர் பரந்த வயல்வெளியில் நின்று சிவப்புக் கொடியை அசைத்துக் காட்டியபடி வானிலிருந்து விமானம் மூலம் போடப்பட்ட தபால் பொதியைப் பெற்றுக் கொண்டார்.

## அஞ்சல் தலை வெளியீடு

1840ஆம் ஆண்டு மே மாதம் 6ஆம் திகதி ஒரு பென்னி மதிப்புடைய கறுப்பு நிறத்தில் அஞ்சல் தலை வெளியிடப்பட்டது. 1841ஆம் ஆண்டு முதல் சிவப்பு நிறத்தில் தபால் தலை வெளியாகியது. இன்று வரை இங்கிலாந்து நாட்டில் வெளியிடப்படும் அஞ்சல் தலையில் அந்த நாட்டின் பெயர் குறிப்பிடப்படுவதில்லை. தபால் விநி யோகம் செய்வதற்கு மக்களிடமிருந்து கட்டணம் அறவிடவேண்டிய தேவை ஏற்பட்டது.

இங்கிலாந்தைச் சேர்ந்த சேர்ரோலண்ட் ஹில் என்பவர் 1835 இல் அஞ்சல் கட்டணத்தை நாடு முழுவதும் ஒரே மாதிரியாக முன் வைக்க வேண்டும் என்ற யோசனையுடன் பணம் அறவிடும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.


இரண்டாவதாகப் பிரேஸில் நாடு அஞ் சல் தலையை அறிமுகப்படுத்தியது. 1854ஆம் ஆண்டு ஜூலை மாதம் முத லாம் திகதி இந்தியா அஞ்சல் தலையை வெளியிட்டது. 1872 இல் பிரிட்டனில் இலங்கை எனக் குறிப்பிடப்பட்ட முத்திரை பாவனைக்கு வந்தது. 1958ஆம் ஆண்டு மே மாதம் 14ஆம் திகதி சிங்கள எழுத்தில் முதல் முத்திரை வெளியிடப் பட்டது. 1859ஆம் ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி ஒஸ்ரிய நாடு முதல்தபால் உறையை அறிமுகப்படுத்தியது.

## இலங்கையில் ஆரம்பம்

1372ஆம் ஆண்டு ஓகஸ்ட் மதம் 22ஆம் திகதி இலங்கையில் தபால்உறை வெளியிடப்பட்டது. இலங்கையின் கரையோரப் பிரதேசங்களிலேயே முதன் முதலில் தபால் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன. 1815ஆம் ஆண்டு கொழும்பு, காலி, மாத்தறை, மன்னார், திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலும் தபால் நிலையங்கள் அமைக்கப்பட்டன. 1921ஆம் ஆண்டு அக்மீமன, ஆனமடுவ, சிலாவத்துறை, திவுலுப்பிட்டிய, கிரியெல்ல, மூதூர் ஆகிய இடங்களில் உப தபாலகங்கள் திறக்கப்பட்டன.

1972ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதி அஞ்சல் சேமிப்பு வங்கியானது தேசிய சேமிப்பு வங்கியாக மாற்றம் பெற்றது.

1858ஆம் ஆண்டு இலங்கையில் தந்திச் சேவை ஆரம்பிக்கப்பட்டது. கொழும்புக்கும், காலிக்கும் இடையில் 1877இல் உள்நாட்டுக் காசுக் கட்டண சேவை அறிமுகப்படுத்தப்பட்டது.



## போர்க்காலத்திலும் சேவை

இலங்கையிலும் தபால்சேவையானது நீண்டகால பாரம்பரியத்தைக் கொண்டிருந்தது. போர்க்காலத்தில் தபால் சேவைகள் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் பாதிக்கப்பட்டிருந்தாலும், ஓரளவுக்குத் திருப்தியாகவே நடந்தன. தபால் சேவை ஊழியர்களும், உத்தியேகத்தர்களும், தபால்சேவையினால் போர்க்காலத்தில் பாதிக்கப்பட்டிருந்தனர்.

உள்ளூர்த் தபால்களாயினும்சரி, கடல் கடந்த நாடுகளிலிருந்து வருகின்ற தபால்களாக இருந்தாலும்சரி, உரியவர்களிடம் சேர்ப்பிப்பதில் போர்க்காலத்தில், அவர்கள் ஆற்றிய பங்கு அள்விட முடியாதது. ஒருகாலத்தில் தபால் சேவைக்கு மக்கள் மத்தியில் பெருமதிப்பு இருந்தது.

கொழும்பிலிருந்து எப்போது கடிதம் வரும்,வெளிநாடுகளிலிருந்து எப்போது கடிதம் வரும் என விழிந்ததும் வீட்டுவாசல் கதவை திறந்தவிழி மூடாது பார்த்திருந்த காலமிருந்தது.

சிறுவர்கள் தொடக்கம் பெரியவர்கள் வரைக்கும் தபால் சேவகனின் வரவை எதிர்பார்த்துக்காத்திருப்பர். உறவினர் நண்பர்களிடமிருந்து வருகின்ற கடிதங்கள் கையில் கிடைத்ததும் மகிழ்ச்சிக்கு அளவேயிருக்காது. தப்பால்சேவைக்கு அப்படியொரு முக்கியத்துவமிருந்தது .

## நவீன வசதிகளுடன் அஞ்சல்

தற்போது கைபேசிகள், இணையங்கள் என நவீனதொலை தொடர்புச் சாதனங்கள் மக்கள் மத்தியில் தாராளமாக நுழைந்து கொண்டமையால், மக்களுக்கான தபால் சேவையும் மாற்றமடைந்துள்ளது.

தற்போது தபால் நிலையங்களின் நவீன சேவைக்ள் மூலம் பணம் அனுப்புதல் மூலம் மின் சாரக் கட்டணம் செலுத்துதல் கட்டணம் செலுத்துதல், உள்நாட்டு விரைவுத்தபால், விரைவு பொதி சேவை என்பன விசேட சேவைகளாக நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

## சேவை தேவையானது

200வருடங்கள் பழைமைவாய்ந்த அஞ்சல் சேவையின் மூலம் இலங்கையில் அண்ணளவாக 648அஞ்சல் அலுவலகங்கள், 3409 உப தபாலகங்கள் மக்களுக்கு சேவையாற்றிக் கொண்டிருக்கின்றன.

இன்றைய உலகில் அறுநூறாயிரம் அஞ்சல் நிறுவனங்களில் 430 மில்லியன் கடிதங்கள், ஆறுமில்லியன் பொதிகள்பரிமாற்றம்செய்யப்படுகின்றன. இத்தரவைவிட இன்னும் அதிகமாகவும் இருக்கலாம். இன்றைய 142ஆவது தபால்தினம் மிக்வும் சிறப்பானதொன்றாகும். இதற்குரிய முக்கியத்துவத்தை அதன் சேவையிலிருந்தே உணரமுடிகின்றது.



## மறப்பேனா என் தாயவளை...

முன்னூறு நாள்சுமந்தாய்
கண்ணீரில் தான் நனைந்தாய்
மரணத்தை வென்று
மகவாக எனை ஈன்றாய்
உதிரத்தை ஊட்டி
உயிர் வாழ வைத்தாய்
அல்லும் பகலும் நினைந்தாய்
அன்பைச் சொரிந்தாய்
வசந்தம் என் வாழ்வில் தவழ

நித்தம் நித்தம் துடித்தாய்
நிறை குடமாய் நான் திகழ
நித்திரையைத் தான் மறந்தாய்
நான் காணுகின்ற காட்சியாவும்
உன் காட்சிக்கு ஈடாகுமா?
என் உன்னத உறவே!

என் வாழ்வின் வசந்தமே
நீ கருவறையில் தந்த சுகம்
கால மெல்லாம் போதுமம்மா
இன்பம் சுமக்க வைத்ததாயே
என் உயிர் மூச்சு நிற்கும் வரை
உனை மறவேன் தாயே

- சி.கலாமணி





# 'சைபீரியா மோனமவர்'

## ரஷ்யாவின் சுயதரிசனம்

ரஷ்யா முன்வைத்த கொள்ளை கொள்ளும் இலக்கியங்களும் திரைக்காவியங்களும் சென்ற நூற்றாண்டின் உலக வரலாற்றை ஆழமாக அறிய உதவின. அதன் பின்னர் சில தத்ரூபமற்ற படங்கள் வெளி வர நீண்ட மௌனம் நிலவியது. தற்போது வெளிவந்திருக்கும் 'சைபீரியா மோன மவுர்' என்ற திரைப்படம் ரஷ்யாவின் சினி மாத்துறையில் ரஷ்யாவை நிலை நிறுத் தியிருக்கிறது.

### தனிமையின் பிடியில்

சைபீரியாவில் ஓர் இலையுதிர்கால இறுதி. பேர்தான் தாய்கா கிராமத்தில் ஒரு கி.மீற்றருக்கு ஒரு வீடுதான். அதுவும் மரப்பலகைகளலான வீடுகள். அங்கே வயதான இவானும் அவரது பேரன் லெஷியாவும் வாழ்கிறார்கள். ஆற்றங்கரை வீதியருகே மனைவி மற்றும் மூன்று பெண்குழந்தைகளோடு வசிக்கும் அவனது மாமா யூரிதான் அடிக்கடி குதிரை வண்டியில் வந்து அவர்கள் இருவருக்கும் உணவு கொடுத்துவிட்டுப் போகிறார். மாமன் யூரியுடன் சென்று விடும்படி இவான் கேட்டுக் கொண்டதைச் சிறுவன் மறுக்கிறான். அவனது பாசத்துக்காக ஒரு காட்டு நாய் அவர்கள் வீட்டுத்தோட்டத்தி லேயே சுற்றிச்சுற்றி வருகிறது. முதியவரின் மது அருந்தக் கூடாது போன்ற கட்டுப் பாடுகள் மிக்க கடவுள் பக்தியைக் கண்டு உறவி னரும் அங்கு ஒருமுறை வரும் ராணுவ வீரர்களும் இவர்களை வெறுக்கிறார்கள். சிறுவனை முதியவர் துன்புறுத்து வதாகக் கருதுகிறார்கள்.

அவர்கள் வீட்டுக்கு வந்துசெல்லும் ராணுவ வீரர்கள் போகும்போது கடவுள் சின்னத்தை எடுத்துச் செல்வதை அறிந்து அதைத் தடுக்க முற்படும் முதியவர் அடித்து கீழே தள்ளிவிடப்படுகிறார். அவர் உடல்நலம் குன்றிவிடப் படுக்கையில் இருக்கும் அவருக்காகச் சிறுவன் இப்போது உள்ளார்ந்த அன்போடு தான் வரைந்து வைத்திருக்கும் மேரிமாதாவை வணங் குகிறான்.

சிலநாள்களில் எழுந்து எப்போதும்போல் உற்சாகமாக இயங்கத் தொடங்குகிறார் முதியவர். சிறுவன் காட்டுநாய் ஒன்றிடம் நட்புப் பாராட்டுவது முதியவருக்குப் பிடிக்கவில்லை. ஒருநாள் அவர் அந்த நாயைச் சுட்டுக்கொல்ல முயல்கிறார். சிறு வன் அதைப் பார்த்துவிட்டு அவரிடமி ருந்து விலகி ஓடுகிறான். ஓடிவன் அருகி லுள்ள கிணற்றில் இறங்கிக் கொள்ளப் பெரியவர் வெளிக் கொண்டுவர முயல் கிறார். உடல் தளர்ந்த நிலையில் அவனை மீட்க முடியாமல் உதவி தேடி சிறுவனை மீட்க ஆட்களைத் தேடி அலை கிறார், எதிரே பிரமாண்டமான அந்த கம் யூனிச அரிவாள் சுத்தியல் சிலைகளின் பக்கமாக எங்கிருந்தோ பாய்ந்துவந்து அவரைக் கடித்துக் குதற முற்படுகின்றன காட்டுநாய்கள்.

### காட்சியின் பின்னால்

ஒரு நாட்டில் ஒருநூற்றாண்டையே ஆட்டுவித்த ரஷ்யாவின் கம்யூனிசக் கட்சியின் சின்னத்திலிருந்து நாய்கள் பாய்ந்துவரும் காட்சியைச் சாதாரணமாக எடுத்துக்கொள்ளமுடியாது. 90களுக்குப் பிறகு ரஷ்யா பிளவுபடத் தொடங்கியதும் ஹங்கேரி, போலந்து நாட்டுப் படங்கள் பல உண்மைகளை வெளியே கொண்டுவந்தன. அந்த உண்மைகள் வெடித்ததில் பல உண்மைகள் வெளிவரத் தொடங்கின. மகத்தான இலக்கியங்கள், விஞ்ஞான, தத்துவார்த்த கொடைகளைத் தந்தருளிய ரஷ்யாவா இப்படி மனிதாபிமானமற்று நடந்துகொண்டது? இவ்வளவு கசப்பு மிக்கதா? என்றெல்லாம் அதிர்ந்து போன ரசிகர்கள் ஏராளம். எனினும் இந்தப் படத்தின் சைபீரிய வனப்பிரதேசத்தை வெவ்வேறு வகையில் காட்சிப்படுத்த கமரா வைக் கையாண்ட விதம் அபாரமா னது. மரப்பலகைக் குடில், ஆளற்ற நேரம்பார்த்து வந்து ஆடுகளைக்உணவாக்கி விட்டுப் போகின்ற காட்டு நாய்கள் சிறந்த காட்சி கள்.

### நாய்களின் துரத்தல்

இப்படத்தில் மிக முக்கி யமான ஒரு காட்சி. சிறு வனது மாமா யூரி ஒரு நாள் குதிரை வண்டி யில் செல்லும்போது வழக்கமாக எடுத்துச் செல்லும்துப்பாக்கியை மறந்து விட்டுச் செல் கிறார். அப்போதே வீட்டிலிருந்து அவரது மனைவி, அவரைக் கூப்பிடு எனக் குழந்தைகளிடம் கூறித் துப்பாக் கியைக் கையில் எடுத்துக்கொண்டு வெளியே வந்துபார்க்க வண்டி தொலைதூரம் போய் விட்டிருக்கும். யூரியின் குழந்தை களும் மனைவியும் மிகவும் கவலை யோடு அவர் சென்ற பாதையை வெகு நேரம் பார்த்துக்கொண்டிருப்பார்கள். நடுக் காட்டில் பாதையில் மரங்கள் அடர்ந்த மலைப்பாதையில் குதிரை வண்டியோட் டிச் செல்லும் யூரி யைக் குறிவைத்துக் காட்டு நாய்கள் பாய்ந்துவருகின்றன. குதிரையின் பாய்ச் சலுக்கு நாய்களால் ஈடுகொடுக்க முடிய வில்லை. ஆனாலும் அவற்றின் ஓட்ட வேகம் கூடி ஒரு கட்டத்தில் நாய்கள் வண்டியைத் தொட்டு அவரைக் கீழே தள் ளிக் கொன்று சதைகளை எடுத்துச் செல் கின்றன.

### தளபதியின் மனிதநேயம்

தளபதி ஒருவன் தனக்கு வேண்டிய இணக்கமான பெண்ணிடம் அவள் விரும்பாத நேரத்தில் மோசமாக நடந்து கொள்ள முற்படுவதைப் பொறுக்காத இளைய இராணுவ வீரன் துப்பாக்கியால் வேறுதிசையில் சுட்டுக் கோபத்தைக் காட்டி தடுத்துநிறுத்துகிறான். ஆனால் அவளோ தளபதி பிரியும்நேரத்தில் கவலை யோடு முத்தமிட்டு அனுப்புகிறாள். மருத்துவமனைச் செவிலியரை முறை கேடாக நடத்தும் சமயமொன்றில் அங்கு வந்த அந்தத் தளபதி தன் உயரதிகாரியி டம் முறைத்துக்கொள்கிறான். "இனி உனக்கு இடமாற்றம்தான்" எனச் சொல் வதையும் கேளாமல் இளம் செவிலி யரைக் காப்பாற்றி மீட்டுச்செல்கிறான். வீதியில் அலையும் பெரியவரை நாய்கள் குதறத் தொடங்கியவுடனே அங்கு வரும் தளபதி அவரைக் காப்பாற்றி சிகிச்சையளிக்க ஜீப்பில் ஏற்றிக் கொள்கிறான். பெரியவரி டமிருந்து கடவுள் சின்னத்தை எடுத்து வந்த அதே தளபதிதான் இப்போது அவ ரைக் காப்பாற்றவும் செய்கிறான்.

**பரிவுக்கும் குரூரத்திற்குமான இடைவெளியை சூழ்நிலைகள் தீர்மானிக்கும் யதார்த்ததை புரிந்துகொள்ளச் சொல்கிறது படம். மனிதனுக்கும் விலங்குகளுக்குமான கிளைக் கதைகளின் ஒப்பீட்டுக் காட்சிகள் திகைப்பூட்டுகின்றன.**

### பின்தொடரும் காட்டு நாய்


மனிதர்களைப் பற்றி மட்டுமல்ல காட்டு நாய்களைப் பற்றிய நமது கணிப்புகளை யும் புரட்டிப்போடுகிறது படத்தின் பின்பாதி. சிறுவனின் அத்தை காட்டுநாய்களால் கணவன் கொல்லப்பட்டதை அறி யாமல் தன் கணவனைத் தேடிச் சிறு வனையும் பெரியவரையும் காண வருகிறாள். அவளிடம் சிறுவன் கிணற்றில் இருப்பதை உணர்த்தும் விதமாகச் சைகைகளால் முறையிட்டு கிணற்றருகே ஓடிக் காட்டும் போதும் சரி, கடைசிக் காட்சியில் பெரியவ ரையும் சிறுவனையும் செவிலியின் உதவியோடு காப்பாற்றி ராணுவ வீரர்கள் ஜீப்பில் ஏற்றிச் செல்லும் போதும் சரி அவர்களைப் பின் தொடர்ந்து ஓடிவந்துகொண்டே யிருக்கிறது சிறுவனுக்குப் பிரிய மான அந்தக் காட்டு நாய்.

பரிவுக்கும் குரூரத்திற்குமான இடை வெளியை சூழ்நிலைகளால் தீர்மானிக் கும் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளச் சொல்கிறது படம். மனிதனுக்கும் விலங் குகளுக்குமான கிளைக்கதைகளின் ஒப்பீட்டுக் காட்சிகள் திகைப்பூட்டுகின்றன. ரஷ்ய இயக்குநர் வியாச்சேஸ்லவ் இந்தப் படத்தின் மூலம்புதியதொரு வெளிச் சத்தைப் பாய்ச்சியுள்ளார்.

# கறிவேப்பிலை மிளகுக் குழம்பு

### தேவையானவை

உளுந்து 50 கிராம்
காய்ந்த மிளகாய் - 2
மிளகு - ஒரு கரண்டி
புளி - 40 கிராம்
பெருங்காயத் தூள் - அரைக் கரண்டி
கடுகு - 1 கரண்டி
நல்லெண்ணெய் - தேவையான அளவு
கறிவேப்பிலை அரைக் கப்
எண்ணெய், உப்பு - தேவையான அளவு



### செய்முறை

வெறும் சட்டியில் உளுந்து, காய்ந்த மிளகாய், மிளகு, கறிவேப்பிலை ஆகியவற்றை வறுத்துப் பொடித்துக்கொள்ளுங்கள். சட்டியில் எண்ணெய் விட்டுக் கடுகு, பெருங்காயம் சேர்த்துத் தாளித்து, பின்னர் புளிக்கரைசலைச் சேர்த்துக் கொதிக்கவிடுங்கள். நன்றாகக் கொதித்ததும், அரைத்த பொடியை அதனுடன் சேர்த்துக் கொள்ளுங்கள். தேவையான அளவு உப்புச் சேர்த்து மீண்டும் ஒருமுறை கொதிக்க வைத்ததும் கறிவேப்பிலை மிளகுக் குழம்பு தயார். இறக்கிப் பரிமாறுங்கள்.



# பீட்ரூட்டின் மகத்துவம்

- பீட்ரூட்டைப் பிழிந்து சாறு எடுத்துத் தேனுடன் கலந்து சாப்பிட்டு வர குடற்புண் குணமாகும்.
- பீட்ரூட் சாறுடன் வெள்ளரிச்சாறு கலந்து சாப்பிட்டு வர, சிறுநீரகங்களும், பித்தப்பையும் சுத்திகரிக்கப்படும்.
- பீட்ரூட்டை நறுக்கி வேகவைக்காமல் எலுமிச்சைச் சாற்றில் தோய்த்து உண்டு வர குருதியில் சிவப்பணுக்கள் உற்பத்தியாகும்.
- கல்லீரல் கோளாறுகளுக்கும் பித்தம் அதிகமாகி அடிக்கடி பித்த வாந்தி எடுப்பவர்களுக்கும் பீட்ரூட் சாறு சிறந்தது.
நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிறந்த உணவாகும்.
- பீட்ரூட் கீரையையும் மற்றக் கீரைகள் போல் சமையல் செய்து சாப்பிட அல்சர், மஞ் சள் காமாலை போன்ற நோய்கள் சரியாகும்.
- புதியதாகக் குருதி அணுக்கள் உருவாகத் துணை புரிகிறது. பச்சைக்காய்கறிகள், கீரைகள், பழங்கள், பேரீச்சம்பழம், அத்திப்பழம் ஆகியவற்றை அதிக அளவு உண்டும், குருதியின் அளவு அதிகரிக்காமல் இருக்கும் பட்சத்தில் பீட்ரூட்டை வாரத்துக்கு நான்கு நாள்கள் உண்டால் நல்ல பயன் கிடைக்கும்.
- உடலுக்குக் குளிர்ச்சிதரும் பீட்ரூட் சாறு குருதிச்சோகை, உடல் எடை ஆகியவற்றைக் குறைக்கச்செய்யும். அத்துடன் சிறுநீரக எரிச்சலைக் குறைக்கிறது.



# அத்திப்பழம்

- நாள் ஒன்றுக்குத் தேவையான நார்ச் சத்துக் கிடைத்து விடும். விரைவாக செரிமானம் அடையக் கூடியது.
- இரும்புச்சத்து இருப்பதால் குருதி உற்பத்தி அதிகரிக்கும்.
- சோடியம், கழிவு நீரை வெளியேற்றி வயிற்று வலி வராமல் தடுக்கும்.
- இதிலுள்ள விற்றமின் 'ஏ' முதியவர்களுக்கு ஏற்படும் பார்வைக் குறைபாட்டைக் குணப்படுத்தும்.
- உலர்ந்த அத்திப் பழத்தை வினாகிரியில் ஒரு வாரம் ஊறவைத்துத் தினமும் சாப்பிட்டால் மது மற்றும் போதைப் பழக்கத்தில் இருந்து மீண்டு வரலாம்.

# மாற்றி மாற்றி வைக்காதீர்!

நீங்கள் ஆணாயினும் பெண்ணாயினும் உங்கள் தலைமுடியில் மிகுந்த அக்கறை உள்ளவரா? உங்கள் முடியை இன்னும் இன்னும் அதிகம் வளர்த்துக் கொள்வதிலும் கருமையாக்கிக் கொள்வதிலும் ஆர்வத்துடன் இருப்பதால், அதனை ஊக்குவிக்க தலைக்கு வைக்கும் எண்ணெய்களை காலத்துக்குக் காலம் மாற்றி மாற்றி வைக்காதீர்கள்.

தலைமுடியைப் பராமரிக்க வைக்கும் எண்ணெயின் சாதக, பாதக விளைவுகள் உங்களுக்கு உடனே தெரிவதில்லை. குறிப்பிட்ட காலம் வரைக்கும் ஒரு எண்ணெயை பாவித்து, என்னடா முடி வளரவில்லையே என்று வேறோரு எண்ணெய்க்கு மாறிவிடாதீர்கள். ஏனெனில் நீங்கள் வைக்கும் எண்ணெய் உங்கள் தலை முடிக்கு ஏற்றதா? என்பது உடனடியாகத் தெரிந்துவிடாது.



அதன் பயனைக் குறிப்பிட்ட காலத்துக்குப் பின்னரே உங்களால் உணர முடியும். அதைவிடுத்து தொலைக்காட்சியில் காட்டப்படும் விளம்பரப்படுத்தல்களைப் போல, உங்களுக்கு உடனடியாக முடி வளர்ந்துவிடும் என்று தவறாக எண்ணிவிடாதீர்கள்.

அத்துடன் அடிக்கடி எண்ணெயை மாற்றி மாற்றி வைப்பதாலும் ஆபத்து உங்கள் தலைமுடிகளுக்கே. எவ்வளவுதான் இயற்கைத் தயாரிப்பு என விளம்பரப்படுத்தல்களில் காட்டப்படும் எண்ணெய்களை வைத்தாலும், அவை இயந்திரத் தயாரிப்பு எண்ணெய்களே.

வியாபாரத்தை நோக்காகக் கொண்ட அவற்றில் உண்மைத் தன்மையற்ற கலப்படத் தன்மையே அதிகமிருக்கும். ஆகவே கைகளால் தயாரிக்கப்பட்ட இயற்கை முறைத் தாவர எண்ணெய்களையே இயலுமானவரையில் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

அத்துடன் தலையில் முடி மட்டுமல்ல உள்ளே மூளை இருப்பதையும் உணர்ந்து கொள்ளுங்கள்.

# நன்னாரித் தேநீர்



நன்னாரி வேர்களிலிருந்து எடுக்கப்பட்ட சாற்றை வழமையான நமது தேநீரில் கலந்து குடித்துவர, இயற்கை முறையிலேயே சில நோய்களைக் குணப்படுத்த முடியும். நன்னாரி படர்ந்து வளரும் ஒருவகைத் தாவரம். அதன் இலை, தண்டுகளில் உள்ள பயன்களைக் காட்டிலும், வேரில் உள்ள மருத்துவப் பயன்களே அதிகம். வேர்களிலிருந்து பிளிந்த சாறு இனிப்புடன் இணைந்த கசப்புத் தன்மையுடன் நல்ல மணத்தையும் தரக்கூடியது. இத்தகைய நன்னாரிவேரின் சாறு கலந்த தேநீரைக் குடிப்பதால், அதிகூடிய வியர்வை உண்டாகி உடலில் இருக்கும் தேவையற்ற கழிவுநீர்கள் வெளியேறி விடுகின்றன.

சிறுநீர் வழிக் கழிவு நீர் வெளியேற்றத்துக்கும் தொழில் புரிகின்றது. குருதியைத் தூய்மைப்படுத்தும் தன்மையும் இதற்குண்டு. தோல் நோய்களான கிரந்தி, சொறி, சிரங்கு போன்றவற்றையும் பாரிசவாதம், குருதிப்போக்கு ஆகியவற்றையும் குணப்படுத்திக்கொள்ளும் ஆற்றல் இந்த நன்னாரித் தேநீரில் உண்டு. நன்னாரியானது சீமை நன்னாரி, பெருநன்னாரி, கருநன்னாரி எனப் பல வகைத் தாவரங்களாகக் காணப்படுகின்றது.



# சினந்து கொண்டிருக்கும் சீனா

யாதுமாகி

சீனா, தாய்வான், பிலிப்பைன்ஸ், புருனே, மலேசியா, வியட்நாம் ஆகிய நாடுகளால் சூழப்பட்டுள்ள கடற்பரப்பைத் தனக்குச் சொந்தமானது என்று உரிமை கொண்டாடி வருகின்றது சீனா. இதற்கு அதனைச் சூழ்ந்துள்ள மற்றைய நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்த நிலையிலும், தனது தெற்குக் கடற்பரப்புடன் அந்தப் பகுதியை இணைத்துக் கொள்ளும் வகையில் சீனா செயற்கையாகத் தீவுகளை உருவாக்கி வருகின்றது. இது பசுபிக் பெருங்கடலின் ஒரு பகுதியாகும். சிங்கப்பூருக்கும் தாய்வான் நீரிணைக்கும் இடையில் அமைந்துள்ளது. இந்தக்கடலின் பரப்பளவு 3,500,000 சதுர கிலோ மீற்றர்கள். உலகிலுள்ள ஐந்து சமுத்திரங்களை அடுத்துள்ள பெரிய கடல்களுள் இதுவும் ஒன்று. உலகின் கப்பல் போக்குவரத்தில் மூன்றில் ஒரு பங்கு இந்தக் கடல் வழியே இடம்பெறுவதால், இந்தக்கடல் முக்கியத்துவம் பெறுகிறது. மேலும், இந்தக் கடல்படுக்கையில் எண்ணெய் மற்றும் எரிவாயு உள்ளதாகவும் கருதப்படுகிறது.

**செயற்கைத் தீவுகள் உருவாக்கம்**

இந்தக் கடற்பரப்பைச் சூழ்ந்துள்ள நாடுகளால் தமக்குச் சொந்தமானது என்று வலியுறுத்திவரும் சர்ச்சைக்குரிய இந்தப் பகுதி எவருடையது என்பதைத் தீர்மானிக்க முன்னரே 'மிஸ்சீப்' பாறைப் பகுதியில் செயற்கையான தீவை சீனா உருவாக்கியுள்ளது. கடந்த ஒரு வருடத்துக்குள் 07செயற்கைத் தீவுகளை அந்தப் பகுதியில் உருவாக்கியுள்ள சீனா அதில் மிஸ்சீப், சூபி, கிராஸ் ஆகிய தீவுகளில் விமான ஓடுதளத்தையும் அமைத்துள்ளது. அத்துடன் அதற்கு அண்மையிலுள்ள பிலிப்பைன்ஸுக்கு அந்தப் பகுதி மீது உரிமை இல்லை என்றும் - மீன்பிடிக்கக்கூடாது, எண்ணெய் மற்றும் எரிவாயு உள்ளதா? என்று ஆராயக்கூடாது என்றும் கூறியது. அத்தோடு அந்தப் பகுதி வான் பரப்பில் பறக்கும் விமானங்களுக்கும் தம்முடைய எல்லைப்பகுதிக்குள் பறக்க வேண்டாம் என எச்சரிக்கை விடுத்து வருகின்றது.

**பன்னாட்டு நீதிமன்றத் தீர்ப்பு**

சீனாவின் இத்தகைய தன்னாதிக்கச் செயலைக் கண்டித்து, பிலிப்பைன்ஸ் பன்னாட்டுநீதிமன்றத்தில் முறையிட்டதைத் தொடர்ந்து, ஓரிடத்தின் மீது உரிமை கோரின் அது இயற்கையான சூழலுக்கு இசைந்ததாக இருக்க வேண்டும், செயற்கையாக ஒரு கட்டுமானத்தைக் கட்டுவதன் மூலமும், கடலில் கல், மணல் போன்றவற்றைக் கொட்டி மேடாக்கியதன் மூலமும் இடம் தனக்குத்தான் சொந்தம் என்று கோர முடியாது என்று சுட்டிக்காட்டி, செயற்கையாக இவ்வாறு அடையாளப்படுத்திக் கொள்வதால் அவை சீனாவுக்குச் சொந்தமாகிவிடாது, வரலாற்று ரீதியிலான உரிமை அதற்குக் கிடையாது என்று நீதிமன்றம் கடந்த ஜுலை 12இல் தீர்ப்பளித்துவிட்டது. ஆனாலும், பன்னாட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்க முடியாது என்று கூறியும், சர்ச்சைக்குரிய பகுதிகளை ஆக்கிரமித்தும், கடல் தண்ணீரைக் கல்,மண் கொண்டு மேடாக்கித் தீவை உருவாக்கியும், சர்ச்சைக்குரிய இடம் என்று தெரிந்தும், இராணுவப் பயன்பாட்டுக்கான விமான ஓடு பாதை, பீரங்கித் தளம், கப்பல் தரிக்கும் துறை ஆகியவற்றை உருவாக்கி, தொடர்ந்தும் தன்னுடைய இராணுவ வலிமையைப் பறைசாற்றியிருக்கிறது-சீனா.

**சீனாவின் நியாயம்**

பன்னாட்டு நடுவர் மன்றத்தின் தீர்ப்பு தங்களைக் கட்டுப்படுத்தாது, அது செல்லுபடியற்றது என்று சீனத் தலைவர்கள் கூறியுள்ளனர். சிங்குவா பல்கலைக்கழகத்தில் ஜுலை 16இல் நடந்த 'உலக சமாதான அரங்கு' நிகழ்ச்சியில் பேசிய சீனத் துணைப் பிரதமர் லியு யாண்டாங் பன்னாட்டு நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு சட்ட விரோதமானது, சட்டப்படியானது அல்ல என்றிருந்தார். நீதிமன்றம் தன்னுடைய விசாரணை எல்லையைத் தாண்டி, தனக்களிக்கப் பட்ட வாய்ப்பைத் தவறாகப் பயன்படுத்தி- தீர்ப்பு வழங்கியிருப்பதுடன், தென் சீனக் கடலில் சீனத்துக்குள்ள பிரதேச இறை யாண்மை உரிமை, கடல்வழிப் போக்கு வரத்துஉரிமை ஆகியவற்றிலும் தலையிட்டிருக்கிறது என்று கண்டித்துள்ளார். தன்னுடைய கடல் வழிப் போக்குவரத்து எல்லை, வரலாறு பூர்வமாகத் தனக்கு உரிமையுள்ள விரிகுடா ஆகியவை, பன்னாட்டுக் கடல் சட்டத்துக்கு உட்பட்ட விசாரணைக்குள் உட்படாது என்று 2006இல் சீனா ஏற்கனவே அறிவித்திருந்தது. பன்னாட்டுநீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்க முடியாது. ஆனால், வரலாற்றுபூர்வமான உரிமைகள் தொடர்பாக பன்னாட்டு சட்ட அடிப்படையில் சம்பந்தப்பட்ட நாடுகளுடன் பேச்சு மூலம் தீர்வு காண்பதில் உறுதியாக இருக்கிறோம் என்றும் லியு கூறியிருந்தார்.




**கருத்து மாறுபாடு**

இவ்வாறானதொரு சர்ந்தர்ப்பத்தில் கடந்த ஆண்டு கருத்து வெளியிட்ட வெளியுறவு அமைச்சர் வாங் யி இதே கருத்தை வலியுறுத்தியிருந்தார். 'கப்பல் போக்குவரத்து, கடல் வாணிபம் ஆகியவற்றைத் தென் சீனக் கடலில் தடையின்றி அனுமதிப்போம், பன்னாட்டுச் சட்டப் படி, கடலோர நாடு ஆற்ற வேண்டிய முக்கியமான கடமைகள், பொறுப்பு கள் அடிப்படையில் அதைச் செய்வோம்' என்றும் கூறியிருந்தார். சீனாவும் இந்தப் பகுதியில் உள்ள ஒரு கடலோர நாடுதான் என்பதும் உலக அளவிலான விதிகளை சீனா மதித்து நடக்கும் என்பதும், அந்தப் பேச்சில் வெளிப்பட்டது. தென் சீனக் கடல் என்பது தங்களுக்கு மட்டுமே உரிமையுள்ள பகுதி என்ற தொனி அதில் இருக்கவில்லை ஆனால் இப்போது சீனா அதற்கு முற்றிலும் எதிர்மாறாகச் செயற்பட்டு வருகிறது.


> தனது உள் நாட்டுப் பாது காப்பை உறுதி செய்யும் வகையில் சீனாவின் விமான ஓடுபாதைகள் மற்றும் இராணுவ நிலை களைக் குறி வைத்து ரொக்கெட் லாஞ்சர்களை தென் சீனக் கடல் பகுதிக்கு வியட்நாம் நகர்த்தி வருகிறது. வியட்நாம் மட்டுமன்றி சூழவுள்ள மற் றைய நாடுகளும் சீனாவுடன் முரண்பட்டே நிற்கின்றன.

**முறுகல் நிலை**

ஆசியாவின் வல்லரசான சீனாவை எதிர்க்கக்கூடியவலு இந்தக் கடற்பரப்பைச் சூழ்ந்திருக்கும் மற்றைய நாடுகளுக்கு இல்லை. அதனால் தான் பன்னாட்டு நீதிமன்றத்தை அவை நாடியிருந்தன. ஆனாலும் பன்னாட்டு நீதிமன்றத்தின் மேற்படித் தீர்ப்பை ஏற்க மறுத்த சீனா தொடர்ந்து தென் சீனக் கடல் பகுதியில் உரிமை கொண்டாடி வருவதோடு, அங்கே இராணுவ நிலைகளை அமைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. இந்தநிலையில், தனது உள் நாட்டுப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் சீனாவின் விமான ஓடுபாதைகள் மற்றும் இராணுவ நிலைகளைக் குறி வைத்து ரொக்கெட் லோஞ்சர்களை தென் சீனக் கடல் பகுதிக்குள் வியட்நாம் நகர்த்தி வருகிறது. வியட்நாம் மட்டுமன்றி சூழவுள்ள மற்றைய நாடுகளும் சீனாவுடன் முரண்பட்டே நிற்கின்றன.

**அமெரிக்காவுக்கு எச்சரிக்கை**

தன்னால் உரிமை கொண்டாடப்படும் கடற்பரப்புச் சம்பந்தமாக, தனக்கும் பிற நாடுகளுக்குமிடையே நிலவும் பிரச்சினைகளுள் அமெரிக்கா தலையிட வேண்டாம் எனச் சீனா எச்சரித்துள்ளது. தென் சீனக் கடல் முழுக்கத் தனக்கே சொந்தம் என்று கூறிவந்த சீனா, பன்னாட்டு நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் பின்னணியில், அமெரிக்காதான் இருக்கிறது என்று கருதுகிறது. இந்தப் பகுதி எவருக்குச் சொந்தம்? என்பது தொடர்பாக வழக்குத் தொடுக்குமாறு பிலிப்பைன்ஸைத் தூண்டியது. தென்கிழக்கு ஆசிய நாடுகள் சங்கத்தில் (ஆசியான்) இடம்பெற்றுள்ள நாடுகளிடையே அதிருப்தியை ஏற்படுத்தியது. பன்னாட்டு நீதிமன்றத்தில் தனக்கு எதிராகத் தீர்ப்பு வருமாறு செய்தது என்று எல்லாமே அமெரிக்காவின் செயல் எனச் சீனா கருதுகிறது. சீனாவின் இந்தக் கோபம், புதிதாக உருவாகப் போகும் போர் ஒன்றுக்கான முன்னோட்டம் போலத் தெரிகிறது. இந்த நிலையில் சீனாவில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 'ஜி-20' மாநாடு நடைபெற இருப்பதுவும் குறிப்பிடத்தக்கது.



## வரலாற்றில் இன்றைய தினம்

ஒரு நாட்டின் சிறந்த செல்வங்கள், பிள்ளைகளே! -ஜவகர்லால் நேரு

1841 - கனடா ஒன்டேரியாவில் கியூன்ஸ் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது.

1846 - ஈதர் மயக்க மருந்தைப் பயன்படுத்தும் முறையை ம சூசெட்ஸ் பொது மருத்துவமனையில் வில்லியம் ரி.ஜி.மோர்டன் முதன்முதலாக செயற்படுத்திக் காட்டினார்.

1869 - பெண்களுக்கான முதல் வதிவிடக் கல்லூரியாக கேம்பிறிட்ஜ் ஜிர்டன் கல்லூரி உருவாக்கப்பட்டது.

1916 - அமெரிக்காவின் முதலாவது குடும்பத் திட்டமிடல் சிகிச்சை நிலையம் நியூயோர்க் புறூக்கலினில் மார்கரட் சங்கரால் திறந்து வைக்கப்பட்டது.

1934 - சீன கம்யூனிஸ்ட் கட்சியால் தொடங்கப்பட்ட நீண்ட பேரணி ஒரு வருடம் நான்கு நாள்களின் பின் முடிவுக்கு வந்தது. மா ஒசேதுங் மீண்டும் கட்சியின் தலைவரானார்.

1939 - பிரித்தானிய நிலப் பரப்பில் ஜேர்மனியரின் முதல் ஆகாயத் தாக்குதல் மேற் கொள்ளப்பட்டது.

1949 - சோவியத் யூனியனும் ஜேர்மன் ஜனநாயகக் குடியரசும் ராஜரீக உறவை ஸ்தாபித்தன.

1951 - பாகிஸ்தானின் முதலாவது பிரதமரான லியாகுத் அலிகான் ராவல் பிண்டியில் வைத்துப் படுகாலை செய்யப்பட்டார்.

1964 - சீனா தனது முதலாவது அணு ஆயுதத்தை வெடிக்க வைத்தது.

- சோவியத் தலைவர்களான லியோனிட் பிரெஷ்னேவ் மற்றும் அலெக்ஸி கொசிகின் ஆகியோர் சோவியத் யூனியனின் மத்திய குழுவின் பொதுச் செயலாளர்களாக கூட்டுத் தலைமைப் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

1968 - யசுனாரி கவபாடா இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்ற முதல் ஜப்பானியரானார்.

1973 - ஹென்றி கிசிஞ்சரும் லீடூ தோவும் நோபல் சமாதானப் பரிசைப் பெற்றனர்.

1984 - டெஸ்மண்ட் டுடு சமாதானத்துக்கான நோபல் பரிசைப் பெற்றார்.

1992 - பிரிட்டனின் இராணுவ உதவி மீண்டும் சிறிலங்கா அரசுக்குக் கிடைத்தது. உறவுகள் முன்னர் போல சீராகுமென பிரிட்டிஷ் துணையமைச்சர் மார்க் பொய்ட் தெரிவிப்பு.

- காணாமற் போனோர் பற்றி விசாரிக்க ஆணைக்குழு அமைக்குமாறு வழக்கறிஞர் சங்கம் வலியுறுத்து.

2004 - இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை பரிசீலிக்கத் தக்கதல்லவென ஆனந்த சங்கரி தெரிவிப்பு.

- திருகோணமலையில் முஸ்லிம்களுடன் தமிழ்க் கூட்டமைப்பு சந்திப்பு.

2007 - ஆயுதம் தரித்த குழுக்களின் நடமாட்டம் கிழக்கில் தொடர்ந்த வண்ணமுள்ளதாக கண்காணிப்புக்குழு அறிக்கை.



## குரங்கும் குருவிகளும்

ஒரு மரத்தில் இரண்டு தூக்கணாங் குருவிகள் கூடு கட்டி வாழ்ந்து வந்தன. ஒரு நாள் கனமழை பெய்தது. கடுங்குளிர் அடிக்கத் தொடங்கியது. குளிரில் நடுங்கியபடி அந்த மரத்துக்கு அருகில் குரங்கு ஒன்று வந்து சேர்ந்தது. அந்தக் குரங்கைப் பார்த்து இரக்கப்பட்ட தூக்கணாங் குருவிகள், "குரங்கே, உனக்குக் கை கால்கள் இருந்தும் இப்படி மழை, குளிர், வெயில் போன்ற துன்பங்களை ஏன் அனுபவிக்க வேண்டும்? நீ உனக்கென்று ஒரு வீடு கட்டிக்கொண்டால் இந்தத் துன்பமில்லாமல் இருக் கலாமே?" என்றன.

அவற்றின் உபதேசத்தைக் கேட்டதும் அந்தக் குரங்குக்குக் கடும் கோபம் வந்தது. வல்லவனான எனக்கு இந்தத் தூக்கணாங் குருவிகள் அறிவுரை சொல்வதா? என்று எண்ணியபடி, "எனக்கு வீடு கட்டும் சக்தி இல்லை. ஆனால், நீங்கள் கட்டியிருக்கும் உங்கள் வீட்டை எப்படிப் பிரித்து எறிகிறேன் பாருங்கள்" என்றபடி குருவிகளின் கூட்டை பிய்து ஏறிந்தது.

பாவம் தூக்கணாங் குருவிகள். தகுதியில்லாத குரங்குக்குச் சொன்ன அறிவுரையால் தங்கள் வீட்டை இழந்தன.

**(நீதி: தகுதியில்லாத எவருக்கும் அறிவுரை சொன்னால், இழப்பு நமக்குத் தான்.)**

## மணிக்கூடு



சிண்ட்ரெல்லா கதையில் யார் கதாநாயகன் அல்லது கதா நாயகி என்று கேட்டேன். நான் கேட்டது ஓர் ஆறு வயதுப் பெண் குழந்தையிடம். அந்தக் குழந்தை பதில் சொல்ல ஒரு விநாடிகூட எடுக்கவில்லை, மணிக்கூடு என்றது. நான் திடுக் கிட்டுவிட்டேன். சிண்டரெல்லாவைச் சொல்லலாம் அல்லது இராஜகுமாரனைச் சொல்லலாம் அல்லது தேவதையைச் சொல்லலாம், ஏன் சிண்ட்ரெல்லாவின் இரண்டு சகோதரி களைக் கூடச் சொல்லியிருக்கலாம். இது புதுவிதமாக இருந் தது. யோசித்துப் பார்த்தேன். அந்தக் குழந்தை சொன்னது சரிதான். மணிக்கூடு இல்லாவிட்டால் கதையே இல்லையே. அதுதானே முடிச்சு? 12 மணி அடிக்கமுன்னர் சிண்ட்ரெல்லா வீடு திரும்பவேண்டும். இதுதான் தேவதையின் கட்டளை. ஆகவே, கதையில் முக்கியமானது மணிக்கூடுதான்.

## பகிர்ந்துண்டு வாழ்வோம்



இயற்கை எழில் கொஞ்சும் மரங்கள் அடர்ந்த சூழலின் மத்தியில், அந்தப் பாடசாலை அமைந்திருந்தது. நேரம் நண்பகல் 12 மணியை அண்மித்துக் கொண்டிருந்தது. அது சாப்பாட்டு நேரம். பிள்ளைகளே, நாம் சாப்பிடும் ரொட்டித் துண்டை எப்படிச் சாப்பிடும்போது அதிக சுவையாக இருக்கும்? என்று மாணவர் களை நோக்கி ஆசிரியர் கேட்டார். ஜாம் கலந்து சாப்பிட்டால் சுவையாக இருக் கும் என்று ஒரு மாணவன் ஒருவன் கூறினான். இன்னொரு மாணவன் கறி யுடன் சாப்பிட்டால் சுவையாக இருக்கும் என்று கூறி னான். இப்படி ஒவ்வொரு மாணவர்களும் தத்தம் சிந்தையில் உதித்த எண்ணங்களைப் பதில்களாக ஆசிரியரிடம் கூறிக்கொண்டிருந்தனர். இறுதி யாக எழுந்த மாணவன், பகிர்ந்துண்டு சாப் பிட்டால் சுவையாக இருக்கும் என்று கூறினான். அந்தமாணவன்தான் - அப்துல் கலாம்.




## அறிவுரைகள்

1. கற்கும் வயதில் நீ கற்றிடு கல்வியை. காலம் யாவும் அது கொடுத்திடும் நன்மையை.
2. உறுதிகொள் மனதில் கடவுளை நம்பி. உனது மனம் போகாது தீமையை எண்ணி.
3. நினைக்கும் எண்ணங்கள் நல்லவையாக இருப்பின், நடக்கும் விடயங்களும் நல்லதாகவே நடக்கும்.
4. பொறுமை, சிந்தித்தல் இவையிரண்டும் ஒரு செயலில் இருக்கவேண்டும். இவ்விரண்டும் இல்லையெனின் எதுவும் ஒழுங்கற்றுச் சிதறி விடும்.
5. எண்ணங்களில்நல்லவற்றைத்தெரிந்தெடுத்து அதன்படி நடப்பது சிறப்பு.
6. துன்பத்தில் நீ இருக்கும் அந்த வேளை. துணிவும் நம்பிக்கையும் அதிகம் தேவை.
7. நாம் வாழும்போது எம் வாழ்வை வெளிப்படுத்தி வாழ வேண்டும். இல்லையெனில் வாழ்ந்தபின் எம் வாழ்வு அர்த்தமற்றதாகிவிடும்.
8. உன்னை நீ அறிந்து கொண்டால் உலகத்தில் எல்லாமே தானாகப் புரிந்து விடும்.
9. மனவலிமை வருவது வாழ்வினிலே இலகுவல்ல அந்த மனவலிமை வந்துவிட்டால் வாழ்வு முழுவதிலும் சோர்வு இல்லை.
10. மனங்களில் இருக்கும் சிந்தனைகளை வெளிப்படுத்தி வாழும்போது நமக்குள் இருக்கும் நன்மை தீமைகள் வெளிப்படும்.



ந.யோகப்பிரியா,
தரம் - 5 சி,
யா/ சென். பெனடிற் றோ.க.த.க.வித்தியாலயம்.



ஜெயாதரன், பவதாரணி,
தரம் - 3 பி
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.



# நான் யார்?

மீசாலை வினோதா

சிறுகதை

இந்த உலகில்தான் இருக்கின்றேன் என்ற எந்த வித உணர்வுகளும் இல்லாமல் நல்ல தூக்கத்தில் இருந்தாள் துஷானி. பகல் எல்லாம் வீட்டில் ஒரே வேலை. சமைப்பது எல்லோரது உடைகளையும் துவைப்பது இப்படியான பல வீட்டுவேலைகளையும் செய்ததால் களைத்துப் போய்விட்டாள். இவளும் வேலைக்குச் செல்லும் ஒரு குடும்பப் பெண் ஆயிற்றே. "நேரம் மூண்டே முக்காலாயிற்று எழும்புங்கோ துஷானி வேலைக்கு நேரம் போயிட்டுது" என்று ஒரு குரல் அவள் தான் துஷானியின் மாமியார். "மாமி இன்னம் கொஞ்சம்நேரம் தூங்கினால் நன்றாக இருக்கும்" என்றவாறு படுக்கையை விட்டு எழுந்தாள். குளித்து விட்டு வேலைக்கு ஆயத்தமானாள். தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த தனது நான்கு வயது மகனிடம் "அம்மா வேலைக்குப் போயிட்டு நாளைக்கு வாறன் குழப்படி செய்யாம இருக்கவேணும்" என்று கூறி அவனது நெற்றியில் தனது பூவிதழ்களால் முத்தமிட்டுவிட்டு "மாமி போயிட்டு வாறன் அவர் வந்ததும் அந்த மேசையில பால்காசு வைச்சிருக்கிறன் கொடுக்கச் சொல்லுங்கோ" என்று கூறித் தனது மோட்டார் சைக்கிளை எடுத்து ஓட்டலானாள். அவளின் சின்ன வயதுக் கனவுகளில் ஒன்று தான் அந்த மோட்டார் சைக்கிள். அவளது கனவுகளை நிறைவேற்றிய பெருமை அவளது கணவன் துவாரகனையே சாரும். ஏ-9 வீதியில் அவளது மோட்டார் வாகனம் இயற்கையை ரசித்துக் கொண்டு காற்றைக் கிழிக்கும் வேகத்தில் சென்றது. துஷானிக்கு இயற்கை அழகை ரசிப் பதில் ஒரு சந்தோசம். இருபது நிமிடத்தில் அவள் பணிபுரியும் யாழ்.போதனா வைத்திய சாலையை வந்தடைந்தாள். அவள் அங்கு சுகாதார உதவிப் பணியாளராக விடுதி ஒன்றில் கடமை புரிந்து கொண்டிருக்கிறாள். அவசர அவசரமாக மோட்டார் சைக்கிளைத் தரிப்பிடத்தில் தரித்து விட்டு மேற்பார்வையாளர் அலுவலகத்தில் மாலை 5மணியெனத் தனது வரவைக் கையொப்பமிட்டு கடமைபுரியும் விடுதியை நோக்கி விரைந்தாள். ஏன் என்றால் ஏலவே பகல் கடமையிலீடுபட்டுக் கொண்டிருக் கின்ற பிரியாவை வீட்டுக்கு விட வேண்டுமல்லவா. விடுதிக்குள் நுழைந்ததும் "வந்திட்டியா துஷானி நான் 5.30 பஸ்சைப் பிடிக்கவேணும்" என்ற பரபரப்புடன் வெளிக்கிட ஆரம்பித்தாள் பிரியா. "மன்னிச்சுக்கப்பா கொஞ்சம் லேட்டாயிட்டு குறைநினைக் காதை" என்று அவளை அனுப்பி விட்டு விடுதித் தாதிப்பெண்மணிக்கு வணக்கம் கூறித் தனது அன்றாட வேலைகளைக் கவனித்து விட்டு. இன்று வெள்ளிக்கிழமை என்பதனால் புதிய நோயாளர்கள் வந்திருப்பார்கள் என்று மனதுக்குள் எண்ணியவாறு விடுதியைப் பார்வையிடலானாள். இன்று துஷானிக்குக் கூடுதலாக விடுதி நோயாளர்கள் புது முகங்களாகத் தான் தெரிந்தன. அப்போது "என்ன வந்திட்டீங்களா துஷானி மிஸ்" என்ற ஒரு குரல் ஆம்! அது அந்த விடுதியில் நெடுநாளாக இயல்பு மாறாமல் இருக்கும் நோயாளியான பாக்கியம் அம்மா. "வந்திட்டன் நீங்கள் வெளியில வாங்கத்தந்த மருந்து வாங்கிட்டன் ரூமில இருக்கு. அப்புறம் எடுத்துத் தாறன்" என்றவாறு நடந்து சென்று நோயாளர்களையும் சற்றே பார்த்துக் கொண்டு மின் விளக்குகளை ஒளிர வைத்தாள் துஷானி. விடுதியின் பின்பகுதியில் ஒரு ஒன்றரை வயதுப் பையன் கையில் சிறு கட்டுடன் உடம்பு பிடித்தவாறு படுத்திருந்தான். துஷானிக்கு சின்னப்பிள்ளைகள் என்றால் கொள்ளைப்பிரியம். அந்தப் பையனை நெருங்கினாள் துஷானி: அந்தப்பையனுடன் அருகில் சீருடை தரித்த 21வயது மதிக்கத்தக்க ஒரு பெண் இருந்தாள். உடனே துஷானியின் மனதில் ஒரு யோசனை. இது சிறுவர்களைப் பராமரிக்கும் இல்லங்களில் போடும் சீருடை அல்லவா?

> "தம்பிக் குட்டிக்கு என்ன பெயர்" என்று கேட்டாள் துஷானி. ஆனால் அப்பால கன் திரும்பிப் பார்த்துவிட்டுப் பேசாமல் தன் கைகளில் ஏதோ வைத்து விளையாடிக் கொண்டிருந்தான். ஆனால் குழந்தையின் கண்களில் இருந்த ஒருவித தவிப்பை துஷானியால் அறியமுடிந்தது.

அப்படியானால் இந்தக்குழந்தை சிறுவர் பராமரிப்பு இல்லத்தில் இருந்து வந்திருக்கிறதா? ஆம் இது சிறுவர் பராமரிப்பு இல்லக் குழந்தைதான் என்று மனதுக்குள் எண்ணிக் கொண்டு "தம்பிக் குட்டிக்கு என்ன பெயர்" என்று கேட்டாள் துஷானி. அனால் அந்தப் பாலகன் திரும்பிப் பார்த்துவிட்டுப் பேசாமல் தன் கைகளில் ஏதோ வைத்து விளையாடிக் கொண்டிருந்தான். ஆனால் குழந்தையின் கண்களில் இருந்து ஒருவித தவிப்பை துஷானியால் அறியமுடிந்தது. மீண்டும் துஷானி அந்தப்பையனின் கைகளைப்பிடித்து "தம்பிக்குட்டிக்கு பெயர் தெரியாதா சொல்லுங்கோ" என வினாவ அந்தப் பராமரிப்புத் தாய் "பிரவீன் என்று சொல்லுங்க" எனக் கூறினாள். ஆனால் அந்தப் பையன் இவற்றைச் செவி மடுக்காது எதற்கோ ஏங்கித் தவிப்பதைக் காணமுடிந்தது. "துஷானி ரிக்கற்றை போடுங்க" எனத் தாதியப் பெண்மணி கூற அவள் அந்த இடத்தைவிட்டு நகர்ந்து ரிக்கற்றுக்களை அவரவருக்குரிய இடத்தில் வைத்தாள். துஷானியின் மனதுக்குள் அந்தப்பையனின் கண்களில் தெரிந்த ஏக்கம் மட்டும் நெருடிக் கொண்டிருந்தது. எல்லாக் குழந்தைகளும் இவளுடன் இலகுவில் அனைந்து விடும். ஆனால், பிரவீன் இப்படி இருந்தது அவளது மனதுக்குள் ஒரு வித சஞ்சலத்தைக் கொடுத்தது. ஒரு கையுறையை எடுத்து பலூன் மாதிரி ஊதி அதில் கரடிப் பொம்மையின் முகத்தை வரைந்து பிரவீனிடம்



# சிகா வைரஸ்



ச.முருகானந்தன்

காலத்துக்குக் காலம் புதுப்புது வைரஸ்கள் தோன்றுவதும் அமைதியாக உறங்கு நிலையில் இருந்து விட்டு மீண்டும் அவை பரவுவதும் கண்கூடு. அந்தவகையில் இந்த நூற்றாண்டில் சிக்கின்குனியா, டெங்கு, சிகா முதலிய வைரஸ்கள் பரவலான தொற்றை ஏற்படுத்தியதை அறிவீர்கள். இவ்வாறே இன்புளுவன்சா வைரஸின் சில பிரிவுகளும் வேகமாகப் பரவியதுண்டு.

2015ஆம் ஆண்டில் தென்னமெரிக்க நாடான மெக்சிக்கோ உள்ளிட்ட சில நாடுகளில் சிகாவைரஸ் தொற்று மிக வேகமாகப் பரவி ஏனைய ந ாடுகளையும் அச்சுறுத்தும் தொற்றாகத் தொடர் கின்றது. சிகா வைரஸ் உயிர் அச்சுறுத்தலை ஏற்படுத்தாத போதிலும், பிறக்கும் குழந்தைகளின் மூளை நரம்புத் தொகுதியைப் பாதித்து அடுத்த தலைமுறைச் சிறார்களின் வாழ்வைப் பாதிக்கின்றது. இதனால் பெற்றோர்களும் பெரும் மன உளைச்சலுக்கும் சிரமத்துக்கும் உள்ளாகின்றார்கள். கர்ப்பிணிப் பெண்களில் சிகா தொற்று ஏற்படும்போதே இவ்வாறான தாக்கம் பிறக்கும் குழந்தைகளில் ஏற்படுகின்றது. இத்தொற்று ஏற்பட்ட சில தாய்மார் சாதாரணமான குறைபாடுகளற்ற குழந்தைகளைப் பிரசவித்தாலும் கணிசமானோருக்குத் தலை சிறுத்த குழந்தைகள் பிறக்கின்றன. பொதுவாக இந்த நோய் வளர்ந்தவர்களின் மூளை நரம்புத் தொகுதியில் பாதிப்பு எதனையும் ஏற்படுத்துவதில்லை. அபூர்வமாகச் சிலரில் (Guillrin BAREE SynDrome) ஒரு வகை நரம்புப் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இந்த நோய்த் தீவிரமாகினாலும் சிகிச்சை அளிப்பின் மூன்று வாரங்களுக்குள் குணமாகி விடும். விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெற வேண்டி இருக்கும். நரம்பும், தசைகளும் பாதிப்புக்கு உள்ளாகிச் சிரமப் படுவர். அபூர்வமாக இறப்பும் ஏற்படலாம்.

## சிகா வைரஸ் நோயின் அறிகுறிகள்

சிகாவைரஸ் தொற்று ஏற்படுகின்ற ஐவரில் ஒருவருக்கு எந்தவித அறிகுறிகளும் பெரிதாக வெளித்தெரிவதில்லை. இது ஓர் ஆபத்தான நிலையாகும். தொற்று ஏற்பட்டுள்ளது தெரியாதமையால் இவர்கள் கவனம் எதுவும் எடுக்க மாட்டார்கள். பிறருக்கு நோய்த்தொற்றை ஏற்படுத்துவார்கள். அறிகுறிகள் தோன்றுபவர்களில் இலேசான காய்ச்சல் தோலில் அடையாளங்கள் (Rashes), தேக உளைவு மூட்டுஉளைவு, கண்களில் தொற்று என்பன ஏற்படும் இவை பலரில் சிகிச்சையின்றி ஒருவாரத்துக்கு உள்ளாகவே குறைந்து விடும். பெரும்பாலும் வெளிச்சிகிச்சையில் (O.P.D) நோய் குணமாகிவிடும். சிகாவைரஸுக்கு எதிரான மருந்துகள் இதுவரை இல்லாததால் அறிகுறிகளுக்கான சிகிச்சையே வழங்கப்படுகிறது. காய்ச்சலுக்குப் பரசிற்றமோல் மட்டுமே வழங்கப்படுகிறது. வைத்தியசாலையில் தங்கவேண்டிய அவசியம் பெரும்பாலும் இருப்பதில்லை. கர்ப்பிணிகளுக்கு முதல் மூன்று மாதத்துள் தொற்று ஏற்பட்டால் கருவிலுள்ள சிசுவின் மூளை நரம்புத் தொகுதி பாதிப்புக்குள்ளாகும். சிறுவர்களில் சிகா தொற்று ஏற்படுவதில்லை.

ஆய்வு கூடக் குருதிப் பரிசோதனை மூலம் நோயை இனம் காண முடியும். ஓய்வு, போதிய நீராகாரம் பரசிற்றமோல் வகை மருந்து காய்ச்சலுக்காகவும் நோவு உளைவுக்காகவும் வழங்கலாம். ஏனைய வலி நிவாரணிகளைத் தவிர்ப்பது நல்லது. நோய் பரவாமல் இருப்பதற்கான ஆலோசனைகளை வழங்க வேண்டும். தொற்றுக்கு உள்ளான கர்ப்பிணிகளைப் பிரசவகாலம் வரை கண் காணித்து வரவேண்டும்.


## நோய்பரவும் முறை

சிகா வைரஸ் தொற்றை 'ஏடிஸ் எஜிப்ரிஸ்' என்ற வகை நுளம்பே பிரதானமாக ஏற்படுத்துகின்றது. நோய்த்தொற்று உள்ள ஒருவரைக்கடித்த நுளம்பு சுகதேகி ஒருவரைக் கடிக்கும்போது இத்தொற்றை அவருக்கும் ஏற்படுத்துகின்றது. நோயெதிர்ப்பு சக்தி குறைந்தவராக அவர் இருப்பின் ஒரு சில நாள்களிலேயே சிகா தொற்று ஏற்பட்டு விடும். ஏடிஸ் வகை நுளம்புகள் வெளிச்சம் குறைந்த பொழுதுகளிலேயே அதிகம் உலாவுகின்றன. மாலையிலும் அதிகாலையிலும் இவை கடிக்கின்றன. நுளம்பு கடிக்காமல் இருக்க உடலை மறைக்கும் நீண்ட உடைகள் சிறந்தவை. நுளம்பு வலை பாவிக்கலாம். சூழலில் இவ்வகை நுளம்பு சிறிதளவு நீர் இருப்பினும் அதில் நூற்றுக் கணக்கான முட்டைகளை இட்டுப் பெருகின்றன. எனவே எமது சூழலைத் துப்புரவாகவும் நீர்த் தேக்கமின்றியும் வைத்திருப்பது முக்கியம். சிறு பூந்தொட்டி, வீசிய பாத்திரங்கள், சிரட்டை என்பனவற்றில் தேங்கியிருக்கும் நீரிலும் முட்டையிட்டு பரவக்கூடியவை. டெங்கு, சிக்கின்குனியா முதலான நோய்களைப் பாரப்பும் அதே வகை நுளம்புதான் இது. நோயாளர்கள் இல்லாவிட்டால் நுளம்பால் நோயைப் பரப்ப முடியாது. இதுவரை எமது நாட்டில் ஒரு நோயாளி தானும் இனம் காணப்படவில்லை. சுகாதாரத்திணைக்களம் முற்பாதுகாப்பாக இருப்பதுடன் சில பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. கர்ப்பிணிப்பெண்கள் சிகா வைரஸ் பரவியுள்ள நாடுளுக்குச் செல்ல வேண் டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளன.

சிகா வைரஸ் பாலுறவால் தொற்றலாம் என்ற அனுமானம் ஏற்பட்டுள்ளமையால் கர்ப்பிணிகள் பாலுறவைப் பாதுகாப்பாக மேற்கொள்ளும்படி அறிவுறுத்தப் பட்டுள்ளனர். கணவர் சிகா தொற்றுள்ள நாட்டுக்குச் சென்று வந்தால் ஆணுறையுடன் கர்ப்பிணி மனைவியருடன் தாம்பத்திய உறவில் ஈடுபட வேண்டும். வெளிநாட்டிலிருந்து வந்ததும் ஆறுமாதங்களுக்காவது இதைக் கடைப்பிடிக்க வேண்டும்.

## ஏற்படுத்தும் பாதிப்புக்கள்

Guillain-Barré Syndrome






# தமிழர் பாசம்?

ஜெ.றியா





ஒருவகையில் கலைகளின் பரிமாற்றம். இன்னொரு வகையில் கலாசாரப் பரவல், மற்றோரு புறத்தில் தமிழர்கள் கற்றுக்கொள்ளவேண்டியவை எனப் பர்ந்து சிந்திக்கும் எண்ணத்தை ஏற்படுத்திச் சென்றுள்ளது அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடந்தேறிய இந்தியக் கலைஞர்கள் பங்குபற்றிய களியாட்டம். கடந்த மூன்று தசாப்தமாகப் போருக்குள் முடங்கிக் கிடந்த ஈழத் தமிழர்களின் நிலையும் இன்றைய நிலையும் எந்த வகையில் விருத்தி கண்டுள்ளது என்பதற்கு நல்லதொரு எடுத்துக்காட்டாகவும் இதனைக் கொள்ளலாம். உணவுப் பொருட்களுக்காய் வர்த்தக நிலையங்களிலே வரிசை கட்டிய காலமும், பாதித் தேங்காய் வாங்கப் பணமிருந்தாலும் பொருளில்லாமல் அலைந்த பொழுதும் மாறிப் பொழுதைப் போக்கப் பணம் செலவழிக்கும் நிலையிலுள்ளது இன்றைய யாழ்ப்பாணச் சமூகம். அத்துடன் கூத்தும் கும்மாளமுமாக நடந்தேறிய இத்ன் கலைரசனை எத்தகையதென்பதை எவரும் விவரிக்கவும் தேவையில்லை. அதுபோக அயல் நாட்டுமேதைகளின் சகோதரப் பாசம் கூட வெறும் பணத்துக்கானது மட்டுமே என்பதும் தெளிவு. போரால் பாதிக்கப்பட்டவர்கள், ஒருநேர உணவுக்குக் கூட வழியின்றிப் பஞ்சம் பட்டினியால் தவிக்கும் ஏழைகள், என வறுமையால் அல்லற்படும் தமிழர் தேசத்தில் பிழைப்புநடத்திச் சென்ற குற்றவுணர்வு அறவே இல்லையென்றால், போர்க்காலத்தில் கண்ணீர் வடித்த சகோதரப் பற்றுக் கூட சந்தேகத்துக்குரியதே.



# சினந்து கொண்டிருக்கும் சீனா

யாதுமாகி

சீனா, தாய்வான், பிலிப்பைன்ஸ், புருனே, மலேசியா, வியட்நாம் ஆகிய நாடுகளால் சூழப்பட்டுள்ள கடற்பரப்பைத் தனக்குச் சொந்தமானது என்று உரிமை கொண்டாடி வருகின்றது சீனா. இதற்கு அதனைச் சூழ்ந்துள்ள மற்றைய நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்த நிலையிலும், தனது தெற்குக் கடற்பரப்புடன் அந்தப் பகுதியை இணைத்துக் கொள்ளும் வகையில் சீனா செயற்கையாகத் தீவுகளை உருவாக்கி வருகின்றது. இது பசுபிக் பெருங்கடலின் ஒரு பகுதியாகும். சிங்கப்பூருக்கும் தாய்வான் நீரிணைக்கும் இடையில் அமைந்துள்ளது. இந்தக்கடலின் பரப்பளவு 3,500,000 சதுர கிலோ மீற்றர்கள். உலகிலுள்ள ஐந்து சமுத்திரங்களை அடுத்துள்ள பெரிய கடல்களுள் இதுவும் ஒன்று. உலகின் கப்பல் போக்குவரத்தில் மூன்றில் ஒரு பங்கு இந்தக் கடல் வழியே இடம்பெறுவதால், இந்தக்கடல் முக்கியத்துவம் பெறுகிறது. மேலும், இந்தக் கடல்படுக்கையில் எண்ணெய் மற்றும் எரிவாயு உள்ளதாகவும் கருதப்படுகிறது.

### செயற்கைத் தீவுகள் உருவாக்கம்

இந்தக் கடற்பரப்பைச் சூழ்ந்துள்ள நாடுகளால் தமக்குச் சொந்தமானது என்று வலியுறுத்திவரும் சர்ச்சைக்குரிய இந்தப் பகுதி எவருடையது என்பதைத் தீர்மானிக்க முன்னரே 'மிஸ்சீப்' பாறைப் பகுதியில் செயற்கையான தீவை சீனா உருவாக்கியுள்ளது. கடந்த ஒரு வருடத்துக்குள் 07செயற்கைத் தீவுகளை அந்தப் பகுதியில் உருவாக்கியுள்ள சீனா அதில் மில்ஸ்சீப், சூபி, கிராஸ் ஆகிய தீவுகளில் விமான ஓடுதளத்தையும் அமைத்துள்ளது. அத்துடன்அதற்குஅண்மையிலுள்ள பிலிப்பைன்ஸுக்கு அந்தப் பகுதி மீது உரிமை இல்லை என்றும் - மீன்பிடிக்கக்கூடாது, எண்ணெய் மற்றும் எரிவாயு உள்ளதா? என்று ஆராயக்கூடாது என்றும் கூறியது. அத்தோடு அந்தப் பகுதி வான் பரப்பில் பறக்கும் விமானங்களுக்கும் தம்முடைய எல்லைப்பகுதிக்குள் பறக்க வேண்டாம் என எச்சரிக்கை விடுத்து வருகின்றது.

### பன்னாட்டு நீதிமன்றத் தீர்ப்பு

சீனாவின் இத்தகைய தன்னாதிக்கச் செயலைக் கண்டித்து, பிலிப்பைன்ஸ் பன்னாட்டுநீதிமன்றத்தில்முறையிட்டதைத் தொடர்ந்து, ஓரிடத்தின் மீது உரிமை கோரின் அது இயற்கையான சூழலுக்கு இசைந்ததாக இருக்க வேண்டும், செயற்கையாக ஒரு கட்டுமானத்தைக் கட்டுவதன் மூலமும், கடலில் கல், மணல் போன்றவற்றைக் கொட்டி மேடாக்கியதன் மூலமும் இடம் தனக்குத்தான் சொந்தம் என்று கோர முடியாது என்று சுட்டிக்காட்டி, செயற்கையாக இவ்வாறு அடையாளப்படுத்திக் கொள்வதால் அவை சீனாவுக்குச் சொந்தமாகிவிடாது, வரலாற்று ரீதியிலான உரிமை அதற்குக் கிடையாது என்று நீதிமன்றம் கடந்த ஜூலை 12இல் தீர்ப்பளித்துவிட்டது. ஆனாலும், பன்னாட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்க முடியாது என்று கூறியும், சர்ச்சைக்குரிய பகுதிகளை ஆக்கிரமித்தும், கடல் தண்ணீரைக் கல்,மண் கொண்டு மேடாக்கித் தீவை உருவாக்கியும், சர்ச்சைக்குரிய இடம் என்று தெரிந்தும், இராணுவப் பயன்பாட்டுக்கான விமான ஓடுபாதை, பீரங்கித் தளம், கப்பல் தரிக்கும் துறை ஆகியவற்றை உருவாக்கி, தொடர்ந்தும் தன்னுடைய இராணுவ வலிமையைப் பறைசாற்றியிருக்கிறது-சீனா.

### சீனாவின் நியாயம்

பன்னாட்டு நடுவர் மன்றத்தின் தீர்ப்பு தங்களைக் கட்டுப்படுத்தாது, அது செல்லுபடியற்றது என்று சீனத் தலைவர்கள் கூறியுள்ளனர். சிங்குவா பல்கலைக்கழகத்தில் ஜூலை 16இல் நடந்த 'உலக சமாதான அரங்கு' நிகழ்ச்சியில் பேசிய சீனத் துணைப் பிரதமர் லியு யான்டாங் பன்னாட்டு நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு சட்ட விரோதமானது, சட்டப்படியானது அல்ல என்றிருந்தார். நீதிமன்றம் தன்னுடைய விசாரணை எல்லையைத் தாண்டி, தனக்களிக்கப் பட்ட வாய்ப்பைத் தவறாகப் பயன்படுத்தி– தீர்ப்பு வழங்கியிருப்பதுடன், தென் சீனக் கடலில் சீனத்துக்குள்ள பிரதேச இறை யாண்மை உரிமை, கடல்வழிப் போக்கு வரத்துஉரிமை ஆகியவற்றிலும் தலையிட்டிருக்கிறது என்று கண்டித்துள்ளார். தன்னுடைய கடல்வழிப் போக்குவரத்து எல்லை, வரலாறு பூர்வமாகத் தனக்கு உரிமையுள்ள விரிகுடா ஆகியவை, பன்னாட்டுக் கடல் சட்டத்துக்கு உட்பட்ட விசாரணைக்குள் உட்படாது என்று 2006இல் சீனா ஏற்கனவே அறிவித்திருந்தது. பன்னாட்டுநீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்க முடியாது. ஆனால், வரலாற்றுபூர்வமான உரிமைகள் தொடர்பாக பன்னாட்டு. சட்ட அடிப்படையில் சம்பந்தப்பட்ட நாடுகளுடன் பேச்சு மூலம் தீர்வு காண்பதில் உறுதியாக இருக்கிறோம் என்றும் லியு கூறியிருந்தார்.

### கருத்து மாறுபாடு

இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் கடந்த ஆண்டு கருத்து வெளியிட்ட வெளியுறவு அமைச்சர் வாங் யி இதே கருத்தை வலியுறுத்தியிருந்தார். 'கப்பல் போக்குவரத்து, கடல் வாணிபம் ஆகியவற்றைத் தென் சீனக் கடலில் தடையின்றி அனுமதிப்போம், பன்னாட்டுச் சட்டப் படி, கடலோர நாடு ஆற்ற வேண்டிய முக்கியமான கடமைகள், பொறுப்பு கள் அடிப்படையில் அதைச் செய்வோம்' என்றும் கூறியிருந்தார். சீனாவும் இந்தப் பகுதியில் உள்ள ஒரு கடலோர நாடுதான் என்பதும் உலக அளவிலான விதிகளை சீனா மதித்து நடக்கும் என்பதும், அந்தப் பேச்சில் வெளிப்பட்டது. தென் சீனக் கடல் என்பது தங்களுக்கு மட்டுமே உரிமையுள்ள பகுதி என்ற தொனி அதில் இருக்கவில்லை ஆனால் இப்போது சீனா அதற்கு முற்றிலும் எதிர்மாறாகச் செயற்பட்டு வருகிறது.




தனது உள் நாட்டுப் பாது காப்பை உறுதி செய்யும் வகையில் சீனாவின் விமான ஓடுபாதைகள் மற்றும் இராணுவ நிலைகளைக் குறி வைத்து ரொக்கெட் லாஞ்சர்களை தென் சீனக் கடல் பகுதிக்கு வியட்நாம் நகர்த்தி வருகிறது. வியட்நாம் மட்டுமன்றி சூழவுள்ள மற் றைய நாடுகளும் சீனாவுடன் முரண்பட்டே நிற்கின்றன.

### முறுகல் நிலை

ஆசியாவின் வல்லரசான சீனாவை எதிர்க்கக்கூடியவலு இந்தக் கடற்பரப்பைச் சூழ்ந்திருக்கும் மற்றைய நாடுகளுக்கு இல்லை. அதனால் தான் பன்னாட்டு நீதிமன்றத்தை அவை நாடியிருந்தன. ஆனாலும் பன்னாட்டு நீதிமன்றத்தின் மேற்படித் தீர்ப்பை ஏற்க மறுத்த சீனா தொடர்ந்து தென் சீனக் கடல் பகுதியில் உரிமை கொண்டாடி வருவதோடு, அங்கே இராணுவ நிலைகளை அமைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. இந்தநிலையில், தனது உள் நாட்டுப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் சீனாவின் விமான ஓடுபாதைகள் மற்றும் இராணுவ நிலைகளைக் குறி வைத்து ரொக்கெட் லோஞ்சர்களை தென் சீனக் கடல் பகுதிக்குள் வியட்நாம் நகர்த்தி வருகிறது. வியட்நாம் மட்டுமன்றி சூழவுள்ள மற்றைய நாடுகளும் சீனாவுடன் முரண்பட்டே நிற்கின்றன.

### அமெரிக்காவுக்கு எச்சரிக்கை

தன்னால் உரிமை கொண்டாடப்படும் கடற்பரப்புச் சம்பந்தமாக, தனக்கும் பிற நாடுகளுக்குமிடையே நிலவும் பிரச்சினைகளுள் அமெரிக்கா தலையிட வேண்டாம் எனச் சீனா எச்சரித்துள்ளது. தென் சீனக் கடல் முழுக்கத் தனக்கே சொந்தம் என்று கூறிவந்த சீனா, பன்னாட்டு நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் பின்னணியில், அமெரிக்காதான் இருக்கிறது என்று கருதுகிறது. இந்தப் பகுதி எவருக்குச் சொந்தம்? என்பது தொடர்பாக வழக்குத் தொடுக்குமாறு பிலிப்பைன்ஸைத் தூண்டியது. தென்கிழக்கு ஆசிய நாடுகள் சங்கத்தில் (ஆசியான்) இடம்பெற்றுள்ள நாடுகளிடையே அதிருப்தியை ஏற்படுத்தியது. பன்னாட்டு நீதிமன்றத்தில் தனக்கு எதிராகத் தீர்ப்பு வருமாறு செய்தது என்று எல்லாமே அமெரிக்காவின் செயல் எனச் சீனா கருதுகிறது. சீனாவின் இந்தக் கோபம், புதிதாக உருவாகப் போகும் போர் ஒன்றுக்கான முன்னோட்டம் போலத் தெரிகிறது. இந்த நிலையில் சீனாவில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 'ஜி–20' மாநாடு நடைபெற இருப்பதுவும் குறிப்பிடத் தக்கது.



# அழுகை மட்டும்தான் இப்போது ஆறுதல்

## புற்றுநோய் என்பது தொற்றுநோய் இல்லை

குணசேகரன் சக்தீனா

“என்னையும் ஒரு மனிசியாக நினைத்துச் செயற்படுங்கள். எங்களை நீங்கள் அரவணைக்க வேண்டாம். ஆனால், நோயைக் காரணம் காட்டி அந்நியப்படுத்தாதீர்கள். எனது நோய் எனது இறப்புக்கு நாள் குறித்து விட்டது. வாழுகின்ற கொஞ்ச நாள்களாவது இந்தப் பூமியில் எனக்கான மகிழ்வை உருவாக்க முயற்சிக்கிறேன்; புற்றுநோய் ஒரு தொற்றுநோய் இல்லை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.’’ என்கிறார் பரிதாபத்துடன் மார்பகப்புற்றுநோயால் அவதிப்படும் யோகேஸ்வரி.

அது ஒரு கடற்கரையோரக் கிராமம். தொலைபேசியூடாக அவர் கூறிய அடையாளங்களை வைத்து ஒருவாறு, அந்த பஸ்ஸில் இருந்து இறங்கினேன். என்னை எதிர் பார்த்து நின்றவர்போல், ஒரு பெண் என்னருகில் வந்து, சிறிது தயக்கத்து டன் “நீர் தானா என்னுடன் கதைத்த பிள்ளை’’ என்றார். “ஆம்” என்றேன்.

வாஞ்சையுடன் எனது கைகளைப் பற்றித் தனது கண்களில் ஒற்றிக்கொண்டார். பெரிய குடை பிடித்திருந்தார், தலைமுடி வெட்டியிருந்தார், நீண்ட கவுண் அணிந்திருந்தார். அவருடைய நடை தளர்வாக இருந்தது.

ஒருவரை ஒருவர் அறிமுகப்படுத்திக் கொண்டே நடந்து சென்றுகொண்டிருந்தோம். “பிள்ள! உள்ளே போங்கோ! இது தான் என்ர வீடு” என்றார். இருவரும் அமர்ந்தோம். சிறிய அமைதிக்குப் பின் அவரே ஆரம்பித்தார். இதுவரைக்கும் இருந்த அந்தப் புன்னகை இப்பொழுது காணா மற் போயிருந்தது.



“புற்றுநோய் ஒருவருக்கு ஏற்படுவதற்கு பாவமும் –சாபமும் அதன் காரணங்களும் அல்ல, புற்றுநோய் என்பது நமது உடல் வளர்ச்சியின் ஒரு மாறுபாடுதான் அது. நுண் கிருமிகளால் ஏற்படும் ஒரு வியாதி இல்லை. வளர்ந்து பெருகும் செல்களில் திடீரென ஒரு செல் மட்டும் பிளவுபடுவதில்லை. அது முற்றிலும் மாறுபட்டு முதிராத அளவுக்கு மீறி பிரிந்து பெருகி திசுத்திரளை அதாவது புற்றுநோயை உண்டாக்குகின்றது”

### ஒதுக்கி வைத்த சமூகம்

பிள்ள! எனக்குப் புற்றுநோய். புற்று நோய் என்ற காரணத்தால வீட்டில இருந்து என்னைத் துரத்திப்போட்டினம், அக்கம் பக்கத்தில இருக்கிற எல்லோரும் ஒதுக்கினார்கள். எனக்கு என்ன நடந்ததுஎன்றே தெரியவில்லை. அவர்கள் இப்படி என்னை ஒதுக்குவதை நினைத்துக் கவலைப் படத்தான் முடிந்தது. ஒருநாள் எனது தங்கை எனக்கு நேரடியாகவே சொன்னாள், உனக்குப் புற்றுநோய் எங்களுடன் நீ இருந்தால் இந்த நோய் எங்களுக்கும் தொற்றி விடும். என்ர பிள்ளைகளுக்கும் தொற்றும். ஆகவே நீ வேறெங்கயாவது போ என்று கூறி எனது உடைமைகளை எடுத்து ஓரமாக வைத்தாள். அதைத் தொடாதே, இதைத் தொடாதே என்றார்கள். வீட்டின் வெளிப்புறமாக எனக்கென சிறிய பகுதியை ஒதுக்கினார்கள்.

ஒரு ஓரமாக ஒதுங்கிய வாழ்வு வாழ்ந்தேன். இவையனைத்தும் இரண்டு கிழமைகள்தான். பின்னர் எனது உடைமைகளை எடுத்துக்கொண்டு போகுமாறு கடுமையாகச் சொன்னார்கள் தங்கச்சி குடும்பத்தினர். எனக்கு எங்கு செல்வது என்று தெரியவில்லை. கொஞ்ச நாள் அடைக்கலமற்ற வாழ்வு வாழ்ந்தேன். இறுதியில் என் நிலையைப் பார்த்த ஓர் அக்காதான் அடைக்கலம் தந்தார். இப்ப அந்த அக்காவுக்கு உதவியாக நானும் எனக்குதவியாக அந்த அக்காவும் இருக்கிறம். அக்காவின் மூலம் இப்பொழுது யாழ்ப்பாணம் மருதனார் மடத்தில் உள்ள “கேன் புற்றுநோய்க் காப்பகம்” ஊடாகத் தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறேன்.

### புற்றுநோய்க் காப்பகத்தின் அரவணைப்பு

கேன் புற்றுநோய்க் காப்பகம் தான் எனக்குப் புற்றுநோய் என்று தெரிந்தும், என்னை ஆதரித்த ஒரே இடம். அங்குள்ளவர்கள் என்னை மிகவும் அன்போடு வழிநடத்துவார்கள். ரேடியோ தெரபி சிகிச்சை முறைதான் எனக்கு வழங்கப்பட்டது. 20நாள்கள் வரையில் அப்படியே இருக்க வேண்டி ஏற்படும். அப்போது கேன் நிறுவனத்தினர் என்னை மிகவும் அன்புடன் கவனித்தார்கள். நான் இழந்த அத்தனை அன்பையும் அங்கு தான் பெற்றுக்கொண்டேன்.

எனக்குச் சிலவேளைகளில் நோய், தாங்க முடியாத வலியைக்கொடுக்கும். உடனே கேன் நிறு வனத்தினருக்குத் தொலைபேசி மூலம் தெரிவித்தால் சிரமம் பாராது நோயாளர் காவு வண்டியில் வருவார்கள். அது எந்தச் சூழ்நிலையாக இருந்தாலும் அவர்கள் மறுக்க மாட்டார்கள்.

### சாவை எதிர்பார்த்து...

எனக்கான இறுதி நாள்கள் இவை. இருக்கும் கொஞ்ச நாள்களாவது மகிழ்வுடன் வாழ விரும்புகிறேன். புற்றுநோய் தொற்று நோய்என்றுஎங்களை ஒதுக்காதீர்கள். உடல் வேதனை ஒருபுறமிருக்க, மனவேதனையில் நொடிக்கு நொடி செத்துக்கொண்டிருக் கிறேன். எவரை நொந்து கொள்வது என்று தெரியவில்லை” – என்றவர் விம்மியழுதார். “இது ஒன்றும் புதில்லையம்மா! அழுகை மட்டும் தான் இப்பொழுது ஆறுதல்” – என்றார்.

சிறிது நேரத்தின் பின் அவரிடமிருந்து விடைபெற்றேன். வாழ்க்கையின் கடைசி எல்லையில் வாழ்பவர் ஒருவருடன் கதைத்திருக்கிறேன் என்பதை அவராலே அறிந்து எனக்குள் விம்மினேன். மனம் கனத்தது. என்ன ஒரு விசித்திரமான வாழ்க்கை என எண்ண மட்டும்தான் முடிந்தது. அந்த நோயின் வேதனை ஒருபுறம். அந்த நோயைக் காரணம் காட்டி ஒதுக்கப்பட்ட வாழ்வு வாழும் அவரின் இப்போதைய வாழ்வு ஒருபுறம். என்ன ஒரு கொடுமையான வாழ்வு! எதை நான் கடிந்து கொள்வது? புற்றுநோய் ஒருதொற்றுநோய் என்றதவறான எண்ணம் எம்மக்கள் மத்தியில் இருப்பதையா?

### மற்றவர்களுக்குத் தொற்றாது

மஹரகம புற்றுநோய் வைத்தியசாலை புற்றுநோய் மருத்துவ நிபுணர், ந. ஜெயக்குமாரன் சொல்கிறார் “புற்றுநோய் என்பது தொற்றுநோய் இல்லை, இது குடும்ப வழி வரும் நோயும் இல்லை. இன்று தொற்றா நோய்களின் தாக்கம் தான் அதிகமாக இருக்கின்றது. இவ்வாறான தொற்றா நோய்கள் ஏற்படுத்தும் பாதிப்புக்களும் அதிகம். புற்றுநோய்க்கு ஆளானவர்கள் தாங்கமுடியாத உடல், உள வலிகளுடன் இருப்பவர்கள்.

அவர்களிடம் அன்பு செய்ய வேண்டும். இவ்வாறான நிலையில் ஒவ்வொருவரும் விரும்புவது அரவணைப்பைத்தான். நோயுற்றவர்கள் என்று அவர்களைத் அந்நியப்படுத்தக்கூடாது”.

“புற்றுநோய் ஒருவருக்கு ஏற்படு வதற்கு பாவமும் –சாபமும் காரணங்கள் அல்ல. புற்றுநோய் என்பது நமது உடல் வளர்ச்சியின் ஒரு மாறுபாடுதான். நுண் கிருமிகளால் ஏற்படும் ஒரு வியாதி இல்லை. வளர்ந்து பெருகும் செல்களில் திடீரென ஒரு செல் மட்டும் பிளவுபடுவதில்லை. அது முற்றிலும் மாறுபட்டு அளவுக்கு மீறி. பிரிந்து பெருகி திசுத்திரளை அதாவது, புற்றுநோயை உண்டாக்குகின்றது” என்கிறார் – அவர்.

இன்று மனித இனத்தை அச்சுறுத்தி வரும் புற்றுநோயின் கொடுமையை சொற்களால் விவரிக்க இயலாது. புற்றுநோய் ஒரு தொற்றா நோய் என்பதை அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டும். அதற்கான சரியான விழிப்புணர்வு எமது மக்கள் மத்தியில் அவசியம்.

# அரசமைப்பில் பௌ முன்னுரிமை



ஆசாத்

அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புதிய அரசமைப்புத் தொடர்பாகக் கருத்து வெளியிட்டபோது அரசமைப்பில் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கப்படுமெனவும் அதற்குத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உட்பட எதிர்க்கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளன எனவும் கூறியிருந்தார். அவரின் கூற்றுப்படி பார்க்கும்போது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் போன்ற முஸ்லிம் அரசியல் கட்சிகள், மலையக மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள் ஆகியனவும் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கப்படுவதை ஏற்றுக் கொண்டுள்ளன என்றே கருத வேண்டியுள்ளது. ஆனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அதன் ஊடகப் பேச்சாளருமாகிய எம்.ஏ.சுமந்திரன் இந்தக்கூற்றை வன்மையாக மறுத்துள்ளார். அரசமைப்பில் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கப்படுவதைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எந்தச் சந்தர்ப்பத்திலும் ஏற்றுக்கொள்ளவில்லையெனவும், அரசமைப்புத் தொடர்பான கலந்துரையாடல்களில் இதுவரை மதம் சம்பந்தமான எவ்வித கலந்துரையாடல்களும் இடம் பெறவில்லையெனவும் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

அப்படியான ஒரு நிலையில் வெளிநாட்டு அரசியல் பிரமுகர்களிடமும், சர்வதேச ஊடகங்களிடமும் பிரதமர் இப்படியான கருத்தை வெளியிட்டிருப்பது தமிழ் மக்கள் மத்தியில் குழப்பங்களை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

சுமந்திரனின் மறுப்பு ஓரளவுக்கு ஆறுதல் அளிப்பினும், பிரதமர் என்ன அடிப்படையில் மேற்படி விடயத்துக்குத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு தெரிவித்துள்ளனர் எனக்கூறினார் என்பது சந்தேகங்களைத் தோற்றுவிக்கும் கேள்வியாகவே எழுந்து நிற்கிறது.

அதே வேளையில் அரசமைப்பு உருவாக்கம் தொடர்பான குழுவின் முக்கிய நபரான கலாநிதி ஜெயம்பதி விக்கிரமரட்ண இது தொடர்பாக வெளியிட்டுள்ள கருத்து முக்கியமானதாகும். இவர் ஒரு முன்னாள் இடதுசாரியாவார். தற்சமயம் இவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். அது மட்டுமின்றி இவர் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கும் 1972ஆம் அரசமைப்புச் சட்டத்தை உருவாக்குவதில் கொல்வின் ஆர்.டி.சில்வாவுடன் இணைந்து செயற்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அவர், உருவாக்கப்படும் புதிய அரசமைப்பில் புத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கப்படுமெனவும் ஏனைய மதங்களுக்கும் சம உரிமை வழங்கப்படுமெனவும் தெரிவித்துள்ளார். அதேவேளையில் மாகாண சபைகள் பலப்படுத்தப்படவேண்டுமெனவும் பொலிஸ், காணி அதிகாரங்கள் வழங்கப்பட வேண்மெனவும் தெரிவித்துள்ள அவர், மாகாண ஆளுநரின் அதிகாரங்கள் மேலும் அதிகரிக்கப்படவேண்டுமெனவும் குறிப்பிட்டுள்ளார். இந்த இரண்டு விடயங்கள் ஒவ்வொன்றும் தம்மகத்தே உள்முரண்பாடுகளைக் கொண்டவை என்பதைச் சற்றுச் சிந்தித்தால் புரிந்து கொள்ளமுடியும். இவை இரண்டுமே தமிழ் மக்கள் மீது ஏவப்படும் சீனி பூசிய தோட்டாக்கள் என்பதைப் புரிந்து கொள்ளமுடியும்.

பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கப்படும்போது ஏனைய மதங்களுக்கும் சம உரிமை வழங்கப்படுமென அவர் தெரிவித்ததுடன் பாகிஸ்தானில் இஸ்லாம் மதம் அரச மதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டமை போன்று இங்கு பௌத்த மதம் அரச மதமாக்கப்பட மாட்டாது எனவும் குறிப்பிட்டுள்ளார். ஒரு மதத்துக்கு முன்னுரிமை வழங்கப்படும்போது எப்படி ஏனைய மதங்கள் முன்னுரிமை பெறும் மதத்துடன் சம உரிமை பெற முடியும்? அவரின் கூற்றின் அர்த்தத்தை எந்த ஓர் உலக மொழியாலும் விளங்கிக் கொள்ள முடியாது.

ஓர் அரசு ஒரு மதத்துக்கு முன்னு ரிமை வழங்கும்போது அது பிரகடனப் படுத்தப்படாமலே அரச மதமாகி விடுகிறது என்பது சொல்லித்தான் தெரிய வேண்டுமென்பதில்லை. எனவே அவரின் கூற்று மூலமே பௌத்தம் ஏனைய மதங்கள் மீது மேலாதிக்கம் செலுத்தும் வகையிலேயே அரசமைப்பு வரையப்படவுள்ளது என்பது தெளிவாகிறது.

இப்படியான ஓர் அரசமைப் புக்கே தமிழ் தேசியக்கூட்ட மைப்பு ஆதரவு வழங்கச் சம்மதம் தெரி வித்துள்ளதாகப் பிரதமர் தெரிவித்துள் ளார். மாகாண சபைகளின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட வேண்டுமெனவும் காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்த ஜெயம்பதி விக்கிரமநாயக்க மாகாண ஆளுநரின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட வேண்டுமெனவும், பொதுசன வாக்கெடுப்பின் மூலமே வடக்குக் கிழக்கு இணைக்கப்பட முடியும் எனவும் தெரிவித்துள்ளார். மாகாண சபைகளின் அதிகாரங்கள் பொலிஸ், காணி அதிகாரங்கள் வழங்கப்படும் அதேவேளையில், ஆளுநர் அதிகாரம் அதிகரிக்கப்பட்டால் அதன் அர்த்தம் என்ன? தற்சமயத்தில்கூட மாகாண ஆளுநர்களின் தலையீடு காரணமாக மாகாண சபைகள் சுயமாக இயங்க முடிவதில்லை. மாகாண சபையை மாவட்ட செயலகமும் ஆளுநரும் மேலாதிக்கம் செய்யும் நிலையே நிலவுகிறது. அவர்கள் மூலம் மத்திய அரசு மாகாண சபையைக் கட்டுப்படுத்துகிறது. இப்படியான நிலையில் ஆளுநரின் அதிகாரம் மேலும் அதிகரிக்கப்படுமானால் மாகாண சபையின் அதிகாரம் அதிகரிக்கப்பட்டு என்ன பயன்? மத்திய அரசின் நோக்கங்களையும், திட்டங்களையும் நிறைவேற்றும் ஒரு முகவர் நிலையமாகவே மாகாண சபை செயற்பட முடியும்.

### மக்கள் வாக்கெடுப்பு

வடக்குக்கிழக்கு இணைப்பு பொதுமக்கள் வாக்கெடுப்பு மூலமே முடிவு செய்யப்பட வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார். 13ஆவது அரசமைப்புச் சட்டம் மூலம் வடக்குக் கிழக்கு இணைக்கப்பட்ட போதும் அது பொதுசன வாக்கெடுப்பு மூலம் உறுதி செய்யப்பட வேண்டுமென்றிருந்தது. ஆனால் 15 வருடங்களுக்கு மேலாகியும் பொதுசன வாக்கெடுப்பு நடத்தப்படாமல் ஒரு நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் பிரிக்கப்பட்டது. இனிவரும் அரசமைப்பில் பொதுசன வாக்கெடுப்பின் மூலம்தான் வடக்குக் கிழக்கு இணைக்கப்பட வேண்டுமானால் பொதுசன வாக்கெடுப்பை நடத்துவது யார்? மத்திய அரசே நடத்த வேண்டும். மத்திய அரசில் வடக்குக் கிழக்கு தமிழ் பேசும் மக்களின் தாயகம் என்பதை ஏற்றுக்கொள்ளாத சக்திகளே பெரும்பான்மையாக இருப்பார்கள். அப்படியானவர்கள் பொதுசன வாக்கெடுப்பை நடத்துவார்களா? இலங்கையில் மதத்துக்கு முன்னுரிமை என்பது அடிப்படையில் ஒரு மத சம்பந்தமான பிரச்சினை என்ற அளவுக்குள் இல்லை என் பது தமிழ் மக்களின் நீண்டகால அனுப வமாகும். அது தமிழர் தாயகத்தில் நில ஆக்கிரமிப்பின் ஒரு வடிவமாகவே இருந்து வந்துள்ளது.

தற்சமயம் சேருவிலவாகி விட்ட முன்னைய மூதூர்த் தொகுதியின் ஒரு பகுதியில் முதன் முதலில் ஓர் அரச மரத்தின் கீழ் ஒரு புத்தர் சிலை நிறுவப்பட்டது. அதைச் சுற்றிச் சிங்களவர்கள் பிக்குவால் கொண்டு வரப்பட்டுக் குடியேற்றப்பட்டனர். அங்கு சோமாவதி விகாரை என ஒரு விகாரை அமைக்கப்பட்டு அது வரலாற்றுக் காலம் தொட்டு இருந்து வந்ததாகக் கூறப்பட்டது. பின் அதைச்சுற்றிப் பல குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டு அது ஒரு தனிச் சிங்களத் தொகுதியாகிவிட்டது.

அது மட்டுமல்ல, கிளிவெட்டியிலுள்ள குமரபுரம் சந்தையில் அங்கு வந்து மீன் வியாபாரம் செய்யும் சிங்கள வியாபாரிகள் அங்கிருந்த அரச மரத்தின் கிழ் புத்தர் சிலை ஒன்றை நிறுவினார்கள். அதைப் பொறுக்க முடியாத தமிழ் மக்கள் இரவோடிரவாக அந்தப் பெரிய அரச மரத்தையே தறித்து அகற்றி ஆற்றுக்குள் கொண்டு சென்று தள்ளி விட்டனர். அதன் எதிரொலி தான் குமரபுரம் படுகொலை, 28 தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். அதில் சம்பந்தப்பட்ட படையினர் சரியாக அடையாளம் காட்டப்பட்ட போதிலும் அண்மையில் விடுதலை செய்யப்பட்டனர். மதத்தை அடிப்படையாகக் கொண்டு மெல்ல மெல்ல உருவாக்கப்பட்ட இத்தகைய குடியேற்றங்கள் மூலம் கிழக்கு மாகாணத்தின் அதாவது திருகோணமலைக்கும் மட்டக்களப்புக்குமிடையேயான நிலத்தொடர்பு துண்டிக்கப்பட்டு விட்டது.

இவ்வாறே பௌத்த மக்கள் எவருமே வாழாத பகுதிகளாகிய கொக்கிளாய் பிரதேசத்தில் தனியார் காணி ஒன்று ஆக்கிரமிக்கப்பட்டு ஒரு பெரும் விகாரை நிறுவப்பட்டு வருகிறது. அங்கு ஏற்கனவே மீனவர்கள் வீடமைப்புத் திட்டம் என்ற பேரில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டாலும் அவர்கள் கிறிஸ்தவர்கள் என்பது முக்கியமானது. வடக்குக் கிழக்குக்குமிடையேயான நிலத்தொடர்பில் கொக்கிளாய் முக்கிய பிரதேசம் என்பது குறிப்பிடத்தக்கது. திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், இரணைமடு கனகாம்பிகை அம்மன், நயினாதீவு ஆகிய வரலாற்றுப் புகழ் பெற்ற இந்து ஆலயங்களுக்கு அண்மையிலும் புத்தர் சிலைகளும் விகாரைகளும் நிறுவப்பட்டு வருகின்றன. அண்மையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச வடக்கிலுள்ள இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டால் முகாம்களில் நிறுவப்பட்டுள்ள விகாரைகள் பராமரிப்பற்றுப் போய்விடுமென்று தெரிவித்திருந்தார். இதிலிருந்தே புத்த வழிபாட்டுத் தலங்களின் நில ஆக்கிரமிப்பு நோக்கம் தெளிவுபடுத்தப்படுகிறது.

### கானல்நீர்

பௌத்த மதத்திற்கு முன்னுரிமை கொடுப்பது, காணி பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைக்கு வழங்கி விட்டு மாகாண சபையின் மேலான ஆளுநரின் அதிகாரங்களை வலுப்படுத்துவது வடக்கு-கிழக்கு இணைப்புக்கு பொதுமக்கள் வாக்கெடுப்பென்ற கானல் நீர் காட்டுவது என்பன அரசமைப்பு மூலம் உறுதி செய்யப்படும் நிலை தெளிவாகவே வெளிப்படுகின்றது. இதன் நோக்கம் நீண்டகால அடிப்படையில் அரசமைப் புக்கு உட்பட்ட முறையில் சிங்களக் குடியேற்றங்களை நிறுவித் தமிழர் தாயகத்தைச் சிங்கள மயமாக்குவதாகும். ஏனைய மதங்களுக்கும் சம உரிமை, மாகாண சபைகளின் அதிகாரங்களை அதிகரிப்பவை போன்ற கோசங்கள் நில ஆக்கிரமிப்பு என்ற நின்று கொல்லும் நச்சு தன்மை என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும். எனவே பிரதமரால் சர்வதேச மட்டத்தில் வெளியிடப்பட்ட கருத்து அரசமைப்புச் சபையின் தலைவர் ஜெயம்பதி விக்கிரம நாயக்காவின் விளக்கங்கள் என்பனவற்றின் ஆபத்துத் தொடர்பாக விழிப்பாக இருக்க வேண்டும். அரசமைப்புச் சபையில் அங்கம் வகிக்கும் தமிழர் தரப்பு இந்த விடயத்தில் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். தமிழ் சிவில் அமைப்புகள், அரசியல் கட்சிகள் தொடர் போராட்டங்கள் மூலம் மீண்டும் ஒரு முறை அரசமைப்பின் மூலம் தமிழ் மக்களின் உரிமைகள் பறிக்கப்படுவதைத் தடுத்துநிறுத்த வேண்டும். அதை விடுத்து எல்லாம் முடிந்த பின்பு சிங்கள ஆட்சியாளர்கள் ஏமாற்றி விட்டனர் என ஒப்பாரி வைப்பதில் எந்தவித பயனுமில்லை.










# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | | | 2 | | 7 | | |
| | | | | | 3 | | 2 | 4 |
| | | | | | 5 | | | 8 |
| 7 | | 3 | | 4 | | | | |
| | | 5 | | | | 1 | | |
| | | | | 7 | | 6 | | 3 |
| 6 | | | 1 | | | | | |
| 2 | 8 | | 9 | | | | | |
| | | 4 | | 8 | | | | 7 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 6 | 5 | 4 | 3 | 8 | 7 | 9 | 1 |
| 7 | 3 | 1 | 9 | 2 | 5 | 6 | 8 | 4 |
| 4 | 8 | 9 | 7 | 6 | 1 | 3 | 5 | 2 |
| 8 | 2 | 6 | 3 | 1 | 4 | 5 | 7 | 9 |
| 9 | 7 | 4 | 8 | 5 | 6 | 2 | 1 | 3 |
| 5 | 1 | 3 | 2 | 7 | 9 | 4 | 6 | 8 |
| 6 | 4 | 2 | 1 | 8 | 7 | 9 | 3 | 5 |
| 3 | 5 | 8 | 6 | 9 | 2 | 1 | 4 | 7 |
| 1 | 9 | 7 | 5 | 4 | 3 | 8 | 2 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க் கரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



# கிரிக்கெட் வீரருடன் நடிகை ஸ்ரேயாவுக்கு காதல்

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் வீரர் வெய்ன் பிராவோவுடன் நடிகை ஸ்ரேயாவுக்கு காதல் மலர்ந்துள்ளது. இருவரும் ஜோடியாக சுற்றுகிறார்கள் என சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தமிழ், தெலுங்கு பட உலகில் முன்னணி கதாநாயகியாக இருந்தவர் ஸ்ரேயா. இவர் 2003 இல் "எனக்கு 20 உனக்கு 18" என்ற படம் மூலம் கதா நாயகியாக அறிமுகமானார். ஜெயம்ரவியுடன் நடித்த "மழை", தனுசுடன் நடித்த "திருவிளையாடல் ஆரம்பம்" படங்கள் அவரைப் பிரபலப்படுத்தின. இதைத் தொடர்ந்து ரஜினிகாந்துடன் சிவாஜி படத்தில் ஜோடி சேர்ந்தார். இந்த படம் 2007இல் வெளியாகி, வெற்றிகரமாக ஓடியது.

இதனால் அவருக்குப் பட வாய்ப்புகள் குவிந்தன. விஜய், விக்ரம், விஷால், ஜீவா உள்ளிட்ட பலருடன் இணைந்து நடித்தார். ஆனால், சமீப காலமாக புதுமுக கதாநாயகிகள் வரத்து அதிகமானதால் ஸ்ரேயாவுக்கு படங்கள் குறைந்து விட்டன.

ஸ்ரேயாவுக்கு தற்போது 34 வயது ஆகிறது. இதனால் அவருக்கு பெற்றோர் மாப்பிள்ளை பார்ப்பதாகவும் விரைவில் திருமணம் செய்து கொள்வார் என்றும் பட உலகில் பேசப்பட்டது.

இந்த நிலையில், மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் வீரர் வெய்ன் பிராவோவுடன் ஸ்ரேயாவுக்கு காதல் மலர்ந்துள்ளதாக பரபரப்பு தகவல் வெளியாகி உள்ளது. மும்பையில் உள்ள ஒரு பிரபல விடுதிக்கு அவர்கள் இணைந்து வந்தார்கள், அங்கு அருகருகே உட்கார்ந்து உணவு சாப்பிட்டார்கள். நீண்ட நேரம் சிரித்துப் பேசிக் கொண்டு இருந்தனர். பின்னர் அங்கிருந்து வெளியேறி ஒரே காரில் புறப்பட்டு சென்றார்கள், இதனை அங்கிருந்த சிலர் அவதானித்தனர் என்கிறார்கள்

ஸ்ரேயாவும், வெய்ன் பிராவோவும் திருமணம் செய்துகொள்ள முடிவெடுத்து இருப்பதாக பட உலகிலும் தகவல் பரவி வருகிறது.

**கணவன்:** நம்ம பையன் எல்லாப் பாடத்திலும் முதல் மார்க் என்று சொன்னான்... நீ ஏண்டி முழிக்கிறே?
**மனைவி:** அவன் சொன்னது எல்லா பாடத்திலும் ஒவ்வொரு மார்க் வாங்கியிருக்கிறதை




# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** உடல் நலனில் அக்கறை கொள்வது நல்லது. நண்பரால் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**இடபம்:** உறவினரால் நன்மை பெறுவீர்கள். குடும்பத்தினரின் ஒத்துழைப்பு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். சேமிப்பு உயரும். பெண்களின் நீண்டநாள் விருப்பம் நிறைவேறும்.

**மிதுனம்:** நற்செயலில் ஈடுபட்டு புகழ் பெறுவீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சிபெற, சுறுசுறுப்பாக பணிபுரிவீர்கள். லாபம் உயரும். நிலுவைப் பணம் வசூலாகும். வாகனப் பயணம் இனிதாக அமையும். விருந்து விழாவில் பங்கேற்பீர்கள்.

**கடகம்:** பேச்சில் நிதானத்தைப் பின்பற்றுவது அவசியம். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் சுமாராக இருக்கும். பெண்கள் செலவுக்காக கடன் வாங்க நேரிடலாம். வெளியூர் பயணத்தில், திடீர் மாறுதல் உண்டாகும்.

**சிங்கம்:** உங்களை சிலர் குறை சொல்ல காத்திருப்பர். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த வருமானம் ஓரளவு கிடைக்கும். பணியாளர்கள் பணி வியமாக வெளியூர் செல்வர். பிள்ளை களின் செயறபாடு ஆறுதல அளிக்கும.

**கன்னி:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். திட்டமிட்டபடி செயல் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில், புதிய சாதனை உருவாகும். வருமானம் பன்மடங்கு உயரும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்.

**துலாம்:** பகைவர்கூட நெருங்கி வந்து நட்பு பாராட்டுவர். பெருந்தன்மையுடன் பிறருக்கு உதவி செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில், குறுக்கீடு விலகும். லாபம் படிப்படியாக உயரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும

**விருச்சிகம்:** எதிர்காலம் குறித்த எண்ணம் மேலோங்கும். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். பெண்கள் கௌரவத்துக்காக செலவு செய்ய நேரிடும். பெற்றோரின் அன்பும் ஆசியும் கிடைக்கப் பெறுவீர்கள்.

**தனுசு:** தர்மசங்கடமான சூழ்நிலையை எதிர் கொள்ள நேரிடலாம். தொழில், வியாபாரத்தில், வேலைப்பளு அதிகரிக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கப் பெறுவர். பிராணிகளிடம் விலகியிருப்பது நல்லது.

**மகரம்:** நல்லவர்களின் நட்பால் மனதில் உற்சாகம் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில், சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். மனைவியின் ஆலோசனை வளர்ச்சிக்கு வழிவகுக்கும். விருந்து, உபசரிப்பில் கலந்து கொள்வீர்கள்.

**கும்பம்:** உங்களின் நற்செயலை, சிலர் பரிகாசம் செய்வர். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சிப்பணி நிறைவேற தாமதமாகும். அளவான பணவரவு கிடைக்கும். பெண்கள், தகுதிக்கு மீறி வாக்குறுதி தருவதை தவிர்க்கவும்.

**மீனம்:** எதிர்பார்ப்பு இனிதே நிறைவேறும். அக்கம்பக்கத்தினர் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் உயரும். குடும்பத்தேவை முழுமையாகும். புத்திரர்களின் செயற்பாடு பெருமையளிக்கும்.




காற்றுப்புகாத பாத்திரங்கள் அறிமுகமாகியுள்ளன. சில உணவுப் பொருள்கள், பதார்த்தங்களை இவற்றில் வைத்து பத்திரப்படுத்தலாம். இவை 250 ரூபா விலிருந்து விற்பனை செய்யப்படுகின்றன.



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 50 | 60 | 60 | 40 | 40 | 30 | 50 |
| கத்தரி | 60 | 50 | 60 | 60 | 50 | 50 | 90 | 35 |
| கரட் | 70 | 80 | 100–200 | 100 | 160 | 100 | 110 | 100 |
| மரவள்ளி | 70 | 70 | 60 | 60 | 60 | 60 | 80 | 60 |
| பயிற்றை | 120 | 80 | 100 | 60 | 120 | 160 | 100 | 60 |
| பாகல் | 120 | 120 | 200 | 160 | 160 | 120 | 150 | 70 |
| கருணைக்கிழங்கு | 100 | 100 | 80 | 120 | 80 | 120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 100 | 100 | 90 | 100 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 90 | 100 | 100 | 120 | 80 | 120 | 90 | 70 |
| பூசணி | 30 | 30 | 40 | 40 | 30 | 60 | 70 | 30 |
| தக்காளி | 80 | 80 | 60 | 90 | 80 | 80 | 120 | 40 |
| வாழைக்காய் | 70 | 50 | 60 | 60 | 60 | 80 | 70 | 40 |
| கீரை | 15 | 20 | 30 | 20 | 20 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 30 | 30 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 60 | 80 | 100 | 80 | 80 | 100 | 200 | 70 |
| புடோல் | 50 | 50 | 60 | 60 | 60 | 40 | 70 | 50 |
| கோவா | 80 | 80 | 80 | 100 | 80 | 100 | 90 | 50 |
| வெண்டி | 80 | 60 | 100 | 120 | 80 | 40 | 70 | 30 |
| போஞ்சி | 160 | 160 | 200 | 160 | 160 | 200 | 130 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 120 | 140–160 | 100 | 90 | 100 |
| தேங்காய் | 50 | 30 | 50 | 35–40 | 30 | 20 | 15–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 500 | 400 | 450–600 | 550 | 500 | 200 | 120 | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 10 | 10 | 10 |
| கறிமிளகாய் | 100 | 100 | 120 | 120 | 120 | 100 | 200 | 70 |
| இராசவள்ளி | 160 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 140 | 100 | 100 | 120 | 80–100 | 200 | 80 | 100 |





## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | [illegible] | பருத்தித்துறை | சாவகச்சேரி | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 500 | 700 | 700 | 600 | 600 |
| நண்டு | 250 | 400 | 200 | 400 | 400 | 200 | 600 |
| கணவாய் | 600 | 700 | 400 | 600 | 600 | 700 | – |
| பாரை | 550 | 500 | 400 | 800 | 500 | – | 400 |
| சுறா | 500 | 600 | 500 | 800 | 600 | 600 | – |
| சீலா | 300 | 400 | 300 | 600 | 300 | 400 | – |
| விளை | 650 | 500 | 300 | 600 | 400 | 400 | 450 |
| முரல் | 300 | 200 | 300 | 500 | 300 | 350 | – |
| கும்பிளா | 400 | 300 | 400 | 400 | 300 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | 300 | 500 | 400 | – | – |
| ஓரா | 400 | 200 | 300 | – | 300 | 500 | 400 |
| திரளி | 300 | 200 | 100 | 150 | 200 | 200 | 300 |
| நகரை | 250 | 200 | 100 | 250 | 300 | – | 300 |
| சூடை | 150 | 100 | 100 | 200 | 100 | 150 | – |
| ஒட்டி | 300 | 200 | 200 | – | 200 | 400 | – |
| திருக்கை | 150 | 300 | 200 | 400 | 200 | 200 | 330 |
| மதனம் | 150 | 150 | – | 400 | 300 | 50 | 200 |
| கொய் | 100 | 100 | 50 | 70 | 100 | – | – |
| பாலை | 400 | 100 | 300 | 400 | 200 | – | – |
| வாழை | 100 | 100 | – | 400 | 300 | 300 | – |



## சீரகம் உளுந்து மாவுருண்டை

### தேவையான பொருள்கள்

சீரகம் - 2 மேசைக்கரண்டி
வெள்ளை உருட்டு உளுத்தம் பருப்பு - 4 மேசைக்கரண்டி
சீனி - 4 மேசைக்கரண்டி
பனங்கற்கண்டு - 2 மேசைக்கரண்டி
நெய் - 6 மேசைக்கரண்டி
ஏலக்காய் பொடி - ஒரு தேக்கரண்டி

### செய்முறை

சீனியை பொடி செய்து வைக்கவும். நெய்யை லேசாக சூடுப்படுத்தி, உருக்கி வைக்கவும்.

வெறும் சட்டியில் உளுத்தம்பருப்பை போட்டு நன்கு சிவக்க வறுக்கவும்.

அதே போல் சீரகத்தையும் வெறும் சட்டியில் பொரிய விட்டு எடுத்து வைக்கவும்.

மிக்ஸியில் பொரித்த சீரகம், வறுத்த உளுத்தம்பருப்பு, பொடித்த சீனி ஆகியவற்றை போட்டு அரைக்கவும். அரைத்து வைத்திருக்கும் மாவுடன் ஏலக்காய் பொடியை சேர்க்கவும். உருக்கி வைத்திருக்கும் நெய்யை, சிறிது சிறிதாக ஊற்றி, சிறிய உருண்டை களாகப் பிடித்து வைக்கவும். சீரகம் உளுந்து மாவுருண்டை தயார்.

## நாளை

ஐப்பசி-01
திங்கட்கிழமை
-17.10.2016
திதி: துதிதிய
பி.இ. 05.53
நட்சத்திரம்:
அச்சுவினி மு.ப.11.01
ராகுகாலம்:
07.32-09.02 வரை
சுபநேரம்:
12.02-01.32 வரை

## மருத்துவ குணங்கள் அதிகம் நிறைந்துள்ள வெந்தயம்

20 கிராம் வெந்தயத்தை வறுத்து, இடித்து 50 கிராம் வெல்லம் சேர்த்து பிசைந்து ஒரு நாள் நான்குமுறை சாப்பிட சீதபேதி நிற்கும். சிறிதளவு வெந்தயத்தை மோரில் ஊறவைத்து அரைத்து, மோரில் கலக்கி குடிக்கக் குணமாகும்.

வெந்தயத்தை இளநீரில் ஊற வைத்து அரைத்துக் குடிக்க சீதபேதிக் கடுப்புத் தீரும். வெந்தயத்தை வாழைப் பழத்திற்குள் வைத்து மூடி இரவு பனியில் வைத்து காலையில் மூன்று நாள்கள் சாப்பிட சீதபேதி குணமாகும்.

மோரில் வெந்தயத்தை ஊற வைத்து காலையில் வெறும் வயிற்றில் உண்ண வாய்வு, பொருமல் நீங்கும்.

வெந்தயம், கடுகு, பெருங்காயம், மஞ்சள், இந்துப்பு இவைகளை சம அளவு எடுத்து நெய்யில் வறுத்து பொடியாக்கி உணவுடன் உண்ண வயிற்று வலி தீரும்.

ஐந்து கிராம் வெந்தயம், பூண்டு, பெருங்காயம், முருங்கை ஈர்க்கு இலைகளை எடுத்து நீர் சேர்த்து அரைத்து, நீரை வடிகட்டி, மூன்று வேளை ஒரு அவுன்ஸ் வீதம் குடிக்க வயிற்றுக் கடுப்பு தீரும்.

இரவில் வெந்தயத்தை தயிரில் ஊற வைத்து, காலையில் அரைத்து சிறிதளவு தேன் சேர்த்து சாப்பிட வயிற்றுப் போக்குத் தீரும்.

வெந்தயத்தை நீராகாரத்தில் ஊற வைத்து இரவில் படுக்கும் முன் சாப்பிடவும். 20 கிராம் வெந்தயம் 50 கிராம் வெங்காயம் இரண்டையும் அரை லிற்றர் விளக்கெண்ணெயில் காய்ச்சி, வடிகட்டி, பாலில் அரைக் கரண்டி எண்ணெய் விட்டு காலையில் இருபது நாள்கள் குடிக்க கணைச்சூடு தீரும்.





# பாக். வீராங்கனை பலூச் கார் விபத்தில் சாவு

பாகிஸ்தான் பெண்கள் தேசிய கால்பந்து அணியின் நட்சத்திர வீராங்கனை பலூச் கார் விபத்தில் உயிரிழந்தார். பாகிஸ்தான் கால்பந்து அணியின் பிரபல நட்சத்திரமாகத் திகழ்ந்தவர் சாலைலா பலூச். இவர் கராச்சியில் காரில் சென்று கொண்டிருந்தபோது, கட்டுப்பாட்டை இழந்த கார் வீதியோரம் இருந்த இரும்பு கம்பம் மீது மோதியது. சம்பவ இடத்திலேயே பலூச் உயிரிழந்தார். 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற தெற்காசிய கால்பந்துத் தொடரிலேயே பலூச் பிரபலமானமை குறிப்பிடத்தக்கது.



# இலங்கை வீரர்களின் சம்பளம் குறைப்பு

இலங்கைக் கிரிக்கெட் வீரர்களுக்கு 2016-2017ஆம் ஆண்டுகளுக்கான சம்பள ஒப்பந்தம் தொடர்பான விவரங்கள் வெளியிடப்பட்டன. கடந்த வருடம் வழங்கப்பட்ட ஒப்பந்தத் தொகையை விட அடுத்தவருடத்துக்கான ஒப்பந்தத் தொகை குறைக்கப்பட்டுள்ளது.
2015-2016ஆம் ஆண்டுக்கான சம்பள ஒப்பந்தம் நான்கு பிரிவுகளாக வழங்கப்பட்டது. முதல் பிரிவில் உள்ள வீரர்களுக்கு ஒரு லட்சத்து 65 ஆயிரம் டொலர்களும், இரண்டாவது பிரிவில் உள்ள வீரர்களுக்கு ஒரு லட்சம் டொலர்களும், மூன்றாவது பிரிவில் உள்ள வீரர்களுக்கு 70 ஆயிரம் டொலர்களும், நான்காவது பிரிவில் உள்ள வீரர்களுக்கு 40 ஆயிரம் டொலர்களும் வழங்கப்பட்டன. ஆனால், தற்போது இந்த ஆண்டுக்கான சம்பள ஒப்பந்தத்தில், முன்னதாக வழங்கப்பட்ட சம்பளம் குறைக்கப்பட்டுள்ளது. 2016-2017ஆம் ஆண்டு ஒப்பந்தம் 5 பிரிவுகளாக வழங்கப்படவுள்ளது. முதல் பிரிவு வீரர்களுக்கு ஒரு லட்சத்து 25 ஆயிரம் டொலர்களும், இரண்டாவது பிரிவு வீரர்களுக்கு 80 ஆயிரம் டொலர்களும், மூன்றாவது பிரிவு வீரர்களுக்கு 60 ஆயிரம் டொலர்களும், நான்காவது பிரிவு வீரர்களுக்கு 40 ஆயிரம் டொலர்களும் ஐந்தாவது பிரிவு வீரர்களுக்கு 20 ஆயிரம் டொலர்களும் வழங்கப்படவுள்ளன.

## தன்னை நிரூபிக்க வேண்டிய

# கட்டாயத்தில் ‘கப்டன் கூல்’

இந்திய அணியின் மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களுக்கான தலைவராக உள்ள டோனி, எதிர்கொண்ட ஆகக்கூடிய நெருக்கடிக் காலமாக இக்காலத்தைக் குறிப்பிடலாம்.
மூன்று ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரிலும், ஐந்து ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரிலும், விளையாடுவதற்காக நியூசிலாந்து அணி இந்தியா சென்றிருந்தது. டெஸ்ட் தொடர் முடிவடைந்துள்ளது. 3:0 என்ற அடிப்படையில் இந்தியா தொடரை வென்றது. இதன்மூலம் டெஸ்ட் தரப்படுத்தலிலும் அந்த அணி முதலிடத்தைப் பிடித்துள்ளது. அத்துடன் இந்திய அணி, டெஸ்ட் ஆட்டமொன்றில் தோல்வியடைந்து, 15 மாதங்களுக்கும் அதிகமாகிறது. இதனால் டெஸ்ட் தலைவரான கோக்லி மீது அதீத நம்பிக்கை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கும், ரசிகர்களுக்கும் ஏற்பட்டுள்ளது. அவரை ஒருநாள் மற்றும் ரி-20 ஆட்டங்களுக்கும் தலைவராக மாற்றலாம் என்ற கருத்துக்கள் தற்போது துளிர்விட ஆரம்பித்துள்ளன.
இந்த இரு அணிகளுக்கும் இடையிலான 5 ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் இன்று ஆரம்பமாகிறது. இந்தத் தொடரை டோனி கைப்பற்றிக் கொடுத்தால் மட்டுமே அவர் அழுத்தங்கள் இல்லாமல் தலைவராகத் தொடரலாம் என்ற நிலை உருவாகியுள்ளது.
மாறாகத் தொடரை இழந்தாலோ அல்லது அபார வெற்றியல்லாமல் 3:2 என்ற அடிப்படையில் கைப்பற்றினாலோ டோனியின் திறனும், தலைமைத்துவமும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கப்படும். இவ்வாறான நிலை ஏற்பட்டால், அனைத்து வகை ஆட்டங்களுக்கும் கோக்லியை தலைவராக்கலாம் என்று துளிர்விட்டுள்ள கருத்து பெரு விருட்சமாக மாறும்.
இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை இந்த விடயம் தொடர்பாக, பரிசீலனை செய்தால் டோனியின் கிரிக்கெட் வாழ்க்கை முடிவுக்கு வரலாம்.
மொத்தத்தில் இன்று ஆரம்பமாகும் ஒருநாள் தொடரில் தன்னை நிரூபிக்க வேண்டிய கட்டாயத்தில் கப்டன்கூல் உள்ளார்.
இந்திய ஆடுகளங்கள் சுழலுக்கு ஒத்துழைக்கும் இயல்புடையவை.
ஒருநாள் தொடருக்கான இந்திய அணியில் அஸ்வின் மற்றும் ஜடேயா இருவருக்கும் ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கான புத்துணர்ச்சி ஓய்வு டோனியின் நிரந்தரமான ஓய்வாகவும் அமையலாம்.






## வழித்துத் துடைக்கப்படுகிறது

# ஆஸ்திரேலியா

குறிப்பிட்ட காலத்துக்குள் மூன்று விதமான ஆட்டங்களிலும் ஆஸ்திரேலியா வழித்துத் துடைக்கப்பட்டுள்ளது.
ரி-20 உலகக் கிண்ணத் தொடருக்கு முன்பாக ரி-20 ஆட்டங்கள் கொண்ட தொடரில், விளையாட இந்தியா, ஆஸ்திரேலியாவுக்குச் சென்றிருந்தது. ஆஸ்திரேலியாவை இந்தியா வழித்துத் துடைத்தது. அதன் பின்னர் மூன்று டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரில் விளையாட இலங்கைக்கு ஆஸ்திரேலியா வந்திருந்தது. 3:0 என்ற அடிப்படையில் இலங்கை முறையாகக் கவனித்தனுப்பியது. இருப்பினும் இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடரைக் கைப்பற்றி, தான் உலகச் சம்பியன் என்பதை சொல்லாமல் சொன்னது ஆஸி. ஆனால், தற்போது ஒருநாள் தொடரிலும் அந்த அணி தென்னாபிரிக்காவிடம் சிறப்புக் கவனிப்புப் பெற்றுள்ளது. அண்மையில் முடிவடைந்த ஐந்து ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரை தென்னாபிரிக்கா 5:0 என்ற அடிப்படையில் கைப்பற்றி, வரலாற்றுச் சாதனை படைத்தது.
இதில் சிரிப்புக்குரிய விடயம் என்னவென்றால் ஆஸ்திரேலிய அணியின் தலைவரான சிமித், தென்னாபிரிக்கத் தொடரில் அதிக கவனம் செலுத்துவதற்காக இலங்கைக்கு எதிரான தொடரிலிருந்து பாதியில் விலகியிருந்தார்.

# நான் யார்?

(35ஆம் பக்கத் தொடர்ச்சி)

நீட்டினால், அவன் வாங்க மறுத்தான். "அம்மாட்ட அம்மாட்ட" என்று பிரவீன் கத்தினான். அவன், தாய் அன்புக்காக ஏங்குவது துஷானிக்குத் தெரிந்தது அவன், தாய் பற்றிய பல கேள்விகள் துஷானியின் மனதுக்குள் அடுக்கிக் கொண்டே போயின, ஒருவாறு சமாளித்துக் கொண்டு அந்தக் குழந்தையின் கைகளுக்குள் கிச்சுக் கிச்சு மூட்டினாள். உடனே அந்தப் பையன் புன்னகைத்தான். அந்தப் புன்னகை துஷானிக்குச் சந்தோசத்தை அளித்தது. அந்தப் பராமரிப்புத் தாயிடம் "இந்தக் குழந்தை யார்" எனக் கேட்டாள் துஷாணி. அதற்கு அந்தப் பெண் "இவனது தாய் இவனை வேண்டாம் என்று கூறியதால், நீதிமன்றம் மூலம் எமது இல்லத்துக்கு முந்தநாள்தான் கொண்டு வந்தார்கள். அதனால்தான் அவன் எம்முடன் இன்னும் அணையவில்லை. இவனது தாய்க்கு இப்போது பதினைந்து வயது" என்றாள் அந்தப் பெண். இதைக் கேட்ட துஷானிக்கு தூக்கி வாரிப் போட்டது. "பதினைந்து வயதா? அப்படியானால் இவன் பிறக்கும் போது அவளுக்குப் பதின்மூன்று அரை வயதா? அப்படியானால் இவன் தாயும் ஒரு சிறுமியா? என்ன கொடுமை இவளுக்கு நடந்திருக்கும்? ஆயினும் எப்படி இந்தக் குழந்தையை இதுவரை வளர்த்துவிட்டு இந்த மழலை ஓசையை கேட்டு விட்டு, வேண்டாம் என்று எப்படிக் கூறினாள்" என்று பெரிந்து வெடித்தாள் துஷானி ஒருவாறு தன்னை சுதாகரித்துக் கொண்டாள். பின் தனது வேலைகளில் மூழ்கினாள். ஆனால், அவள் மனம் மட்டும் வெகு பாரமாகவே இருந்தது. துஷானியின் மனதில் மீண்டும் பல எண்ணங்கள், கேள்விகள் ஆனால், விடை தெரியாதவை. பிரவீன் தாய்? யாராவது காமுகர்களால் கெடுக்கப்பட்டாளா? யாராவது ஆசை வார்த்தை காட்டி மோசம் செய்து விட்டார்களா? அதன் மூலம் இவன் பிறந்தானா? இவள் சிறுமி என்பதால் நீதிமன்றத் தீர்ப்பின்படி இவனை இவள் தாய் பிரிய நேரிட்டிருக்குமோ? இவன் தாய் சிறுமி என்றாலும், அவனைப் பத்துமாதம் சுமந்த தாயல்லவா? எப்படி இருப்பினும் அவள் பிள்ளையைப் பிரிந்து எப்படி தவிப்பாளோ? நினைக்கும்போதே துஷானியின் நெஞ்செல்லாம் வெடிப்பது போல இருந்தது. அன்று வேலை முடித்து மறுநாள் வேலைக்கு வரும்போது, பிரவீன் வேறு ஒரு வளர்ப்புத் தாயுடன் இருந்தான். துஷானி "பிரவீன் வாங்க" எனக் கைநீட்ட ஏதோ தெரிந்தவர்கள் போல் அவளிடம் தாவி கட்டி அணைத்துக் கொண்டான். அந்தக் குழந்தை ஒரு தாயின் அரவணைப்பை எதிர்பார்ப்பது புரிந்தது துஷானிக்கு. பிரவீன் வெளியே காட்டி "அம்மாட்ட" என்று சொன்னான். வெளியில் கொண்டு சென்ற துஷானி ஒரு காகத்தைக் கண்டாள். உடனே "அம்மாவை காக்க கொண்டுபோயிற்று" என்று கூற அந்தப் பையன் "காக்கா கொண்டு..." என்று விழுங்கிக் கூறினான். அப்படியே அவன் அம்மாவைத் தூக்கிக் கொண்டதான அந்தக் காகத்தின் அசைவை லயித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். துஷானியின் மனதுக்குள் ஓர் எண்ணம் தோன்றியது. இந்தக்குழந்தையை தான் வளர்த்தால் என்ன என. ஆனால், அதற்கு சட்டப்படி பல கட்டுப்பாடு இருக்கு. அவனது பெயரில் லட்சக் கணக்கில் பணம் பேடவேண்டும். ஏற்கனவே குழந்தை இல்லாமல் இருக்கவேண்டும். ஆனால் துஷானிக்கு ஒரு மகன் இருக்கின்றானே. அதைவிட அவள் அவ்வளவுக்கு வசதி உள்ளவளும் அல்ல. இந்த எண்ணம் எல்லாம் நிராசைதான்.

பிரவீன் தாய் இனி வேறு திருமணம் முடித்து வாழ்ந்தாலும், இவனது இழப்பை எப்படி எடுத்துக் கொள்வாளோ?, இப்படியான மன எண்ணங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு "பிரவீன் அம்மாட்ட போங்கோ" என்று வளர்ப்புத்தாயிடம் நீட்டினாள். ஆனால், அவன் போக மறுத்தான். அழத் தொடங்கி விட்டான். என்றாலும் வலுக் கட்டாயமாக அவளிடம் கொடுத்தாள். என்ன செய்வது துஷானிக்கு தொடர்ந்தும் அவனைத் தூக்கி வைத்திருக்க விருப்பம்தான். ஆனால் அவள் கடமையில் அல்லவா இருக்கிறாள். தாதிப் பெண்மணி ஏசுவாரே என்ற பயத்தால் அழ விட்டுவிட்டுத் தனது வேலைகளைச் செய்தாள். ஆனால், தூஷனியின் எண்ணம் அவன் எதிர்காலம் அவன் வளர்ந்து "நான் யார்? என் தாய் யார்? என் தந்தையார்? நான் எப்படி இங்கு வந்தேன்?" என்று கேட்பானே; அவன் அதற்கான விடைகளால் மனம் உடைந்து போவானே? பராமரிப்பு இல்லத்தில் எல்லோரும் நல்லவர்களாக இருக்க முடியாதே! யார் யார் அவனை ஏசுவார்களோ? அடிப்பார்களோ? எதிர்காலத்தில் எத்தனையை இழக்கப் போகிறான். இதற்குக் காலம்தான் பதில் சொல்லவேண்டும். இவன் மட்டுமல்ல பல குழந்தைகளின் வாழ்க்கை கேள்விக் குறியாகத்தான் இருக்கிறது. தற்கால நாகரிகம், இணையம், போதைப் பொருள்களுக்கு அடிமையாகித் தங்கள் வாழ்க்கையைத் தாமே சீரழிக்கும் இளையர், யுவதிகளால் பாதிக்கப்படுவது, கள்ளம் கபடமல்லாத சிறு மொட்டுக்களின் வாழ்க்கைதான். அன்று போரால், விபத்தால் தந்தை-தாயை இழந்த சிறுவர்களே சிறுவர் இல்லங்களில் இருந்தார்கள். இன்று சீரழிந்த ஆண்-பெண் உறவுகளால் பல குழந்தைகள் பிறந்து, அநாதைகளாக்கப்படுகின்றன. சிறு பிஞ்சுகளின் வாழ்க்கையே இதனால் முகவரி தெரியாததாகி விடுகின்றது. இப்படிச் சென்றால், இனிவரும் மனிதர்கள் எல்லோரும் தம்மைத் தாமே அறிந்து கொள்ள அவஸ்தைப்படும் நிலையல்லவா தோன்றும்.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 442

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | | 5 |
| 6 | | | 7 | | | 8 | |
| 9 | | 10 | | | 11 | | |
| 12 | | | | 13 | | | 14 |
| | | 15 | 16 | | | | |
| | 17 | | | | | 18 | |
| 19 | | | | | 20 | | |
| 21 | | | | 22 | | | |

அனுப்புபவர் பெயர்:...........................................

பூரணமான தபால் விலாசம்: ...................................

...........................................................

கையொப்பம்:...............................................

**இடமிருந்து வலம்**

1. சமமாக மதிக்கும் போக்கு
6. உயிர்ப்பின் ஆரம்பம்
7. ஒரு பறவை
8. இது பெண்ணுக்கு வேலி
9. ஒரு புறம் கொடுக்கல் மறுபுறம்...
11. கூட்டல் குறி
12. துரியோதனன் மாமன்
13. சரீரம்
15. உலோகத் தகடு
17. ஐஸ்வரியம்
18. கோவில்களில் பயன்படுத்தப்படும் ஒரு பொருள்
19. தாய் பிள்ளைக்கு ஊட்டுவது
20. பொழுது புலர...
21. தண்டிகை
22. நண்பகல் வேளை

**மேலிருந்து கீழ்**

1. தொடர்பு பேணல்
2. அருகில்
3. புடைவை
4. காற்று
5. நோவு
8. தண்ணீர் விடாய்
10. பழுத்தல்
11. உயிரற்றது
13. பசளை
14. பாவத்துக்கு எதிர்ச் சொல்
16. மனக் கஷ்டம்
17. திருமணமாகாத பெண்ணுக்கான அடைமொழி
18. இறக்க
19. ஒரு தாவரம்
20 . தலையெழுத்து

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 440 இற்கான சரியான விடைகள் வருமாறு:-

**இடமிருந்து வலம்**

(1) விசித்திரம் (6) சாண் (7) கதி (8) தம் (9) கடுகதி (11) அரபு (12) ஆடி (13) கடகம் (15) வித (16) பின்னல் (17) குருடி (18) சனம் (19) கடம் (20) கும் (21) கரும்புலி

**மேலிருந்து கீழ்**

(1) விசாகம் (2) சிண்டு (3) திகதி (4) ரதி (5) தும்புத்தடி (8) தர (10) கண்டனம் (11) அடி (12) ஆம் (13) கன்னம் (14) கல் (15) விரும்பு (16) பிசகு (17) குடம் (19) கரு

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இல.442 பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (26.10.2016 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 440 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
திருமதி ச.பிரதீபன்,
யா/நவாலி மகா வித்தியாலயம்,
மானிப்பாய்.

**2 ஆம் பரிசு**
எம்.ஜி.தில்லைநாயகம்,
இல.70/12 மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

**3 ஆம் பரிசு**
வ.தி.ராஜாராம்,
"பிருந்தாவனம்"
ஆத்தியடி, பருத்தித்துறை.

**4 ஆம் பரிசு**
தா.செல்வநாதன்,
மேதர் லேன்,
மானிப்பாய் தெற்கு, மானிப்பாய்.

**5 ஆம் பரிசு**
ப.ஸ்ரீஜீவரஞ்சினி,
இல.6 பிளர்ச்சஸ் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

**பாராட்டுப் பெறுவோர்**

T.மேரிசலுஜா,
இல.20/5, சென் மேரிஸ், முதலாம் ஒழுங்கை, கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

ம.மேசிலெற்றீஷியா,
இல.1625, இரத்தினபுரம்,
கிளிநொச்சி.

வ.காந்தி,
'பொன்மணி வாசா',
கரணவாய் கிழக்கு, கரவெட்டி.

சொற்சிலம்பம் போட்டி இல்.442இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 30.10.2016 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 440இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக் கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

# இந்த வாரம்

16.10.2016 முதல்
22.10.2016 வரை

உங்களுக்கு எப்படி?

## மேடம்

புதன், கேது, சூரியன் நற்பலன் வழங்குவர். உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள். உறவினர், நண்பர்களின் உதவி கிடைக்கும். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும். புத்திரர்கள் விரும்பிய பொருள் வாங்கித்தருவீர்கள். முக்கிய விவகாரங்களில் சுமுகத் தீர்வு ஏற்படும். வெளியூர் பயணங்களில் மாற்றம் ஏற்படலாம். உடல் ஆரோக்கியம் மேம்படும். கணவன், மனைவிகளுக்கிடையே கருத்து வேறுபாடு வரலாம். குடும்பத்தில் ஒற்றுமையை பாதுகாப்பது நல்லது. பணியாளர்களுக்கு, வேலைப்பளு கூடினாலும், அதற்கேற்ற சலுகை கிடைக்கும். மாணவர்கள், தேர்ச்சி பெற கடுமையாக போராட வேண்டி இருக்கும்.

## இடபம்

குரு, சந்திரன் ஓரளவு நற்பலன் தருவர். மன உறுதியுடன் முக்கிய பணிகளை நிறைவேற்றுவீர்கள். வாகன பராமரிப்பு செலவு உயரும். புத்திரர்களின் எதிர்கால வாழ்வுக்கு தேவையானதைச் செய்வீர்கள். பூர்வ சொத்தில் ஓரளவு பணம் கிடைக்கும். குடும்பத்துடன் சுற்றுலா சென்று வர திட்டமிடுவீர்கள். மனைவியின் உடல்நலத்துக்குச் சிகிச்சை தேவைப்படலாம். தொழில், வியாபாரம் செழித்து வளர அனுகூலம் உண்டு. பணியாளர்கள், ஆர்வமுடன் பணி புரிந்து சலுகை பெறுவர். பெண்கள், வீட்டுச்செலவில் சிக்கனமாக இருந்து சேமிப்பர். மாணவர்கள், சிறப்பாகப் படித்து நற்பெயர் பெறுவர்.

## மிதுனம்

புதன், ராகு, சுக்கிரன், சனீஸ்வரர் அளப்பரிய நன்மை தருவர். பேச்சில் அமைதி வெளிப்படும். திட்டங்கள் முழு அளவில் வெற்றி பெறும். குடும்பத் தேவை பெருமளவில் முழுமையாகும். புத்திரர்களின் அறிவு, செயற்றிறன் காரணமாக உங்கள் வேலையில் பாதி குறையும். அவர்களே பொறுப்பாக எதையும் செய்வார்கள். பணவரவு திருப்திகரமாகும். கணவன், மனைவி உறவு நல்லபடியாக இருக்கும். உறவினர்களின் உதவி கிடைக் கும். அரச உதவியில் கூடுதல் முயற்சி வேண்டும். தொழில், வியாபாரத்தில் பணவரவு அதிகரிக்கும். பணியாளர்கள், அதிகம் உழைத்து பணம் சேமிப்பர். மாணவர்கள், படிப்பில் முன்னேற நண்பர்கள் உதவுவர்.



## கடகம்

சூரியன், சுக்கிரன், செவ்வாய் அனுகூல அமர்வில் உள்ளனர். இஷ்டதெய்வ அருள்பலம் துணை நிற்கும். முக்கிய பணிகள் எளிதாக நிறைவேறும். உறவினர்களின் வருகை மகிழ்ச்சி தரும். புத்திரர்கள் விரும்பிய பொருளை வாங்கிக் கொடுப்பீர்கள். சிரமம் அணுகாத சுமுகவாழ்வு அமைந்திடும். மனைவியின் ஆலோசனை குடும்பத்திற்கு பயன்தரும். சுற்றுலா பயணங்களில் ஆர்வம் வளரும். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகி பணவரவு கூடும். பணியாளர்கள் சிறப்பாக பணிபுரிந்து சலுகை பெறுவர். பெண்கள் பிள்ளைகள் நலன் சிறக்க பாடுபடுவர். மாணவர்கள் நன்றாகப் படித்து பரிசு பெறுவர்.

## சிங்கம்

குரு, சுக்கிரன் அனுகூல அமர்வில் உள்ளனர். பணிகளில் நேர்மை மிகுந்திருக்கும். உறவினர்களிடம் நற்பெயர் பெறுவீர்கள். வாகன பராமரிப்பு செலவு கூடும். புத்திரர்களின் செயல் சிறப்பாக அமையும். நண்பர்களுக்கு கடனாகக் கொடுத்த பணம் திரும்ப கிடைக்கும். மருத்துவ சிகிச்சையால் உடல் ஆரோக்கியம் பலம்பெறும். மனைவி விரும்பிக்கேட்ட பொருள் வாங்கித்தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள், திறமையாக செயற்பட்டு சலுகை பெறுவர். பெண்கள், மனதில் இருந்த குழப்பம் விலகும். மாணவர்கள், படிப்பு தவிர பிற விவாதம் பேச வேண்டாம்.

## கன்னி

சுக்கிரன், சனீஸ்வரர், கேது அளப்பரிய நற்பலன் தருவர். அனுகூல நிகழ்வுகள் மனதில் ஊக்கம் தரும். தாராள பணவரவு கிடைக்கும். தம்பி, தங்கை பாசத்துடன் இருப்பர். வீடு, வாகனத்தில் உரிய பாதுகாப்பு ஏற்பாடு வேண்டும். புத்திரர்கள் உங்கள் வழிகாட்டுதலை முழு மனதுடன் ஏற்று முன்னேறுவர். பூர்வ சொத்தில் கிடைக்கும் பணவரவு கூடும். உடல்நிலை நன்றாக இருக்கும். அடுத்தவர் பொருளை பாதுகாக்கும் பொறுப்பை ஏற்க வேண்டாம். கணவன், மனைவி இன்ப துன்பத்தில் சமபங்கு கொள்வர். பணியாளர்கள், சக பணியாளர்களிடம் அலுவலக ரகசியங்களைப் பகிர வேண் டாம். பெண்கள், உறவினர் குடும்ப மங்கள நிகழ்ச் சியை முன்னின்று நடத்துவர். மாணவர்கள், நன்றாகப் படித்து தேர்ச்சி பெறுவர்.

## துலாம்

சுக்கிரன், செவ்வாய், ராகு நன்மை தருவர். மனதில் புத்துணர்ச்சி ஏற்படும். பணிகளை சிறப்பாகச் செய்வீர்கள். உறவினர்களின் உதவி கிடைக்கும். பயணங்களால் அதிக நன்மை இருக்காது. புத்திரர்கள் உங்கள் சொல் கேட்டு நடந்து கொள்வர். உடல்நிலை சுமாராக இருக்கும். வீட்டு உபயோகப்பொருள் வாங்குவீர்கள். கணவன், மனைவியின் ஒவ்வொரு செயலும் சிறப்பாக அமைந்து குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற கடுமையாகப் போராட வேண்டி இருக்கும். பணியாளர்களின் பொறுப்பான பணிக்கு பாராட்டு கிடைக்கும். பெண்கள், தாய்வழி உறவினர்களுக்கு பணம் தர வேண்டி வரும். மாணவர்கள், சிறப்பாகப் படித்து தேர்ச்சி பெறுவர்.

## விருச்சிகம்

சூரியன், புதன், குரு, சுக்கிரன் அனுகூல அமர்வில் உள்ளனர். திட்டங்கள் எளிதில் நிறைவேறும். பேச்சைக் குறைப்பது நல்லது. உடன்பிறந்தவர்கள் பாசத்துடன் நடந்து கொள்வர். புத்திரர்கள் செயல்திறனில் மேம்படுவர். பயணங்களின்போது செலவு கூடும். உடல்நிலைக்கு சிகிச்சை எடுக்க வேண்டி வரலாம். கணவன், மனைவி இணைந்து செயற்பட்டு குடும்பநலனைப் பாதுகாப்பர். தொழில், வியாபாரத்தில் இடையூறு வந்தாலும் சரி செய்து விடுவீர்கள். பணியாளர்கள், திறமையாக செயற்பட்டு நிர்வாகத்திடம் நற்பெயர் பெறுவர். பெண் கள், வீட்டுத்தேவைகளை சிறப்பாக நிறைவேற்றுவர். மாணவர்கள், படிப்பில் அதிக கவனம் செலுத்துவர்.

## தனுசு

புதன், சூரியன், சுக்கிரன், கேது, தாராள நற்பலன் தருவர். உறவினர்களின் அன்பும் உதவியும் கிடைக்கும். திட்டமிட்ட பணிகளை சிறப்பாக நிறைவேற்றுவீர்கள். புதிய வீடு வாகனம் வாங்க அனுகூலம் உண்டு. புத்திரரின் ஆர்வம் மிகுந்த செயல் குளறுபடியாகலாம். உடல் ஆரோக்கியம் பலம்பெறும். வழக்கு விவகாரத்தில் சமரச தீர்வு கிடைக்கும். மனைவி கருத்திணக்கமுடன் நடந்து கொள்வார். தாராள பணவசதி கிடைத்து தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி செய்வீர்கள். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். மாணவர்கள், நன்றாக படித்து பாராட்டு பெறுவர்.



## மகரம்

சனீஸ்வரர், சந்திரன், குரு நற்பலன் தருவர். இயலாதவர்களுக்கு உதவுவீர்கள். இஷ்டதெய்வ அருளால் திட்டங்கள் எளிதாக நிறைவேறும். தாயின் அன்பும், ஆசியும் ஊக்கம் தரும். அக்கம் பக்கத்தவர் அன்புடன் நடந்து கொள்வர். பயணங்கள் அளவுடன் இருக்கும். பூர்வ சொத்தில் சுமாரான பணவரவு கிடைக்கும். புத்திரர்கள் மனதில் நம்பிக்கை வளர நல்ல ஆலோசனை வழங்குவீர்கள். பணியாளர் கள், பொறுப்பாக பணி புரிந்து நிர்வாகத்திடம் நற்பெயர் பெறுவர். பெண்கள், செலவில் சிக்கனம் பின்பற்றவும். மாணவர்கள், சிறப்பாகப் படித்து குடும்பத்துக்கு பெருமை சேர்ப்பர்.

## கும்பம்

புதன், சுக்கிரன், செவ்வாய், தாராள நன்மை வழங்குவர். நிகழ்வுகள் சாதகமாக அமையும். உங்களின் மனக்குழப்பம் தீரும். பணிகளில் மனப்பூர்வமாக ஈடுபடுவீர்கள். தாயின் அன்பு, ஆசி கிடைக்கும். புத்திரர்களின் செயல்கள் பாராட்டு பெறுவதாக அமையும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். கணவன், மனைவி கருத்தொற்றுமையால் திட்டங்கள் நல்லபடியாக முடியும். வீட்டில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். பணியா ளர்களுக்கு, மேலதிக சம்பளம் உள்ளிட்ட சலுகைகள் கிடைக்கும். பெண் கள், பிரார்த் தனை நிறை வேறி இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவர். மாண வர்கள், நன்றாகப்படிப்பர்.

## மீனம்

ராகு, சுக்கிரன், குரு அளப்பரிய நன்மை வழங்குவர். நண்பர்கள் உங்கள் நற்செயலை வாழ்த்துவார். மனதில் உற்சாகம் கூடும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு உண்டாகும். புத்திரர்கள் படிப்பு, வேலையில் முன்னேற்றம் காண்பர். எதிர்ப்பாளர்கள் சொந்த சிரமங்களால் விலகுவர். உடல் ஆரோக்கியம் பலம் பெறும். மனைவி வழி சார்ந்த உறவினர்களின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி திருப்திகரமாகும். பணியாளர்கள் வருமானத்தில் முன்னேற்றம் காண்பர். பெண்கள் உறவினர்களிடம் நற்பெயர் பெறுவர். மாணவர்கள் படிப்புடன் போட்டிகளிலும் வெற்றி பெறுவர்.

# உடனடி நடைமுறைத் தீர்மானங்களுடன் நிறைவு பெற்ற யாழ். மறைமாவட்ட மேய்ப்புப்பணி மாநாடு

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
ஊடக வருகை விரிவுரையாளர் – யாழ் பல்கலைக்கழகம்

யாழ். மறைமாவட்டத்தின் அடுத்த 5 ஆண்டுகளுக்கான திட்டமிடல் மேய்ப்புப்பணி மாநாடு கடந்த மாதம் 29 - 30 மற்றும் ஒக்ரோபர் 1ஆம் திகதி ஆகிய மூன்று தினங்களில் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் வெற்றிகரமாக நடந்தேறியுள்ளது. மூன்று தினங்களும் 400 பேர் கூடியிருந்து மறைமாவட்டத்தின் அடுத்த 5 ஆண்டுகளில் செயற்படுத்த எடுத்த முடிவுகள் பற்றி கடந்த வாரம் வெளிவந்த இந்தக் கட்டுரையின் தொடர்ச்சியாக இந்தக் கட்டுரை அமைகிறது.

மேற்படி மாநாட்டின் முதல் இரண்டு கருப்பொருள்களான 1. நாங்கள் ஒரு இறைமக்கள் குழுமம் 2. நாங்கள் ஒரு வழிபடும் குழுமம் ஆகிய இரண்டையும் முழுமையாகப் பார்த்தோம். 3ஆவது கருப்பொருளான நாங்கள் ஒரு சான்று பகரும் குழுமம் என்னும் தலைப்பில் எடுக்கப்பட்ட முடிவுகளையும் அதன் பின்னர் ஏனையவைகள் என்னும் தலைப்பில் செயற்பாட்டுக்கான முன்மொழிவுகளும் பொறுப்புக்களும் என எடுக்கப்பட்ட முடிவுகளையும் கீழே நோக்குவோம். 3. நாங்க்ள் ஒரு சான்று பகரும் குழுமம் - முன்னுரிமைபெற்ற தீர்மானங்கள்

1. பங்குகளில் இளைஞர்களுக்கான விழிப்புணர்வுச் செயற்பாடுகளை மேற்கொள்ளல். பொறுப்பு பங்குத் தந்தை மற்றும் இளையோர் ஆணைக்குழு
2. ஆலயத்தில் உள்ள பணிக்குழுக்களுக்கு சாதிய வர்க்க வேறுபாடு தொடர்பான திருச்சபையின் சமூக நீதி பற்றிய போதனைகள் மட்டில் விழிப்பை ஏற்படுத்தல். பொறுப்பானவர்கள் பங்குத் தந்தை, பங்கு மேய்ப்புப்பணி பேரவை - பொது நிலையினர் கழகம்.
3. கொக்கிளாய் பகுதியில் ஏற்படுத்தப்பட்டு வரும் சிங்கள மக்களின் குடியேற்றம் தொடர்பான விடயத்தைப் பகிரங்கப்படுத்தல், மேலும் பௌத்த விகாரைகள் அமைக் கப்படுதல் தொடர்பான எமது ஆட் சேபனைகளைத் தெரிவித்தல். இந்தப் பணியைப் பொறுப்பேற்க வேண்டியது நீதி சமாதான ஆணைக் குழு.
4. போதைப் பொருள் பாவனை தொடர்பான விழிப்புணர்வை பங்குமட்டத்தில் ஏற்படுத்தல். பொறுப்பு: நீதி சமாதான ஆண்ணக்குழு மற்றும் கியூடெக்கிற்குரியது.
5. அரசியல் சமூக அநீதிகள் நடைபெறும்போது திருச்சபை தன் நிலைப்பாட்டை உடனடியாக தெளிவுபடுத்தல். பொறுப்பு : நீதி சமாதான ஆணைக்குழு.
7. திருச்சபை நிறுவனங்களிலும் பங்குகளிலும் பணியாற்றுவோருக்கான சம்பளத்திட்டம் ஒன்றை உருவாக்கல். பொறுப்பு : மறைமாவட்ட நிதிக் குழு.
8. வறுமை, நோய், உளத்தாக்கம் போன்ற தேவைகளில் உள்ளவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு பணி செய்தல். பொறுப்பு : நற்பணிக்குழு (பங்கு).
9. தமிழ் மக்களுடைய அபிலாசைகளை சந்திக்கக் கூடியதான தீர்வு தொடர்பாக யாழ். திருச்சபையின் கருத்துக்களை பகிரங்கப்படுத்தல். பொறுப்பு : நீதி சமாதான ஆணைக்குழு.
10. தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் அவற்றின் இன்றைய நிலை தொடர்பாக ஆயர் மன்றத்துக்கு தொடர்ச்சியாக அறிவுறுத்தல். பொறுப்பு : நீதி சமாதான ஆணைக்குழு.

### ஏனையவைகள் - செயற்பாட்டுக்கான முன்மொழிவுகளும் - பொறுப்புக்களும்

1. அரச பாடசாலைகளிலும் கிறிஸ்தவ பாடம் கற்பிக்கப் படுவதற்கும், கிறிஸ்தவ நிகழ்வுகளை அனுசரிப்பதற்கும் ஏற்பாடுசெய்தல்.
2. பல ஆலயங்களைக் கொண்ட பங்குகளை பிரித்து புதிய பங்குகளை உருவாக்கல், புதிய பங்குகளை உருவாக்க முடியாத இடத்து துணை ஆலயங்களில் சுழற்சி முறையில் பங்குத்தந்தை குடியிருந்து பணி செய்தல்
3. கிளி முல்லை மறைக்கோட்டத்தை தனி மறைமாவட்டமாக்கும் இலக்கை நோக்கமாகக் கொண்டு மறைமாவட்டம் ஒன்றுக்கு தேவையான அடிப்படைக் கட்டுமானங்களை உருவாக்குதல் (இரண்டு அல்லது மூன்று மறைக்கோட்டங்களாக பிரித்தல், கிறிஸ்தவ பாடசாலை ஒன்றை ஆரம்பித்தல், சிறிய குருமடத்தை ஆரம்பித்தல், கியூடெக் போன்று ஏனைய ஆணைக் குழுக்களின் உப பிரிவுகளும் சுயாதீனமாக செயற்படக்கூடிய ஏற்பாடுகளைச் செய்தல்).
4. தேவையான பங்குகளில் குருக்களுக்கான பணிமனையை அமைப்பதன் மூலம் அவர்களது பணியை இலகுபடுத்தல்.
5. திருத்தந்தையின் திருமடல்களில் வரும் முக்கிய கருத்துக்களை தமிழில் பெற்றுக்கொள்ள வழி செய்தல்.
6. ஆலயம் - திருச்சபை நிறுவனங்கள் பெயரில் வெளிமாவட்டங்களில் - வெளிநாடுகளில் அமைக்கப்படும் அமைப்புக்களுடைய நிதி கணக்குகள் தொடர்பான கொள்கை ஒன்றை வகுத்தல்.
7. காலாண்டுக்கு ஒருமுறை சிறுவர், இளையோருக்கு ஆன்மிகக் கருத்தரங்குகளை நடத்துதல்.
8. கல்வியில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் முகமாக இன்றைய எமது மறைமாவட்ட கல்வி நிலை தொடர்பான ஆய்வு ஒன்றை மேற்கொள்ளல்.
9. காணி தொடர்பான விடயங்களை கையாள ஓர் ஆணைக்குழுவை ஏற்படுத்தல்.
10. தமிழ் மறைமாவட்டங்கள் மறை மாநிலங்களாக ஆக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.



### எல்லோரையும் தேடிச்சென்று காப்பாற்றுங்கள் என்ற யாழ். ஆயரின் அழைப்பு

யாழ். ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை யாழ் மறைமாவட்டத்தின் புதிய ஆயராகப் பொறுப்பேற்றவுடன் புதிதாய் வாழ்வோம் என்னும் தலைப்பில் யாழ் மறைமாவட்டத்தில் மேய்ப்புப்பணி மாநாடு ஒன்றை நடத்துவதற்கான அழைப்பை விடுத்தார். பின்னர் மாநாட்டிற்கான தமது விசேட செய்தியில் எல்லோரையும் தேடிச்சென்று காப்பாற்றுங்கள் என்ற அழைப்பை விடுத்தார். அதனை மகாநாடு நிறைவுற்ற இவ்வேளையில் நடைமுறைப்படுத்த வேண்டிய நேரம் வந்துவிட்டது.

யாழ். மறைமாவட்டத்தில் பணியாற்றும் குருக்களுக்கு அவர் எழுதியுள்ள சுற்று மடலில் வலியுறுத்திய விடயம் விசேட கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும். எல்லோரையும் தேடிச்சென்று காப்பாற்றுங்கள், இதுவே இந்த நேரத்தின் சவாலாகும். இந்தக் கடமையைச் செய்ய முன்வாருங்கள் என விடுத்த இந்த அழைப்பு முக்கியமானது. திருச்சபையின் அங்கத்தவர்கள் தமது இருக்கைகளில் இருந்து வெளியே வந்து திருச்சபையின் விளிம்புகளில் இருப்போரைச் சந்தித்து திரும்பவும் அவர்களைக் கடவுளின் குடும்பத்துக்கு அழைத்துவரச் செயலாற்றக் கூடிய அர்ப்பணம்மிக்க மறைப்பணி நமக்குத் தேவை எனத் தெரிவித்தார்.

மேலும் அவர் வலியுறுத்தும் விடயங்களை அவரின் செய்தியில் இருந்து நோக்குவோம். புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் அருட்சகோதரர்கள் மூலம் யாழ். மறைமாவட்டத்தின் 54 பங்குகளிலும் உள்ள குடும்பங்களைச் சந்தித்தித்து இந்தப் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. இது வருங்காலங்களில் குருக்களால் பகுதி பகுதியாகத் தொடரப்பட வேண்டும் என்றே ஆசிக்கிறோம்.

புதுப்பித்தல் என்பது ஒரு குறிப்பட்ட காலத்துக்கு மட்டும் உரிய ஒரு பணியல்ல, அல்லது ஒரு குறிப்பட்ட காலத்தோடு மட்டும் முடிகின்ற ஒரு பணியுமல்ல. அது ஒரு தொடர்பணி. முடிவற்ற பணி. எப் போதும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்க வேண்டிய பணி. எப்போதும் நாம் நம்மைப் புதுப்பித்துக் கொண்டே இருக்க வேண்டும். அப்போதுதான் புதுமையும் புனிதமும் எப்போதும் நம்மிடையே மிளிரும்.

ஏற்கனவே தயாரிக்கப்பட்ட நிலைப்பாட்டு ஏடுகளின் அடிப்படையில் யாழ். மறைமாவட்டத்தின் இன்றைய நிலை என்ன - அது எந்தப் பாதையில் எதிர்வரும் 5 ஆண்டுகளில் பயணிக்கவேண்டும், யாழ்.மறைமாவட்டத்தில் முன்னெடுக்க வேண்டிய முதன்மைப் பணிகள் என்ன என்பதைத் தீர்மானித்து அதன்படி பயணிப்போம். இதுவேஇந்தமாநாட்டின் முக்கிய மான பணியாகும். அடுத்த 5 ஆண்டுகளுக்கான திட்டங்ளையும்தீர்மானங்களையும் இனங்கண்டு வகுத்து யாழ். மறை மாவட்டத்தைச் சிறப்புடன் வழிநடத்த உங்கள் அனைவரின் ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கிறோம். யாழ். மறைமாவட்டத்தை இறை திட்டப்படி சிறப்புற வழிநடத்த இறை ஆசிரும் இறைவரங்களும் நிறைவாகக் கிடைக்க எமக்காகவும் செபியுங்கள் என் அன்பு வேண்டு கோள் விடுக்கிறோம். தூய ஆவி யின் வழிநடத் தலில் இறை வார்த்தையின் ஒளியில் நற்கருணை ஆண்டவரின் அருளில் யாழ்.மறைமாவட்டத்தைப் புதுப்பிப்போம். புதிதாய் வாழ்வோம் - இவ்வாறு ஆயரின் செய்தி நிறைவடைகிறது.

### புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி அருட்சகோதரர்கள் சிறப்புப்பணி

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் 24 அருட்சகோதரர்கள் 6 பேர் கொண்ட 4 குழுக்களாக யாழ் மறைமாவட்டத்தின் 54 பங்குகளிலும் உள்ள குடும்பங்களைச் சந்தித்தது இங்கு சிறப்பு முக்கியத்துவத்துடன் நோக்கப்பட வேண்டியதாகும். சில பெரிய பங்குகளில் உபபங்குகளையும் அவர்கள் தரிசித்தனர். மூன்று நாள் சிறப்புப்பயிற்சி பெற்ற இந்த அருட்சகோதரர்கள் பதாகைகள், படங்கள், சுவர் ஒட்டிகள் என்பவற்றைப் பங்கு வீடுகளுக்கு எடுத்துச் சென்றதுடன் வீட்டு வாசலிலும் ஒட்டினார்கள். கோவிலுக்கு வராதவர்களையும் விசுவாசத்தில் உறுதியற்றவர்களாக விளிம்பில் இருந்தோரையும் சந்தித்துத் திடப்படுத்தி அழைத்து வருவதே இவர்கள் நோக்கமாக இருந்தது.

### மாநாட்டுக்காக இதுவரை நடைபெற்ற விடயங்கள்

முதலில் யாழ். மறைமாவட்டக் குருக்கள் பின்னர் துறவிகள் அடுத்து யாழ். மறைமாவட்ட பொதுநிலையினருக்கான கூட்டங்கள் நடத்தப்பட்டன.

இதில் யாழ். மறைமாவட்டத்தின் மறைக்கோட்டங்களான யாழ், பருத்தித்துறை, இளவாலை, கிளி.முல்லை, தீவகம் ஆகிய 5 மறைக்கோட்டங்களில் இருந்தும் 200க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர். வசதி கருதி தீவக மறைக் கோட்டத்தினர் யாழ். மறைக்கோட்டத்துடன் இணைந்து இந்தக்கூட்டத்தில் பங்குபற்றினர். குருக்கள் துறவியர்களும் இணைந்து கொண்ட இந்தக் கருத்தமர்விலேதான் இந்த மாநாட்டுக்கான ஆய்வு பொருளான மூன்று எண்ணக் கருக்களும் தெரிவு செய்யப்பட்டன. மேலும் இந்தக் கூட்டத்தில் இந்த மாநாட்டை நெறிப் படுத்தத் தேவையான வளவாளர்கள் 6 அங்கத்தவர் கொண்ட குழுக்களாக 5 மறைக் கோட்டங்களில் இருந்தும் தேர்ந்தெடுக்கப் பட்டனர். யாழ்.மற்றும் தீவக மறைக் கோட்டங்களில் இருந்து 3 குழுக் களும் பருத்தித்துறை மறைக் கோட்டத்தில் இருந்து 2 குழுக் களும், இளவாலை மறைக் கோட்டத்தில் இருந்து 2 குழுக் களும், கிளி - முல்லை மறைக் கோட்டத்தில் இருந்து 3 குழுக் களுமாகத் தலா 6 அங்கத்த வர்கள் கொண்ட 10 குழுக்கள் தெரிவு செய்யப்பட்டன.




### யாழ். மறைமாவட்ட மேய்ப்புப் பணி மாநாட்டின் இலச்சினை

யாழ். மறைமாவட்ட மேய்ப்புப்பணி மாநாட்டின் இலச்சினை இதனையே விளக்கி நிற்கின்றது. தூய ஆவியின் வழிநடத்தலில் இறை வார்த்தையின் ஒளியில் நற்கருணை ஆண்டவரின் அருளில் யாழ். மறைமாவட்டத்தைப் புதுப்பிப்போம் என்பதே இந்த மாநாட்டு இலச் சினையின் விளக்கமாகும்.தூய ஆவியின் துணையுடன் நம்பிக்கையுடன் இருப்போம். இரக்கம் நிறைந்த இறைவன் புதுமைகளையும் மாற்றங்களையும் கொணர்ந்து யாழ். மறைமாவட்டத்துக்கு ஒரு புதிய முகம் கொடுப்பாராக.




# மட்டக்களப்பு ரயில் பாதை நிந்தவூரைத் தொட்டுச் செல்லுமா?

ஏ.எல்.எம்.சலீம்

இலங்கையின் நீண்ட ரயில் பாதைகளுள் ஒன்றான கொழும்பு, மட்டக்களப்பு ரயில் பாதை. மட்டக்களப்பின் தெற்கே பொத்துவில் வரை விரிவாக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை பல்லாண்டு காலமாக நீடித்து வருகின்றது.

மட்டக்களப்பு தென்பகுதியில் குறிப்பாக அம்பாறை மாவட்டத் தமிழ், முஸ்லிம் மக்கள் இந்த ரயில் பாதை விரிவாக்கத்தின் மூலம் ரயில் பயணங்களை இலகுவாக மேற்கொள்ளவும், தமது பிரதான உற்பத்திகளான நெல், மீன் மற்றும் தானியங்களை வெளிப் பிரதேசங்களுக்கு எடுத்துச் சென்று பொருளாதார வளம் பெறவும் வாய்ப்புக்கள் ஏற்படும்.

பிரதேச அபிவிருத்திக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் மிக அவசியமெனக் கருதப்படும், மட்டக்களப்பிலிருந்து சுமார் 115 கிலோ மீற்றர் தூரத்திலான (பொத்துவில் வரை இந்தரயில்பாதை விரிவாக்கம் மூலம் இடம்பெறும் ரயில் சேவைக்கான கனவு என்றுதான் நிறைவேறுமோ? என்ற மக்கள் ஆதங்கம் நீடித்தே வருகின்றது.

சுதந்திரத்துக்குப் பின் மாறி, மாறி வந்த அரசுகள் நாட்டின் பல்வேறு பிரதேசங்களுக்கும், ரயில் சேவை விரிவாக்கத்துக்காக புதிய ரயில் பாதைகளை அமைத்து வருகின்ற போதிலும், மேற்படி கிழக்கிலங்கை ரயில் பாதை விடயத்தில் பாராமுகமே காட்டிவருகின்றன.

### தவறான விடயம்

ஆனால், நடைபெற்று வந்த ஒவ்வொரு தேர்தலிலும் அம்பாறை மாவட்டத்தில் நடந்த முக்கிய தேர்தல் பரப்புரை மேடைகளில் ஆட்சித் தலைவர்களும், தேசியக் கட்சித் தலைவர்களும் மட்டக்களப்பு ரயில் சேவையை தெற்கே பொத்துவில் வரை அல்லது அக்கரைப்பற்று வரை விரிவாக்கித் தருவோம் என்ற வாக்குறுதியை அள்ளி வீசாத சரித்திரமே இல்லை எனலாம்.

இறுதியாக கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது, 2014 டிசெம்பர் 29ஆம் திகதி கல்முனைக்குடி கடற்கரைப் பள்ளி வாசல் திறந்த வெளியரங்கில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில், இன்றைய நல்லாட்சியின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் மட்டக்களப்பு ரயில் சேவையை பொத்துவில் வரை விரிவாக்கும் வாக்குறுதியை அளித்திருந்தார்.

இதனை ஞாபகமூட்டி, கல்முனை மாநகரசபை மாதாந்தக் கூட்டமொன்றிலும் முன்னாள் பிரதி மேயர் ஏ.எஸ் அப்துல் மஜீத் பிரேரணை ஒன்றை முன்மொழிந்து. நிறைவேற்றி, ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டமையும், இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

### அன்று

அன்று இலங்கையில் சட்டநிரூபண சபை, சட்டநிறைவேற்று சபை ஆகிய இரு சபைகளை உள்ளடக்கிய சட்ட சபை நடைமுறையிலிருந்தபோது மதிப்புக்குரிய அமரர் ஈ.ஆர்.தம்பிமுத்து நியாயவாதி, இந்தப் பகுதியின் (கிழக்கின்) பிரதிநிதியாகக் கடமையாற்றினார்.

அந்தக் காலத்தில் சிறந்த கல்விமானும், மதியூகியும், வாதிடும் திறமை வாய்ந்தவருமான அவர் மிகுந்த சிரமத்துடன் போராடி மட்டக்களப்புப் பகுதி இலங்கையின் ஏனைய பகுதிகளுடன் ரயில் சேவை மூலம் தொடர்பு கொள்ள வாய்ப்பிருக்க வேண்டுமென் றும், அதற்காக மட்டக்களப்பின் தெற்கே முப்பதுமைல் தொலைவிலுள்ள நிந்தவூர்வரை புகையிரதச் சேவை விரிவாக்கப்பட வேண்டுமெனவும், அதற்கென மட்டக்களப்பு வாவியின் குறுக்கே ஓர் பாலம் அமைக்கப்பட வேண்டுமெனவும், தீர்மானமொன்றை நிறைவேற்றுவதில் வெற்றி கண்டார்.

### நிந்தவூர்வரை

அதன்படி மட்டக்களப்பின் தெற்கே நிந்தவூர் வரையும் ரயில் பாதை அமைப்பதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டு, பணமும் ஒதுக்கப்பட்டு, வேலையும் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கெனவே கல்லடிப் பாலமும் அமைக்கப்பட்டது மட்டுமன்றி, இந்தக் கல்லடிப் பாலம் மட்டக்களப்பு ரயில் பாதைக்கு நேரே கட்டப்பட்டிருப்பதும் தெற்கே நிந்தவூர் வரையான ரயில் நீடிப்புக்காகவே என்பதும் சான்றாகும். மேலும், அப்போதைய அரசினால் அச்சிடப்பட்டு பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்ட பெரிய இலங்கைப் படங்களில் போடப்படுகின்ற ரயில் பாதை என இந்த மட்டக்களப்பு ரயில் பாதை நிந்தவூர் வரை குறிக்கப்பட்டிருந்தது.

இலங்கையின் சகல பாடசாலைகளுக்கும் அப்பொழுது விநியோகிக்கப்பட்ட இலங்கைப் படங்கள் இதற்குச் சான்றெனினும், அநேகர் இந்த உண்மையை அறியாதிருந்தனர்.

ஆனாலும், ஆட்சியினர் தேவைக்காக மட்டக்களப்புப் பட்டினம் வரை ரயில் பாதையை அமைத்து விட்டு, அத்துடன் நிறுத்திக்கொண்டனர். மட்டக்களப்புத் தென்பகுதி சுதேசிகளின் நலன் அன்று அவர்களுக்குப் பெரிதாகப்படவில்லை.

அதாவது, வறண்ட காட்டுப் பிரதேசங்களுக்கூடாக (அன்று) ரயில் சேவையை விரிவாக்கி விட்டு, செல்வச் செழிப்புகளும் சனப் பெருக்கமும் நிறைந்த நிந்தவூர் வரையுள்ள ரயில் பாதை விரிவாக்கத்தைக் கைவிட்டனர்.

மட்டக்களப்பு தென் பகுதியிலுள்ள களுவாஞ்சிக்குடி, மருதமுனை, பாண்டிருப்பு, கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு, நிந்தவூர், சம்மாந்துறை, இறக்காமம், சென்ரல் கேம்ப், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, திருக்கோவில், பொத்துவில் முதலான பிரதேச தமிழ், முஸ்லிம் மக்கள் இன்று தமது போக்குவரத்துக்கென ரயில் சேவையைப் பெற, பல்வேறு சிரமங்கள், காலவிரயங்களுக்கு மத்தியில் மட்டக்களப்புக்கு நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது. குறிப்பாக ஆசனப் பதிவுகளை மேற்கொள்வது கூட முயற்கொம்பாகவிருப்பதுடன் அதற்கென ஒரு முழு நாளையே செலவிட வேண்டியுள்ளது.

### தேர்தல் கால...

எனவே தேர்தல் கால வெற்றுவாக்குறுதியாகவும், வரும் அரசியல் தலைமைகளுக்கு உள்ளூர் அரசியல்வாதிகள் சொல்லிக் கொடுத்துச் சொல்லும் வாக்குறுதியாகவும் இந்த விடயம் தொடரக்கூடாது.

பிரதேச அரசியல்வாதிகள், தமிழ், முஸ்லிம் மக்களின் தலைவர்கள் எனப்படுவோர் இன்றைய நல்லாட்சி அரசுக்கு அழுத்தம் கொடுத்து, மட்டக்களப்புத் தென்பகுதிக்கான ரயில் சேவை விரிவாக்கத்துக்கு ஆவன செய்ய இனியாவது முன் வரமாட்டார்களா? மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

> “பிரதேச அபிவிருத்திக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் மிக அவசியமெனக் கருதப்படும் மட்டக்களப்பிலிருந்து சுமார் 115 கிலோ மீற்றர் தூரத்திலான (பொத்துவில் வரை இந்த ரயில் பாதை விஸ்தரிப்பு மூலம் இடம்பெறும் ரயில் சேவைக்கான கனவு என்று தான் நிறைவேறுமோ? என்ற மக்கள் ஆதங்கம் நீடித்தே வருகின்றது. சுதந்திரத்துக்குப்பின் மாறி, மாறி வந்த அரசுகள் நாட்டின் பல்வேறு பிரதேசங்களுக்கும், ரயில்சேவை விஸ்தரிப்புக்காக புதியரயில் பாதைகளை அமைத்து வருகின்ற போதிலும், மேற்படி கிழக்கிலங்கை ரயில் பாதை விடயத்தில் பாராமுகமே காட்டிவருகின்றது.



உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி அஞ்சல் திணைக்கள ஊழியர்களால் அண்மையில் குருதிக்கொடை வழங்கப்பட்டது. அன்றே பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன. (ரி3 34)



உடுவில் மான்ஸ் பர்டசாலைக்கு ரூ. ஒரு லட்சம் பெறுமதியான போட்டோப்பிரதி இயந்திரம் ஒன்றை வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் வழங்கி வைத்தார். இந்த நிகழ்வில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (ரி)



நவராத்திரி விழாவை முன்னிட்டு தொண்டமானாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலயத்தில் இந்து மாமன்றத்தினரால் நடத்தப்பட்ட மாலை கட்டுதல், கோலம் போடுதல் போட்டிகள் நடத் தப்பட்டன. (108)



பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியின் மூலம் சங்கானை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட காந்திஜி சனசமூக நிலையம் மற்றும் தொல்புரம் மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகிய சமூக மட்ட அமைப்புகளுக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கதிரைகளை அன்பளிப்புச் செய்தார். (21)



வவுனியாவில் தமிழ்த் தேசிய இளைஞர் கழகத்தினரின் முதியோர் தின நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றன. கழக அமைப்பாளர் வ.பிரதீபன் தலைமையில் கனடா வாழ் சேமமடு உறவுகளின் பங்களிப்பில் வவுனியா மணிப்புரம் ஆனந்த இல்லத்தில் நிகழ்வுகள் நடந்தன.

இந்த நிகழ்வில் வவுனியா நகரசபையின் முன்னாள் நகரசபை உபதலைவர் க.சந்திரகுலசிங்கமும், தமிழ்த்தேசிய இளைஞர் கழகத்தின் ஆலோசகர்களில் ஒருவரான மு.கண்ணதாசனும், தமிழ் தேசிய இளைஞர் கழகத்தின் தலைவர் சு.காண்டீபனும், செயலாளர் ஸ்ரீ.கேசவன் உறுப்பினர் களான கெர்சோன், சஞ்சீவன், பிரகாஷ்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ரி)



ஐக்கிய மதங்களுக்கான முனைப்பின் (யூ.ஆர்.ஐ) மூன்றாவது தேசிய மகாநாடு அண்மையில் பதுளை முகாமைத்துவ பயிற்சி நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. சார்க் வலய நாடு களிலிருந்து 210 உறுப்பினர்கள் கலந்துகொண்ட நிகழ்வில், பதுளை மாவட்டசெயலர் நிமால் அபேயசிறி, ஊவா மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் காமினி எல்லபொல, சர்வோதய அமைப்பின் தலைவர் ஈ.டி.ஆரியரட்ன ஆகியோர் கலந்துகொண்டிருப்பதையும், பிரமுகர்கள் வரவேற்கப் படுவதையும், கலந்துகொண்ட சார்க் வலய நாடுகளின் யூ.ஆர்.ஐ பிரதிநிதிகளையும் காண லாம். (ரி)




சர்வதேச அஞ்சல் தினத்தை முன்னிட்டு யாழ். தபாலகத்தில் அண்மையில் குருதிக்கொடை நிகழ்வு நடைபெற்றது. (ரி)







சிறுவர் நிதியத்தின் சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வுத் திட்டத்தின் அனுசரனையுடன் புதுக்குடியிருப்பு எழுகை சுய உதவிக்குழு சர்வதேச சிறுவர் தினத்தை ஒட்டி ஏற்பாடு செய்த சிறுவர்கள் கௌரவிப்பும் கலை நிகழ்வுகளும் அண்மையில் நடைபெற்றது.
புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி வளாகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் சிறுவர்களின் கலைநிகழ்வுகள் நடைபெற்றதுடன் சிறுவர்களுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. (ரி7)



திருகோணமலை மாவட்டத்திற்கே தனித்துவமான வரலாற்று சிறப்பு வாய்ந்த கும்ப விழா, கன்னி வாழை வெட்டு விழா நவராத்திரி விழாவின் இறுதி நாள் அன்று நடைபெற்றது. வாழை வெட்டு நடைபெற்ற பின் அன்று இரவு அம்மன் ஊர்வலமும் இடம்பெற்றது. இவ் விழா திருகோணமலை நகர், சேனையூர், கட்டைப்பறிச்சான், கடற்கரைச்சேனை, தம்பலகாமம் ஆகிய பிரதேசங்களிலும் நடைபெற்றது. (ரி, 40)




பன்னாட்டு சிறுவர் தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் சிறுவர் தினவிழா அண்மையில் சாவகச்சேரி தென்னிந்தியச் சபையின் முன்பள்ளியில் நடைபெற்றது. கழகத் தலைவர் லயன் இ.சுரேஷ் தலைமையில் நடைபெற்ற விழாவில் ஆலய போதகர் கழகச் செயலாளர் லயன் இ.கோகுலன், பொருளாளர் சு.சுதர்சன் மற்றும் கழக உறுப்பினர்களும் பெற்றோர்களும் கலந்து கொண்டனர். (ரி, 9)



தெல்லிப்பழை, சித்தியம்புளியடி, கலைச்செல்வி முன்பள்ளிக்கு கற்றல் உபகரணங்களை வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் வழங்கி வைத்தார். இந்த நிகழ்வில் மாகாணசபை உறுப்பினருடன், காரைநகர் பிரதேச சபையின் முன்னாள்தவிசாளர்வே.ஆனைமுகன், முன்பள்ளி நிர்வாகியும் இளைஞர்சேவை உத்தியோகத்தருமான சி.அனுஷன், முன்பள்ளிச்சிறார்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (ரி)



வவுனியா ஆறுமுகத்தான் புதுக்குளத்தில் சிறுவர் முதியோர்தினநிகழ்வு அண்மையில் நடைபெற்றது. வித்தியாலய அதிபர் க.ஜெயக்குமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முதியோருக்கான கிடுகு பின்னுதல், முட்டி உடைத்தல் உட்பட் பல்வேறு விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் சிறுவர்களின் நிகழ்வுகளும் நடைபெற்றன. (108)





கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலய வருடாந்த திருவிழா அண்மையில் நடைபெற்றது.
யாழ். ஆயர் மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் நடைபெற்ற திருப்பலி தேர்ப்பவனியை தொடர்ந்து ஆயரினால் திருச்சொரூப ஆசிர் வழங்கப்பட்டது. (135)



மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் உதவிப் பொருள்களும் அண்மையில் வழங்கப்பட்டன.
வட மாகாண சபை உறுப்பினர் க.சர்வேஸ்வரனால் 2016 ஆம் ஆண்டுக்கான மாகாண பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டிலிருந்து கொள்வனவு செய்த பாடசாலை வகுப்பறைகளுக்கு ஒரு தொகுதி மின்விசிறிகளும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த 3 மாணவர்களுக்கு சைக்கிள்களும் பெற்றோரை இழந்த 34 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (9)



பாரதி பெண்கள் சிறுவர் இல்லத்தில் உள்ள சிறார்களுக்கு இல்ல நிர்வாகத்தின் வேண்டு கோளுக்கிணங்க 108 பெண்பிள்ளை களுக்கான அத்தியாவசிய உடு புடைவைகளை வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினர் வழங்கி வைத்தனர். (ரி)



முதியோர்தினத்தையொட்டிய மூத்தோர் கௌரவிப்பு நிகழ்வு யாழ். பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் ஜே/63, கொழும்புத்துறை மேற்குப் பிரிவில் அண்மையில் நடைபெற்றது. புனித செபமாலை அன்னை ஆலய மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் பங்குத்தந்தை அருட்திரு ஏ. கிறிஸ்தோப்பர் அடிகள், கிராம அலுவலர், முதியோர் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு மூத்தோர்களை கௌரவித்து உதவிப் பொருள்களை வழங்கி வைத்தனர். (135)







முல்லைத்தீவு மாவட்டத்தில் போரால் கடுமையான பாதிப்புக்களை சந்தித்த மூன்று குடும்பங்களுக்கான உலர் உணவுப் பொருள்கள் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினரால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. (ரி)






மாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட நிதியின் மூலம் தொண்டமானாறு வீ கத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்திற்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான கணினி தொகுதி ஒன்று வடமாகாண சபை உறுப்பினர் க.பரஞ்சோதியால் அண்மையில் வழங் வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ரி. 10


தம்ரோ
தீபாவளி விசேட சலுகை
39,900
VENUS SOFA 3+1+1
MANILA SOFA 3+2+1
17,900
15,975
FEORI BEDROOM SET
15%
வரை
கழிவு
TGT 014P + TSC47P
CAPLIN DINING SUITE
போம் மெத்தைகள்
5,250
Spring Mattress
15 Year WARRANTY
The best comfort
High quality durable spring structure
Quilted cover with a super soft layer
14,975
KWU 016
7,275
KAV 046
11,575
KSD 008
4,875
OCT 032
36 மாதங்கள் வரை
077 2 857 857
தம்ரோ
நாடு முழுவதுமுள்ள தம்ரோ காட்சியறைகளிலிருந்து
www.damro.lk

# இலஞ்ச ஆணைக்குழு மைத்திரிக்கு பதிலடி



கொழும்பு, ஒக். 16

ஜனாதிபதியிடம் ஆலோசனையோ அல்லது தீர்மானங்களோ பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற சட்ட ரீதியான கட்டுப்பாடு இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவுக்கு இல்லை. இவ்வாறு இலஞ்ச ஊழல் ஆணைக் குழு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

இலஞ்ச, ஊழல் ஆணைக் குழுவின் மூன்று ஆணையாளர்களின் கையெழுத்துடன் இந்தக் கடிதம் ஜனாதிபதிக்கு நேற்றுமுன்தினம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கொழும்பிலுள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்றநிகழ்வொன்றில் ஆற்றியிருந்த உரை தென்னிலங்கை அரசியல் களத்தில் பெரும் குழப்பத்தைத் தோற்றுவித்திருக்கின்றது.

குற்றப் புலனாய்வுப் பிரிவு, பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவு, இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு ஆகியன அரசியல் நிகழ்ச்சி நிரலில் செயற்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி எச்சரித்திருந்தார்.

இதனையடுத்து இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் டில்ருக்சி பதவி விலகப் போவதாகத் தெரிவித்திருந்தார். இவ்வாறானதொரு நிலையிலேயே, இலஞ்ச, ஊழல் ஆணைக் குழு ஜனாதிபதிக்கு இந்தக் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## மரண அறிவித்தல்

### திருமதி நாகேஸ்வரி செல்வரத்தினம்

(ஓய்வுபெற்ற நெசவு ஆசிரியை)



புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் கேணியடி லேன், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி செல்வரத்தினம் (ஓய்வுபெற்ற நெசவு ஆசிரியை) நேற்று (15.10.2016) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும், செல்வரத்தினம் (C.T.B. , வட இலங்கை சர்வோதயம் சாரதியும்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற ராஜேஸ்வரி மற்றும் கமலேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற ராஜி, ரவீந்திரன் (பாபு, சிற்றூர்திச் சங்கம், புங்குடுதீவு) ஆகியோரின் அன்புத் தாயாரும், தக்ஷினியின் (ஆசிரியை, யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணி மகளிர் வித்தி யாலயம்) அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2016) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**8/4, கேணியடி லேன், ஆடியபாதம் வீதி,**
**திருநெல்வேலி.**

**தகவல்:**
**செல்வரத்தினம் - (கணவர்), ரவீந்திரன் (பாபு, மகன்)**

## மரண அறிவித்தல்

### திருமதி
### யோகம்மா கைலாயநாதன்



யாழ் புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் தற்போது மன்னார் உப்புக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகம்மா கைலாயநாதன் நேற்று (15.10.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம்-கண்மணி தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கைலாயநாதனின் அன்பு மனைவியும் செல்வராசா, கமலாதேவி ஆகியோரின் சகோதரியும் ரமேஸ்(கனடா), வாசுகி, ரஞ்சன்(கனடா), தாரணி ஆகியோரின் அன்புத் தாயாரும் வசீகரன் (காணி மாவட்ட பதிவகம்-மன்னார்), சுஜாதா(கனடா), நிமலகுமார் (சுகாதார திணைக்களம்-மன்னார்) ஆகியோரின் மாமியாரும் கிஷாலினி, கிஷாமினி, ரக்ஷாஜினி, ஹரிஸ், ஹரிணி, ஹாசிணி (கனடா), தனிஸ்,லிதுன், பிரணிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புதிய வீதி, உப்புக்குளம்,**
**மன்னார்.**
**077 1038547**

**தகவல்:**
**குடும்பத்தினர்,**
**திருமதி வசீகரன் வாசுகி.**

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் கந்தசாமி



யாழ்.ஏழாலையைப் பிறப் பிடமாகவும் மானிப்பாய் பொன் னாலை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கந்தசாமி கடந்த (13.10.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சுப்பிரமணியம்-சின்னாச்சி தம்பதியினரின் அன்பு மகனும் குணமணி அவர்களின் அன்புக் கணவரும் கௌந்தி, வசந்தி, சுஜித்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும் குமாரசாமி, காலஞ்சென்றவர்களான செல்லம்மா, பிள்ளையம்மா, அன்னப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாலகுமார், கேதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் அக்ஷயா, கஜானனன் ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (17.10.2016) திங்கட்கிழமை நடைபெற்று மு.ப 11.00 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**கௌந்தி-பிரித்தானியா +447737015199**
**சுஜி-இலங்கை +94718568483**
**வசந்தி-கனடா +16479678571**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமக

### திருமதி பவளரதம் (பவளம்) தனபாலரத்தினம்



யாழ். கரம்பனைப் பிறப்பிடமாகவும், நாச்சிமார் கோயிலடியை வசிப்பிடமாகவும், நோர்வேயை வதிவிட மாகவும் கொண்ட திருமதி பவளரதம் (பவளம்) தனபாலரத்தினம் 14.10.2016 வெள்ளிக் கிழமை நோர்வேயில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - கனகம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற தனபாலரத்தினத்தின் அன்பு மனைவியும் ராகுலன், கிரீசன், துஷிதா, தனுஜா, தர்மிகா ஆகியோரின் தாயும் ரஜித்தா, தேன்மொழி, செல்வவேலாயுதம், சிறீகரன், இளந்தீரன் ஆகி யோரின் மாமியும் ஐஸ்வன், கிரன், லதுஸ், விதுஷா, ரிஷான், அபிலஷா, றதுஷா, சிபானி, ஆரி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்பு**
**ராகுலன் (மகன் - நோர்வே +4722162835**
**கிரீசன் (மகன் - நோர்வே +4722253135**
**துஷிதா (மகள் - ஐக்கிய அமெரிக்கா +16108248189**
**தனுஷா (மகள் - பிரான்ஸ் +33146701150**
**தர்மிகா (மகள் - பிரித்தானியா +441908569902**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி கெப்சி றொசலீன் டயசிறி



அரசடி வீதி, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், கல்கிசையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கெப்சி றொசலீன் டயசிறி 12.10.2016 புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் டயசிறியின் அன்பு மனைவியும், டான் நேலக்கவின் அருமைத் தாயாரும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - புனிதம் தம்பதிகளின் அன்பு மகளும், ஏஞ்சலீன், றஞ்சன், ஈவா, செல்வினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ் சென்ற அஸ்பெரி மற்றும் கமலா, வண.ஞானப் பொன்ராஜா, சாமுவேல் தேவானந்தன் ஆகி யோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16.10.2016) ஞாயிற்றுக்கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 4.30 மணிக்கு நன்றி செலுத்தும் ஆராதனையின் பின்னர் பூதவுடல் பண்டத்தரிப்புக்கு எடுத்து வரப்பட்டு நாளை (17.10.2016) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணியளவில் இறுதி ஆராதனையின் பின்னர் பண்டத்தரிப்பு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி வீதி,
பண்டத்தரிப்பு.

**தகவல்: வண.ந.ஜே.ஞானப்பொன்ராஜா**
**சென்.ஜோன்ஸ் கல்லூரி.**

(J/5430)
(11,17,18)

**077 715 4093**

## மரண அறிவித்தல்

### தம்பையா இலட்சுமணன் (லிங்கேஸ்)



யாழ்ப்பாணம் காரைநகர் பாலகாட்டைப் பிறப்பிடமாகவும் காரைநகர் வேம்படி, வவுனியா தோணிக்கலை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா இலட்சுமணன் (லிங்கேஸ்) நேற்று (15.10.2016) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா-சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், விஜேந்திராவின் (விஜய், லண்டன்) அன்புத் தந்தையும், திருமகளின் (திரு. லண்டன்) அன்பு மாமனும், சக்தியின் (லண்டன்) அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி, சங்கரப்பிள்ளை மற்றும் விசாலாட்சி, அருளம்பலம், சுந்தரலிங்கம், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் மகேஸ்வரி, தேவராஜா, சறோஜா தேவி, தங்கபுஸ்பம், ஜெயக்குமார், சந்திரகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பரமசிவம் மற்றும் திருச் செல்வம், சச்சிதானந்தசிவம் ஆகியோரின் அன்பு மைத்துன ரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.10.2016) திங்கட்கிழமை காலை அன்னாரின் வவுனியா இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தோணிக்கல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொ.பே: 024 324 1446**
**இல. 80/1, வியாசர் வீதி, தோணிக்கல்,**
**வவுனியா**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# வேலையின்மை அதிகரிப்பு

இலங்கையில் வேலையின்மை 2016ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் நூற்றுக்கு 4.6 சத வீதத்தில் அதிகரித்துள்ளது.

முதல் காலாண்டில் அது நூற்றுக்கு 4.2 சதவீதமாக காணப்பட்டது. மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிட்டுள்ள தரவுகளின் படி, இரண்டாம் காலாண்டில் விவசாய தொழிற்றுறையில் வேலைவாய்ப்புக் குறைவடைந்துள்ள நிலையில், விவசாயம் சாரா துறைகளில் வேலைவாய்ப்பு அதிகரித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வருட இரண்டாம் காலாண்டில் இலங்கைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 7.98 மில்லியன் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

# சகலரையும் கவரக்கூடியவாறு கண்டி புனரமைப்புத் திட்டம்

நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் அமைப்பு ஆகியன இணைந்து தொழிநுட்ப ஒத்துழைப்பு திட்டத்தை முன்னெடுக்கவுள்ளது.

இதற்கமைய சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கண்டி நகர், சகல தரப்பினரையும் கவரக்கூடிய வகையில் மாற்றம் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கண்டி நகரைச் சுற்றுலாப் பயணிகளின் நகராக மேம்படுத்துவதுடன், சமூக பொருளாதார முக்கியத்துவம், வரலாற்றுபுகழ் மிக்க பிரதேசங்களை முக்கியமாக ஈர்க்கும் வகையிலும் திட்டங்கள் அமைக்கப்படுகின்றன.

நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் அமைப்பு என்பன இணைந்து இதற்கான திட்டங்களையும் சட்ட விதிமுறைகளையும் தீர்மானிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## நுட்பம்




# இலவச இணைய சேவையில் முகப்புத்தகம் முனைப்பு

முன்னணி சமூகவலைதளமான முகப்புத்தகம் தனது பயனர்களின் நலன் கருதி இலவச இணைய சேவையை அறிமுகம் செய்யத் தீர்மானித்துள்ளது. இதற்கு முன்னர் இந்தியாவில் இந்த இலவச இணைய சேவை அறிமுகம் செய்யப்பட்டிருந்த போதிலும் குறுகிய காலத்தில் மீளப்பெறப்பட்டிருந்தது. தற்போது ஐக்கிய அமெரிக்காவில் மீண்டும் குறித்த சேவையை அறிமுகம் செய்யவுள்ளது என்று தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் குறைந்த வருமானம் உடையவர்கள் மற்றும் பின்தங்கிய கிராமங்களில் வாழ்பவர்கள் இச் சேவையின் ஊடாகப் பயன்பெற முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சேவை அமெரிக்காவில் வெற்றியளிக்கும் பட்சத்தில் ஏனைய நாடுகளிலும் விரைவில் அறிமுகம் செய்யப்படும் எனத் தெரிகின்றது.

# செலிங்கோ லைப்பின் சுற்றாடலுக்கு இசைவான கிளை பாணந்துறையில்



பசுமை திட்ட செயலாக்கத்தில் தனது திடசங்கற்பத்தை செலிங்கோலைப் மீண்டும் உறுதி செய்துள்ளது. பாணந்துறை நகர மத்தியில் சுற்றாடலுக்கு இசைவான அதன் குறிக்கோளுடன் நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டடம் தற்போது திறந்து வைக்கப்பட்டுள்ளது.

7713 சதுரஅடி பரப்பு கொண்ட மூன்று மாடிக் கட்டமாக இது 401, காலி வீதி, பாணந்துறை என்ற முகவரியில் அமைந்துள்ளது. சூரியசக்தி வலு கொண்ட இந்தக் கட்டடம் சக்திவள ஆற்றல் மிக்க குளிரூட்டல் வசதி, ஒளியூட்டல் வசதி முறை என்பனவற்றைக் கொண்டுள்ளது.

மழைநீர் சேமிப்புத் திட்டம், மேலும் தோட்ட பராமரிப்புக்காக கழிவுநீர் மீள் பாவனைத் திட்டம் என்பனவற்றையும் இது கொண்டுள்ளது. இது சக்திவள பாவனையை கணிசமாகக் குறைத்து காபன் வெளியேற்றத்தையும் அதிகளவு குறைக்கின்றது.

முழுஅளவிலானமாநாட்டு மண்டபவசதிகளும்போதிய அளவில் வாடிக்கையாளர் வாகனங்களை நிறுத்தும் வசதிகளும் இங்குள்ளன. சுற்றாடலுக்கு பாதிப்பற்ற வகையில் கட்டடங்களை நிர்மாணிப்பது என்ற அதன் கொள்கைக்கு முற்றிலும் இசைவாக செலிங்கோலைப் இந்தக் கட்டடத்தை வடிவமைத்துள்ளது. இந்தப் பகுதியில் ஏற்கனவே இருந்த மரங்கள் எதையும் தறிக்காமல் இந்தக் கட்டடம் வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது எனக் கம்பனி அறிவித்துள்ளது.

செலிங்கோ லைப்பின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஆர்.ரெங்கநாதன் கடந்த ஏழாம் திகதி சம்பிரதாயபூர்வமாகத் இதனை திறந்துவைத்தார். ஒரு வருடத்துக்கு முன் அவரே இதற்கான அடிக்கல்லை நட்டிவைத்தமையும் குறிப்பிடத்தக்கது. புதிய சுற்றாடல் இசைவு மாதிரி ஒன்றின் படி இது வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆயுள் காப்புறுதி தலைவர்கள் சுற்றாடல் பாதுகாப்புக்கான தமது அர்ப்பணத்தை வெளிக்காட்டும் வகையில் இத்தகைய மாதிரிகளை தமது புதிய கிளை நிர்மாண கட்டிடங்களில் பயன்படுத்தி வருகின்றனர்.

இத்தகைய மீள் சுற்றுநீர் பாவனை மற்றும் சக்திவள பயன்பாட்டு வசதிகளைக் கொண்ட கட்டடங்கள் செலிங்கோ லைப் நிறுவனத்தால் தமது சொந்தக் காணிகளில் வெண்ணப்புவ, திருகோணமலை மற்றும் பண்டாரவளை ஆகிய இடங்களில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. ஹொரணையில் இத்தகைய கட்டட நிர்மாண பணி முடிவடையும் தறுவாயில் உள்ளது. அநுராதபுரம், யாழ்ப்பாணம், கண்டி, களுத்துறை, கம்பஹா, குருநாகல், காலி, மாத்தறை, திஸ்ஸமஹாராம, நீர்கொழும்பு, இரத்தினபுரி, கொட்டாஞ்சேனை மற்றும் கல்கிஸ்ஸ ஆகிய இடங்களிலும் கம்பனி ஏற்கனவே சொந்த கட்டடங்களைக் கொண்டுள்ளது. இவற்றுள் சிலவும் ஏற்கனவே சூரியசக்தி வலுகொண்டவையாக மாற்றப்பட்டுள்ளன.

இவற்றுக்கு மேலதிகமாக கொழும்பில் மிகப் பெரிய சூரியசக்தி வலுகொண்ட மின் இணைப்புத் திட்டத்தை கொழும்பு-05 இல் உள்ள அதன் தலைமையகத்தில் நிறுவி கம்பனி சாதனை படைத்துள்ளது. 13.7 மில்லியன் ரூபா செலவில் 63.18 கிலோவோட்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய வகையில் இந்த முதலீடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் ஆயுள் காப்புறுதி தொழில்துறை வலையமைப்பில் 250 கிளைகளைக் கொண்ட மிகப்பெரிய கிளை வலையமைப்பை செலிங்கோலைஃப் கொண்டுள்ளது. நாட்டின் 25 மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக நகரங்கள், புறநகர்ப்பகுதிகள் கிராமங்கள் என 142 இடங்களில் இவை அமைந்துள்ளன. (த)

# தேயிலை விலை உயர்வு

இலங்கை தேயிலையின் விலைகள் இந்த வாரத்தில் குறிப்பிடத்தக்க அளவிலான அதிகரிப்பை அடைந்துள்ளதாக தேயிலை தரகு நிறுவனங்கள் தெரிவித்துள்ளன

இதேவேளை, தேயிலையின் இந்த விலை அதிகரிப்பு உறுதியானதாக அமையும் என நம்பப்படுகின்றது.

இதன்படி தரமான தேயிலை வகைகளின் விலை 50 ரூபாவில் இருந்து 80 ரூபாவாக அதிகரிக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகின்ற அதேவேளை ஏனைய தேயிலை வகைகளின் விலைகளும் 50 ரூபா வரை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (த)



# கொழும்புப் பங்குச் சந்தையின் கிளை அம்பலாங்தோட்டையில்

கொழும்பு பங்குச் சந்தையின் புதிய கிளையொன்று அம்பலாந்தோட்டை நகரில் அண்மையில் திறக்கப்பட்டது. ஹம்பாந்தோட்டை, பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் பங்குச்சந்தை நடவடிக்கைகள் இதனூடாக இடம்பெறவுள்ளது. மக்களுக்கு முதலீடு தொடர்பில் கற்றுக்கொள்வதற்கு இதன் மூலம் சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகக் கொழும்பு பங்குச் சந்தை தெரிவித்துள்ளது. (த)

# புதிய வசதிகளுடன் கூகுள் போட்டோஸ்

கூகுள் நிறுவனம் ஒளிப்படங்களை நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் பகிர்ந்து மகிழும் சேவையை தனது கூகுள் போட்டோஸ் எனும் செயலி ஊடாகத் தருகின்றது. இதற்கென அன்ரொய்ட் மற்றும் ஐஎஸ்ஓ சாதனங்களில் செயற்படக்கூடிய செயலிகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. அவற்றின் புதிய பதிப்பு ஒன்றை கூகுள் நிறுவனம் அறிமுகம் செய்யவுள்ளது. அதில் அனிமேசன் ஒளிப்படங்களை அனுப்பக்கூடிய வசதி புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அதாவது வீடியோ கோப்புக்களிலிருந்து நேரடியாக அனிமேசன் கோப்புக்களை இந்தச் செயலியின் உதவியுடன் உருவாக்கிக்கொள்ள முடிவதுடன், பகிர்ந்து கொள்ளவும் முடியும்.

கிடையாக எடுக்கப்பட்ட புகைப்படங்களை நிலைக்குத்தாக மாற்றிக்கொள்ளும் வசதியும் உள்ளடக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## இந்தியாவில்...

ரைகள் பகிரங்கமாக விற்கப்படக் கூடியவை. இலங்கையில், மருத்துவர் ஒருவரின் ஆலோசனை இல்லாமல் இத்தகைய மாத்திரைகளை எடுத்துக் கொள்ள முடியாது. வயகரா இலங்கையில் ஆபத்தான மருந்துகளின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.

போதைப் பொருள் பாவனையால் ஏற்கனவே வடக்கில் பாலியல் குற்றங்கள் அதிகரித்துள்ளன என்று சமூக ஆர்வலர்கள் குற்றம் சுமத்தி வருகின்ற நிலையில், இது போன்ற பாலியல் இச்சையைத் தூண்டும் மாத்திரைகளின் கடத்தல் பேரழிவுக்கு வித்திடும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த மாத்திரைகளையும் கஞ்சாவையும் கடத்திய சந்தேகத்தில் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் தமிழகத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

“வயகரா நுரையீரல் குழாய்களில் ஏற்படும் இரத்த அழுத்தத்துக்கு மருந்தாக வழங்கப்படுறது. இதன் பக்க விளைவே பாலியல் இச்சையைத் தூண்டுவது. மருத்துவர்களின் ஆலோசனை இல்லாமல் இந்த மருந்து பாவிக்கக் கூடாது. மருத்துவ ஆலோசனையின்றி பயன்படுத்தியவர்கள் உயிரிழந்த சந்தர்ப்பம் அதிகமாகும். இலங்கையில் இது ஆபத்தான மருந்துகளின் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளது. மருந்தகங்களில் இதனை விற்பனை செய்ய முடியாது” என்று மருத்துவர் ஒருவர் 'உதயனுக்குத்' தெரிவித்தார். (த-5-101)

(முன்னர் வந்த செய்தி 07ஆம் பக்கத்தில்)

## 106 கிலோ...

அவற்றைப் படகிலிருந்து தரையிறக்கிய குற்றச்சாட்டில் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். மாதகலில் நேற்றுமுன்தினமும் 130 கிலோகிராம் கஞ்சா போதைப் பொருள்கள் மீட்கப்பட்ட நிலையில் நேற்று மாதகல் சேந்தாங்குளம் பகுதியில் 106 கிலோகிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

இந்த இரண்டு தடவைகளிலும் 236 கிலோகிராம் கஞ்சா போதைப் பொருள்களை இந்தப் பகுதிக்குப் பொறுப்பாகவுள்ள இளவாலைப் பொலிஸார் மீட்டிருக்கவில்லை. யாழ்ப்பாணம் மற்றும் காங்கேசன்துறை பிராந்தியங்களின் விசேட போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரே இவற்றைக் கைப்பற்றியுள்ளனர்.

மாதகலில் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் காங்கேசன்துறை பிராந்திய விசேட போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரும் கடற்படையினரும் இணைந்து கஞ்சாவை மீட்டதாகவும், அவற்றைப் படகில்கொண்டுவந்துதரையிறக்கியபோது 3 பேர் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அவர்களில் 2 பேர் மன்னார் பேசாலையைச் சேர்ந்தவர்கள். ஒருவர் மாதகல் சேந்தாங்குளத்தைச் சேர்ந்தவர். அவர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்படுகிறது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் கஞ்சா மீட்கப்பட்ட போதும் எவரும் கைது செய்யப்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த-4)

## முல்லைத்தீவில்...

ஈடுபட்டனர். முல்லைத்தீவு இராயப்பர் ஆலயத்தின் முன்பாக ஆரம்பமான இந்தக் கவனவீர்ப்பு அமைதிப் பேரணி நடைபவனியாக முல்லைத்தீவு பொது விளையாட்டு மைதானத்தில் பொதுக் கூட்டத்துடன் நிறைவடைந்தது.

முல்லைத்தீவு மாவட்ட மேலதிக செயலாளர் எஸ்.பிரணவநாதனிடம் கோரிக்கையை வலியுறுத்திய மனு சிறுவர்களால் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்கு உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி சுலோசனா முருகநேசன், நியூசிலாந்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி திருமதி செலீனா பிறேம்குமார் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் இராணுவப் பொறுப்பதிகாரிகள் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-4-ரி7)

## தேசிய அரசுக்குள்

யுள்ளது. தேசிய அரசு பிளவடையும் நிலை உருவாகியுள்ளது. இதனைத் தடுப்பதற்காக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா நேரடியாகக் களமிறங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை மன்றக் கல்லூரியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த புதன்கிழமை நிகழ்த்திய உரைக்குப் பல தரப்புக்களும் கண்டனம் தெரிவித்துள்ளன. முன்னாள் ஆட்சியாளர்களை மைத்திரிபால காப்பாற்ற முனைகின்றாரா என்று அவர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர்.

சட்டம் - ஒழுங்கு அமைச்சை ஜனாதிபதி தனது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கும் முயற்சிகள் மேற்கொண்டிருந்தார். இதன் காரணமாக தேசிய அரசுக்குள் பிளவு ஏற்படும் நிலை உருவாகியுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால, பிரதமர் ரணில், சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ஆகியோர் அவசர அவசரமாகச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தனர். இருப்பினும் ஏற்பட்ட குழப்ப நிலை இன்னமும் முடிவுக்கு வரவில்லை.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா இரு தரப்பினரிடையேயும் இணக்கத்தை ஏற்படுத்தி, இந்த விவகாரத்தை சுமுகமாகக் கொண்டு வருவதற்குரிய நடவடிக்கைகளில் நேரடியாக இறங்கியுள்ளார் எனக் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதற்காக இரு தரப்பினருடனும் சந்திரிகா, நேற்றுமுன்தினம் பேச்சுக்கள் நடத்தியதாக நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து தகவல் கிடைத் துள்ளது. (த-5)

## யாழ்.மண்ணில்

வதாக இந்தியத் துணைத்தூதுவர் ஏ.நடராஜன் நேற்றுத் தெரிவித்தார்.

இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாமின் பிறந்ததினத்தையொட்டி யாழ். பொது நூலகத்தில் அண்மையில் அமைக்கப்பட்ட அப்துல் கலாமின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கும் நிகழ்வு நேற்று முற்பகல் இடம்பெற்றது. இதில் முதன்மை அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே துணைத் தூதுவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அப்துல் கலாம் யாழ்ப்பாணம் வந்தமை நாமும் இங்கு வாழ்கின்ற மக்களும் பெருமைப்படவேண்டிய ஒரு சம்பவம். ஏனெனில் அப்துல் கலாமின் ஆசிரியர்கள் யாழ்.மண்ணைச் சார்ந்தவர்கள். அது பெருமையாக இருக்கிறது–என்றார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட பாடசாலை மாணவன் அப்துல் கலாம் தொடர்பில் தனது உரையில் தெரிவிக்கையில்,

ஒரு நிகழ்வில் அப்துல் கலாம் கலந்து கொண்டு மங்கள விளக்கேற்றும்போது, இது ஒரு இந்துக்களின் பண்பாடு. இந்த விளக்கை ஏற்றும்போது நாம் மெழுகுவர்த்தி மூலம் ஏற்றுகின்றோம். இது கிறிஸ்தவர்களின் பண்பு. இந்த விளக்கை ஏற்ற வந்திருக்கும் நான் ஒரு இஸ்லாமியன். இப்படி ஒரு விளக்கை ஏற்றும்போது மூன்று மதங்கள் ஒன்று சேர்கின்றன. இப்படி இருக்கும் போது நாம் ஏன் பிரிவுபட்டு வாழவேண்டும். அனைவரும் ஒற்றுமையாக வாழவேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

அத்துடன் கலாம் மறைந்தபோது அமெரிக்காவின் தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறந்தது.ஒரு தமிழனுக்காக அமெரிக்கக் கொடி அரைக்கம்பத்தில் பறந்தது என்றால் அது அப்துல் கலாமுக்கு மட்டுமே–என்றார்.

இந்த நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர்,சின்மயாமிசன் சுவாமிகள், மறவன் புலவு சச்சிதானந்தன் , யாழ் மாவட்டச் செயலர் வேதநாயகன்,வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம்,வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம்,வடக்கு எதிர்க் கட்சித் தலைவர் சி.தவராசா,யாழ் மாநகர சபை ஆணையாளர் வாகீசன் எனப் பல பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (த-4,ரி1)

## அநுராதபுரத்தில்...

அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தை நேற்றுக் காலை மக்கள் முற்றுகையிட்டனர். இதனால் அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது. தாக்குதல் குறித்து நீதி பெற்றுத் தரப்படும் எனப் பொலிஸார் உறுதியளித்ததை அடுத்து மக்கள் அங்கிருந்து கலைந்து சென்றுள்ளனர்.

அநுராதபுரம் சிறி முத்துமாரி அம்மன் ஆலயத்தின் மீது கடந்த 11ஆம் திகதி தாக்குதல் நடத்தப்பட்டது. ஆல யத்தின் அம்மன் சிலைகள் உடைக்கப்பட்டன. ஆலயத்தின் கற்பக்கிரகத்தினுள் வைத்து இளைஞர் ஒருவர் வாளால் வெட்டப்பட்டார். தாக்குதலில் தலையில் காயமடைந்த இளைஞர் அநுராதபுரம் வைத்தியசாலையில் இன்னமும் சிகிச்சை பெற்று வருகின்றார். சம்பவத்துடன் தொடர்புடைய 7 பேர் ஆலய நிர்வாகத்தினரால் குறிப்பிடப்பட்டிருந்தனர். அதில் 5 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர். அநுராதபுரம் மாவட்ட நீதிமன்றில் எஞ்சிய இருவரும் நேற்றுமுன்தினம் சரணடைந்தனர். தாக்குதலுடன் தொடர்புடைய 7 பேருக்கும், நீதிவான் பிணை வழங்கியுள்ளார்.

தாக்குதலில் காயமடைந்த இளைஞன் வைத்தியசாலையில் இன்னமும் சிகிச்சை பெற்று வரும் நிலையில், தாக்குதல் மேற்கொண்டவர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட 7 பேரையும் பிணையில் விடுவித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, தமக்கான நீதி நிலைநாட்டப்படவேண்டும் எனக் கோரி ஊர் மக்கள் அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தை நேற்றுக் காலை முற்றுகையிட்டனர்.

நீதிமன்றத்தின் ஊடாக நீதி பெற்றுத் தரப்படும் என்று பொலிஸார் உறுதி வழங்கினர். ஆர்ப்பாட்டங்கள் எதனையும் மேற்கொள்ள வேண்டாம் என்று அறிவுறுத்தியதுடன் ஏதாவது பிரச்சினை என்றால் தமக்குத் தெரியப்படுத்துமாறும் பொலிஸார் மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளனர். (த-5)

## எமக்காக...

சம்பவம் நடை பெற்று 5 நாள்களாகியும் எவரும் ஆலயத்தை வந்து பார்வையிடவில்லை.

தமிழ் அரசியல் பிரமுகர்களோ, இந்து அமைப்புக்களோ இதுவரை எம்மை வந்து பார்க்கவில்லை.இவ்வாறு அநுராதபுரம் சிறிமுத்துமாரி அம்மன் ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

அநுராதபுரம் சிறிமுத்துமாரி அம்மன் ஆலயத்தின் மீது கடந்த 11 ஆம் திகதி இரவு தாக்குதல் நடத்தப்பட்டது. அம்மன் சிலைகள் சேதமாக்கப்பட்டதுடன், ஆலயத்தின் மூலஸ்தானத்தினுள் வைத்து இளைஞன் மீது வாள்வெட்டுத் தாக்குதலும் நடத்தப்பட்டது.

'சம்பவம் நடைபெற்று 5 தினங்கள் முடிந்து விட்டன. எவரும் வந்து பார்வையிடவில்லை' என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

ஆலயம் தாக்கப்பட்டமை தொடர்பில் மாவை.சேனாதிராசாவும் அகில இலங்கை இந்து மாமன்றத்தினரும் கண்டன அறிக்கைகளை வெளியிட்டனர். ஆனால் எவரும் எம்மை வந்து பார்க்கவில்லை. ஆலயத்தின் தாக்குதல் தொடர்பில், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்துக்கு தொலை நகல் மூலம் அறிவித்திருந்தோம். அவர்கள் வந்து பார்வையிடுவதாக எங்களுக்குத் தகவல் தெரிவித்திருந்தனர். ஆனால் இன்று வரையில் வந்து பார்வையிடவில்லை.

இந்து சமயத்துக்குப் பொறுப்பாக இருக்கின்ற அமைச்சர் கூட எங்களை வந்து பார்வையிடவில்லை. ஆலயத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலினால் ஏற்பட்ட சேதத்தைச் சீரமைப்பதற்குக் கூட முடியாத நிலையில் உள்ளோம். எவரும் எங்களுக்கு உதவி செய்யவில்லை என்று ஆலய நிர்வாகத்தினர் குற்றஞ் சுமத்தியுள்ளனர். (த-5)

## இராவணனே...

களிடம் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியாவின் லக்னோ நகரில் அண்மையில் இடம் பெற்ற விஜயதசமி பூசையில் கலந்து கொண்ட மோடி, இராவணனைத் தீவிரவாதி என்று விளிக்கும் வகையில் உரையாற்றினார்.

“தீவிரவாதத்துக்கு எதிராகப் போராடிய முதல் நபர் ஒரு சிப்பாயோ அரசியல்வாதியோ அல்லர். அப்பாவிச் சீதையைக் கடத்திக் கொண்டு செல்ல முயன்ற இராவணனிடம் இருந்து அவளைக் காப்பாற்றுவதற்குப் போராடிய ஜடாயுவே அந்த நபர்” என்று மோடி தனது உரையில் தெரிவித்திருந்தார்.

“இராவணனை ஒரு தீவிரவாதிக்கு நிகராக இந்தியப் பிரதமர் வர்ணித்திருப்பதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்” என்று வண. இட்டப்பனே சத்ததிஸ தேரர் தெரிவித்தார். இலங்கையில் உள்ள இராவண சேனை அமைப்பின் தலைவர் அவர்.

மோடியின் கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் மனு ஒன்றை விரைவில் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்திடம் தாம் கையளிக்க உள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் நல்லிணக்க நடவடிக்கைகளைக் குழப்பும் விதத்தில் மோடியின் கருத்து அமைந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இராமாயண காப்பியம்கூட இராவணனை ஒரு தீவிரவாதியாகப் பட்டம் சூட்டவில்லை என்று இலங்கையில் உள்ள மற்றொரு அமைப்பான இராவணா சக்தியும் கண்டித்துள்ளது. (உ)

## தமிழ் மாணவர்...

கிழக்கு கல்வி அமைச்சர் தண்டாயுதபாணி உட்பட வடக்கு–கிழக்குக் கல்வி அதிகாரிகள் இதில் கலந்து கொண்டனர்.

கல்வி அவிபிருத்திக்கு முழுமையான ஒரு வழிகாட்டியாகவும். ஊக்குவிப்பை வழங்குவதற்காகவும் கல்வி எங்கள் மூலதனம் என்ற தொனிப்பொருளில் இது ஆரம்பிக்கப்பட்டதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்த னர்.

யாழ்.நகர விடுதி ஒன்றில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடக்கு–கிழக்கைச் சேர்ந்த கல்வியியலாளர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடலில் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சர் சி. தண்டாயுதபாணி முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் நிபுணத்துவ ஆலோசகர் கோகிலா மகேஸ்வரன், மருத்துவர் அரவிந்தன் மற்றும் பலர் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

நிகழ்வில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் தண்டாயுதபாணி உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

தமிழ் மாணவர்களுடைய பல்கலைக்கழ அனுமதி குறைவடைந்து செல்கிறது. கல்விப் புலத்திலே நாம் பணியாற்றுவதால் அது தெரிந்ததொரு விடயம். ஆனால் அண்மைக் கால பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக நாம் ஆராய்கின்றபோதும் எதிர்காலத்தில் தமிழ் மாணவர்கள் உயர்கல்வி வாய்ப்பை முற்றாக இழந்து விடுவோமோ என்ற அச்சம் எழுகின்றது.

உயர்கல்வி தொடர்பாக தமிழ் மாணவர்களுக்கு அவர் களுடைய பல்கலைக்கழக அனுமதிகளிலே ஏற்பட்டுள்ள இந்த நிலைமைகளைப் பொறுத்து ஒரு விழிப்புக் கொள்ள வேண்டிய தேவையை இந்த அகரம் பவுண்டேசன் ஊடாக ஏற்படும் என நம்புகிறேன்–என்றார்.

அகரம் அமைப்பைத் தொடங்குவதற்கு காரணகர்த்தாவாக இருந்தவர்களில் ஒருவரான–தற்போது ஆஸ்திரேலியாவில் வாழ்ந்துவரும் மருத்துவர் றொசான் வீடியோ மூலமாகக் கருத்துரைத்தார். (த-4-ரி3-ரி7)

## பயங்கரவாத...

சட்டமா அதிபர் திணைக்களம் இழுத்தடிப்புச் செய்யுமாயின், இந்த வழக்குகளை வேறு நீதிமன்றத்துக்கு மாற்ற வேண்டி ஏற்படும்.

இவ்வாறு வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள மதியரசன் சுலக்சன், கணேசன் தர்சன் ஆகியோரது வழக்கு கடந்த 13ஆம் திகதி, வவுனியா மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கடற்படையினர் மற்றும் இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தி அவர்களின் உயிரிழப்புக்குக் காரணமாக இருந்தனர் என்ற குற்றச்சாட்டு இவர்கள் மீது சுமத்தப்பட்டிருந்தது. சம்பவம் நடைபெற்ற இடமான வள்ளிபுனத்தில் 2010 ஆம் ஆண்டு, நீதிபதி எம்.ரியால் முன்னிலையில் இருவரும் வாக்குமூலம் வழங்கியிருந்தனர்.

வாக்குமூலம் தொடர்பில் சாட்சியமளிப்பதற்காக நீதிபதி எம்.ரியாலும், 13 ஆம் திகதி வழக்கு விசாரணையின்போது மன்றில் பிரசன்னமாகியிருந்தார்.. அரச தரப்புச் சட்டத்தரணி, வழக்குக் கோவை சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கால அவகாசம் தேவை என்று மன்றில் கோரினார்.

இதன் போது நீதிபதி, நீதிச்சேவை ஆணைக் குழுவினால் வழக்குகளை விரைவுபடுத்துமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழான வழக்குகளைத் துரிதமாக விசாரணை செய்யுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு செயற்பட்டால் இந்த வழக்குகளை இங்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ள முடியாது. வேறு நீதிமன்றுக்கு மாற்ற வேண்டி ஏற்படும் என்று தெரிவித்தார். (த-5)

## மின்சாரக்...

யோகம் துண்டிக்கப்படும் பகுதிகளில் இரண்டு மணித்தியாலங்களுக்குள் மின் விநியோகம் வழமைக்குத் திரும்பும் என்று இலங்கை மின்சார சபை சுட்டிக்காட்டியுள்ளது. (த-5)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஒக். 16

**குறிஞ்சிக்குமரன் வி.கழகத் தொடர்**

குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில்மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியும், இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

**கழுகுகளின் கால்பந்தாட்டம்**

நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் கில்லறி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

**மனோகராவின் கால்பந்தாட்டம்**

அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வேலணை ஐயனார் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் அல்வாய் மல்லாகம் ஞானகலா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி யுத் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

**ஞானமுருகனின் கால்பந்தாட்டம்**

மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரிமைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் மன்னார் கில்லறி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-23-422-108)



அனித்தா

# மகாஜனாவின் அனித்தா மீண்டும் வென்றார் தங்கம்

யாழ்ப்பாணம், ஒக். 16

பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட தடகளத் தொடரில் 21 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு கோலூன்றிப் பாய்தலில் மகாஜனக்கல்லூரி வீராங்கனை அனித்தா தேசியச் சாதனையுடன் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

கண்டி போகம்பர விளையாட்டு மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. 21 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு கோலூன்றிப் பாய்தல் நேற்றுக் காலை நடைபெற்றது. மகாஜனக் கல்லூரியின் சார்பாகக் களமிறங்கிய ஜெ.அனித்தா 3.30 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து தேசியச் சாதனையுடன் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார். 2014ஆம் ஆண்டு அளவெட்டி அருணோதயக் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த ஏ.பவித்ரா 3.17 மீற்றர் பாய்ந்ததே இதுவரை சாதனையாக இருந்தது. பளை மத்திய கல்லூரியின் சார்பாகக் களமிறங்கிய யோ.சுகிர்தா 3.20 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றினார். அனித்தா, யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற தேசியமட்ட தடகளத் தொடரில் 3.41 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து தேசியச் சாதனையைப் படைத்தமை குறிப்பிடத்தக்கது. (ம-422)





பவித்ரா

# மத்தியை வீழ்த்தியது ஏஞ்சல்

யாழ்ப்பாணம், ஒக். 16

யாழ். மத்திய கல்லூரியின் மாணவர் முதல்வர் சபை விபுலானந்தன் ஞபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தும் 19 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை வெற்றிபெற்றது.

யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இந்த ஆட்டம் நடைபெற்றது. நான்கு கால்பாதிகளில் முதல் கால்பாதியை 12:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது யாழ். மத்தி. இரண்டாவது கால் பாதியை 16:11 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது ஏஞ்சல். முதல் பாதியின் முடிவில் 23:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் மத்தி முன்னிலை வகித்தது. மூன்றாது கால்பாதியை 14:9 என்ற புள்ளிகளின் அடிப்படையிலும், நான்காவது கால்பாதியை 29:19 என்ற புள்ளிகளிலும் கைப்பற்றியதையடுத்து முடிவில் 60:51 என்ற புள்ளிகளின் அடிப்படையில் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை வெற்றிபெற்றது. (ம-23)

# பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், ஒக். 16

பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட தடகளத் தொடரில் நேற்று நடைபெற வேண்டிய சில போட்டிகள் மழை காரணமாக பிற்போடப்பட்டுள்ளன.

கண்டிபோகம்பர விளையாட்டுமைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்று மாலை 2 மணியிலிருந்து பலத்த மழை குறுக்கிட்டதால் திட்டமிட்டபடி நடைபெறவிருந்த போட்டிகள் கைவிடப்பட்டு இன்று காலை 7 மணிக்கு நடைபெறும் என பிற்போடப்பட்டன. 17 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தல், 21 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான ஈட்டி எறிதல், 19 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான நீளம் பாய்தல் ஆகியனவே அவ்வாறு பிற்போடப்பட்ட போட்டிகளாகும். (ம-422)

# வவு. தமிழ் மத்திக்கு ஏழாமிடம் கிடைத்தது

யாழ்ப்பாணம், ஒக். 16

பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட தடகளத் தொடரில் 21 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான தேசியமட்ட குண்டு போடுதலில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்துக்கு ஏழாமிடம் கிடைத்தது. பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட தடகளத் தொடர் கண்டி போகம்பர விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற 21 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான குண்டு போடுதலில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தை பிரதிநிதித்துவம் செய்த சி.ஜெனோஜன் 10,57 மீற்றர் தூரத்துக்கு எறிந்து ஏழாமிடத்தை பெற்றார். (ம-422)

# தேசியமட்ட முப்பாய்தல் வடக்குக்கு ஏழாமிடம்

யாழ்ப்பாணம், ஒக். 16

பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட தடகளத் தொடரில் 17 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான தேசிய மட்ட முப்பாய்தலில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்துக்கு ஏழாமிடம் கிடைத்தது.

கண்டி போகம்பர விளையாட்டு மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற 17 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான முப்பாய்தலில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த கந்தவநேசன் கவிலவன் 12.72 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து ஏழாமிடத்தைப் பெற்றார். (ம-422)



# கூடைப்பந்தாட்டத் தொடர்

கொழும்பு, ஒக். 16

இலங்கைப் பாடசாலைகள் கூடைப்பந்தாட்டச் சங்கம் பாடசாலைகளின் 15 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையில் தேசிய ரீதியில் நடத்தத் திட்டமிட்ட கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் நவம்பர் மாதம் இரண்டாம் வாரத்தில் ஆரம்பமாகவுள்ளன என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம-23)

# மகாஜனக் கல்லூரிக்கு வெண்கலம்

யாழ்ப்பாணம், ஒக். 16

பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட தடகளத் தொடரில் 21 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு 100 மீற்றர் சட்டவேலி ஓட்டத்தில் மகாஜனக் கல்லூரிக்கு வெண்கலப் பதக்கம் கிடைத்தது.

கண்டிபோகம்பர விளையாட்டுமைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. 21 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு சட்டவேலி ஓட்டம் நேற்று மதியம் நடைபெற்றது. மகாஜனக் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த ஜெ. அனித்தா 16.4 செக்கன்களில் ஓடி முடித்து வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினார். (ம-422)




# இந்தியா – இங்கி. டெஸ்ட்டில் நடுவர் மேன்முறையீட்டு முறை

இந்தியா – இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடரில் நடுவரின் தீர்ப்பை மேல்முறையீடு செய்யும் முறை நடைமுறைப்படுத்தப்பட வாய்ப்புள்ளதாக தெரியவருகிறது.

கள நடுவரின் தீர்ப்புக்கள் துல்லியத் தன்மையுள்ளன என்று சொல்லிவிட முடியாது. இதனால் அவர்களின் முடிவையும் திரும்ப பரிசோதனை செய்து பார்க்க பன்னாட்டுக் கிரிக்கெட் சபையால் டி.ஆர்.எஸ். முறை அறிமுகம் செய்யப்பட்டது. பல நாடுகள் அதனை ஏற்றுக்கொண்ட போதிலும் இந்தியா ஏற்கவில்லை. எனவே இந்தியா விளையாடும் இருதரப்புத் தொடரில் அந்த முறை நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. டோனி, சச்சின் போன்ற அனுபவ வீரர்கள் இந்த முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்ததாலேயே இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அந்த முறையை ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொல்லப்படுகிறது. ஆனால் தற்போதைய டெஸ்ட் அணியின் தலைவரான கோக்லி டி.ஆர்.எஸ். முறையை ஏற்பதற்கு ஆதரவு தெரிவித்தார்.

இதனால் அடுத்த மாதம் நடைபெறவுள்ள இங்கிலாந்து – இந்தியா அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடரில் நடுவரின் முடிவுக்கு மேன்முறையீடு செய்வதை மீண்டும் பரிசீலனை செய்து பார்க்கும் முறையை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ஆலோசித்து வருகிறது. (ம)






# ஷாங்காய் ரென்னிஸ் தொடர் ஜோகோவிக் அரையிறுதியில்

ஷாங்காய் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடரில் அரையிறுதிக்குத் தகுதிபெற்றார் பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள வீரரான ஜோகோவிக்.

சீனாவின் முக்கியமான தொடர்களில் ஒன்றான ஷாங்காய் ரென்னிஸ் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதியாட்டம் ஒன்றில் ஜோகோவிக்கை எதிர்த்து மிஸ்ரா மோதினார். முதல் செற்றை மிஸ்ரா 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார். இதனால் அடுத்த இரு செற்களையும் கைப்பற்றினால் மட்டுமே ஜோகோவிக்கால் முன்னேறமுடியும் என்ற நெருக்கடியான நிலை ஏற்பட்டது. இரண்டாவது செற்றை 7:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய ஜோகோவிக், மூன்றாவது செற்றை 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றார். (ம)

# மோர்கனே தலைவர்

மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களுக்கான இங்கிலாந்து அணியின் தலைவராக மோர்கனே தொடர்ந்தும் செயற்படுவார் என அந்த அணியின் உதவிப் பயிற்சியாளர் தெரிவித்தார்.

இங்கிலாந்து அணி அடுத்த மாதம் இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட தொடரிலும், 3 ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரிலும், 3 ஆட்டங்களைக் கொண்ட ரி–20 தொடரிலும் விளையாடவுள்ளது.

அண்மையில் முடிவடைந்த பங்களாதேஷுக்கு எதிரான தொடரில், இங்கிலாந்து அணியின் மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களுக்கான தலைவரான மோர்கன், தனது தனிப்பட்ட பாதுகாப்பு காரணங்களுக்காக தொடரிலிருந்து விலகினார். பட்லர் தலைவராகச் செயற்பட்டு 2:1 என்ற அடிப்படையில் தொடரைக் கைப்பற்றினார். இதனால் இங்கிலாந்து அணியின் தலைவராக பட்லரே தொடர வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இதை மறுத்த உதவிப்பயிற்சியாளர் பார்ப்ராஸ், மோர்கனே தலைவராகத் தொடருவார் எனத் தெரிவித்தார்.

இந்தியாவுக்கு எதிரான ஒரு நாள் தொடருக்கு இங்கிலாந்து அணியின் தலைவராக நிச்சயமாக மோர்கன்தான் இருப்பார். அதற்கு அவர் தகுதியானவர். இதில் எந்த சந்தேகம் வேண்டாம் என பார்ப்ராஸ் தெரிவித்தார். (ம)




# அப்ரிடிக்கு கொலைமிரட்டல் பன்னாட்டுக் குற்றவாளியால்

பாகிஸ்தான் ரி–20 அணியின் முன்னாள் தலைவரான அப்ரிடிக்கு, பன்னாடுகளாலும் தேடப்படும் குற்றவாளியான தாவுத் இப்ராகிம்மிடமிருந்து கொலை மிரட்டல் வந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாகிஸ்தான் ரி–20 அணியின் முன்னாள் தலைவரான அப்ரிடி, ஆட்டநிர்ணயச் சூதாட்டத்தில் ஈடுபட்டார் என்று அந்த அணியின் பிறிதொரு முன்னாள் தலைவரான மியான்டட் குற்றம் சாட்டியிருந்தார். தான் ஒருவனே அதற்கு சாட்சி என்றும் அப்ரிடியைக் கையும் களவுமாகப் பிடித்ததாகவும் மியான்டட் மேலும் தெரிவித்தார். இந்தக் குற்றச்சாட்டை அப்ரிடி முழுவதுமாக மறுத்தார். மியான்டட்டின் சிந்தனை முழுவதும் பணத்தைச் சுற்றியே அமைந்திருக்கும். அவரது குற்றச்சாட்டுக்கு எதிராக சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என அப்ரிடி தெரிவித்தார்.

இந்த இருவருக்கும் இடையிலான வாக்குவாதங்கள் சமூக வலைத்தளங்களில் அண்மைக் காலமாக சூடுபிடித்தன. இந்த நிலையிலேயே இப்ராகிம் அப்ரிடிக்கு தொலைபேசி மூலமாக எச்சரிக்கை விடுத்தார் எனச் சொல்லப்படுகிறது. இப்ராகிமும் மியான்டட்டும் உறவினர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ம)





# கபடியில் இன்றைய மோதல்கள்

கபடி உலகக்கிண்ணத் தொடர் இந்தியாவின் அகமதாபாத்தில் நடைபெற்று வருகிறது. இன்று மூன்று ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.

இரவு 7 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் தாய்லந்தை எதிர்த்து அமெரிக்காவும், இரவு 8 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் தென்கொரியாவை எதிர்த்து இங்கிலாந்தும், இரவு 9 மணிக்கு இடம்பெறும் மூன்றாவது ஆட்டத்தில் ஜப்பானை எதிர்த்து கென்யாவும் மோதவுள்ளன. (ம)



# இந்தியா – நியூசிலாந்து ஒருநாள் தொடர் இன்று

இந்தியா நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடர் இன்று ஆரம்பமாகிறது.

தர்மசாலா மைதானத்தில் பகலிரவு ஆட்டமாக இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. இரண்டாவது ஆட்டம் டெல்லியில் எதிர்வரும் 20 ஆம் திகதியும், மூன்றாவது ஆட்டம் மொகாலியில் எதிர்வரும் 23 ஆம் திகதியும், நான்காவது ஆட்டம் ராஞ்சியில் எதிர்வரும் 26 ஆம் திகதியும் ஐந்தாவது ஆட்டம் விசாகப்பட்டினத்தில் எதிர்வரும் 29 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. (ம)

# தேசியத் தடகளத்தில் இன்றைய போட்டிகள்

யாழ்ப்பாணம், ஒக். 16

பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட தடகளத் தொடர் கண்டி போகம்பர விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. நான்காம் நாளாகிய இன்றும் பல போட்டிகள் நடைபெறவுள்ளன. இதன்படி 17 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான குண்டு எறிதல், 19 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான முப்பாய்தல், 21 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான உயரம் பாய்தல், 17, 19, 21 வயதுக்குட்பட்ட இருபாலாருக்குமான 400 மீற்றர் சட்டவேலி, 15, 17, 19, 21 வயதுக்குட்பட்ட இருபாலாருக்குமான 200 மீற்றர், 17 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான முப்பாய்தல், 15 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான குண்டு எறிதல், 15, 17, 19, 21 வயதுக்குட்பட்ட இருபாலாருக்குமான 4 நபர்கள் பங்குபற்றும் 400 மீற்றர் அஞ்சல் ஓட்டம், 15 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான உயரம் பாய்தல், 17 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான தட்டெறிதல், 21 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான குண்டு எறிதல், 21வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான ஈட்டி எறிதல், 19 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான முப்பாய்தல், 17, 19, 21 வயதுக்குட்பட்ட இரு பாலாருக்குமான 800 மீற்றர் ஓட்டம், 15, 17, 19, 21 வயதிற்குட்பட்ட இருபாலாருக்குமான 4 நபர்கள் பங்கு பற்றும் 100 மீற்றர் அஞ்சலோட்டம் ஆகியன நடைபெறவுள்ளன. (ம–422)

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2809 திகதி 15.10.2016
40 56 64 74 V 07 ரூ. 31,547,975/-

FLC FRENCH LANGUAGE CENTRE
FOR THE BEST FRENCH FOREVER
பிரெஞ்சு மொழி வகுப்பு
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM
விரிவுரையாளர்: France இல் ஆசிரிய பயிற்சி - 2007, University இல் French விரிவுரைகளை மேற்கொண்டவர்.
DELF A1, A2, B1 பரீட்சைகளில் 100% சித்தி. 1145 மாணவர்கள் French கற்றுள்ளனர்.
No. 40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம்: 22.10.16 சனி 8 am
பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973 ஆரம்பம்: 24.10.16 Mon @ 3.30pm
Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre




# அடுத்த வருடம் மத்திய பகுதியில் உசைன் போல்ட்டின் இறுதி ஓட்டம்

ஜமைக்காவில் அடுத்த வருடம் ஜுன் மாதத்தில் நடைபெறவுள்ள ஓட்டப் போட்டியுடன் சொந்த மண்ணில் விடைபெறவுள்ளேன் என போல்ட் அறிவித்தார்.

30 வயதான போல்ட், ஓட்டப்பந்தயத்தில் முடிசூடா மன்னாகத் திகழ்ந்து வருகிறார். கடந்த மூன்று ஒலிம்பிக்கிலும் (சீனா, லண்டன் மற்றும் பிரேசில்) தொடர்ந்து 100 மீற்றர், 200 மீற்றர் மற்றும் 4 வீரர்கள் பற்குபற்றும் 100 மீற்றர் அஞ்சலோட்டம் ஆகியவற்றில் தங்கம் வென்று சாதனை படைத்தார். கடந்த 10 ஆண்டுகளாக ஓட்டப் பந்தயத்தில் இவரை எவராலும் வெல்ல முடியவில்லை. அடுத்த வருடம் ஓகஸ்ட் மாதம் லண்டனில் நடைபெறவுள்ள ஓட்டப்பந்தயத்துடன் உலக அரங்கிலிருந்து விடைபெறப்போவதாகவும் ஆனால் தனது நாட்டுத் தொடர்களில் தொடர்ந்தும் களமிறங்கத் திட்டமிட்டிருப்பதாகவும் போல்ட் ஏற்கனவே அறிவித்திருந்தார். ஆனால் தற்போது அவர் தனது முடிவை மாற்றியுள்ளார். லண்டன் தொடருக்கு முன்னதாக ஜமைக்காவின் தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடருடன் தான், சொந்த மண்ணிலிருந்தும் விடைபெறவுள்ளதாக அவர் திடீர் அறிவிப்பை வெளியிட்டார். (ம)

British College Of Beauty Studies
இலங்கையில் முதல் தடவையாக பெண்களுக்கான பாடநெறிகளைக் கொண்ட அழகுக்கலை கல்லூரி ஒளி அழகன் ஸ்ருடியோ, British College Of Beauty Studies இணைந்து நடத்தும் பாடநெறிகளும் பயிற்சி வகுப்புக்களும்.
Special Diploma வகுப்புக்கள் ஆரம்பமாவுள்ளன. தையல், அழகுக்கலை, கேக்ஜசிங் புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.
பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.
மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள நேரில் வருகை தரவும்.
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (உதயன் பணிமனை அருகில்)
பலாலி றோட், திருநெல்வேலிச்சந்தி, யாழ்ப்பாணம்.
மேக்கப் ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
076 7011645

Personal Class-கணினி
உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்
Ms office 2016, Internet & E-mail, Web Design, Graphic Design, DTP (Photoshop CC, CorelDraw X7, PageMaker
TP:0779672038 ஆசிரியர்:KRC

வீடு விற்பனைக்கு/வாடகைக்கு
திருகோணமலை கணேஸ் வீதி, கணேசபுரத்தில் உள்ள வீடு விற்பனைக்கு அல்லது வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 9789752

வாடகைக்குத் தேவை
அலுவலகம் ஒன்றிற்கு இடம் வாடகைக்குத் தேவை. மாநகரசபை எல்லைக்குள் கே.கே.எஸ். வீதி விரும்பத்தக்கது.
076 822 8525

வீடு வாடகைக்கு தேவை
திருமணத் தேவைக்காக ராஜா கிறீம் ஹவுஸ் மண்டபத்துக்கு அண்டிய பகுதியில் 15 நாள்களுக்கு வீடு ஒன்று தேவைப்படுகிறது.
தொடர்பு: 076 3296300

வீடு காணி விற்பனைக்குண்டு
யாழ்.அரியாலை, A.Vறோட்டில் தபாற்கட்டைச் சந்தியிலிருந்து 650m தொலைவில் 2வீடுகளுடன் கூடிய 4பக்க சுற்று மதிலுடைய 5பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 459 8412

விரைவான வேலை நிறைவான இலாபம்
ஜீஸ் பக்கெட் தயாரிக்கும் மெசின்
1 மணித்தியாலத்தில் 2000
தமிழில் தொடர்பு கொள்ள
077 391 8870
WINRICH INTERNATIONAL(PVT)LTD
No.18, Ground Floor, Lucky Plaza, St.Anthony's Mawatha, Kollupitiya, Colombo - 03

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 563
சீட்டிழுப்பு திகதி 15.10.2016
சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
19 35 60 61 A
சுப்பர் ஜக்பொட்
ரூ.55,408,300/=

அமெரிக்க லொத்தர் விசா
2018ல் நீங்களும் அமெரிக்காவில்...
ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!
அரிய வாய்ப்பு - சில தினங்களுக்கு மட்டுமே 0768226230
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற ஓர் அரிய சந்தர்ப்பம்
சென்ற வருடம் (2015) எம்மூடாக விண்ணப்பித்தவர்களுள் 19 பேர் அமெரிக்க விசாவிற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
எம்மூடாக விண்ணப்பித்தவர்கள் விசா பெற்று அமெரிக்கா சென்றுவிட்டார்கள்.
யாழ்ப்பாணம் 0768226241 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | பருத்தித்துறை 0768226237 | வல்வெட்டித்துறை 0776697960

SINGER FINANCE
மோட்டார் சைக்கிளுக்கான குத்தகை வசந்தகாலம்
விசா
இலவசம்
போக்குவரத்து இலவசம்
காப்புறுதி இலவசம்
தொடர்புகளுக்கு:
சுஜந்தன் 077 7 391 449
தனு 077 9 357 124
இல.86, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்

வேலைவாய்ப்பு
யாழ் நகர் பகுதியில் சைவ உணவகம் ஒன்றிற்கு வேலையாள்கள் தேவை. கவர்ச்சி கரமான சம்பளம். கௌரவத்துடன் வேலைவாய்ப்பு. தங்குமிட வசதி. மூன்று நேர உணவு.
01). உணவு பரிமாறுபவர் (ஆண்/பெண்)
02). குசினி வேலையாள்கள்
03). அலுவலக உதவியாள்கள் (ஆண்/பெண்)
04). பில் கிளார்க்
05). காசாளர்
06). மரக்கறி வெட்டுபவர்
07). இடியப்பம் போடுபவர்
08). றொட்டி வேலையாள்கள்
09). உதவியாளர்கள்
10). ரீமேக்கர்
தொடர்புகளுக்கு:
0777 917 753, 075 530 4521 38, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்

வேலை வாய்ப்பு
யாழில் இயங்கிவரும் பிரபல Aluminiyam Work Shop ற்கு வேலை ஆட்கள் தேவை.
☎ 071-862 8368 / 021-492 7421

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.10.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.